# மௌன ராகம்

யத்தன்னபூடி சுலோசனாராணி

தமிழில்

கௌரி கிருபாநந்தன்

**கலா நிலையம்**

244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர் : : சென்னை-600 004.

உரிமை பதிப்பு

முதற் பதிப்பு : ஜூலை, 2000

உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ. 65-00

32295
4931394

சதுர்வேந்தன் அச்சகம்
சென்னை-24

# முன்னுரை

பிரபல தெலுங்கு எழுத்தாளர் திருமதி யத்தனபூடி சுலோசனாராணி அவர்கள் எழுதிய "அவ்யக்தம்" என்ற நாவல் தமிழாக்கம் செய்யப்பட்டு "மௌன ராகம்" என்ற தலைப்பில் இசைக்கப்பட்டுள்ளது.

மகாபாரதக் கதையில் வரும் துரியோதனனும், கர்ணனும் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள். அப்படிப்பட்ட நட்புக்கு எடுத்துக்காட்டாக விஜய், ஆனந்த் இந்த நாவலில் வலம் வருகிறார்கள்.

சின்ன வயதிலேயே பெற்றோர்களை இழந்த விஜயை தீட்சிதர் தன்னுடைய வீட்டுக்கு அழைத்து வருகிறார். பேரன் ஆனந்துக்குத் துணையாக இருப்பான் என்று எதிர்பார்த்தவருக்கு, ஆனந்த் தன்னைவிட விஜயிடம் அதிகம் அன்பு வைத்திருப்பது, அவ்விருவருக்கும் இடையில் பலமான நட்பு ஏற்படுவது அன்றி விஜயை வெறுக்கிறார். விஜய் தன்னுடைய பேரனை மிஞ்சிவிடுவானோ என்று பயப்படுகிறார். விஜயை வீட்டை விட்டு வெளியேற்ற அவர் செய்யும் முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன.

விஜய் ஹேமாவின் சந்திப்பு வித்தியாசமான சூழ்நிலையில் நிகழ்கிறது. ஹேமா விஜயின் தனித்தன்மையினால் ஈர்க்கப்படுகிறாள். விஜய் ஹேமாவை மனப்பூர்வமாக நேசித்தபோதும் அவளைத் திருமணம் செய்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறான்.

பேரனின் எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டும் என்ற தவிப்பில் நியாய அநியாயங்களைப் பற்றிக் கவலைப்

படாமல் சொத்து சேர்க்கிறார் தீட்சிதர். ஹேமா ஆனந்துக்கு மனைவியாக வந்தால் அவனுடைய வாழ்க்கை நன்றாக இருக்கும் என்று திட்டம் போடுகிறார்.

ஆனந்த்! பெயருக்குத் தகுந்தாற்போல் சந்தோஷமாக இருப்பதோடு, மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைப்பவன்.

ஹேமாவின் வாழ்க்கையில் பங்கு பெறப் போவது **யார்** என்ற புதிர் கடைசியில் விடுபடுகிறது.

மொழி பெயர்ப்புக்கு அனுமதி அளித்த திருமதி யத்தனபூடி சுலோசனாராணி அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கௌரி கிருபாநந்தன்**

32295
4931394

# மௌன ராகம்

## 1

இயற்கை அன்னையின் மடியில் அமைதியாக உறங்கும் குழந்தையைப் போல் இருந்தது அந்தக் கிராமம். சூரியன் அஸ்தமிக்கப் போகும் நேரம். ஊருக்கு வெளியில் இருக்கும் காட்டுக்கு மேய்ச்சலுக்காகப் போன பசுக்களின் கூட்டம் வீடு திரும்பிக் கொண்டிருந்தது. அவற்றின் குளம்புகளால் எழும்பிய தூசி உயரே கிளம்பி, பனிமூட்டம் போல் பரவிக்கொண்டிருந்தது. மாலை வெய்யிலின் சூரிய கிரணங்கள் மரக்கிளைகளின் வழியாக ஊடுருவி தரையை முத்தமிட்டு விடைபெற்றுக் கொண்டிருந்தன. ஊர்க் கோடியில் இருக்கும் பொதுக் கிணற்றிலிருந்து பெண்கள் குடங்களில் தண்ணீர் சுமந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக் கொள்ளும் செய்திகளைக் கேட்டுத் தலையசைப்பது போல் ஆலமரத்துக் கிளைகள் காற்றுக்கு அசைந்து கொண்டிருந்தன.

மண்சாலையில் ஜட்கா வண்டி ஒன்று ஊரை நோக்கி வந்து கொண்டிருந்தது. கழுத்தில் ஜரிகை அங்கவஸ்திரம், நெற்றியல் விபூதிப்பட்டையுடன் சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவருடன் ஒல்லியாய், உயரமாய், போஷாக்குக் குறைவாய் பத்து வயதுப் பையனொருவன் வயதுக்கு மீறிய கம்பீரத்துடன் தென்பட்டான்.

ஜட்கா வண்டி ஊருக்கு ஆரம்பத்தில் இருந்த மகூதியைத் தாண்டும்போது, எதிரே மடக்கிய குடையைத் தோள் மீது வைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்த உழவன் ஒருவன் ''வணக்கம் சாமி...'' என்று தலையைக் குனிந்து மரியாதையைச் செலுத்திவிட்டு, வண்டியுடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினான்.

இந்த மரியாதைகள் எல்லாம் பழக்கப்பட்டவர் போல் அவர் தலையை அசைத்தார்.

''சாமீ! பையன் யாரு?'' உழவன் கேட்டான்.

''தூரத்துச் சொந்தம் ராமய்யா! பையனுடைய அத்தை சாகும் முன் என் கையில் ஒப்படைத்தாள்.''

''அம்மா, அப்பா இல்லீங்களா?''

''அது ஒரு தனிக் கதை. பிறகு சொல்கிறேன். எங்க ஆனந்த் தனியாக இருக்கிறான் இல்லையா... அவனுக்குத் துணையாக இருப்பான் என்று அழைத்துக்கொண்டு வந்தேன்.''

''நல்ல காரியம் செய்திங்க சாமீ! புண்ணியம், புருஷார்த்தம் இரண்டும் சேர்ந்து வரும். நீங்க எந்தக் காரியம் செய்தாலும் நன்றாக யோசித்துத்தான் செய்வீங்க. மருமகளும், மகனும் இறந்துபோய் ஒரு வருடத்துக்கு மேல் ஆகியிருக்காதா?''

தீட்சிதரின் முகத்தில் வேதனையின் நிழல்கள் படிந்தன. ஆமாம் என்பது போல் தலையை அசைத்தார். வண்டி ஊருக்கு நடுவில் இருக்கும் வேணுகோபால் சுவாமி வழியாகப் போய்க்கொண்டிருந்தது. மாலை தீபாராதனை நடந்து கொண்டிருப்பதற்கு அறிகுறியாய் கோவில் மணி அடிக்கும் ஓசை கேட்டது. தீட்சிதர் கைகளை உயர்த்தி ஜோடித்துக் கொண்டே, ''விஜய்! கடவுளை வேண்டிக் கொள்!'' என்றார்.



பையனும் கண்களை மூடிக்கொண்டு இரு கைகளையும் கூப்பினான்.

வண்டி பொது நூலகத்தைத் தாண்டிக்கொண்டிருந்தது. நூலகத்திற்கு வெளியே வைக்கப்பட்டிருந்த ஒலி பெருக்கி வழியாய் ரேடியோவிலிருந்து செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்தன.

'நூலகம்' என்ற பெயர்ப் பலகையைப் பார்த்ததும் விஜய் ஆர்வத்துடன் குனிந்து எட்டிப் பார்த்தான்.

வண்டி தெருமுனையில் திரும்பிப் பழங்காலத்து ஓட்டு வீட்டின் முன்னால் வந்து நின்றது.

வீடு சில இடங்களில் ஓடுகள் சரிந்து, பழுதடைந்த நிலையில் இருந்தது.

வண்டி வந்து நின்ற சத்தம் கேட்டதும் மாட்டுக்கு வைக்கோலை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்த குப்பன், ''லக்ஷ்மி! அய்யா வந்தாச்சு!'' என்று உரத்த குரலில் சொல்லிக் கொண்டே வண்டியருகில் ஓடி வந்தான்.

தீட்சிதர் வண்டியை விட்டு இறங்கும்போது குப்பன் அவர் கையிலிருந்த குடையை, பையைப் பவ்யமாக பெற்றுக் கொண்டான்.

''விஜய்... வீடு வந்துவிட்டது. இறங்கு...'' என்றார் தீட்சிதர்.

விஜய் இறங்கினான்.

அதற்குள் கொஞ்சம் பூசிய உடல்வாகுடன், நடுத்தர வயதைத் தாண்டிய பெண்மணியைப் போல் தோற்றமளித்த லக்ஷ்மி வாளியில் தண்ணீரைக் கொண்டு வந்து திண்ணைமீது வைத்தாள்.

தீட்சிதர் செருப்புகளைக் கழட்டிவிட்டு வந்ததும் சொம்பு நிறைய நீரை மொண்டு பணிவுடன் நீட்டினாள்.

தீட்சிதர் கால்களை அலம்பிக்கொண்டே, ''ஆனந்த் எங்கே?'' என்று கேட்டார்.

''காலையிலிருந்து கன்றுக்குட்டிக்குச் சமமாய் ஓடிக் கொண்டிருந்தான். உடம்பு லேசாக கதகதன்னு இருக்க வும், கட்டாயப்படுத்தி தூங்கச் செய்தேன்.''

''ஜுரம் அதிகமாய் இருக்கா?'' துண்டால் கைகால் களைத் துடைத்துக் கொண்டே கேட்டார்.

''இல்லை... இல்லை... லேசாக கதகதன்னு இருக்கு. அவ்வளவுதான்...'' சொல்லிக் கொண்டே லக்ஷ்மி இன் னொரு தடவை சொம்பில் நீரை மொண்டு விஜயிடம் நீட்டப் போனாள்.

''ஹும்!'' தீட்சிதரின் குரல் உறுமுவது போல் ஒலித் தது. லக்ஷ்மி நடுங்கிக்கொண்டே அவர் பக்கம் பார்த்தாள். விஜய் தொலைவில் இருந்த கன்றுக்குட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தான். தீட்சிதர் கண்ணாலேயே கிணற்றுப் பக்கம் ஜாடை காட்டினார்.

லக்ஷ்மிக்குப் புரிந்துவிட்டது. சொம்பை வாளிலேயே நழுவவிட்டாள். விஜய் பக்கம் திரும்பி, ''தம்பி! அங்கே கிணற்றுக்கு அருகில் வாளியும் கயிறும் இருக்கும். தண்ணீரை இழுத்துக் கொண்டு கால் கையை அலம்பிக் கொண்டு வா'' என்றாள்.

விஜய் கிணற்றை நோக்கி நடந்தான்.

தீட்சிதர் வேஷ்டியின் நுனியைக் கையில் பிடித்துக் கொண்டே வேக வேகமாய் ஆனந்த் படுத்திருந்த அறைக் குள் நுழைந்தார். அவரைப் பின்தொடர்ந்து விஜயும் உள்ளே வந்தான்.

அறையின் நடுவில் இருந்த கட்டில்மீது உறங்கிக் கொண்டிருந்த சிறுவனுக்கு எட்டு வயதுக்கு மேல் இருக்காது. இளம் மஞ்சள் போல் பசுமைநிற மேனி... அழகான முகம்... தளிர் உடல்.



தீட்சிதர் சிறுவனின் நெற்றிமீது கையை வைத்தார்.

''ஜுரம் அதிகமாகத்தான் இருக்கிறது. லக்ஷ்மி! குப்பனைப் போய் டாக்டர் சர்மாவை அழைத்துக்கொண்டு வரச் சொல்லு'' ஆணையிடுவது போல் சொன்னார்.

தாத்தாவின் குரலைக் கேட்டதும் ஆனந்த் கண்களைத் திறந்தான்.

''தாத்தா!'' அவரைப் பார்த்ததும் மகிழ்ச்சியுடன் கைகளை உயர்த்தி அவருடைய கழுத்தில் மாலையாகப் போட்டான். ''எங்கே போனாய் தாத்தா? எனக்கு ரொம்ப பயமாக இருந்தது.'' மழலை மாறாத குரலில் சொன்னான்.

அவர் கட்டிலில் அமர்ந்துகொண்டு ஆனந்தின் தலையை மடியில் வைத்துக் கொண்டார். குனிந்து அவனு டைய நெற்றியில் முத்தம் பதித்துக் கொண்டே ''உனக் காகத்தான் போனேன் கண்ணா! நீ தனியாக இருக்கிறாய் இல்லையா... உனக்காக ஒரு நல்ல நண்பனை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். இரண்டு பேரும் சேர்ந்து நன்றாக விளையாடலாம். இதோ பார்... இவன்தான் விஜய். உன்னுடைய நண்பன். உனக்காகத்தான் வந்திருக் கிறான். எப்போதும் உன்னோடயே இருப்பான்'' நயமான குரலில் சொன்னார் தீட்சிதர்.

ஆனந்த் தாத்தாவின் மடியிலிருந்து தலையைத் திருப்பிப் பார்த்தான். எதிரே விஜய் நின்றிருந்தான்.

ஆனந்தின் இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது.

சீரியஸாகப் பார்த்துக் கொண்டிருந்த விஜய் தன்னை அறியாமலேயே புன்முறுவல் செய்தான்.

''இன்னியிலிருந்து நீங்க இருவரும் ஒண்ணு.'' தீட்சிதர் விஜயின் கையைப் பற்றி ஆனந்தின் கையுடன் இணைத் தார்.

லக்ஷ்மி அறைக்குள் எட்டிப் பார்த்தாள். ''அய்யா!

உங்களைப் பார்க்க சுவாமிநாத அய்யர் வந்திருக்கிறார்!'' என்றாள்.

தீட்சிதர் ஆனந்தைக் கவனமாகக் கட்டிலில் படுக்க வைத்தார். ''இதோ... போய் விட்டு உடனே வந்து விடு கிறேன் கண்ணா!'' அன்பு ததும்பும் குரலில் பேரனிடம் சொன்னவர் விஜய் பக்கம் திரும்பி ''விஜய்... ஆனந்திடம் பேசிக் கொண்டிரு'' என்று சொல்லி விட்டு அறையை விட்டு வெளியேறினார். அவருடைய குரலில் தென்பட்ட நயம் ஆனந்துக்கு மட்டுமே சொந்தம் என்பது போல் இருந்தது. விஜயிடம் அவர் பேசிய தோரணை வேலைக்கார னிடம் ஆணையிடுவது போல் இருந்தது.

கால் மணி நேரம் கழித்து தீட்சிதர் டாக்டர் சர்மா வுடன் ஆனந்தின் அறைக்குள் வந்தார். விஜய் கட்டில் மீது அமர்ந்து கொண்டு ஆனந்திடம் கதை ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். ஆனந்த் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தான்.

டாக்டர் ஆனந்தின் நாடியைப் பரிசீலித்து விட்டு ஜுரம் அதிகமாய் இல்லையென்றும், இரவு பால்சாதம் கொடுக்கலாம் என்றும் சொன்னார். விஜயைப் பார்த்து ''இந்தப் பையன் யாரு?'' என்று கேட்டார்.

''தூரத்துச் சொந்தம். அனாதையாகி விட்டான். ஆனந்துக்குத் துணையாக இருப்பான் என்று அழைத்துக் கொண்டு வந்தேன்.''

''நல்ல காரியம் செய்தீங்க. குழந்தைகளுக்கு அவங்க வயதுக்குத் தகுந்த துணை எப்போதும் இருக்க வேண்டும். தம்பி! உன் பெயர் என்ன?'' டாக்டர் கேட்டார்.

''விஜய்'' கைகளைப் பின்னாடி கட்டிக் கொண்டே சொன்னான்.

''பெரியவர்களிடம் பேசும்போது பணிவாகப் பதில் சொல்லணும்.'' எச்சரிப்பதுபோல் சொன்னார் தீட்சிதர்.



விஜய் முகம் சீரியஸாக மாறியது. பணிவாகப் பதில் சொல்வது என்றால் எப்படி என்று தெரியவில்லை. கைகளை முன்னால் கட்டிக் கொண்டு நின்றான். டாக்டர் போகும்போது ஆனந்தின் கன்னத்தில் லேசாகத் தட்டி விட்டு நகர்ந்தார். விஜயைத் தாண்டப் போனவர் ஒரு நிமிடம் நின்று அவன் தோளை நட்புடன் தட்டிவிட்டுப் போனார்.

''உங்க கேஸ் விஷயம் ஏதாவது தெரிந்ததா?'' அறையை விட்டு வெளியில் வரும்போது டாக்டர் கேட்டார்.

''நாளைக்கு வாய்தா இருக்கிறது.''

''ஏற்கனவே பணம் நிறையச் செலவு செய்திருக் கிறீர்கள் போல் தெரிகிறது.''

''நிறைய...'' பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன் னார் தீட்சிதர். ''இந்த வீட்டைப் பார்த்தீர்களா? வெள்ளையடிக்க வசதியில்லை. மழை பெய்தால் ஒழுகாத இடம் பாக்கியில்லை. ஓட்டை உடைசல்களை ரிப்பேர் செய்ய வழியில்லை.''

''என்ன செய்வது? எல்லா நாட்களும் ஒரே மாதிரி இருக்காது இல்லையா...'' ஆதரவுடன் சொல்லிவிட்டு டாக்டர் கிளம்பினார்.

தீட்சிதர் டாக்டரை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

''லக்ஷ்மி... இதோ பார். விஜய் சற்று முன்னால் ஆனந்தின் கட்டில் மீது அமர்ந்துகொண்டு இருந்தான். இன்னொரு தடவை அப்படி நடக்கக் கூடாது. ஆனந் திற்குத் துணையாக இருப்பதற்காக விஜயை அழைத்து வந்தேன். அந்த விஷயத்தை நீ மறந்து போகக் கூடாது. விஜயும் அந்த விஷயத்தை மறக்காமல் பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு. புரிந்ததா?'' கடைசி வார்த்தையைச் சற்று அழுத்திச் சொன்னார்.

லக்ஷ்மி பயந்து கொண்டே புரிந்தது என்பதற்கு அடையாளமாய் தலையை அசைத்தாள்.

அரை மணி கழித்து லக்ஷ்மி ஆனந்துக்கு வெள்ளித் தட்டிலேயும், விஜய்க்குப் பீங்கான் தட்டிலேயேயும் உணவைக் கொண்டு வந்தாள்.

''விஜய்... நீ இங்கே உட்கார்ந்து கொண்டு சாப்பிடு'' என்று கட்டில் அருகில் தரையைச் சுட்டிக் காட்டினாள். கட்டில்மீது அமர்ந்துகொண்டு ஆனந்துக்கு ஊட்டிவிடத் தொடங்கினாள்.

விஜய் எதையுமே பொருட்படுத்தவில்லை. பசியுடன் காத்திருந்தவன் போல் தலையைக் குனிந்து கொண்டு வேக வேகமாய் சாப்பிடத் தொடங்கினான். வயிறு நிறையச் சாப்பிடும்போது ஏனோ நிம்மதியாக உணர்ந்தான்.

''தட்டை அலம்பி வைத்துவிட்டு, ஓரமாய் கவிழ்த்து விடு.'' லக்ஷ்மி சொன்னாள்.

விஜய் தலையை அசைத்தான்.

''ஒரு பருக்கைக் கூட தரையில் சிந்தக் கூடாது'' மிரட்டினாள்.

விஜய் தட்டை உயர்த்திக் காண்பித்தான். ஒரு பருக்கைக்கூட கீழே சிந்தவில்லை.

வீடு முழுவதும் நிசப்தமாக இருந்தது. நள்ளிரவு நெருங்கும் நேரம்.

''தாத்தா... தாத்தா...'' ஆனந்த் தூக்கக் கலக்கத்தில் அழுது கொண்டே அழைத்தான்.

கட்டில் அருகில் பாய்மீது உறங்கிக் கொண்டிருந்த விஜய் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

அதற்குள் பக்கத்து அறையில் தஸ்தாவேஜுகளைப் படித்துக் கொண்டிருந்த தீட்சிதர் சட்டென்று ஓடி வந்து ஆனந்தை மார்போடு அணைத்துக் கொண்டார்.

''என்ன கண்ணா... என்ன ஆச்சு?'' அனுசரணையாய் கேட்டார்.



''எனக்குப் பயமாக இருக்கு தாத்தா!''

''நான்தான் வந்து விட்டேனே... இனி நீ பயப்படத் தேவையில்லை கண்ணா!''

''நீ மறுபடியும் ஊருக்குப் போய் விடுவாய்.''

''போக மாட்டேன். அப்படியே போனாலும்... இதோ இந்த விஜய் உன்னோடுதான் இருப்பான். உனக்கு எந்த பயமும் இல்லை.''

''நான் உன் பக்கத்திலேயேதான் படுத்துக் கொள் வேன்.'' ஆனந்த் பிடிவாதம் பிடித்தான்.

''நான் இன்னும் தூங்கப் போகவே இல்லை ராஜா... கேஸ் விஷயமாய் தஸ்தாவேஜுகளைப் படித்துக் கொண் டிருந்தேன். சரி... சரி... வா...'' தீட்சிதர் ஆனந்தைத் தோளில் தூக்கிக் கொண்டு அறையை விட்டு வெளியேறி னார். பாய் மீது விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த விஜயிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

விஜய் அப்படியே பாய்மீது உட்கார்ந்திருந்தான்.

பக்கத்து அறையில் தீட்சிதர் ஆனந்துக்குக் கதைகளைச் சொல்லி தூங்க வைக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்.

தனியாக இருப்பது என்றால் விஜய்க்கும் பயம்தான். அதிலும் இரவு நேரத்தில் தனியாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அந்தப் பயம் இன்னும் அதிகமாகி விடும். முழங்கால்களைச் சுற்றிக் கைகளைக் கட்டிக் கொண்டு தலையைச் சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டான். இரவு நேரத்தில் விழிப்பு வந்தால் போதும் அவன் கண் முன்னால் ஒரே ஒரு காட்சி திரும்பத் திரும்ப நிழலாடிக் கொண்டிருக்கும். இப்பொழுதும் அதே காட்சி...

மின் விசிறியில் தொங்கி கொண்டிருந்த அவன் தாயின் பிணம் அப்படியும் இப்படியுமாய் ஊசலாடிக் கொண்டிருந்த காட்சி!

தொண்டைக் குழியை விட்டு வெளியேற போன சுத்தலை யாரோ வந்து பொத்தியது போல் அவனே வாயைப் பொத்திக் கொண்டு குரல் வெளியே வராமல் அடக்கி விட்டான்.

அவன் உள் மனதில் ஏதோ பயம்! வேதனை! இயலாமை! இந்த மூன்றும் சேர்ந்து அழுகையாய் மாறி வெளியேற துடித்துக் கொண்டிருந்தது. இதழ்களை இறுக்கி பிடிவாதமாய் அழுகைச் சத்தம் வெளியே வராமல் தடுத்துக் கொண்டிருந்தான். கண்களிலிருந்து இரட்டிப்பு வேகத்துடன் வெளியேறிக் கொண்டிருந்த கண்ணீர், கன்னங்கள் மீது வழிந்து, உடைகளை நனைத்துக் கொண்டிருந்தது.

''அம்மா! அம்மா! நீ எங்கே இருக்கிறாய்? எனக்குப் பயமாக இருக்கிறது.''

அவன் மனம் வேதனையால் தவித்துக் கொண்டிருந்தது. அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்வது சிரமமாக இருந்தது. திட்சிதர் வரும் காலடிச் சத்தம் கேட்டது. விஜய் சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டு பாய் மீது சுவற்றுப் பக்கம் திரும்பி படுத்துக் கொண்டான்.

திட்சிதர் உள்ளே வந்து தூங்கிக் கொண்டிருந்த ஆனந்தை உறக்கம் கலையாதவாறு மெதுவாய் கட்டில் மீது படுக்க வைத்தார். போர்வையைக் கழுத்து வரை போர்த்தி விட்டு, ஆனந்தின் தலையைக் கோதிவிட்டு, நெற்றி மீது பட்டும் படாமல் முத்தம் பதித்தார். ''கடவுள் உன் அம்மா அப்பாவைக் கொண்டு போய் விட்டாலும், உன் தாத்தாவுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்திருக்கிறார். கண்ணா... நான் உயிரோடு இருக்கும் வரை உனக்கு எந்தக் குறையும் வர விடமாட்டேன்'' திட்சிதர் முணுமுணுப்பது போல் சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினார்.

அறையில் மறுபடியும் நிசப்தம் நிலவியது.



விஜய் இந்தப் பக்கம் திரும்பி, கட்டில் அருகில் மேலும் நகர்ந்து கொண்டான். உறக்கத்தில் ஆனந்த் புரண்டு படுத்ததில் அவன் கை கட்டிலை விட்டுக் கீழே தொங்கியது.

விஜய் எழுந்து கொண்டான். மெதுவாக அந்தக் கையைப் பற்றிக் கொண்டான். 'நான் உன்னுடைய நண்பன் இல்லையா!' அந்த ஸ்பரிசம் அவன் மனதுக்குத் தைரியமளிப்பதுபோல் இருந்தது. ஆனந்தைப் பார்க்கப் பார்க்க அவன் மனதில் மகிழ்ச்சியான உணர்வு ஒன்று பரவிக் கொண்டிருந்தது.

அதற்குள் லக்ஷ்மி கொட்டாவி விட்டுக் கொண்டே பாயை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

விஜய் சட்டென்று நகர்ந்து பாயில் வந்து படுத்துக் கொண்டான். விஜயிடம் அசைவு தெரிந்ததைக் கவனித்த லக்ஷ்மி ''என்ன தம்பீ... இன்னும் தூங்கவில்லையா?'' என்று கேட்டாள்.

இல்லை என்பது போல் தலையை அசைத்தான் விஜய்.

''தூங்கு... தூங்கு... காலையில் சீக்கிரமாக எழுந்து கொள்ளணும். பெரிய அய்யா சொல்ற வேலைகளை முடிக்கணும். ஆனந்த் தம்பியுடன் விளையாடணும். இந்த வீட்டில் இருக்கணும்னா சோம்பேறித்தனம் இருக்கக் கூடாது. சொன்ன வேலையைச் சரியாகச் செய்யவில்லை என்றால் தோலை உரித்து ஆணியில் மாட்டி விடுவார் பெரிய அய்யா... புரிந்ததா?''

விஜய் எல்லாவற்றுக்கும் தலையை அசைத்தான்.

''ஒரு பையனுடன் காலம் தள்ள முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும்போது, இன்னொரு கழுதையைக் கொண்டு வந்து என் தலையில் கட்டியிருக்கிறார். எல்லாம் போறாத நேரம்தான்...'' முணுமுணுத்துக்

கொண்டே படுத்துக் கொண்டாள். ஐந்தாவது நிமிடம் குறட்டை விட்டுக்கொண்டு தூங்கி விட்டாள்.

விஜய்க்கு உறக்கம் வரவில்லை. ஒரு பக்கம் பயங்கரமாக குறட்டை விட்டுக் கொண்டிருந்த லக்ஷ்மி. இன்னொரு பக்கம் ஆனந்த். இந்த இருவரையும் பார்க்கும்போது சந்தோஷமாக இருந்தது. அது வரையில் குடிகொண்டிருந்த பயம் போய் விட்டது.

பௌர்ணமி முடிந்த மூன்றாவது நாள், நிலவின் ஒளி ஜன்னல் வழியாக வந்து அவன் வயிற்றின் மீது விழுந்து கொண்டிருந்தது. விஜய் வயிற்றின் மீது கைகளை வைத்துக்கொண்டு நிலவின் ஒளியில் கைகளைப் பார்த்துக் கொண்டான். அந்தக் காட்சி அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. இன்னும் கீழே நகர்ந்து நிலா வெளிச்சம் சரியாக முகத்தின் மீது விழுமாறு படுத்துக் கொண்டான்.

தாய் சோப் தயாரிக்கும் ஃபாக்டரியில் வேலை பார்த்து விட்டு, இரவு வேளையில் வீடு திரும்பும்போது, பஸ் ஸ்டாப் அருகில் அவளுக்காகக் காத்திருக்கும் நேரத்தில் நிலாவையே பார்த்துக் கொண்டிருந்தது... தாய் பஸ்ஸை விட்டு இறங்கியதும் அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு நடந்து வந்தது... எல்லாமே நினைவுக்கு வரத் தொடங்கின. அந்த எண்ணங்கள் அவன் மகிழ்ச்சியை மேலும் அதிகரித்தன.

## 2

பதினெட்டு வருடங்கள் கழித்து...

''விஜய்! விஜய்!'' கொல்லைப்புறமாய் இருந்த ஓடு வேய்ந்த சமையல் அறையின் வாசலுக்கு வெளியில் நின்று கொண்டு லக்ஷ்மி குரல் கொடுத்தாள். வயதின் தளர்ச்சி அவள் முகத்திலும், உடலிலும் வெளிப்படையாய்



தெரிந்தது. சமையல் அறைக்குப் பக்கத்திலேயே இருந்த பூஜை அறையிலிருந்து தீட்சிதர் பூஜை செய்து கொண்டிருப்பதற்கு அடையாளமாய் மணியோசை கேட்டது. ஓட்டு வீட்டுக்குச் சற்று இடைவெளிவிட்டு நவீன முறையில் கட்டப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று இருந்தது. அதன் பால்கனியில் உயரமாய், பலமாய், ஆரோக்கியமாய் தென்பட்ட இளைஞன் ஒருவன் எட்டிப் பார்த்தான்.

''என்ன?'' என்று கேட்டான். அவன் குரல் ஒருவிதமான ராஜஸத்துடன், ஆண்மையுடன் கம்பீரமாய் ஒலித்தது.

''இதோ... காபி, டிபனை ட்ரேயில் எடுத்து வைத்திருக்கிறேன். காலையில் கொண்டு போனபோது ஆனந்த் தம்பி அரைமணி நேரம் கழித்துக்கொண்டு வரச் சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டான். என்னால் மறுபடியும் படியேறி இறங்க முடியாது. கால் மூட்டுவலி பிராணன் போகிறது. இடுப்பு விட்டுப் போகிறது.''

''நானே வருகிறேன்.'' விஜய் கிடுகிடுவென்று படிகளை இறங்கி லக்ஷ்மியை நோக்கி வந்தான்.

அதற்குள் குள்ளமாய், பூசிய உடல்வாகுடன் நடுவயது கடந்த ஒரு நபர் அங்கே வந்தார்.

''என்னப்பா விஜய்! நன்றாக இருக்கிறாயா?'' குசலம் விசாரித்தார்.

''வாங்கோ மாமா!'' மரியாதையுடன் வரவேற்று விட்டு இருக்கையைக் காண்பித்தான்.

''தாத்தா இல்லையா?'' உட்கார்ந்து கொண்டே கேட்டார் ஆசாரி.

''பூஜையில் இருக்கிறார். முடியும் நேரம்தான். வந்து விடுவார். உட்கார்ந்து கொள்ளுங்கள்...'' சொல்லிக் கொண்டே விஜய் லக்ஷ்மி கையிலிருந்த ட்ரேயை எடுத்துக் கொண்டான்.

''ஆனந்த் தம்பி டிபனுக்கு அடையைப் பண்ணச் சொல்லியிருந்தான். பெரிய அய்யாவோ எண்ணெய்ப் பண்டம் கூடாது என்பார்! அவர் வார்த்தையை மீறிச் செய்தால் அய்யா என்னை வீட்டை விட்டுத் துரத்தி விடுவார். செய்யவில்லை என்றாலோ ஆனந்த் தம்பி என்னை உயிருடன் விட்டு வைக்க மாட்டான். நான் ஏதாவது ஆற்றையோ குளத்தையோ தேடிப் போக வேண்டியதுதான்.'' லக்ஷ்மி குரல் அழுகையாய் வெளி வந்தது.

விஜய் லக்ஷ்மிக்குத் தைரியம் சொல்வதுபோல் லேசாக முதுகில் தட்டிக் கொடுத்தான். ''கவலைப்படத் தேவையில்லை. ஆனந்த் இன்னிக்கு இட்லி சாப்பிடுவான். சரிதானா!'' நயமான குரலில் சொன்னான்.

''என்னவோப்பா! ஆனந்த் தம்பி வீட்டுக்கு வந்தால் போதும். என் நெஞ்சு திக்கு திக்குன்னு அடித்துக் கொள்ளும். நீ இருப்பதால்தான் நானும் குப்பனும் இத்தனை வருடங்களாய் இந்த வீட்டில் இருந்து வருகிறோம்.''

''சரி... சரி...'' விஜய் ட்ரேயை எடுத்துக்கொண்டு கிளம்பினான். ''தாத்தா இப்பொ வந்து விடுவார். மேஜை மீது இன்றைய தமிழ் பேப்பர் இருக்கு.'' ஆச்சாரியிடம் சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

அவர் விஜய் சென்ற திசையைப் பார்த்துக்கொண்டே லக்ஷ்மியிடம், ''நீ சொன்னது முற்றிலும் உண்மை லக்ஷ்மி. விஜயின் பொறுமையை எத்தனை பாராட்டினாலும் தகும். இந்த தாத்தா, பேரனுக்கு இடையில் இத்தனை வருடங்களாக எப்படிச் சமாளித்து வருகிறானோ அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம். இந்தக் கதையெல்லாம் இனி நடக்காது. விஜய்க்கு திருமணமாகி மனைவி என்று ஒருத்தி வந்து விட்டால் இதை எல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பாளா? போன வாரம் ஒரு பெண் ஜாதகத்தைக்



கொண்டு வந்தேன் பாரு... இஞ்சினீயர் வீட்டு சம்பந்தம். ஒரே பெண். அவங்க வந்தது ஆனந்துக்காகத்தான் என்றாலும் விஜயைப் பார்த்த பிறகு மனதை மாற்றிக்கொண்டு விட்டார்கள். விஜய்க்கு என்றால் தங்களுடைய பெண்ணை கொடுக்கச சம்மதம் என்று தகவல் அனுப்பியிருக்கிறார்கள். இந்த மாதிரி நடப்பது இது மூன்றாவது தடவை.''

''சத்தமாகச் சொல்லாதீங்க சுவாமி! பெரிய அய்யாவின் காதுகளில் விழுந்து வைக்கப் போகிறது.'' லக்ஷ்மி பெரிதாக ஒன்று போட்டு விட்டுப் போய் விட்டாள்.

ஆசாரி பேப்பரைக் கையில் எடுத்துக் கொண்டே வீட்டை முழுவதும் கவனமாய் பார்த்தார். 'அதிர்ஷ்டம் என்றால் இதுதான். பதினெட்டு வருடங்களுக்கு முன் ஓடுகள் சரிந்து சிதிலமடைந்த நிலையில் இருந்த வீட்டுக்குள் அதிர்ஷ்ட லக்ஷ்மி காலடி எடுத்து வைத்து விட்டாள். அந்த கோர்ட் கேஸ் ஏதோ ஜெயித்தது இவர்களுடைய அதிர்ஷ்டம்தான். சிலருடைய ஜாதக விசேஷம். எப்போதுமே சுக்ர தசைதான்.'' மனதிலேயே நினைத்துக் கொண்டவராய் பேப்பரைப் பார்க்கத் தொடங்கினார்.

விஜய் ட்ரேயை எடுத்துக்கொண்டு மாடிக்குப் போன போது ஆனந்த் குளித்து முடித்துவிட்டு ஈரத்தலையைத் துவட்டிக்கொண்டே பாத்ரூமிலிருந்து வெளியில் வந்தான். மஞ்சள் நிற மேனி பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தது. கண்கள் நிர்மலமாய், களங்கமில்லாமல் இருந்தன. வாழ்க்கையில் என்றுமே யாரையுமே ஏமாற்றாத முகம் அது. எப்போதும் உற்சாகமாய் இருப்பதையே விரும்பும் மனப்பான்மை படைத்தவன் என்பதைப் பறைச் சாற்றும் சிவந்த இதழ்கள். உற்சாகத்துடன் விசிலடித்துக் கொண்டே நிலைக்கண்ணாடியை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தான். நடுவில் நின்று ''ஹாச்... ஹாச்...'' என்று வரிசையாய் ஐந்தாறு தும்மல்களைப் போட்டான்.

அந்தத் தும்மல்களுக்கு அவன் முகம் முழுவதும் செக்கச் சிவந்து விட்டது.

''பாழும் ஜலதோஷம். இதுக்கும் எனக்கும் எத்தனை ஜென்ம பகையோ, வந்தால் லேசில் போகாது... சனியன்.''

''நேற்று இரவு உடம்பு சரியில்லை என்று சொன்னவன் இப்பொ தலைக்குக் குளிப்பானேன்?'' விஜய் ட்ரேயை மேஜை மீது வைத்து விட்டு ஜேபியிலிருந்து வெள்ளை நிற கைக்குட்டையை எடுத்து ஆனந்திடம் கொடுத்தான்.

ஆனந்த் டிரஸ்ஸிங் டேபிள் அருகில் சென்றான். கண்ணாடி முன்னால் நின்று ஒரு நிமிடம் தன்னுடைய உருவத் தோற்றத்தைப் பார்த்துக் கொண்டான். அவன் கண்களில் மகிழ்ச்சி பொங்கியது.

ஷர்ட்டை எடுத்து மாட்டிக் கொள்ளும்போது லூசாக இருப்பது போல் தோன்றியது.

''ஹூம்...'' என்று ஷர்ட்டை விசியெறிந்தான். ''விஜய்!'' சீரியஸாக அழைத்தான்.

ட்ரேயிலிருந்த தட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்த விஜய் தலையை உயர்த்தாமலேயே ''ஊம்'' என்றான். ஆனந்த் அடிக்கடி இப்படி அழைப்பதும், விஜய் பதில் கொடுப்பதும் அவர்களுக்குள் பழக்கமான விஷயமாக இருந்தது. ஆனந்த் விஜய் பக்கம் திரும்பி தன்னை முழுவதுமாக ஒரு தடவை பார்த்துக் கொண்டே சொன்னான்.

''நான் உன்னைவிட அதிகமாகச் சாப்பிடுகிறேன். பழரசம் அது இது என்று குடிப்பதில் எந்தக் குறைச்சலும் இல்லை. போறாத குறைக்கு விட்டமின் மாத்திரைகள் வேறு. அப்படியும் என்னுடைய எடை ஏறவேமாட்டேங்கிறது. ஏன்?''

''நீ முதலில் சாப்பிட வா அனு! டிபன் ஆறிப்போய் விடும்.'' எச்சரிப்பது போல் சொன்னான் விஜய்.

ஆனந்த் உடைகளை மாற்றிக் கொண்டு, தலையை வாரிக்கொண்டு கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தை



விட முடியாதவன் போல் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சாப்பிட வந்தான்.

தட்டில் இட்லியைப் பார்த்ததும் ''இட்லியா! இந்தக் கிழவிக்கு வரவர மூளை கலங்கிப் போய் விட்டது. ஒன்றைச் சொன்னால் வேறு ஒன்றைச் செய்கிறாள். இப்படியே போனால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. அவளை வேலையிலிருந்து அனுப்பி விடச் சொல்லி இப்பொழுதே போய் தாத்தாவிடம் சொல்கிறேன்.'' சொல்லும் போதே ஆனந்த் முகம் கோபத்தால் சிவந்து விட்டது. அவன் நாற்காலியை விட்டு எழுந்து கொள்ளப்போகும்போது விஜய் கையைப் பிடித்து நிறுத்தினான்.

''வீட்டிலிருந்து வெளியேற்றணும்னா அவளை இல்லை என்னைத்தான் அனுப்ப வேண்டியிருக்கும்...'' என்றான் விஜய்.

''உன்னையா! எதுக்கு?''

''இட்லியைச் செய்யச் சொன்னது நான்தான். உனக்கு ப்ளூ ஜுரம் வந்து நான்கு நாட்கள்கூட ஆகவில்லை. டாக்டர் சர்மா எண்ணெய்ப் பொருட்களைச் சேர்க்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கிறார்.''

''அவர் ஒருத்தர்... என் உயிரை எடுப்பதற்கு! கொஞ்சம் தும்மினால் போதும். பத்து நாட்கள் பத்தியம் போட்டுக் கொன்று விடுவார். ஹூம்... நீ சொன்னாய் இல்லையா... ஓ.கே... இட்லியைச் சாப்பிடுகிறேன்.'' ஆனந்த் முகத்தில் கோபம் மறைந்து அந்த இடத்தில் புன்முறுவல் குடிகொண்டது.

''எனக்கு எது நல்லது என்று யோசிக்கும் நண்பன் இருப்பது என் அதிர்ஷ்டம் இல்லையா...'' ஆனந்த் சொன்னான்.

''அனூ! நான் உன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்லணும்.'' ஆனந்த் சரியாகச் சாப்பிடுகிறானா இல்லையா என்று கவனமாகப் பார்த்துக் கொண்டே விஜய் சொன்னான்.

''முதலில் என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லு. நாம் அரக்கு வேலி போவதற்குத் தாத்தா பணம் தருகிறாரா இல்லையா?'' ஆனந்த் கேட்டான்.

''நான் வரப் போவதில்லை.''

''ஏன்?''

''எனக்கு வேலை இருக்கிறது.''

''ஓ. கே... எனக்கும் வேலை இருக்கிறது. நானும் போகப் போவதில்லை. ப்ரோகிராம் கேன்சல்.'' ஆனந்த் தீர்மானமாகச் சொல்லி விட்டான்.

''நீ போய் விட்டு வா...'' விஜய் சொன்னான்.

''நீ இல்லாமலா?''

''அனூ! எத்தனை நாட்களுக்கு இப்படியே நடக்கும்? இதற்கு முன்னால் என்றால் குழந்தைகளாக இருந்தோம். சேர்ந்து படித்தோம். எங்கு போனாலும் ஒன்றாகிப் போய் வந்தோம். இனி மேல் அப்படி நடந்து கொள்ள முடியாது.''

''ஏன் முடியாது?'' ஆவேசமாய்க் கேட்டவன், நெற்றியைச் சுளித்தான். ''வரவர கிழவிக்கு மறதி அதிகமாகி விட்டது. சட்னியில் இரண்டு தடவை உப்பைப் போட்டு விட்டாள் போலிருக்கிறது. விஜய்! நீ ஏன் எப்போதும் லக்ஷ்மியை, குப்பனை சப்போர்ட் செய்து கொண்டிருக்கிறாய்?'' எரிச்சலுடன் கேட்டான்.

''சின்ன வயதிலிருந்து நன்மை வளர்த்து ஆளாக்கினவங்க என்பதால்.''

''அப்பொ அவர்களுக்காக ஏதாவது ஏற்பாடு செய்து விடு. வேறு ஆட்களை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம்.''



''ஆனந்த்! நான் சொல்வதைக் கவனமாய் கேட்டுக் கொள்.''

''கேட்கிறேன். சொல்லு...'' ஆனந்த் இட்லி சாப்பிடுவதை நிறுத்தி விட்டு நாற்காலியின் பின்னாடி சாய்ந்து கொண்டு கைகளைக் கட்டிக் கொண்டான்.

விஜய்க்குச் சிரிப்பு வந்தது. ஆனால் சிரிக்கவில்லை.

''நீ ஹரி மற்றவர்களுடன் சேர்ந்து அரக்கு வேலிக்கு போய் விட்டு வா.''

''நீ வருவதும் வராமல் இருப்பதும் எப்படி உன் விருப்பமோ... அதேபோல் போவதா வேண்டாமா என்று முடிவு செய்வதும் என் விருப்பம். நான் முடிவு செய்து விட்டேன். நான் போகப் போவதில்லை.''

''ஒவ்வொரு விஷயத்தையும் என்னுடன் முடிச்சுப் போடக் கூடாது என்றுதான் சொல்கிறேன்.'' சொன்னான் விஜய்.

''நான் முடிச்சு போடுகிறேனா? ஆமாம்... நானும் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். சமீப காலமாய் அடிக்கடி இந்த மாதிரி வித்தியாசமாய் ஏதோ பேசுகிறாய். அசல் விஷயம் என்ன? முதலில் சொல்லு...'' ஆனந்த் டிபன் தட்டைப் பக்கத்தில் நகர்த்தி விட்டான்.

''நீ டிபனை முழுவதுமாகச் சாப்பிடு.''

''நான் சாப்பிட மாட்டேன். முதலில் விஷயத்தைச் சொல்லு.'' பிடிவாதம் பிடிப்பது போல் சொன்னான் ஆனந்த்.

விஜய் ஆழமாய் மூச்சை எடுத்துக் கொண்டான்.

அதற்குள் கிழே இருந்து ''விஜய்! விஜய்!'' திட்சிதர் அழைக்கும் குரல் கேட்டது.

''இதோ வந்து விட்டேன்.;' விஜய் போகும்போது ஆனந்த் தடுத்து நிறுத்தி விட்டான்.

''தாத்தா எப்போதும் இப்படித்தான் அழைத்துக் கொண்டே இருப்பார். நீ போகாதே'' என்றான்.

''இரு அனு! ஏதாவது வேலை இருந்திருக்கும்.'' விஜய் கையை விடுவித்துக் கொண்டு வேக வேகமாய் போய் விட்டான்.

ஆனந்த் டேப் ரிக்கார்டரை இயக்கி விட்டுப் பாட்டு கேட்டுக்கொண்டே இட்லியைச் சாப்பிடத் தொடங்கினான்.

விஜய் படியிறங்கி கீழே வந்தான். தீட்சிதர் விஜய் கையில் நோட்டுக் கற்றைகளை கொடுத்துக் கொண்டே ''இதோ விஜய்! ஆசாரி மாமா வீட்டை அடமானம் வைத்து வாங்கிய கடனின் கடைசி தவணை கொடுத்து விட்டார். இத்துடன் கடன் முழுவதுமாகத் தீர்ந்து விட்டது. இரும்புப் பெட்டியில் வீட்டுச் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள் இருக்கும். கொண்டு வந்து கொடு'' என்று இடுப்பில் சொருகியிருந்த சாவிக் கொத்தை எடுத்து விஜயிடம் கொடுத்தார்.

''சரி...'' விஜய் சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு உள்ளே போனான்.

''அய்யா! போன வாரம் நான் கொண்டு வந்த இஞ்சினீயர் வீட்டுப் பெண்ணுக்கு ஆனந்துக்குப் பதிலாக விஜய் மாப்பிள்ளையாக வந்தால் ஒப்புக் கொள்வார்களாம். ஒரே ஒரு பெண். விஜயை அவர்களுக்கு ரொம்ப பிடித்து விட்டதாம்.'' ஆசாரி சொல்லி முடித்தார்.

இதைக் கேட்டதும் தீட்சிதரின் முகத்தில் கோபம் அலை போல் பொங்கி உடனே அடங்கி விட்டது.

''போகட்டும் விடுங்க. உலகத்தில் வேறு பெண்ணே இல்லாமல் போய் விட்டாளா என்ன? வேறு இடத்தைப் பாருங்கள். ஆனந்தின் படிப்பும் முடிந்து விட்டது. இந்த சித்திரையில் அவன் திருமணத்தை முடித்து விடலாம்னு நினைக்கிறேன்.''



''நல்லதுதான். எங்களுக்கும் விருந்து சாப்பாடு கிடைக்கும் இல்லையா!'' ஆசாரி மட்டையிலிருந்து மூக்குப் பொடியை எடுத்து உறிஞ்சிக்கொண்டே வீட்டை முழுவதும் பார்வையிட்டார். ''நீங்களும் பதினெட்டு வருடங்களுக்கு முன்பு இருந்த தீட்சிதரா என்ன? ஏனோ தானோ என்று சாதாரண சம்பந்தம் பண்ணிக் கொள்வதற்கு. இந்த வீடு... இருபது ஏக்கர் தென்னந்தோப்பு, ரைஸ் மில்லு, பெட்டி நிறைய பணம். சாட்சாத் லக்ஷ்மி தேவி உங்களுக்கு மாலையிட்டு விட்டாள்.''

''சொன்னேனே... கோர்ட் கேஸ் ஒன்றில் ஜெயித்தேன் என்று.''

''ஆமாம். அதைத்தான் சொல்கிறேன். அதிர்ஷ்டம் என்றால் உங்களுடையதுதான்.''

''அதிர்ஷ்டம் என்னுடையது இல்லை. எங்க ஆனந்தோடது.''

''உண்மைதான். இருந்தாலும் 'மாடு வந்த வேளை, மருமகள் வந்த வேளை' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விஜய் உங்கள் வீட்டுக்கு வந்த வருஷம் தானே...''

''நல்ல பெண்ணாகப் பார்த்துச் சொல்லச் சொன்னால்...''

''இருங்க... இருங்க... அந்த பாயிண்டுக்குத்தான் வருகிறேன். இந்தச் சொத்து முழுவதும் ஆனந்துக்குத் தானா, இல்லை இதில் விஜய்க்கும் ஏதாவது கொஞ்சம்...''

''ஆசாரி! ஏற்கனவே உங்களிடம் ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன். விஜய் ஆனந்துக்குத் துணையாக இருப்பதற்காக அழைத்து வரப்பட்ட பையன் என்று. எங்களுக்கும் அவனுக்கும் எந்த உறவும் இல்லை. இந்த விஷயம் விஜய்க்கும் தெரியும்.''

''தெரியும் சுவாமி... தெரியும். நீங்க எங்களை மறந்து

போக விட்டால்தானே. உள்ளூர் மக்களுக்கு இந்த விஷயம் நன்றாகவே தெரியும். வேற்று மனிதர்கள் வந்தால் விஜய் உங்களுடைய சொந்த பேரன்தான் என்று நினைத்துக் கொள்வார்கள். அந்த அளவுக்கு விஜய் உங்களுடைய வேலைகளை நன்றாகப் பார்த்துக் கொள்கிறான்.''

''அதனால் என்ன? ஆனந்தின் உடல் நல கொஞ்சம் சரி இல்லை. அதான்...''

''அதுவும் சரிதான். இருந்தாலும் விஜய்க்குச் சாமர்த்தியம் கொஞ்சம் அதிகம்தான்...''

அதற்குள் விஜய் தஸ்தாவேஜுகளுடன் அங்கே வந்தான். அவன் கையில் ஒரு காகிதமும், பேனாவும் இருந்தன. காகிதத்தில் ஏற்கனவே கணக்கு ஏதோ போட்டிருந்தது.

''நீங்க 480 ரூபாய் அதிகமாகக் கொடுத்திருக்கிங்க...'' என்று சொல்லிக் கொண்டே ஆசாரியிடம் அதற்கு முன் அவர் பணம் கொடுத்த விவரங்களைத் தேதி வாரியாகச் சுட்டிக் காட்டினான்.

''நீ சொன்ன பிறகு மறுபேச்சு இருக்க முடியுமா? மில்லிலும் எல்லோரும் இதே வார்த்தைதான். கணக்கு விஷயத்தில் விஜய் கச்சிதம் என்று. தீர்க்காயுஷ்மான்பவ... புத்ரபௌத்ராயி சித்திரஸ்து...'' மனப்பூர்வமாக வாழ்த்தினார். விஜய் கொடுத்த பணத்தை எண்ணிக்கொண்டே ''விஜய்! உனக்காக ஒரு நல்ல சம்பந்தம் வந்திருக்கு. பெண் ரொம்ப அழகாக, லட்சணமாக இருப்பாள். அப்பா இஞ்சினியர். ஒரே மகள். உன்னை மருமகனாய் ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று அவர் ரொம்ப விருப்பப்படுகிறார்...'' சொல்லி முடித்தார் ஆசாரி.

தீட்சிதரின் இதழ்கள் இறுகின.

''தாங்க்ஸ். நான் இப்பொ திருமணம் செய்துகொள்வதாக இல்லை.'' விஜய் புன்முறுவலுடன் நேராக, நேர்மையுடன் பதில் சொன்னான்.



''விஜய்! விஜய்!'' ஆனந்த் சுழல்காற்று போல் வேகமாய் படிகளை இறங்கி வந்தான். அவன் கைகளில் சில காகிதங்கள் இருந்தன.

''விஜய்! இதெல்லாம் என்ன? எங்களை இப்படி முதுகில் குத்தியது நீதானா?'' ஆனந்த் ரொம்ப ஆவேசமாக இருந்தான். அவன் இதழ்கள் துடித்துக் கொண்டிருந்தன.

''என்ன ஆச்சு அனூ?'' தீட்சிதர் பதட்டத்துடன் கேட்டார்.

ஆசாரி எண்ணிக் கொண்டிருந்த பணத்தை அப்படியே விட்டுவிட்டுக் காணக் கிடைக்காத காட்சியைப் பார்ப்பது போல் விஜயை, ஆனந்தை மாறி மாறிப் பார்த்துக்கொண்டு இருந்தார்.

விஜய் கொஞ்சம்கூட தடுமாறாமல் பேப்பரில் இருந்த கணக்கை மற்றொரு முறை சரி பார்த்துக் கொண்டிருந்தான்.

''உனக்கு எவ்வளவு துணிச்சல்? எனக்கே துரோகம் செய்ய நினைக்கிறாயா?'' ஆனந்த் விஜயின் காலரைப் பிடிக்கப் போனான்.

விஜய் பேசவில்லை. குனிந்த தலையை நிமிரவும் இல்லை.

தீட்சிதர் சட்டென்று எழுந்து வந்தார். ''ஆனந்த்! என்னாச்சு கண்ணா?'' ஆனந்தின் கையைப் பிடித்துக் கொண்டே கேட்டார்.

''என்னாச்சுன்னு நிதானமாக கேட்கிறீங்களா? இந்தப் பெரிய மனிதன் ஹைதராபாதில் லெக்சரர் வேலைக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கிறான். எப்பொ இண்டர்வ்யூவுக்குப் போயிட்டு வந்தானோ தெரியவில்லை. வேலை கிடைத்துவிட்டது. இதோ ஆர்டர்.'' கையில் இருந்த காகிதத்தை முகத்திற்கு நேராக ஆட்டிக் காண்பித்தான் ஆனந்த்.

''என்ன? நிஜமாகவா!'' தீட்சிதர் ஆச்சரியமாகப் பார்த்தார். ''விஜய்! ஆனந்த் சொல்வது உண்மையா? நீ இந்த வீட்டைவிட்டுப் போய்விட வேண்டும் என்று நினைக்கிறாயா?'' தீட்சிதரின் குரல் போலியான கோபத்துடன் ஒலித்தது.

ஆசாரிக்கு விஷயம் புரிந்தது. ''என்ன தீட்சிதர் அவர்களே! புதிதாகக் கேட்கிறீர்களே? இதில் விஜய் செய்த தவறு என்ன இருக்கிறது? வயதுக்கு வந்த பையன். அவன் வாழ்க்கையை அவன் பார்த்துக் கொள்கிறான். இதில் குற்றம் சொல்ல என்ன இருக்கிறது? நீங்க அவனுக்கு ஆனந்துக்குச் சமமாய் சொத்தில் பங்கு ஏதாவது தரப் போகிறீர்களா என்ன?''

''ஷட்டப் யூ ஓல்ட் மேன்! கெட் அவுட்...'' ஆனந்த் வேகமாய் வந்து தோள்களைப் பற்றி ஆசாரியை நாற்காலியிலிருந்து எழுப்பித் தரதரவென்று இழுத்துக்கொண்டு போய் வெளியில் தள்ளி வாசற்கதவைச் சாத்தினான்.

ஆனந்தின் கத்தலைக் கேட்டு லக்ஷ்மியும், குப்பனும் கதவுக்குப் பின்னால் மறைந்து கொண்டு பயத்துடன் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆனந்த் நேராக விஜய் அருகில் சென்றான். ''அந்த ஓல்ட் ஃபாக்ஸ் உளறியதெல்லாம் உண்மைதானா? தாத்தா சொத்தில் உனக்குப் பங்கு கொடுக்கப் போவதில்லையா? ஒருத்தர் கொடுப்பதாவது? அந்த நிலம், தென்னந்தோப்பு, ரைஸ்மில் எல்லாமே உன்னுடைய சொந்த முயற்சியில் தானே இந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றன. இப்பொழுதே தாத்தாவைக் கையெழுத்தைப் போடச் சொல்கிறேன். உன்னை என்னிடமிருந்து பிரிக்கும் இந்தப் பணம் எனக்கு வேண்டவே வேண்டாம். நன்றாக கேட்டுக் கொள். நீயே முழுவதுமாக எடுத்துக்கொள். தாத்தா... இதோ பேனாவும், பேப்பரும். முதலில் எழுதிக் கையெழுத்துப் போடு.''



ஆனந்த் பேப்பரையும் பேனாவையும் கொண்டு வந்து தாத்தாவிடம் கொடுத்தான்.

''அது இல்லை ஆனந்த்!'' தீட்சிதர் ஏதோ சொல்லப் போனார்.

''முதலில் எழுதிக் கையெழுத்துப் போடு தாத்தா... ஊம்...'' ஆனந்த் மிரட்டுவது போல் தாத்தாவின் தோளில் கையைப் பதித்தான்.

பேரனின் உருட்டல் மிரட்டல்களுக்கு அவர் பயந்து விட்டார். ஆனந்த் வாயிலிருந்து ஒரு வார்த்தை வந்தால் அது உடனே நடந்தாக வேண்டும். சின்ன வயதிலிருந்து இந்தக் கெட்ட பழக்கத்தை ஊக்குவித்தது அவர்தான். ஆனந்துக்கு அளவுக்கு மீறிச் செல்லம் கொடுத்து வளர்த்ததற்கு அவன் பெரியவன் ஆன பிறகு இவ்வளவு பெரிய அபராதம் செலுத்தவேண்டி வரும் என்று அவர் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

விருப்பமில்லா விட்டாலும், வேறு வழியில்லாத நிலையில் தீட்சிதர் காகிதத்தில் எழுதத் தொடங்கினார்.

விஜய் அவர் கையிலிருந்து காகிதத்தை எடுத்துக் கொண்டான். ஆனந்த் அதைப் பிடுங்கிக் கொண்டு மறுபடியும் தாத்தாவிடம் கொடுத்தான்.

''ஆனந்த்! நீ கொஞ்சம் அதிகமாக உணர்ச்சிவசப் படுகிறாய்...'' ஆனந்தை அதட்டுவதுபோல் சொன்னான் விஜய்.

சின்ன வயதிலிருந்தே இப்படித்தான். தீட்சிதருக்கும், ஆனந்துக்கும் நடுவில் சண்டை, சச்சரவு ஏதாவது வந்தால் அது தீரும் வரை விஜய்க்குத்தான் தலை வேதனை. முடிந்தவரை அது போன்ற சூழ்நிலை வராமல் பார்த்துக் கொள்வான்.

''உணர்ச்சிவசப்படுவது நீயா இல்லை நானா?'' ஆனந்த் கோபமாய் கேட்டான். வீட்டைச் சுட்டிக் காட்டிக்

கொண்டே, "இங்கே இந்த வீட்டில் இத்தனை பணம் கொட்டிக் கிடக்கிறபோது நீ யாருமே இல்லாத அனாதை போல் எங்கேயோ போய் யாருக்குக் கீழேயோ வேலை செய்து பிழைக்கத்தான் வேண்டுமா? அதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருப்பதா?"

"வேலை பார்க்கிறவர்கள் எல்லோரும் அநாதைகளா?"

"வேண்டும் என்பவர்களை, இருக்கிற சொத்தைவிட்டு விட்டு வெளியே போகிறவர்களை அனாதைகள் என்றுதான் சொல்வேன். முதலில் என் கேள்விக்கு நேராகப் பதில் சொல்லு. எங்களை விட்டுத் தொலைவுக்குப் போக வேண்டும் என்று ஏன் நினைக்கிறாய்? நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா?"

"இல்லை..." விஜய் கச்சிதமாகப் பதில் சொன்னான்.

"பின்னே? தாத்தா ஏதாவது சொன்னாரா?" ஆனந்த் திட்சிதர் பக்கம் சந்தேகமாய்ப் பார்த்தான்.

"நானா!" திட்சிதர் அதிர்ச்சி அடைந்தவர் போல் பார்த்தார். "நான் என்ன சொல்லிவிட்டேன்?"

"உண்மையைச் சொல்லு தாத்தா! ஒன்றுமே சொல்லவில்லையா?" ஆனந்த் குரலை உயர்த்தினான்.

"தாத்தா என்னை ஒன்றுமே சொல்லவில்லை." விஜய் திட்சிதர் அருகில் சென்று அவர் சார்பில் பதில் சொல்வது போல் சொன்னான்.

"அப்பொ... என்னதான் நடந்தது? இந்த யோசனை உனக்கு எப்படி வந்தது?" ஆனந்துக்குக் கோபத்தில் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

"என்னிக்காவது ஒருநாள் நான் சுதந்திரமாக வாழ்ந்து தானே ஆகணும்."

"சுதந்திரமாய் வாழணுமா! அப்படின்னா... இப்பொ



சிறையில் இருக்கிறாயா? ஆட்ரைட். அதைப்பற்றி இப்பொ வாதம் வேண்டாம். உனக்கு அது போன்ற எண்ணம் இருந்தால் அதை நான் மறுக்கவில்லை. ஆனால் சுதந்திரத்தைத் தேடி எங்கேயோ போவானேன்? ஒரே ஒரு வார்த்தை என்னிடம் சொல்லியிருக்கலாமே. நான் ஒரு முட்டாள் என்றும், எதையும் புரிந்து கொள்ள முடியாதவன் என்றும் உனக்குத் தெரியும் இல்லையா... மாடி முழுவதும் நீயே எடுத்துக் கொள். அங்கேயே தங்கிக்கொள். நாங்க யாரும் அந்த இடத்தில் காலடி வைக்க மாட்டோம். தாத்தா! இந்த வேளையிலிருந்து நம்முடைய சாப்பாடு கீழேதான். படுத்துக் கொள்வதும் இரும்புப் பெட்டி இருக்கும் அறையில்தான். விஜயை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது. அவனாக கூப்பிட்டால் போய் பேசுவோம்."

"ஆனந்த்!" விஜய் தடுப்பது போல் அழைத்தான்.

"இப்பொ சொல்லு. உயிர் போகிற விஷயம் ஏதாவது இருந்தால் நாங்க உன்னுடன் பேசலாமா இல்லை அதுவும் வேண்டாமா? வருடக் கணக்காய் எங்க முகங்களை பார்த்துப் பார்த்து உனக்குச் சலிப்பு வந்து விட்டதா?"

"ஆனந்த்! நான் சொல்வதைக் கேள்."

"மாட்டேன்... கேட்கமாட்டேன். ஒவ்வொரு விஷயத்தையும் அது எவ்வளவு சின்னதாக இருந்தாலும் சரி நான் உன்னிடம் சொல்லாமல் செய்திருக்கிறேனா? சொல்லும் முன் அது உனக்குப் பிடிக்குமா இல்லையா என்று ஆயிரம் தடவை யோசிப்பேன். உன்னுடைய அறிவுரையைக் கேட்டுக் கொள்வேன். நீ வேண்டாமென்று சொன்னால் மறுபேச்சு பேசாமல் விட்டு விடுவேன். ஆனால் நீ அப்படியில்லை. எப்பொழுதும் உன் மனதில் இருப்பதை வெளியில் சொல்லமாட்டாய். இத்தனை வருடங்கள் கழிந்துவிட்டன. என்னுடைய உயிர் நண்பன் நீதான் என்று நான் நினைத்து வருகிறேன். நீ மட்டும் எனக்குத் துணைக்காகத் தாத்தா

வினால் அழைத்து வரப்பட்டவன் என்பதுபோல் சிலசமயம் நடந்துகொள்கிறாய். இதோ இந்த வேலை விஷயம்கூட அப்படித்தான். எனக்குத் தெரியும். நான் உன்னைக் குற்றம் காணக்கூடாது என்று இந்தவிதமாகச் செயல் படுகிறாய். தவறு முழுவதும் என்மீதுதான். என்னுடைய நட்பு பற்றி ஆழமான நம்பிக்கையை உன் மனதில் ஏற்படுத்த முடியாமல் போய்விட்டேன். நான் உயிருடன் இருப்பதே வேஸ்ட். உன்னைப் போன்ற நல்ல நண்பனைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத எனக்கு உயிருடன் இருக்கும் தகுதி இல்லை...'' ஆனந்த் சுவற்றில் வேகமாய் மோதிக் கொள்ளத் தொடங்கினான்.

''ஆனந்த்! ஆனந்த்! என்னப்பா இது...'' தீட்சிதர் வந்து தடுக்கப் போனார். ஆனந்தின் கைகள் அவரைப் பலமாய் பக்கத்திற்குத் தள்ளிவிட்டன.

''நீ இந்த விஷயத்தில் தலையிடாதே தாத்தா. முதலில் இந்த இடத்தைவிட்டுப் போய்விடு. இல்லாவிட்டால்...'' கைப்பிடிகளை இறுக்கி, தொண்டை நரம்புகள் புடைக்கக் கத்தினான் ஆனந்த். அவன் கண்கள் சிவந்துவிட்டன. கன்னங்கள் மீது கண்ணீர் வழியத் தொடங்கியது. விஜயினால் இனிமேல் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை.

அதுவரையில் எப்படியாவது இந்த நிலைமையை எதிர் கொண்டு தீர்வைக் காண வேண்டுமென்று திடமான முடிவுடன் இருந்தான். ஆனந்தின் பிடிவாதத்தை முன் கூட்டியே ஊகித்தவன் போல் மௌனமாய், கம்பீரத்துடன் தாக்குப்பிடிக்க முயற்சி செய்தான்.

ஆனால் ஆனந்தைப் பார்த்த பிறகு அவன் செய்து வைத்திருந்த முடிவு காற்றில் பறந்துவிட்டது. எப்போதும் தன்னுடைய எதிர்காலத்தைவிட ஆனந்த்தான் முக்கியம் என்று தோன்றியது.



இரண்டடி முன்னால் வைத்து ஆனந்த் அருகில் வந்தான். ''ஆனந்த்!'' என்று அழைத்தான்.

''என்னை யாரும் சாப்பிடத் தேவையில்லை. ஆனந்த் இறந்து போய் விட்டான்.''

''ப்ளீஸ்... ஆனந்த்.''

''நீ உடனே இங்கிருந்து போய்விடு. சுதந்திரமான வாழ்க்கை உனக்காக மாலையோடு காத்திருக்கிறது.'' ஆனந்த் கத்தினான்.

விஜய் அந்தக் கத்தல்களைப் பொருட்படுத்தவில்லை. மேலும் அருகில் வந்தான். ''ஆனந்த்!'' என்று அழைத் தான்.

''நோ... யாரும் என் முகத்தைப் பார்க்கத் தேவை யில்லை. இந்தப் பிறவியில் உனக்கு அந்த வேதனை இருக்காது.''

ஆனந்த் ஆவேசத்துடன் சுவற்றில் தலையை மோதிக் கொண்டிருந்தான். அந்த நிமிடத்தில் அவன் சொன்னதில் அணுவளவும் பொய் இல்லையென்றும், சொன்னபடி நிச்சயமாய் செய்வான் என்றும் விஜய்க்குப் புரிந்தது.

விஜய் ஆனந்தின் இரண்டு தோள்களிலும் கைகளைப் பதித்து வலுக்கட்டாயமாய் தன் பக்கம் திருப்பிக் கொண்டான்.

''சாரி அனூ! இனி ஒரு நாளும் இதுபோல் செய்ய மாட்டான். சரிதானா!'' என்றான்.

ஆனந்த் அமைதியடையவில்லை. அவனுடைய கோபம் கட்டுக்கு அடங்காமல் காட்டாற்று வெள்ளம் போல் பொங்கிக் கொண்டிருந்தது. அதன் தாக்குதலைத் தாங்க முடியாமல் அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

''ப்ளீஸ் ஆனந்த்!'' விஜய் வேண்டுவது போல் சொன்னான்.

''இங்கே யாரும் யாருக்காகவும் வலுக்கட்டாயமாய் இருக்க வேண்டியதில்லை.'' ஆனந்தின் கோபம் இன்னும் குறையவில்லை. வீம்பு பிடிப்பது போல் சொன்னான். ''சிலசமயம் தவறுதலாக வேண்டாத யோசனைகள் எனக்கு வந்துவிடும். இனி ஒருநாளும் இப்படி நடந்து கொள்ளமாட்டேன்.''

''இப்பொ இப்படித்தான் சொல்வாய். மறுபடியும் என்னுடைய உயிரை எடுக்க ஏதாவது பிரச்னை வரும்.''

''வராது... வரவிடமாட்டேன். நான் எங்கேயும் போக மாட்டேன்...'' என்றான் விஜய்.

''நான் நம்பமாட்டேன்.''

''பிராமிஸ்!''

''நிஜமாகவா!''

''நிஜம்தான். பிராமிஸ்.''

ஆனந்த் விஜயின் கையைத் தன் தலைமீது வைத்துக் கொண்டான்.

''எங்கேயும் போகமாட்டேன். தவறிப் போய்கூட அது போன்ற யோசனைகளை வரவிடமாட்டேன். சரிதானா!'' விஜய் வாக்கு தருவது போல் சொன்னான்.

''நீ எனக்கு வாக்கு கொடுத்துவிட்டாய். தவறினால் என் தலை இரண்டாக உடைந்துவிடும். எப்படி உடையும் என்று உனக்கு நான் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. என்னைப் பற்றித் தெரியும் இல்லையா...?'' இரட்டிப்பது போல் கேட்டான்.

''தெரியும்...'' விஜய் ஆனந்த் முதுகில் தடவிக் கொடுத்தான்.

கத்தி, ரகளை செய்ததில் ஆனந்துக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. மூச்சு விட முடியாமல் கஷ்டப்பட்டான். அவனுக்கு ஆஸ்மா அட்டாக் தீவிரமாக வந்துவிட்டது.



''குப்பண்ணா... ஓடு... ஓடிப் போய் டாக்டர் சர்மாவை அழைத்துக் கொண்டு வா...'' தீட்சிதர் பதற்றத்துடன் கத்தினார்.

விஜய் கிடுகிடுவென்று மாடிக்குப் போய் நிமிடத்தில் இன்ஹேலரை எடுத்துக் கொண்டு வந்து ஆனந்தின் மூக்கின் அருகில் வைத்தான். மூச்சுக்காற்று சீரடைந்தது போல் தோன்றினாலும் மறுபடியும் திணறல் தொடங்கியது.

''விஜய்! ஐயாம் கோயிங் டு டை. என்னை உன் கைகளில் எடுத்துக் கொள்.'' பலவீனமான குரலில் வேண்டுவதுபோல் கேட்டான். விஜய் ஆனந்தைக் கைகளில் எடுத்துக் கொண்டான்.

''அனூ! ரிலாக்ஸ் ப்ளீஸ்.''

''அனூ! அனூ!'' தீட்சிதர் ஆனந்தின் தலையை வருடிக் கொடுத்தார். பார்வை தடுமாற ஆனந்த் ''விஜய்! என்னை விட்டுவிட்டுப் போகாதே...'' என்றான். மூச்சுத் திணறலுக்கு இடையில் அந்த வார்த்தைகள் கண்ணாடி மீது பரவிய பனியைப் போல் தெளிவில்லாமல் ஒலித்தன. விஜய் ஆனந்தை இரண்டு கைகளில் அப்படியே தூக்கிக் கொண்டு படுக்கையறைக்குள் போனான்.

கால்மணி நேரத்தில் டாக்டர் சர்மா வந்தார். ஆனந்தின் நிலைமையைக் கவனித்து, ''முந்தின நாள் குளத்தில் நீச்சலடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த போதே இப்படி ஏதாவது ஆகும் என்று எதிர்பார்த்தேன்'' என்று சொல்லிக் கொண்டே ஊசியைப் போட்டார். ஆனந்த் மெதுவாக மயக்கத்தில் ஆழ்ந்தான். மூச்சுத் திணறல் இன்னும் குறையவில்லை என்பதற்கு அறிகுறியாய் உடல் தூக்கித் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தது. சர்மா ஆனந்தின் மார்பில் ஸ்டெத்தை வைத்துப் பரிசோதனை செய்து விட்டு ''விஜய்! ஆனந்தை உடனே ஹாஸ்பிடலில் சேர்த்தால் நல்லது என்று தோன்றுகிறது. அட்டாக் கொஞ்சம் தீவிரமாய் இருக்கிறது'' என்றார்.

விஜய் தலையை அசைத்தான்.

''நான் கடிதம் எழுதி தருகிறேன். என்னால் இபபொ உங்களுடன் வரமுடியாது. அர்ஜென்ட் கேஸ் ஒன்று இருக்கிறது. நீயும், தாத்தாவும் கூட போங்கோ... கருணா நர்ஸிங் ஹோமில் எல்லோரும் நமக்குத் தெரிந்தவர்கள் தான். நான் போன் செய்கிறேன்.''

''டாக்டர்! ஒன்றரை மணி நேர பயணத்தை ஆனந்த் தாங்குவானா?''

''பரவாயில்லை. இன்னும் நேரம் கடத்தாமல் புறப்பட்டால் நல்லது.''

''நான் ஷெட்டிலிருந்து காரை வெளியில் எடுக்கிறேன்.'' விஜய் வேகமாகப் போனான்.

சர்மா ஆனந்தின் நாடியைப் பரிசீலித்தார். ஐந்தாவது நிமிடம் விஜய் ஆனந்தை காரின் பின்சீட்டில் படுக்க வைத்தான். தீட்சிதர் மடியில் தலையணையை வைத்துக் கொண்டு ஆனந்தின் தலையைத் தாங்கிக் கொண்டார். விஜய் காரைச் செலுத்தப் போனான்.

''விஜய்! பணத்தை எடுத்துக் கொண்டாயா?'' தீட்சிதர் பதட்டத்துடன் கேட்டார்.

விஜய் தலையை அசைத்தான். மழையில் சாலை முழுவதும் குண்டும் குழியுமாய் இருந்தது. விஜய் ஆனந்துக்கு அசௌகரியம் ஏற்படாத விதமாய் கவனமாய்க் காரைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

''விஜய்! என் அருகிலேயே இரு. என்னை விட்டுப் போகாதே.'' ஆனந்தின் இதழ்கள் தெளிவில்லாமல் முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

''ஒரு நிமிடம் பொறுத்துக் கொள் ஆனந்த். நான் உன் அருகிலேயேதான் இருக்கிறேன் அனூ!'' நயமான குரலில் சொன்னான் விஜய்.

தீட்சிதருக்கு விஷத்தை விழுங்கியதுபோல் இருந்தது. தன் மடியில் தலையை வைத்துக்கொண்டு படுத்திருந்த



ஆனந்த் தன்னை அழைக்காமல், விஜயை அழைத்தது நரகத்திற்குச் சமமான உணர்வை ஏற்படுத்தியது. அவர் விஜயையே தீவிரமாய் பார்த்துக்கொண்டிருந்தார்.

அவர் பார்வைக்கு மட்டும் சக்தி இருந்திருந்தால் இந்நேரம் விஜய் எரிந்து சாம்பலாகியிருப்பான்.

## 3

விஜய் செலுத்திக் கொண்டிருந்த கார் அருணா நர்ஸிங்ஹோம் முன்னால் வந்து நின்றது. ஹாஸ்பிடல் கட்டடம் சமீபத்தில் கட்டியிருப்பதுபோல் புதுசாய் தென்பட்டது. ஏற்கனவே டாக்டர் சர்மா போன் செய்து சொல்லியிருந்ததால் கார் வந்து நின்றதும் வாசலுக்கு ஸ்ட்ரெட்சரை எடுத்து வந்து ஆனந்தை அதன் மீது படுக்க வைத்து உள்ளே அழைத்துச் சென்றார்கள். ஆக்ஸிஜன் ட்யூப் பொருத்துவது, தேவையான ஊசிகளைப் போடுவது அடுத்தடுத்ததாக நடந்து முடிந்து விட்டன. அரைமணி நேரம் கழித்து ஆனந்தின் மூச்சு கொஞ்சம் சீரானது.

விஜய் பக்கத்திலேயே நாற்காலியில் அமர்ந்து இருந்தான். ஆனந்தின் கை அவன் கையைப் பலமாக பற்றி இருந்தது. ஆனந்தின் முகம் சோர்ந்து போய், களைப்புடன் தென்பட்டது. ஒரு பக்கமாய் ஒருக்களித்து படுத்திருந்தான். தீட்சிதர் அருகில் வந்தார்.

விஜய் நாற்காலியிலிருந்து மெதுவாய் எழுந்து ஆனந்தின் பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டு தீட்சிதரின் கையில் ஆனந்தின் கையை வைத்து விட்டு நகர்ந்து கொண்டான். தீட்சிதர் பேரனின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டார். ஆனந்தின் தலையை அன்புடன் வருடிக் கொடுத்தார். அவரையும் அறியாமல் அவர் கண்களிலிருந்து கண்ணீர் வெளியேறியது. ஆனந்த்

பெரியவனாகி விட்டான். படிப்பும் முடிந்து விட்டது. நல்ல பெண்ணாகப் பார்த்து அவனை ஒரு கிருகஸ்தனாக்க வேண்டும் என்று அவர் துடித்துக் கொண்டிருந்தார். ஆனந்தின் பதினெட்டாவது வயதிலிருந்து அவனுடைய உடல் நிலைமை சில சமயம் உயிருக்கு ஆபத்தாகி விடும் அளவுக்கு மோசமாகி அவர் காலடியிலிருந்து நிலத்தை நழுவச் செய்து கொண்டிருந்தது. நல்ல பெண்ணாக, சாமர்த்தியம் மிகுந்த பெண்ணாகப் பார்க்க வேண்டும். தைரியம், பிடிவாதம் மிகுந்த, அன்பு நிறைந்த குணவதிக்காகத் திட்சிதர் வலை வீசி தேடிக் கொண்டிருந்தார். பல ஜாதகங்கள் வந்து கொண்டுதான் இருந்தன. எதுவும் சரிபட்டு வரவில்லை.

அதற்குள் ''நமஸ்காரம் தாத்தா! என்ன? ஆனந்துக்கு என்னவாகிவிட்டது?'' என்ற குரல் கேட்டது.

திட்சிதர் தலையைத் திருப்பிப் பார்த்தார். ஹரிகிருஷ்ணா எதிரே நின்றிருந்தான்.

''ஆனந்துக்கு என்ன ஆகிவிட்டது?'' பதற்றத்துடன் கேட்டான்.

''ஷ்!'' மெதுவாகப் பேசு என்பதுபோல் திட்சிதர் உதட்டின் மீது விரலை வைத்து எச்சரித்தார்.

''நான்கு நாட்களுக்கு முன்பு சந்தித்தேன். அரக்கு வேலி போகலாம் வா என்றான். அப்பொ நன்றாகத்தானே இருந்தான்.'' ஹரி குரலைத் தாழ்த்திக் கொண்டே கேட்டான்.

''ஆஸ்த்மா அட்டாக் கொஞ்சம் தீவிரமாய் வந்து விட்டது'' என்றார் திட்சிதர்.

''அடடா... பாவம் சின்ன வயதிலிருந்து அவனை இந்த ஆஸ்த்மா படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. இது மட்டும் இல்லாமல் இருந்தால் ஆனந்த் எவ்வளவு உற்சாகமாக இருப்பான் தெரியுமா? விஜய் எங்கே?'' ஹரி



கேட்டான். ஆனந்த், விஜய் ஒருவரை விட்டு ஒருவர் இருக்க மாட்டார்கள். இருவரையும் இணைந்து கல்லூரியில் 'விஜயானந்த்' என்று நிக்நேம் வைத்திருந்தார்கள்.

''இது வரையில் இங்கேதானே இருந்தான்'' விஜய்க்காக திட்சிதர் சுற்றும் முற்றும் பார்த்தார். அதற்குள் ட்யூட்டி டாக்டர் ஆனந்தைப் பரிசோதிப்பதற்காக வந்தாள்.

ஹரியைப் பார்த்ததும் ''ஹரி! நீ எங்கே இந்தப் பக்கம்? அதிசயமாய் இருக்கு'' என்றாள்.

''அட... ஹேமா! நீதானா... இன்னிக்கு ட்யூட்டியில் நீதான் இருக்கிறாயா. நல்லதாகி விட்டது. ஹேமா! இவங்க எனக்கு ரொம்ப வேண்டியவர்கள். ஆனந்த் என்னுடைய கிளாஸ்மேட். இவர் ஆனந்தின் தாத்தா... திட்சிதர்...'' என்று அறிமுகப்படுத்தியவன் திட்சிதர் பக்கம் திரும்பி ''தாத்தா... இவள் பெயர் ஹேமா... என்னுடைய பெரியம்மாவின் பெண். அவளுக்கு அண்ணன் தம்பி கிடையாது. எனக்கு அக்கா தங்கைகள் கிடையாது. எங்க சித்தப்பா... ஹேமாவின் தந்தை இப்பொ உயிருடன் இல்லை. ஹேமா சின்ன வயதில் எங்கள் வீட்டில்தான் வளர்ந்தாள்...'' என்றான்.

ஹேமா புன்முறுவலுடன் வணக்கம் தெரிவித்தாள்.

திட்சிதர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்களுக்கு ஹேமா தேஜஸ் நிறைந்த பெண்ணாகத் தென்பட்டாள். பிறவிலேயே ஏற்பட்ட பண்பு, புத்திசாலித்தனம், அமைதி கலந்த சுபாவம் எல்லாம் கலந்து அவள் முகத்தின் ஒளியை மேலும் அதிகரித்துக் கொண்டிருந்தன.

ஹேமா அருகில் சென்று ஆனந்தின் மார்பின் மீது ஸ்டெதஸ்கோப்பை வைத்துப் பரிசோதனை செய்து கொண்டிருந்தாள்.

ஆனந்த் தூக்கக் கலக்கத்திலேயே கண்களைத் திறந்தான்.

''எப்படி இருக்கீங்க?'' ஹேமா புன்முறுவலுடன் ஆனந்திடம் கேட்டாள்.

''ஃபைன்.''

''குட்.'' ஹேமா மெடிகல் சார்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தீட்சிதரால் ஹேமாவின் முகத்தை விட்டுப் பார்வையைத் திருப்பிக் கொள்ள முடியவில்லை. இத்தனை வருடங்களாய் அவர் வேண்டிக் கொண்டதற்குப் பலன் கிடைத்து விட்டது போல் இருந்தது. ஆனந்துக்கு எப்படிப்பட்ட பெண் மனைவியாக வரவேண்டும் என்று அவர் ஊகித்திருந்தாரோ அதற்கு உருவத் தோற்றம் கொடுப்பதுபோல் ஹேமா இருந்தாள்.

''லங்ஸில் ரொம்ப கஞ்செஷன் இருக்கிறது. எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த பிறகு மற்ற டெஸ்டுகளைச் செய்ய வேண்டும்.'' ஹேமா நோட் எழுதிக் கொண்டே சொன்னாள்.

''எங்கள் ஹேமா இருக்கிறாள். ஆனந்தை கவனமாகப் பார்த்துக் கொள்வாள். நீங்கள் கவலைப்படாதீர்கள் தாத்தா.'' தைரியம் அளிப்பதுபோல் சொன்னான் ஹரி.

''நீ ஊரிலிருந்து எப்பொ வந்தாய்?'' ஹேமா ஹரியிடம் கேட்டாள்.

''காலையில்தான். நண்பனின் திருமணத்திற்காக வந்தேன். எங்க லெக்சரர் ராவின் மனைவிக்கு மைல்டாக ஸ்ட்ரோக் வந்திருக்கிறது. இந்த ஆஸ்பத்திரியில்தான் அட்மிட் ஆகியிருக்கிறாள் என்று தெரிந்தது. அதான் பார்க்க வந்தேன்.''

''நோயாளியின் பெயர் லக்ஷ்மிதானே!''

''ஆமாம்.''

''மைல்ட் ஸ்ட்ரோக் இல்லை. சிவியர் ஆகத்தான் வந்திருக்கிறது.'' ஹேமா சொல்லிக் கொண்டிருக்கும் போதே நர்ஸ் அங்கே வந்தாள்.



நோயாளிக்கு விழிப்பு வந்ததும் செய்ய வேண்டிய டெஸ்டுகளைப் பற்றி நர்ஸிடம் சொல்லிவிட்டு ஹேமா அங்கிருந்து கிளம்ப முற்படும்போது தீட்சிதர் சொன்னார்.

''ரொம்ப சந்தோஷம் அம்மா... ஆஸ்பத்திரி என்றாலே எனக்குப் பயம் அதிகம். தெரிந்த பெண் நீ இருப்பதால் கொஞ்சம் தைரியமாக இருக்கிறது. ஹரி ஆனந்துக்கு கிளாஸ்மேட் மட்டுமே இல்லை. தூரத்து உறவினன்கூட. அந்த வழியில் பார்த்தால் நீயும் எங்களுக்கு உறவுதான்.''

ஹேமாவின் இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது.

''இது ஹாஸ்பிடல். இங்கே டாக்டர்களுக்கு நோயாளிகள் எல்லோரும் உறவினர்கள் போல்தான். நீங்க கொஞ்சம்கூட பயப்படத் தேவையில்லை. ஹரி. வீட்டுக்கு வருகிறாயா இல்லையா?'' என்றாள்.

''அம்மாடியோவ்! வீட்டுக்கு வராமல் இருப்பதாவது! பெரியம்மாவும், நீயும் ஒன்றும் நினைத்துக் கொள்ளாவிட்டாலும் அங்கே அம்மா என்னுடைய கால்களை ஒடித்துப் போட்டு விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பாள்.'' பயப்படுவது போல் பார்த்தான்.

''அம்மா உனக்காக ஒரு பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறாள்.'' அவள் கண்களில் மின்னிய குறும்பு பார்ப்பவர்களை ஈர்ப்பதுபோல் இருந்தது.

ஹரிகிருஷ்ணா இருகைகளையும் கூப்பி பெரிதாக கும்பிடு ஒன்று போட்டான். ''ஹேமா! இந்த ஆபத்திலிருந்து என்னை நீதான் காப்பாற்றணும்.''

''வீட்டுக்கு வா! பேசுவோம். இன்று எனக்கு நைட் ட்யூட்டி இருக்கிறது.''

''நான் நண்பர்களுடன் பேசிவிட்டு வருவதற்கு எப்படியும் இரவு ஒரு மணி தாண்டிவிடும். நீ வீட்டுக்கு

வந்த பிறகு என்னை எழுப்பச் சொல்லிப் பெரியம்மா விடம் சொல்லி வைக்கிறேன்'' என்றான்.

''சரி... பார்ப்போம்...'' ஹரியிடம் சொன்னவள் தீட்சிதர் பக்கம் திரும்பி, ''பேரனைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்'' என்று சொன்னாள். அதே நேரத்திற்கு விஜய் ப்ளாஸ்கில் காபி, வாழைப் பழங்கள் முதலிய வற்றைக் கையில் எடுத்துக் கொண்டு உள்ளே வரப் போனான்.

தீட்சிதர் பக்கம் திரும்பி விடைபெற்றுக்கொண்டே அறையைத் தாண்டப் போன ஹேமா விஜய் மீது மோதிக் கொள்ளப்போய் எப்படியோ சமாளித்துக் கொண்டாள்.

''ஐயாம் சாரி...'' விஜய் சற்று நகர்ந்து வழியை விட்டான்.

அந்தக் குரலைக் கேட்டதும் ஹேமா தலையை உயர்த்தி அவன் பக்கம் பார்த்தாள். அவளால் தூக்கத்தில் கூட அந்தக் குரலை அடையாளம் காண முடியும்.

''விஜய்... இவங்க டாக்டர் ஹேமா... நம் ஹரி கிருஷ்ணாவின் தங்கை. இன்னிக்கு இரவு ட்யூட்டி அவளு டையதுதானாம்.'' தீட்சிதர் விஜய்மீது இருந்த கோபத் தைத் தற்காலிகமாய் மறந்து விட்டு ஹேமா பற்றி விஜயிடம் சொன்னார்.

விஜய் ஹேமாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஹேமா! இவன் பெயர் விஜய். ஆனந்தின் நண்பன்.'' ஹரி ஒருவருக்கொருவரை அறிமுகப்படுத்தி வைத்தான்.

''ஹலோ'' என்றாள் ஹேமா தெளிவில்லாமல்.

அவளுடைய முதுகு குறுக்கே இருந்ததால் தீட்சிதருக்கு விஜயின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல் தெரிய வாய்ப்பு இல்லை. விஜய் கண்களில் எதிர்பாராத மகிழ்ச்சி பிரதி



பலிக்கப் போய் உடனே கம்பீரம் திரையாய் படர்ந்து அந்த மகிழ்ச்சியை மறைத்து விட்டது.

''என்ன விஜய்? எப்படி இருக்கிறாய்?'' ஹரிகிருஷ்ணா அருகில் வந்தான்.

''வருகிறேன்.'' பொதுவாகச் சொல்லிவிட்டு ஹேமா கிளம்பிப் போனாள். சற்று தூரம் போன பிறகு கழுத்தை மட்டும் லேசாகத் திருப்பிப் பார்த்தாள்.

விஜய் அவள் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் முகத்தில் ஹேமாவுக்குத் தேவையான பதில் கிடைத்து விட்டதுபோல் இருந்தது. அவள் மனம் மயில் இறகை போல் இலேசாகி விட்டது.

''நன்றாக இருக்கிறாயா விஜய்?'' ஹரி கேட்டுக் கொண்டிருந்தான்.

''நலம்தான்.'' விஜய் உள்ளே வந்தான். தீட்சிதரிடம் வாழைப்பழங்களைக் கொடுத்தான்.

''ஊஹூம். எனக்குச் சாப்பிடணும் போல் இல்லை.'' தீட்சிதர் மறுத்தார்.

''கொஞ்சமாவது சாப்பிடணும். காலையிலிருந்து நீங்க எதுவும் சாப்பிடவில்லை.'' விஜய் வாழைப்பழத்தைப் பாதிவரையில் உரித்து அவரிடம் கொடுத்தான்.

''என்ன... ரஸ்தாளியா...'' ஹரி விஜய் கையிலிருந்து இரண்டு பழங்களை எடுத்துக்கொண்டு மளமளவென்று சாப்பிட்டு விட்டான்.

''உட்கார்ந்து கொள் ஹரி! காபி குடித்து விட்டுப் போகலாம். உங்க ஹேமாவைப் பார்த்த பிறகு என் மனதுக்கு நிம்மதியாகி விட்டது. என்ன இருந்தாலும் நம்ம மனிதர்கள் என்று யாராவது இருந்தால் தைரியமாக இருக்கும் இல்லையா...'' தீட்சிதர் சொன்னார்.

''ஆமாமாம். எங்க ஹேமாவைப் பார்த்தால் கோழைகளுக்குக் கூடத் தைரியம் வந்துவிடும்.'' ஹரி சொன்னான்.

விஜய் ஃபிளாஸ்கிலிருந்து காபியை டம்ளரில் ஊற்றி தீட்சிதரிடம் கொடுத்துக் கொண்டே ''சர்மா அங்கிள் போன் செய்தார். குப்பன் வந்தானாம். சுவாமிநாத அய்யர் நம் வீட்டில் உங்களுக்காகக் காத்திருக்கிறாராம். இன்று அக்ரிமெண்டில் கையெழுத்துப் போடுவதாக இருந்தது இல்லையா... பணத்தையும் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லச் சொன்னாராம்'' என்றான்.

''அடடா... மறந்தே போய் விட்டேன். இந்த நேரத்தில் பஸ் வேறு இருக்காதே. எப்படி போவது?'' தீட்சிதர் கவலையுடன் சொன்னார்.

''என்னுடைய டூவீலர் இருக்கிறது. உங்களுக்கு அர்ஜெண்டாக போகவேண்டும் என்றால் நான் ட்ராப் செய்கிறேன். வாங்க...'' என்றான் ஹரி.

''பெரிய கவலை விட்டது. மகராஜனாய் இருக்கணும் நீ...'' ஆசீர்வாதம் செய்தார் தீட்சிதர்.

''உங்களைப் போன்ற பெரியவர்களின் ஆசிர்வாதம் கிடைத்தால் என் வாழ்க்கையில் அதிர்ஷ்டம் சேர்ந்து வரும்.'' குனிந்து கைகளை ஜோடித்தான் ஹரி.

தீட்சிதர் ஹரிகிருஷ்ணாவுடன் போய் விட்டார்.

விஜய் ஆனந்த் அருகில் கட்டில் மீது அமர்ந்து கொண்டான். ஆனந்தின் மூச்சு சீராக வந்து கொண்டிருப்பதைக் கண்டு அவனுக்கு நிம்மதியாக இருந்தது. சின்ன வயதிலிருந்தே அப்படித்தான். ஆனந்துக்கு அடிக்கடி ஆஸ்த்மா அட்டாக் வந்து அவனைப் பாடாய் படுத்திக் கொண்டிருந்தது. அவனுக்கு அலர்ஜி அதிகமாய் இருப்பதால் எப்பொ அட்டாக் வருமோ யாருக்கும் தெரியாது. ஆஸ்த்மா அட்டாக் வந்தால் போதும் மூச்சு கிடைக்காமல் ஆனந்த் திணறுவான். மருந்துகளைக்



கொடுத்து உடனே அதைக் குறைத்தாலும் போர்க்களத்தில் போர் புரிந்த சிப்பாயைப் போல் களைத்துப் போய் சோர்வடைந்து விடுவான். விஜய் மனம் முழுவதும் ஆனந்த் பற்றிய நினைவுகள்தான். அல்லும் பகலும் உயிர் நண்பனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருப்பான். ஆனந்தின் உடல் நலத்தில் விஜய் எப்போதும் கவனமாய் இருப்பான். அவனையும் மீறி சில சமயம் இப்படி நடந்து விடுகிறது.

விஜயின் கண்கள் ஆனந்தையே பார்த்துக் கொண்டிருந்தன. அங்கே ஆனந்தின் முகத்திற்குப் பதிலாக புன்னகை புரிந்து கொண்டிருந்த ஹேமாவின் முகம் தென்பட்டது. அவனால் பார்வையைத் திருப்பிக்கொள்ள முடியவில்லை. ஹேமாவின் புன்முறுவல் நிலவின் கதிர்களைப் போல் அவன் இதயத்தைத் துளைத்துக்கொண்டு அடிமனதைத் தொட முயன்று கொண்டிருந்தது. அவனுடைய தாடை எலும்பு இறுகியது. வலுக்கட்டாயமாய் ஹேமாவின் நினைவுகளைப் புறக்கணிக்க முயற்சி செய்தான். தன்னுடையவாழ்க்கை ஆனந்துக்காக மட்டும்தான். தன்வாழ்க்கையின் மீது தனக்குக்கூட அதிகாரமோ உரிமையோ கிடையாது. விஜய் ஆனந்தின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். அவனுக்குத் திருப்தியாக இருந்தது. யாராக இருந்தாலும் வாழ்க்கையில் மகிழ்ச்சியான விஷயம் கிடைத்தபோது அதில் திருப்தி அடைய வேண்டும். தன்னுடைய வாழ்க்கையில் ஆனந்தின் நட்பு கிடைத்தது கடவுள் கொடுத்த வரம். அதைவிடத் தனக்கு வேறு எதுவும் தேவையில்லை.

'நிஜமாகவே தேவையில்லையா?' அவன் உள் மனதில் ஏதோ ஒரு மூலையில் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. ஹேமாவின் நினைவுகள் மல்லிகைப் பூச்சரத்தின் நறுமணத்தைப்போல் அவனை சூழ்ந்துகொள்ள முயன்றன. அதிலிருந்து தப்பித்துக் கொள்ள அவன் முயற்சி செய்து கொண்டிருந்தான்.

வாசற்கதவு மீது யாரோ 'டக் டக்' என்று விரல்களால் சத்தப்படுத்தினார்கள். விஜய் திரும்பிப் பார்த்தான்.

வாசற்படியருகில் நர்ஸ் நின்றிருந்தாள்.

''மிஸ்டர் விஜய்!''

''யெஸ்...''

''உங்களுக்கு போன்...'' சொல்லிவிட்டு நர்ஸ் போய் விட்டாள்.

விஜய் போய் போன் எடுத்துக் கொண்டான். வராண்டாவில் மாலை நேரத்து வெளிச்சம் குறைந்து மெள்ள மெள்ளமாய் இருள் பரவிக் கொண்டிருந்தது. விளக்குகள் எரிந்தன.

''ஹலோ'' என்றான் விஜய்.

மறுமுனையிலிருந்து எந்தக் குரலும் கேட்கவில்லை.

''ஹலோ'' மறுபடியும் சொன்னான்.

''விஜய்!'' மறுமுனையிலிருந்து குரல் கேட்டது.

அந்தக் குரலைக் கேட்டதும் விஜய் மௌனமாய் இருந்து விட்டான்.

இருவருக்குமிடையே மௌனம்.

''விஜய்!'' ஹேமா அழைத்தாள்.

அவன் பதில் எதுவும் சொல்லவில்லை. ஆனால் அவன் பலமாக மூச்சை இழுத்துக் கொண்டது மறுமுனையிலிருந்த ஹேமாவால் உணர முடிந்தது.

''விஜய்! நான்தான்.'' ஹேமா சொன்னாள்.

''...........''

''ப்ளீஸ்... ஏதாவது பேசு.''

''...........''

''எதிர்பாராமல் உன்னை இங்கே சந்தித்தது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு. உனக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறதா?''



இந்த முறையும் மௌனம்தான் பதிலாக வந்தது.

''ஒரே வார்த்தையில் பதில் சொல்லு. மகிழ்ச்சியாக இருக்கா இல்லையா?''

''ஊம்...'' தன்னையும் அறியாமல் சொல்லிவிட்டான்.

ஹேமா ஒரு நிமிடம் தயங்கினாள். ''தாங்க்யூ விஜய். குறைந்தபட்சம் உண்மையை ஒப்புக்கொண்டதற்கு...'' ஹேமாவின் குரல் தழுதழுத்தது. அவன் ஏதாவது சொல்வானோ என்று ஒரு நிமிடம் காத்திருந்தாள். பிறகு, ''வைத்துவிடட்டுமா...'' என்று கேட்டுக் கொண்டே போனை வைத்துவிட்டாள்.

விஜயும் போனை வைத்துவிட்டான். ஆனால் உடனே அந்த இடத்தை விட்டு நகர மனம் வராதவன்போல் முழங்கையைக் கௌண்டர்மீது வைத்துக்கொண்டு அங்கேயே நின்றிருந்தான்.

ஹேமாவின் அறிமுகத்தைத் துண்டித்துக் கொண்டாற் போல்தான் என்று இத்தனை நாளாய் நினைத்திருந்தான். ஆனால் இந்த நிமிடம் அவனுக்குப் புரிந்தது அந்த அறிமுகம் அப்படியே இருக்கிறது என்று. எப்போதுமே அறுந்து போகாத பலமான பிணைப்பு அது என்று அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது. காதலித்த பெண்ணுக்கு மனப்பூர்வமாய் வாழ்க்கையை அர்ப்பணம் செய்துகொள்ள முடியாதபோது அந்தப் பெண்ணை விட்டு விலகிப் போய் விடுவதுதானே நியாயம்!

விஜய் ஆனந்தின் அறைக்கு வந்தான்.

ஆனந்த் ஆழமான உறக்கத்தில் இருந்தான். காலையில் ஆனந்தின் தலைமீது கையை வைத்து தான் கொடுத்த வாக்கு நினைவுக்கு வந்தது. ஆழமாய் பெருமூச்சுவிட்டுக் கொண்டான்.

''ஆனந்த்! என்னுடைய வாழ்க்கையில் உன்னைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை...'' என்று நினைத்துக் கொண்டான்.

ஆனந்த் நல்ல தேக நிலைமை படைத்தவனாக, உலக விவகாரங்களைப் புரிந்துகொண்டு மற்றவர்களைப் போல் இருந்திருந்தால் விஜய் அவனுடைய வாழ்க்கையை விட்டு விலகிப் போயிருப்பானோ என்னவோ...

ஒருநாளும் அவன் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று நினைத்தது இல்லை. பெண்களைப் பற்றி யோசித்ததும் இல்லை.

ஆனால் எதிர்பாராதவிதமாய் ஹேமா அவனுடைய வாழ்க்கையில் நுழைந்துவிட்டாள். வாழ்நாள் முழுவதும் மறந்து போக முடியாத அளவுக்கு நினைவுகளை அவன் மனம் முழுவதும் நிரப்பிவிட்டாள். அந்த நினைவுகள் அவன் மனதைச் சிலசமயம் அறத்தால் அறுப்பது போன்ற வேதனையை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. தன்னால் அவளைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாதபோது, அவளுடன் அறிமுகமே ஆகாமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?

ஆறு மாதங்களுக்கு முன்பு ஒருநாள் பிரசாத் போன் செய்து மாம்பழங்களை ஏற்றுமதி செய்யும் காண்ட்ராக்ட் விஷயமாகப் பேச வேண்டும் என்று வரச் சொன்னதால் ஹைதராபாத்துக்குப் போயிருந்தான் விஜய்.

## 4

விஜய் ஏறிய ரயில் காலையில் எட்டுமணிக்கெல்லாம் ஹைதராபாத்துக்குப் போயிருக்க வேண்டியது. மாணவர்கள் ரிசர்வேஷனுக்கு எதிராக மறியல் போராட்டம் நடத்தியதால் பதினான்கு மணி நேரம் தாமதமாக சிகிந்திராபாத் ஸ்டேஷனை அடைந்தது. ரயில் நிலையத்தில் ஒரே ரகளையாய் இருந்தது. மறியல் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த மாணவர்களுக்கு இடையில் ரவுடிக்



கும்பல் ஒன்று ஊடுருவி, இஷ்டம் வந்தது போல் கொள்ளையடிக்கத் தொடங்கியது. எங்கு பார்த்தாலும் ரவுடிக்களின் அராஜகம்! மக்கள் கலவரங்களால் பெருமளவில் பாதிக்கப்பட்டார்கள்.

ரயில் பிளாட்பாரத்தில் சரியாக நிற்கும் முன்பே பயணிகள் தங்களுடைய பொருட்களை எடுத்துக்கொண்டு பயத்துடன், பதட்டத்துடன் இறங்கிக் கொண்டிருந்தார்கள். பார்த்துக் கொண்டிருக்கும்போதே பிளாட்பாரத்தில் நின்றிருந்த காபி டீ வண்டியை யாரோ கொளுத்திவிட்டதில் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. எரிந்துகொண்டிருந்த வண்டியைச் சுற்றி அரக்கர்களைப் போல் குதித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டிருந்த ரவுடிக் கும்பல் ரயில் வந்து நின்றதும், பயணிகளின் கைகளிலிருந்து பொருட்களைப் பிடுங்கிக் கொள்ள முயன்றது. போலீசாரால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. பயணிகளை விரைவாக அந்த இடத்தைவிட்டுப் போகச் சொல்லித் துரத்திக் கொண்டிருந்தார்கள். மக்கள் வேக வேகமாய் ரயில் நிலையத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

விஜய் கையில் ப்ரீஃப்கேஸை எடுத்துக்கொண்டு மக்கள் கும்பலுக்கிடையில் புகுந்து வெளியே வந்து கொண்டிருந்தான். வெளியில் ரகளை இன்னும் அதிகமாக இருந்தது. கற்களை விட்டெறிந்ததில் கண்ணாடி கதவுகள் உடைந்திருந்தன. தனக்காக ஸ்டேஷனுக்குக் காரை எடுத்து வருவதாகச் சொன்ன பிரசாதின் ஜாடையே காணும். அவனைத் தேடவும் நேரமில்லை. அங்கிருந்த ஓரிரண்டு டாக்ஸிகளும் பயணிகளை ஏற்றிக்கொண்டு போய் விட்டன. ஆட்டோ ஒன்று எரிந்துகொண்டிருந்தது. ஆட்டோ டிரைவர் மார்பில் அடித்துக்கொண்டு, ரவுடிக் கும்பலைக் கட்டுப்படுத்த முடியாமல் போன போலீசாரை வசைபாடிக் கொண்டிருந்தான்.

நிலைமை மேலும் மோசமாகிக் கொண்டிருந்தது. பெண்கள் குழந்தைகளின் கத்தல்கள் ரயில் நிலையம் முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தன. பிளாட்ஃபாரத்தில் பயணிகளின் பொருட்கள் சிதறிக் கிடந்தன. நின்றிருந்த டாக்ஸி ஒன்று கிளம்பப் போனபோது விஜய் கையை உயர்த்தி "டாக்ஸீ!" என்று குரல் கொடுத்து நிற்கச் சொல்லி கையால் ஜாடை காட்டினான். வழியில் இருந்த பொருட்களைத் தாண்டிக் கொண்டு டாக்ஸியை நோக்கி வேகமாய் அவன் போய்க் கொண்டிருந்தபோது ஓட்டமும் நடையுமாய் அவனுடனேயே வந்து கொண்டிருந்த இளம் பெண் ஒருத்தி, கனமான சூட்கேஸையும் சுமந்துகொண்டு வேகமாய் ஓடமுடியாமல் கீழே விழுந்து விட்டாள்.

கீழே விழுந்துவிட்ட பெண்ணைப் பார்த்ததும் குடிகார கும்பல் ஒன்று வாய்க்கு வந்தபடி உளறிக்கொண்டு மற்ற ரவுடிக்களையும் வரச் சொல்லிக் கூப்பாடு போட்டுக் கொண்டே அந்தப் பெண்ணை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஆபத்தை உணர்ந்த விஜய் சட்டென்று குனிந்து அந்தப் பெண்ணின் கையைப் பற்றி எழுப்பி மற்றொரு கையில் சூட்கேஸை எடுத்துக் கொண்டான். கால் சுளுக்கிக் கொண்டுவிட்டதால் அந்தப் பெண்ணால் வேகமாக நடக்க முடியவில்லை. விஜய் அவள் இடுப்பைச் சுற்றிலும் கையைப் போட்டு டாக்ஸி பக்கம் அவளை இழுத்துக் கொண்டு போனான்.

"உட்காருங்க சார்... சீக்கிரம்..." டாக்ஸிகாரன் அவசரப்படுத்தினான். ஏற்கனவே டாக்ஸியில் அமர்ந்திருந்த பயணிகள் "உனக்குப் புத்தியிருக்கா... வண்டியை உடனே எடு..." என்று டிரைவரைப் பார்த்துக் கூச்சலிட்டார்கள். அவன் அவர்களை லட்சியம் செய்யவில்லை. விஜய் சூட்கேஸை டாக்ஸியின் முன்சீட்டில் அமர்ந்திருந்த பெரியவரின் மடியில் வீசிப் போட்டான். அந்தப் பெண்ணை உள்ளே தள்ளி தானும் ஏறிக்கொண்டு



32295 631394

கதவைச் சாத்தும்போதே டாக்ஸி வேகமாய் போகத் தொடங்கியது. சாலை முழுவதும் கண்ணாடித் துண்டுகள். டாக்ஸியில் இருந்த பயணிகள் "முதலில் எங்களை இறக்கி விடு" என்று கத்திக் கொண்டிருந்தார்கள்.

"நீங்க சொன்ன ரூட்களில் போக முடியாது. சுற்று வழியில்தான் போக வேண்டியிருக்கும்..." டாக்ஸி டிரைவர் சொன்னான்.

எதிரே வந்த டாக்ஸி டிரைவர் ஒருவன், "அந்தப் பக்கம் போகாதே அண்ணாத்தே... துணிக்கடையை எரித்து விட்டார்கள். வெடிகுண்டுகளை வீசிக் கொண்டிருக்கிறார்கள்" என்று எச்சரித்து விட்டுப் போனான்.

வீட்டுக்குச் சரியாகப் போய்ச் சேருவோமோ இல்லையோ என்று எல்லோரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

எதிரே சற்று தொலைவில் திறந்த ஜீப் ஒன்றில் ரவுடிக் கும்பல் வருவதைக் கவனித்துவிட்ட விஜய் டாக்ஸி டிரைவரைப் பக்கத்துச் சந்தில் போகச் சொல்லி எச்சரித்தான். டாக்ஸி வேகமாய் பக்கத்துச் சந்தில் நுழைந்தது.

தெரு முழுவதும் ஆளரவமற்று இருந்தது. காற்றுக்கூட உள்ளே நுழையக்கூடாது என்பது போல் எல்லா வீடுகளின் ஜன்னல்கள், கதவுகள் சாத்தியிருந்தன.

அந்தக் குறுகலான சந்தில் சற்று தூரம் போவதற்குள் டயர் பஞ்சராகி டாக்ஸி நின்றுவிட்டது.

"எல்லோரும் இறங்கி வேகமாய் ஓடுங்கள். ரவுடிகள் இந்தப் பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள்." டாக்ஸி டிரைவர் டாக்ஸியைவிட்டு இறங்கி ஓடிக்கொண்டே எச்சரித்தான். மற்ற பயணிகளும் இறங்கி அவனைப் பின்பற்றி ஓடத் தொடங்கினார்கள்.

விஜய் டாக்ஸியை விட்டு இறங்கினான். அந்தப் பெண்

கால்வலியால் துடித்துக் கொண்டே இறங்க முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

தொலைவில் வந்துகொண்டிருந்த குடிகாரன் ஒருவன் கையிலிருந்த பாட்டிலை விஜயை நோக்கி வீசினான். விஜய் சட்டென்று அந்தப் பெண்ணின் இரு தோள்களையும் பலமாகப் பற்றி வெளியில் இழுத்தான். நிற்க முடியாமல் அவள் தடுமாறியபோது, அவள் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு அப்படியே பக்கத்துச் சந்தில் இழுத்துக் கொண்டு போனான். எதிரே தென்பட்ட வீட்டுக் கதவைப் படபடவென்று தட்டினான்.

அந்தப் பெண் இதழ்களை அழுத்தி வேதனையைப் பொறுத்துக் கொள்ள முயன்றாள்.

''கதவைத் திறங்க ப்ளீஸ்!'' விஜய் குரல் கொடுத்துக் கொண்டே மறுபடியும் கதவைத் தட்டினான். கதவுகள் கொஞ்சமாய் திறந்து கொண்டன. பதினைந்து வயது மதிக்கத்தக்க சிறுவனொருவன் அப்பாவியாய், முகம் நிறைய மகிழ்ச்சியுடன், ''அம்மா! போலீஸ்காரங்க வந்திருக்காங்க...'' என்று கதவைத் திறக்க முற்பட்டான்.

''அட பைத்தியக்காரா...'' பின்னாலிருந்து ஓடி வந்த பெரியவர் ஒருவர் வேகமாக வந்து கதவைச் சாத்த போனார். விஜய் சட்டென்று காலை உள்ளே வைத்து விட்டுக் கதவைப் பலமாகப் பிடித்துக்கொண்டு மூட முடியாமல் செய்துவிட்டான்.

''யார் நீ... யார் நீங்க?'' பெரியவர் பயத்துடன் கத்திக் கொண்டிருந்தபோதே விஜய் அவரைத் தள்ளிக் கொண்டு, அந்தப் பெண்ணையும் உள்ளே இழுத்துவிட்டுக் கதவைச் சாத்தினான்.

''என்னங்க? என்ன ஆச்சு?'' பின்னாலிருந்து வந்த அம்மாள் பெரியவரின் மனைவியாக இருக்க வேண்டும்.

''அந்தப் பைத்தியக்காரனை அறையில் வைத்துக் கதவைத் தாழ் போடச் சொன்னால் கேட்டால்தானே?''.



கையை உயர்த்தி அவர் அந்த அம்மாளை அடிக்கப்போன போது விஜய் அவருடைய கையைப் பற்றித் தடுத்து விட்டான்.

கணவன் மனைவி இருவரும் விஜயைப் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

விஜய் தாழ்ந்த குரலில் சொன்னான். ''பயப்படாதீங்க. எங்களால் உங்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்கிறோம். நிலைமை கொஞ்சம் சரியானதும் போய் விடுகிறோம்.''

நயமான குரலில் அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே வெளியில் கத்தல்களும், கூச்சல்களும் கேட்டன. வீட்டுக்காரர் சட்டென்று எரிந்து கொண்டிருந்த விடிவிளக்கைக்கூட அணைத்து விட்டார்.

''நாம் உள்ளே போய் விடலாம் வா...'' என்று அவர் தன் மனைவியை மகனை அழைத்துக் கொண்டு உள்ளே போய் கதவைத் தாழ் போட்டுக் கொண்டு விட்டார்.

எங்கும் அடர்த்தியான இருள்.

தெருவில் ஜீப்பில் உலா வந்து கொண்டிருந்த ரவுடிக் கும்பலின் கூக்குரல்கள் மேலும் நெருக்கமாய் ஒலித்துக் கொண்டிருந்தன. பாட்டில் ஒன்று வாசற்கதவில் மோதி, சிலீரென்று உடைந்த சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்திற்குப் பயந்து நடுங்கிய அந்தப் பெண், அவன் தோளைப் பலமாகப் பற்றிக் கொண்டாள். அவன் தயக்கத்துடன் கொஞ்சம் விலகப் போனான்.

அந்தப் பெண் அவனை நகரவிடவில்லை. ஒரு நிமிடம் கழித்து அவளுடைய பயத்தைப் புரிந்து கொண்டவனைப் போல் அவன் நகர முயற்சி செய்யாமல் அப்படியே நின்றிருந்தான்.

இருளில், நிசப்தமாய் இருந்த அந்தச் சூழ்நிலையில் ஒருவர் விடும் மூச்சுக்காற்று மற்றொருவர் மேல் பட்டுக்

கொண்டிருந்தது. எதிராளியின் இதயத்துடிப்பை நன்றாக உணர முடிந்தது.

ரவுடிக்கும்பல் எதிர் வீட்டுக் கதவை உடைத்து விட்டிருக்க வேண்டும். அந்த வீட்டில் இருப்பவர் கத்தி கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார். பெண்களின் அழுகை குரல் பெரிதாகக் கேட்டது. பெண் ஒருத்தி ''அப்பா... அப்பா...'' என்று பயத்துடன் அலறிக் கொண்டிருந்தாள். ரவுடிக்கள் அரக்கர்களைப் போல் உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்ணின் கத்தல்கள், அலறல்கள் தெரு முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

விஜய் வேகமாகப் போய் வாசற் கதவைத் திறக்கப் போனான். அந்தப் பெண் பயத்துடன் அவனை விடவில்லை. அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு பலமாகப் பற்றிக் கொண்டாள். கோபத்தினால், ஆவேசத்தினால் அவனுடைய மூச்சுக்காற்று பலமாக வந்து கொண்டிருந்தது.

''என்னை இந்த நிலைமையில் தனியாக விட்டு விட்டுப் போகாதீர்கள்...என்னால் ஓடமுடியாது...ப்ளீஸ்'' வேண்டுவது போல் சொன்னாள்.

அவன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அவளுடைய இயலாமையைப் புரிந்து கொண்டவன்போல் அவள் தலையை மெதுவாக வருடிக் கொடுத்தான்.

வெளியில் ரவுடிக்கும்பல் கதவை இடித்து திறக்க முயன்று கொண்டிருந்தது. பாட்டில்கள் உடையும் சத்தம்...

அறையில் இருவரும் மூச்சை இறுகப் பிடித்துக் கொண்டு அடுத்து வரப்போகும் ஆபத்தை நோக்கிக் காத்திருந்தார்கள்.

திடீரென்று ஜன்னல் இடுக்கு வழியாய் பளீரென்ற



வெளிச்சம் தெரிந்தது. எதையோ கொளுத்தியிருக்க வேண்டும். படீர் படீர் என்று சிதறிக் கொண்டு ஏதோ எரியும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அவன் மார்பில் ஆழமாய் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்த அந்தப் பெண் பயத்துடன் லேசாகத் தலையை உயர்த்தி அவன் முகத்தைப் பார்த்தாள். எரிந்துகொண்டிருக்கும் நெருப்பின் வெளிச்சம் அறையில் விட்டு விட்டுப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அவள் இதழ்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

அவன் அந்தப் பெண்ணின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். இருவரின் நிழல்களும் சுவற்றின்மீது பெரிதாக விழுந்தன. அந்தப் பெண்ணின் கண்களில் தெரிந்த பயத்தை, பதட்டத்தைப் புரிந்து கொண்ட விஜய் அவளை மேலும் மார்போடு அணைத்துக் கொண்டான்.

போலீஸ் வேன் வரும் சைரன் ஒலி கேட்டது. வாசற் கதவை இடித்துக் கொண்டிருந்த சத்தம் நின்றுவிட்டது. யாரோ ஓடிக் கொண்டிருந்தார்கள்.

போலீஸ் வேன் எதிர் வீட்டின் முன்னால் நின்றது. எதிர் வீட்டுக்காரருக்கு கத்திக் கத்தித் தொண்டை அடைத்து விட்டது போலும். உடைந்த குரலில் போலீசாரைத் திட்டிக் கொண்டிருந்தார். ''என்ன போலீஸ்காரங்க நீங்க? எங்களுக்குப் பாதுகாப்பு எங்கே இருக்கிறது? என் கண் முன்னாலேயே பதினைந்து வயது கூட நிரம்பாத என் மகளை அந்த அரக்கர்கள்...'' மேற் கொண்டு சொல்ல முடியாமல் ஹோவென்று கதறினார். பெண்கள் உச்சஸ்தாயில் அழுது கொண்டிருந்தார்கள். போலீசார் அவர்களுக்கு ஆறுதல் சொல்ல முயன்று கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெண் மெதுவாக விஜய் கைகளிலிருந்து விடுபட்டுச் சரியாய் நின்று கொண்டாள்.

வெளியில் எரிந்து கொண்டிருந்த தீ அணைந்து விட்டது. போலீசார் போய் விட்டார்கள். அறையில் மறுபடியும் இருள் பரவியது. அவளால் சரியாக நிற்க முடியவில்லை என்பதை உணர்ந்து கொண்ட விஜய் அவள் கையைப் பிடித்துக் கொண்டு அங்கே இருந்த நாற்காலியில் உட்கார வைத்தான்.

அறை முழுவதும் நிசப்தம் நிலவியிருந்தது.

''எனக்கு... எனக்கு... தாகமாய் இருக்கு'' என்றாள் அந்தப் பெண்.

விஜய் பேசவில்லை.

''நாக்கு வரண்டு போகிறது.'' அந்தப் பெண்ணின் குரலில் வேண்டுதல் வெளிப்பட்டது.

சற்றுமுன் தெரிந்த வெளிச்சத்தில் விஜய் சுவிட்ச் இருந்த இடத்தைக் கவனித்திருந்தான். இருட்டில் நடந்து போய் சுவிட்சைப் போட்டான். அறையில் விடிவிளக்கு வெளிச்சம் பரவியது.

''ரொம்ப...ரொம்பத் தாகமாய் இருக்கிறது.'' அந்தப் பெண்ணின் நெற்றி முழுவதும் வியர்வை அரும்பியிருந்தது. வேதனை அவள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ''ப்ளீஸ்...'' என்றாள்.

வீட்டுக்கு உரியவர்கள் உள்ளே அறையில் கதவைச் சாத்திக் கொண்டு இருந்தார்கள். கூப்பிட்டாலும் வருவார்கள் என்று தோன்றவில்லை.

விஜய் உள்ளே போய் தேடினான். சமையல் அறை தென்பட்டது. பானையில் தண்ணீர் இருந்தது. டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். வேக வேகமாய் தண்ணீரைப் பருகினாள். தண்ணீர் குடித்த பிறகு கொஞ்சம் உயிர் வந்தது போல் உணர்ந்தாள்.

''தாங்க்யூ...'' டம்ளரை வைத்துக்கொண்டே சொன்னாள். விஜய் பக்கத்திலேயே இருந்த ஸ்டூல் மீது



உட்கார்ந்து கொண்டான். தெருவில் நாய்கள் குரைக்கத் தொடங்கின. வேகமாய் யாரோ நடந்து போவதுபோல் சத்தம் கேட்டது.

''விளக்கை அணைத்து விடுங்கள்'' என்றாள்.

''பரவாயில்லை.'' தைரியம் சொல்வது போல் சொன்னான்.

''ப்ளீஸ்...''

விஜய் விளக்கை அணைத்து விட்டான். தெருவில் நாய்கள் குரைக்கும் சத்தம் காற்றில் தேய்ந்து மறைந்து விட்டது.

ஜன்னல் கண்ணாடியின்மீது நிலவின் வெளிச்சம் விழுந்தது. நிசப்தமாய் இருந்த அறையில் சிறைப்பட்டு விட்டதுபோல் இருவரும் அமர்ந்திருந்தார்கள்.

சற்று நேரம் கழித்து அந்தப் பெண் கேட்டாள். ''மணி எவ்வளவு இருக்கும்?''

''நாலரை மணி...'' அவன் வாட்சைப் பார்த்துக் கொண்டே சொன்னான்.

அவள் நாற்காலியின் பின்னால் சாய்ந்து கொண்டாள். ''ரொம்ப தாங்க்ஸ். கிளம்பும்முன் இப்படிப்பட்ட ஆபத்து வரும் என்று கனவில் கூட நினைக்கவில்லை. இப்படி நடந்தது என்று தெரிந்தால் என்னுடைய அம்மா தன்னுடைய தேகத்தையே செருப்பாக தைத்து உங்களுக்கு தர வேண்டுமென்று துடிப்பாள். கடவுளே அனுப்பி வைத்தது போல் உதவி செய்திருக்கீங்க. உங்களுக்கு வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.''

அவன் பதில் எதுவும் சொல்லவில்லை. அந்தப் பெண்ணும் இருந்ததால்தான் இப்படி முன்பின் தெரியாதவர்களின் வீட்டில் வலுக்கட்டாயமாய் நுழைந்து தங்கியிருக்கிறான். தனியாக இருந்தால் இந்நேரத்திற்கு இந்த

சூழ்நிலையை விட்டு வெளியேறும் வழிகளைத் தேடி யிருப்பான்.

''என் பெயர் ஹேமா. உங்கள் பெயர்?'' அந்தப் பெண் கேட்டாள்.

''விஜய்...''

''அப்படியா!'' அவள் குரலில் தெரிந்த உற்சாகம், ஆச்சரியம் ஏன் என்று அவனுக்குப் புரியவில்லை.

மறுபடியும் நிசப்தம் நிலவியது. அந்தப் பெண் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாள் என்று புரிய வில்லை. விஜய் மனதில் ஆயிரம் எண்ணங்கள் கடல் அலை களை போல் மோதிக் கொண்டிருந்தன. பிரசாத் வீட் டுக்கு ஆனந்த் நிச்சயமாக போன் செய்திருப்பான். பிரசாத் வீட்டுக்கு போனதும் போன் செய்வதாய் விஜய் ஆனந்திடம் சொல்லியிருந்தான். முதலில் ஆனந்தும் வருவதாக இருந்தது. கடைசி நேரத்தில் ஆனந்தின் நண்பன் சுதீரும், இன்னும் இரண்டு பேரும் வந்து விட்ட தால் ஆனந்த் பயணத்தை கைவிட்டான். அவர்கள் நால் வரும் சேர்ந்து மோட்டார் சைக்கிளில் ஊர் எல்லையில் குன்றின் மீது இருக்கும் தோட்டத்திற்கு பிக்னிக் போவ தாக முடிவு செய்தார்கள். ஆனந்துக்கு இது போல் வெளியில் சுற்றுவது என்றால் ரொம்பவும் பிடிக்கும். விஜய் அப்படியில்லை. கையில் ஏதாவது புத்தகம் இருந்தால் போதும். அறையின் தனிமையில், மெலிதாகப் பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தால் மனதிற்கு நிம்மதியாக இருக்கும்.

''ஓ மை காட்!'' திடீரென்று அந்தப் பெண் சொன் னாள்.

''என்ன ஆச்சு'''

''என்னுடைய சூட்கேஸ் டாக்ஸியிலேயே தங்கி விட்டது.''



''என்னுடைய ப்ரீஃப்கேஸும் டாக்ஸியில் தங்கி விட்டது. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.''

''துணி மணிகள், நகைகள் போனாலும் பரவாயில்லை. என்னுடைய சான்றிதழ்கள்!'' பதட்டத்துடன் சொன் னாள்.

''என் ப்ரீஃப்கேஸில் முக்கியமான தஸ்தாவேஜுகள், பணமும் இருந்தது.''

''அப்போ தொலைந்து விட்டாற்போல்தானா?''

''சொல்ல முடியாது. நட்ட நடு தெருவில் டாக்ஸியில் விட்டு விட்டோம்'' என்றான்.

''மை காட்!'' அந்தப் பெண் தலையில் கையை வைத்துக் கொண்டாள்.

அவன் பெருமூச்செறிந்தான்.

எங்கேயோ கோழி கூவும் சத்தம் கேட்டது.

## 5

விடியும் நேரம்...

விஜய் எழுந்து போய் படுக்கை அறையின் கதவைத் தட்டினான். வீட்டுக்காரர் லேசாகக் கதவைத் திறந்து ''என்ன?'' என்று கேட்டார்.

''நாங்க போய் வருகிறோம். கதவைத் தாழ்போட்டுக் கொள்ளுங்கள். நேற்று இரவு எங்களுக்குத் தங்குவதற்கு இடம் கொடுத்ததற்கு ரொம்ப நன்றி. உங்களுக்குச் சிரமம் கொடுத்ததற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்.'' நயமான குரலில் சொன்னான் விஜய்.

வீட்டுக்காரர் விஜயைத் தலை முதல் கால் வரை ஆராய்வது போல் பார்த்தார். இளைஞனாக இருந்தாலும்

பெரிய மனித தோரணியில் அவன் பேசியது, மரியாதையுடன் பழகியது எல்லாம் சேர்ந்து அவருக்கு அவன்மீது நம்பிக்கையை ஏற்படுத்தின. கதவுகளை முழுவதுமாக திறந்தார். அவர் மனைவி முன்னாடியே விழித்துக் உட்கார்ந்திருந்தாள்.

''இதோ பாரு... அவங்க கிளம்பறாங்களாம். இனி வெளியில் வா... குளியலுக்கு வென்னீரைப் போடு... ஜபம் செய்து கொள்ள வேண்டும்.'' மனைவியை நோக்கி ஆணைகளைப் பிறப்பித்தார்.

எஜமானின் ஆணைகளுக்குக் கீழ்படியும் அடிமையைப் போல் அந்த அம்மாள் அறையை விட்டு வெளியில் வந்தாள். நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஹேமா அந்த அம்மாளைப் பார்த்து, ''வணக்கம் மாமி'' என்றாள். அந்த அம்மாள் ஹேமாவைப் பார்த்தும் பார்க்காதது போல் நேராகச் சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

வீட்டுக்காரர் ரேடியோவை ஆன் செய்தார். தடை உத்தரவு போடப்பட்ட ஏரியாக்களைக் குறிப்பிட்டுச் சொல்வதுடன், சில இடங்களில் இரண்டு மணி நேரம் தடையிலிருந்து விலக்கு அளிப்பதாகவும் ரேடியோவில் அறிவிப்பு வந்தது. நகரத்தில் நடந்த ரகளைகள் லூட்டிகள் பற்றி விவரமாகச் சொல்லிவிட்டு நிலைமை இப்பொழுது கட்டுக்குள் இருப்பதாகவும் செய்தியாளர் அறிவித்துக் கொண்டிருந்தார்.

''பெரிதாகச் சொல்ல வந்து விட்டார்கள். நிலைமை கட்டுக்குள் இருந்தால் இத்தனை இடங்களில் தடை உத்தரவு போடுவானேன்? மக்களின் காதுகளில் நன்றாகப் பூவைச் சுற்றுகிறார்கள்.'' எரிச்சலுடன் சொன்னார் வீட்டுக்காரர்.

''அடடா... மலக்பேட் ஏரியாவில் கர்ஃப்யூ இருக்கிறது. நான் எப்படி போக முடியும்?'' ஹேமா கவலையுடன் சொன்னாள்.



'நான் ஜூப்லி ஹில்ஸ்க்கு போகணும். அந்த ஏரியாவில் கர்ஃப்யூ இல்லாததால் நான் போவதற்கு எந்தப் பிரச்னையும் இருக்காது.' விஜய் நினைத்துக் கொண்டான்.

விஜய் எழுந்து தெரு பக்கம் போகப் போனான்.

''நீங்க போறீங்களா?'' ஹேமா கேட்டாள். போகப் போனவன் நின்று திரும்பிப் பார்த்தான்.

''எப்படி போகப் போறீங்க?'' என்று கேட்டாள்.

''வெளியில் போய்ப் பார்த்தால் தான் புரியும். டாக்ஸி, ஆட்டோ ஏதாவது கிடைக்குமா என்று பார்த்து விட்டு வருகிறேன்.''

''பஞ்சாரா ஹில்ஸில் எங்க உறவினருக்குத் தெரிந்த ஃபிரண்ட்ஸ் இருக்கிறார்கள். என்னை அங்கே இறக்கி விட்டுப் போகிறீர்களா ப்ளீஸ்!''

அவன் தலையை அசைத்து விட்டுக் கிளம்பினான்.

கால் மணி நேரம் கழித்து அவன் திரும்பி வந்தபோது ஹேமா அந்தத் தம்பதியருடன் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தாள். விஜயைப் பார்த்ததும் அவர் ''வாப்பா... வா'' என்று வரவேற்றுவிட்டு உள்ளே எட்டிப் பார்த்து ''இதோ... அந்தப் பையனும் வந்து விட்டான். காபி எடுத்துக் கொண்டு வா...'' என்று மனைவிக்குக் குரல் கொடுத்தார்.

அந்த அம்மாள் காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

''வண்டி ஏதாவது கிடைத்ததா?'' ஹேமா ஆர்வத்துடன் கேட்டாள்.

''ஆட்டோ, டாக்ஸி எதுவும் கண்ணில் படவில்லை'' என்றான்.

''இப்போ என்ன செய்வது?'' என்றாள் ஹேமா.

''அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.'' வீட்டுக்கார அம்மாள் கொடுத்த காபி கோப்பையைப் பெற்றுக்கொண்டே ''தாங்க்யூ மாமி'' என்றான்.

ஹேமா அவர்களுடைய வீட்டு விஷயங்களைக் கேட்டுக்

கொண்டிருந்தாள். விஜய் கொல்லைப்புறக் கதவில் சாய்ந்து கொண்டு காபியைப் பருகிக் கொண்டிருந்தான். அவன் பார்வை கிணற்றுக்குப் பக்கத்திலிருந்த தகர ஷெட்டில் பிளாஸ்டிக் கவர் போர்த்தியிருந்த மோட்டார் சைக்கிள் மீது பட்டது.

ஒரு நிமிடம் கழித்து விஜய் தயக்கத்தை உதறிவிட்டு கேட்டான். ''இந்த மோட்டார் சைக்கிளைக் கொஞ்சம் இரவல் கொடுத்தால், மறுபடியும் பத்திரமாக கொண்டு தருகிறேன்.''

வீட்டுக்காரரின் நெற்றி சுருங்கியது. ''அது... அது எங்களுடைய மாப்பிள்ளையோடது.''

''அந்த கடன்காரனை இன்னும் நம்ப மாப்பிள்ளை என்று எதுக்காக சொல்றீங்க? அந்தப் பாவி நம்ப மகளைத் துன்புறுத்தி வீட்டுக்கு அனுப்பி விட்டதால், வேதனை தாங்க முடியாமல் அவள் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதை அதற்குள் மறந்து விட்டீர்களா?'' வீட்டுக்கார அம்மாள் அழுதுகொண்டே சொன்னாள்.

''நீ வாயை மூடிக் கொண்டு உள்ளே போ...'' வீட்டுக்காரர் மனைவியை அதட்டினார்.

புடவைத் தலைப்பை வாயில் அடைத்துக் கொண்டு, அழுகையைக் கட்டுப்படுத்திக்கொண்டே அந்த அம்மாள் உள்ளே போய் விட்டாள்.

ஒரு நிமிடம் அங்கே நிசப்தம் நிலவியது. என்ன பேசுவதென்று தெரியாதது போல் எல்லோரும் மௌனமாக இருந்தார்கள்.

''உங்களுடைய மோட்டார் சைக்கிளைப் பத்திரமாகத் திருப்பிக் கொண்டு வந்து தந்து விடுகிறோம்'' ஹேமா வேண்டுவது போல் சொன்னாள்.

வீட்டுக்காரர் பதில் சொல்லவில்லை.



ஹேமா காதில் போட்டுக் கொண்டிருந்த வைரத் தோடு, கைவளையல்கள், செயின் மோதிரம் முதலியவற்றைக் கழட்டி அவர் எதிரில் வைத்தாள். ''ப்ளீஸ்... இவற்றை உங்களிடம் வைத்துக் கொள்ளுங்கள். இவற்றுக்காகவாவது நாங்கள் கட்டாயம் திரும்பி வருவோம். மறுக்காதீர்கள்'' என்றாள்.

அவர் நகைகளைக் கவனமாகப் பார்த்தார். ஹேமாவின் வைரத்தோடு மட்டுமே பல ஆயிரங்கள் பெறும். அந்த பழைய மோட்டார் சைக்கிளின் விலை அந்த நகைகளின் விலையில் பாதி கூட இருக்காது.

விஜய் வாட்சைப் பார்த்துக் கொண்டான். கர்ஃப்யூவுக்கு விலக்கு அளித்த நேரம் குறைந்து கொண்டே வந்தது.

''நான் மறுபடியும் முயற்சி செய்து பார்க்கிறேன்.'' விஜய் வெளியில் போகப் போனான்.

ஹேமா தடுத்து விட்டாள். ''நீங்க வெளியில் போனால் எனக்கு ரொம்பக் கவலையாக இருக்கிறது. நீங்க திரும்பி வரவில்லையென்றால் எனக்கு ரொம்பக் கஷ்டம்'' என்றாள்.

''நான் கட்டாயம் திரும்பி வருவேன்'' என்றான்.''

ஹேமா அவன் முகத்தை ஆழமாய் பார்த்தாள். நல்ல தனமும், பண்பும் நிறைந்த கண்கள் அவை.

''நாமிருவரும் சேர்ந்தே போகலாம். கொஞ்சம் இருங்க.'' ஹேமா ஐந்து நிமிடங்களில் மோட்டார் சைக்கிளை இரவல் கொடுப்பதற்கு அந்தத் தம்பதியரைச் சம்மதிக்க வைத்தாள்.

விஜய் மோட்டார் சைக்கிளை வெளியில் எடுத்தான். வீட்டுக்காரர் என்ன நினைத்துக் கொண்டாரோ என்னவோ ஹேமாவின் நகைகளைத் திருப்பிக் கொடுத்து விட்டார்.

''பரவாயில்லை. வைத்துக் கொள்ளுங்கள்'' என்றான் ஹேமா.

''வேண்டாம் அம்மா. மோட்டார்சைக்கிள் என்னுடைய மாப்பிள்ளையோடதுதான். சக்திக்கும் மீறி சீர்வரிசைகளைச் செய்து பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தேன். ஒரே மகள் என்பதால் ரொம்ப அபூர்வமாக வளர்த்தோம். மாப்பிள்ளைக்கு இல்லாத கெட்ட பழக்கம் இல்லை. என் மகளை அடித்து ஹிம்சித்து பிறந்த வீட்டுக்கு அனுப்பி விட்டான். வேறு ஒரு பெண்ணுடன் குடித்தனம் நடத்தி வந்தான். அந்த வேதனை தாங்க முடியாமல் என் மகள் இரண்டு மாதங்களுக்கு முன் அதோ அந்தக் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். என் மாப்பிள்ளை இரண்டாவது திருமணம் செய்து கொண்டு விட்டான். நான் போய் சீர்வரிசையாகத் தந்த பொருட்களைத் திருப்பித் தரச் சொல்லி சண்டை போட்டதில், இந்த மோட்டார் சைக்கிளை என் முகத்தில் விட்டெறிந்து விட்டு, மற்றவை பிறகு என்றான். ஆசையாய் வளர்த்த மகளே போய் விட்டாள். இந்த மோட்டார் சைக்கிள் எந்த மூலைக்கு? ஆபத்தில் இருக்கும் ஒரு பெண்ணுக்கு உபயோகப்பட்டால் எங்களுக்குச் சந்தோஷம்தான்.''

ஹேமா விஜய் தங்களையும் அறியாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பத்து நிமிடங்கள் கழித்து ஹேமா பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டதும் விஜய் வண்டியை ஸ்டார்ட் செய்தான்.

ஹேமா வீட்டுக்கார தம்பதியிடம் விடைபெற்றுக் கொண்டாள். ''போய் வருகிறேன். மறுபடியும் கட்டாயம் வருகிறேன். உங்கள் மகனை நல்ல டாக்டரிடம் காண்பிக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்றாள்.

எதிர் வீட்டில் போலீசார் இருந்தார்கள். ஏதோ கேள்விகளைக் கேட்டு பதில்களை எழுதிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்சியைப் பார்த்ததும் விஜய் ஹேமாவின் மனங்கள் பாரமாகி விட்டன. முதல் நாள் இரவு நடந்த



நிகழ்ச்சி அந்த வீட்டின் தலையெழுத்தையே மாற்றி விட்டிருந்தது. மனிதனின் மனதில் மறைந்திருக்கும் ராட்சஸ குணம் அடுத்தவரின் வாழ்க்கையை நிமிட நேரத்தில் எரித்துச் சாம்பலாக்க வல்லது என்ற உண்மை நிரூபிக்கப்பட்டு விட்டது. அந்தக் கசப்பு அனுபவம் இருவரின் மனதிலும் சாசுவதமாய் பதிந்து விட்டது.

''நமக்குத் தங்க இடம் கொடுத்த வீட்டுக்காரத் தம்பதிகளின் வாழ்க்கையும் சோகமானதுதான். இருந்த ஒரே மகள் போய் விட்டாள். மகனோ மூளை சரியில்லாதவன். கடைசி வரை அவனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவர்களுடையதுதான்'' ஹேமா சொன்னாள். இருவருக்குமிடையே மறுபடியும் மௌனம் நிலவியது.

சாலைகள் பெரும்பாலும் நிர்மானுஷ்யமாய் இருந்தன. மோட்டார் சைக்கிள் வேகமாய் போய்க் கொண்டிருந்தது. எப்போ எந்த விதமான ஆபத்து வருமோ என்று இருவரும் பயந்து கொண்டே இருந்தார்கள். இரவு நடந்த மாரண ஹோமத்திற்கு அடையாளமாய் ஆங்காங்கே எரிந்து போன கடைகள்... உடைந்த பாட்டில்கள்... சாலை முழுவதும் சிதறிக் கிடந்தன. மோட்டார் சைக்கிள் பஞ்சாரா ஹில்ஸில் ஹேமா சொன்ன வீட்டின் முன்னால் வந்து நின்றது. மெயின் கேட்டு பூட்டியிருந்தது. விஜய் காலிங் பெல்லை அழுத்தினான். பின்னாலிருந்து அவுட்ஹவுஸ் கதவைத் திறந்து கொண்டு வேலையாள் ஒருவன் ஓடி வந்தான். கேட்டைத் திறக்காமலேயே ''யார் நீங்க?'' என்று பயந்து கொண்டே கேட்டான்.

ஹேமா தான் இன்னாரென்று சொல்லிவிட்டு கதவைத் திறக்கச் சொன்னாள்.

வேலையாள் ஒப்புக் கொள்ளவில்லை. ''அய்யாவும், அம்மாவும் ஊரில் இல்லை. நீங்க யாரென்று எங்களுக்குத்

தெரியாது!'' என்று சொல்லி விட்டு உள்ளே போய் விட்டான்.

ஹேமா இயலாமையுடன் பார்த்தாள். கர்ஃப்யூ மறுபடியும் அமலுக்கு வரப்போவதாக அறிவித்துக் கொண்டே போலீஸ் வேன் ஒன்று சாலையில் போய்க் கொண்டிருந்தது. யோசிப்பதற்கு நேரமில்லை. விஜய் வண்டியை ஸ்டார்ட் செய்தான்.

எங்கே போகிறோம் என்று ஹேமா கேட்கவில்லை. அவள் மனம் முழுவதும் குழப்பமாய் இருந்தது.

கால் மணி நேரம் கழித்து மோட்டார் சைக்கிள் ஜூப்ளிஹில்ஸில் ஒரு வீட்டின் முன்னால் வந்து நின்றது. வீடு பெரிதாக, நவீனமாய் இருந்தது. விஜயைப் பார்த்ததும் வேலையாள் ஓடிவந்து ''நமஸ்தே சாப்'' என்று சொல்லிக் கொண்டே கேட்டைத் திறந்தான். மோட்டார் சைக்கிள் போர்டிகோவில் வந்து நின்றது. வேலையாள் கொல்லைப்புறமாய் உள்ளே போய் வாசல் கதவைத் திறந்தான்.

நடக்க முடியாமல் மெதுவாய் பாதத்தை ஊன்றி நடந்து வந்து கொண்டிருந்த ஹேமாவின் கையைப் பிடித்துக் கொண்டு விஜய் உள்ளே அழைத்து வந்தான்.

உள்ளே படுக்கை அறையிலிருந்து ராதிகா எழுந்து வந்தாள். நிறைமாத கர்ப்பிணி என்று பார்க்கும்போதே தெரிந்தது.

''வந்து விட்டாயா விஜய்! நேற்று இரவு இவர் சென்னையிலிருந்து போன் செய்து நீ வந்து விட்டாயா என்று விசாரித்தார்'' என்றாள் ராதிகா.

''பிரசாத் ஊரில் இல்லையா?''

''சென்னைக்குப் போயிருக்கிறார். நேற்று இரவே வந்திருக்க வேண்டியது. ப்ளேன் ரொம்ப தாமதமாகி விட்டதாம். இங்கே ரகளையாக இருக்கிறது என்று



கேள்விப்பட்டதும் ரொம்ப கவலைப்பட்டார். இன்று இரவு கட்டாயம் வந்து விடுவதாகச் சொன்னார்.''

விஜய் ஹேமாவை அறிமுகப்படுத்தி வைத்தான். முதல் நாள் நடந்தவற்றைச் சுருக்கமாகத் தெரிவித்தான்.

ராதிகா ஹேமாவின் கையை ஆதரவுடன் பற்றிக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாள்.

''மருமகன் என்ன சொல்கிறான்?'' விஜய் ராதிகாவைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

''மாமாவைச் சீக்கிரமாய் பார்க்கணும்னு துடித்துக் கொண்டிருக்கிறான்.'' ராதிகா புன்முறுவலுடன் சொன்னாள்.

ஒரு மணி நேரம் கழித்து விஜய் குளித்து விட்டு தலையைத் துடைத்துக் கொண்டே வரும்போது ஹேமா குளியலை முடித்துவிட்டு ராதிகாவின் நைட்டியை அணிந்து கொண்டு உணவு மேஜை முன்னால் அமர்ந்திருந்தாள்.

ராதிகா டிபனைத் தட்டுகளில் பரிமாறிக் கொண்டே ''விஜய்! எங்க சித்தி நாத்தனாரின் மகள் வசந்தா இருக்கிறாள் இல்லையா. ஹேமாவும் அவளும் ஒன்றாகப் படிக்கிறார்களாம்'' என்றாள்.

ஹேமாவும் ராதிகாவும் வசந்தாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் போன் மணி ஒலித்தது. ராதிகா போனை எடுத்தாள். ''ஹலோ ஆனந்த்! சௌக்கியமா... ஆமாம்... விஜய் இப்பொழுதுதான் வந்தான். இதோ அவனையே பேசச் சொல்கிறேன்... ஒரு நிமிடம்'' என்று சொல்லிவிட்டு விஜயிடம் போனை தந்தாள்.

''ஹலோ...அனூ... ஆமாம். ரயில் ரொம்ப தாமதமாகி விட்டது. இங்கே ரகளை அதிகமாய் இருக்கிறது. நேற்று இரவு பிரசாத் வீட்டுக்கு வர முடியவில்லை. ஆபத்து

எதுவும் இல்லை. கவலைப்படாதே. பிரசாத் இன்று இரவு வந்து விடுவான். நான் வீட்டுக்கு வருமுன் உனக்குப் போன்...'' விஜய் சொல்லிக் கொண்டிருந்தபோதே போன் டெட் ஆகிவிட்டது.

ராதிகா பெருமூச்சு விட்டாள். ''பக்கத்துச் சாலையில் என் பிரண்ட் வீட்டிலும் நேற்று முதல் போன் வேலை செய்யவில்லையாம். அந்த லைனை யாரோ வேண்டு மென்றே துண்டித்து விட்டார்களாம். போன் இல்லை யென்றால் ஏதோ காட்டுக்குள் இருப்பதுபோல் பயமாக இருக்கும்'' என்றாள்.

''ஹேமாவுக்கு கால்வலிக்காக இந்த மருந்துகள் வேண்டுமாம்'' ராதிகா வேலையாளை அனுப்ப முற்பட்ட போது, விஜய் தான் போவதாகச் சொல்லிவிட்டு போனான். கால் மணி நேரம் கழித்து மருந்துகளை வாங்கி வந்தான். ஹேமா மருந்துகளைப் போட்டுக் கொண்டு உறங்கி விட்டாள். நன்றாக இருட்டி விட்டது.

விஜய், ராதிகா ரேடியோவில் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஹேமா எழுந்து வந்தாள். கால்வலி குறைந்திருப்பது போல் முகம் தெளிவாக இருந்தது. மாடிபடியிலிருந்து இறங்கி வந்தாள். செய்திகளில் நகரத்தில் நிலைமை முதல் நாளை விட மோசமாக இருப்பதாகவும், நகரம் முழுவதும் தடை உத்தரவு போட்டிருப்பதாகவும் அறிவித்தார்கள்.

''அவர் ஊரில் வேறு இல்லை. நல்லவேளை. நீங்களாவது வந்தீங்க. இல்லையென்றால் பயத்தினாலேயே செத்திருப்பேன்'' ராதிகா சொன்னாள்.

மறுநாள் காலையில் எட்டு மணியிலிருந்து பத்து மணி வரை தடை உத்தரவுக்கு விலக்கு அளித்திருந்தார்கள். விஜய் மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொடுப்பதற் காகக் கிளம்பினான்.



''அவ்வளவு அவசரமாகத் திருப்பிக் கொடுத்துதான் ஆகணுமா? பிறகு கொடுத்தால் போச்சு'' என்றாள் ராதிகா.

''நானும் அதைத்தான் சொல்கிறேன்'' ஹேமா சொன்னாள்.

''வீட்டில் உட்கார்ந்து கொண்டு என்ன செய்யப் போகிறேன்?'' விஜய் மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்து கொண்டே சொன்னான்.

பத்து மணி தாண்டி விட்டது. விஜய் இன்னும் வரவில்லை. ராதிகா கடியாரத்தையே பதட்டத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ''சொன்னால் கேட்டால் தானே! இந்த போன் வேறு இப்பொழுதுதான் டெட் ஆக வேண்டுமா...'' என்றாள்.

ராதிகாவின் முகம் சோர்வாக, வாடிப்போய் இருந்தது.

ஹேமா ராதிகாவின் முகத்தைக் கவனமாகப் பார்த்துக் கொண்டே ''நர்ஸிங் ஹோம் அருகில் இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

''நான் கன்சல்ட் செய்யும் டாக்டரின் க்ளினிக் கொஞ்சம் தொலைவுதான்'' என்றாள் ராதிகா.

''எந்த ஏரியா?''

ராதிகா சொன்னதும் ''அது கர்ஃப்யூ இருக்கும் ஏரியாவாச்சே...விஜய் வந்ததும் நர்ஸிங்ஹோமுக்கு போய் விடலாம்'' என்றாள் ஹேமா.

''இன்னும் ஒரு வாரம் டைம் இருக்கிறதென்று டாக்டர் சொல்லியிருக்கிறாள். அதான் அவர் தைரியமாக சென்னைக்குக் கிளம்பினார். போன வாரமே அம்மா வந்திருக்க வேண்டியது. அண்ணாவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆகி ஆஸ்பத்திரியில் இருப்பதால் அவளாலும் வர முடிய வில்லை. உள்ளூரிலேயே நாத்தனார் இருக்கிறாள். அவங்க

நாகர்ஜுனசாகருக்குப் போயிருக்கிறார்கள். இந்த ரகளை யினால் அவர்களாலும் வரமுடியவில்லை.''

மாலையாகி விட்டது. விஜய் வந்தான். அவன் இடது கையில் கத்தியால் குத்திய காயம் இருந்தது. சோர்ந்து போன முகத்துடன் உள்ளே வந்தான்.

''என்னச்சு?'' ராதிகா பதட்டத்துடன் கேட்டாள்.

''திரும்பி வரும்போது வழியில் கலவரம் நடந்து கொண்டிருந்தது. தப்பித்துக் கொண்டு வரும்போது யாரோ கத்தியால் குத்தி விட்டார்கள்.''

''அடடா... டாக்டரிடம் போவதற்கும் வழி யில்லையே...இப்பொ என்ன செய்வது?'' ராதிகா கவலைப் பட்டாள்.

''முதலில் அவரை இப்படி உட்காரச் சொல்லு ராதிகா...'' ஹேமா சொன்னாள்.

ராதிகா வலுக்கட்டாயமாய் விஜயை நாற்காலியில் உட்காரச் செய்தாள். ஹேமா விஜயின் காயத்தைச் சுத்தப் படுத்தி மருந்து போட்டு கட்டுப் போட்டு விட்டாள்.

ராதிகா பழச்சாறை எடுத்து வந்தாள். ''முதலில் இதைக் குடி. காலையில் சாப்பிடாமலேயே போய் விட்டாய். போக வேண்டாமென்று சொன்னாலும் கேட்க வில்லை. நிமிடத்தில் எல்லாவற்றையும் சுடவைக்கிறேன். சாப்பிடலாம் வா...'' என்று சமையல் அறைக்குள் சென்றாள்.

ஹேமாவும் விஜயும் உணவு மேஜையின் முன்னால் எதிரெதிரில் அமர்ந்திருந்தார்கள்.

விஜய் ஹேமாவின் நகைகளை எடுத்து உணவு மேஜை யின் மீது வைத்தான்.

''நீங்க கிளம்பிப் போன பிறகு எனக்குத் தோன்றியது. நகைகளுக்காகத்தான் நீங்க முக்கியமாய் போயிருப்பீங்க



என்று. அப்படி போனதால்தான் உங்களுக்கு இந்தக் காயம் ஏற்பட்டுவிட்டது.''

''அவர்களுடைய மோட்டார் சைக்கிளை அவர்களிடம் கொடுத்தாகி விட்டது. உங்களுடைய நகைகளும் உங்களிடம் வந்து விட்டன.'' விஜயின் குரல் பொறுப்பு விட்டது என்பது போல் ஒலித்தது.

ஹேமா தோடுகளை அணிந்துகொண்டு, செயினைக் கழுத்தில் போட்டுக் கொண்டாள். சமையல் அறைக்குள் சென்ற ராதிகா வெகுநேரம் ஆகியும் வெளியில் வராததை கண்டு ஹேமா உள்ளே போனாள். ராதிகா சமையல் அறை மேடைமீது சாய்ந்து கொண்டு நின்றிருந்தாள்.

''நர்ஸிங் ஹோமுக்குப் போய் விடலாமா?'' ஹேமா அருகில் வந்து கொண்டே கேட்டாள்.

''எப்படி போவது? போன் வேலை செய்யவில்லை. ஆம்புலென்ஸை வரவழைக்க முடியாது. எங்களுடைய காரை நாத்தனார் நாகார்ஜுனசாகருக்கு எடுத்துக் கொண்டு போயிருக்கிறாள்.''

விஜய் உணவு மேஜை அருகில் உட்கார்ந்துகொண்டு டி. வியில் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஹேமா ராதிகாவுக்காகக் கையை நீட்டினாள். ராதிகா சற்று நேரம் அந்தக் கையைப் பற்றிக் கொண்டு பிறகு மெதுவாக விட்டுவிட்டாள். ''இப்பொ பரவாயில்லை. காலையில் பார்த்துக் கொள்ளலாம்.'' சமாளிப்பது போல் சொன்னாள் ராதிகா.

ஹேமா ராதிகாவை அழைத்துக் கொண்டு வந்து நாற்காலியில் உட்கார வைத்தாள். கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு ராதிகா சாதாரணமாக இருந் தாள். இரவு ஆகிவிட்டது.

ஹேமா கொடுத்த தூக்க மாத்திரையினால் விஜய் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

திடீரென்று யாரோ தோளைப் பிடித்து உலுக்குவது போல் இருந்தது. கண்களைத் திறந்தான்.

''விஜய்! சீக்கிரமாய் எழுந்து கொள்ளுங்கள். அர்ஜெண்ட்.''

''என்ன ஆச்சு?'' கேட்டுக் கொண்டே எழுந்துகொள்ள முயற்சி செய்தான். அவன் கண்கள் தூக்கக் கலக்கத்தில் மறுபடியும் மூடிக்கொண்டன. உடல் தள்ளாடியது. படுக்கையில் சரியப் போனவனை ஹேமா இரண்டு கைகளாலேயும் பிடித்து உட்காரவைத்தாள். கண்களைத் திறந்து பார்த்தான். அவனால் ஹேமாவை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. குழப்பமாய் பார்த்துக் கொண்டே ''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றான்.

''விஜய்! சீக்கிரமாய் வாங்க... ராதிகாவுக்கு இடுப்பு வலி எடுத்து விட்டது. க்விக்...'' ஹேமா அவனைக் கட்டிலை விட்டு இழுக்க முயன்றாள்.

விஜய்க்கு விழிப்பு வந்துவிட்டது. ஆனால் உடல் ஒத்துழைக்க மறுத்தது. டைனிங் ஹால் வரையில் வந்தவன் இனி நடக்க முடியாதவனைப்போல் அங்கேயே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு உணவு மேஜையின் மீது தலையைச் சாய்த்துக் கொண்டான்.

யாரோ அவன் முகவாயை கையால் உயர்த்தினார்கள். திடீரென்று சில்லென்ற தண்ணீர் அவன் முகத்தின் மீது விழுந்தது. மயக்கம் சற்று தெளிந்தது. கண்களைத் திறந்தான். எதிரே ஹேமா நைட்டியில் இருந்தாள். அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் நினைவுக்கு வரத் தொடங்கியது.

''விஜய்! ப்ளீஸ்... விழித்துக் கொள்ளுங்கள்.'' ஹேமா அவன் தோள்களைப் பற்றி உலுக்கினாள். விஜய் முகத்தில் இருந்த தண்ணீர் துளிகளைக் கையால் துடைத்துக் கொண்டான்.



''சீக்கிரமாய் வாங்க.''

''எங்கே?'' என்று கேட்டான்.

''ராதிகாவின் அறைக்கு.''

''ஏன்? என்ன ஆச்சு?'' அவனுக்கு முழுவதுமாக விழிப்பு வந்து விட்டது.

''ராதிகாவுக்கு இடுப்பு வலி கண்டிருக்கிறது.''

''ஆஸ்பத்திரிக்கு எப்படி அழைத்துக்கொண்டு போவது? காரும் இல்லை. போனும் வேலை செய்யவில்லை.'' அவன் முகத்தில் பதட்டம் தென்பட்டது.

''முதலில் ஸ்டவ் மீது வென்னீர் வைத்திருக்கிறேன். எடுத்துக்கொண்டு வாங்க.'' ராதிகாவின் அறைக்கு விரைந்தாள் ஹேமா.

விஜய்க்குத் தூக்க கலக்கம் போய் விட்டது. உடல் மட்டும் இன்னும் சுவாதீனத்திற்கு வர மறுத்தது. சமையல் அறைக்குள் போனான். ஸ்டவ் மீது இருந்த வென்னீர் பாத்திரத்தை துணியால் பிடித்துக் கொண்டு ராதிகாவின் அறைக்குச் சென்றான். அங்கே தென்பட்ட காட்சியைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டு திரும்பப் போனான்.

''விஜய்! உள்ளே வாங்க.''

விஜய் உள்ளே வரவில்லை.

''உங்களைத்தான் விஜய். தயக்கங்களுக்கு இது நேரமில்லை. இந்தப் பக்கமாய் வந்து ராதிகாவைக் கொஞ்சம் அழுத்தி பிடித்துக் கொள்ளுங்கள். ராதிகா... குழந்தை வெளியில் வரப் போகிறது. நீ மூச்சை ஆழமாய் விட்டு குழந்தையை வெளியில் தள்ள முயற்சி செய்ய வேண்டும்... க்விக்...'' ஹேமா ராதிகாவுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ராதிகா பற்களால் இதழ்களை அழுத்தி முயற்சி செய்து கொண்டிருந்தாள். விஜய் ராதிகாவின் கைகளைப்

பலமாகப் பற்றியிருந்தான். ராதிகாவின் முகத்தில் வியர்வை அரும்பியது. வேதனையால் துடித்துக் கொண் டிருந்தாள். அந்தக் காட்சியைப் பார்க்கும்போதும்போது விஜய் கண்களில் நீர் நிரம்பிவிட்டது.

திடீரென்று குழந்தை வீலென்று அலறிய சத்தம் கேட்டது.

''பெண் குழந்தை'' என்றாள் ஹேமா.

ராதிகாவின் வேதனை சற்று குறைந்தது. பத்து நிமிடங்கள் கழித்து ஹேமா டவலைக் கொண்டு வந்து ராதிகாவின் முகத்தில் படிந்திருந்த வியர்வையைத் துடைக்கச் சொல்லி விஜயிடம் சொன்னாள். விஜய் டவலைக்கொண்டு வந்து ராதிகாவின் முகத்தில் ஒற்றி னான்.

''தாங்க்ஸ் விஜய். நீ ஹேமாவை அழைத்து வந்திருக்கா விட்டால்...'' ராதிகா ஏதோ சொல்ல முயன்றாள்.

''ஜஸ்ட் ரிலாக்ஸ் ராதிகா. அப்புறமாய் பேசிக் கொள்ள லாம்'' என்றாள் ஹேமா. விஜய் பக்கம் திரும்பி ''விஜய்! எனக்கு இரண்டு டவல்களைக் கொண்டு வாங்க. அவசரம்.'' குழந்தையைக் குளிப்பாட்டிக் கொண்டே சொன்னாள். குழந்தையின் அழுகைக் குரல் அந்த நிசப்தத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

''டவல்கள் அந்த பீரோவில் இருக்கு.'' ராதிகா சொன்னாள்.

விஜய் பீரோவிலிருந்து டவல்களை எடுத்து வந்து ஹேமாவிடம் கொடுத்தான். அப்பொழுதுதான் பிறந்த குழந்தையை ஹேமா பாந்தமாய் பிடித்துக் கொண்டு துடைத்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்க்கும்போது விஜய்க்குப் பிரமிப்பு கலந்த வியப்பு ஏற்பட்டது.

ஹேமா டவலால் குழந்தையைத் துடைத்து விட்டு,



மற்றொரு டவலைக் குழந்தை சுற்றிலும் போர்த்தி விட்டு ராதிகாவின் அருகில் வந்து குழந்தையைக் காண்பித்தாள்.

ராதிகாவின் கண்கள் மகிழ்ச்சியால் மின்னிக் கொண் டிருந்தன. ''டாடி இல்லாத சமயமாய் பார்த்து வந்து விட்டாள் இந்த உலகிற்கு. அதோ... மாமாவைப் பார்த் தாயா...'' ராதிகா சொன்னாள்.

ஹேமா குழந்தையைக் கொண்டு வந்து விஜயிடம் காண்பித்தாள். விஜய் அந்த சின்னக் குழந்தையின் முகத்தையும், குழந்தையைத் தாங்கிக் கொண்டிருந்த ஹேமாவையும் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் அந்தக் காட்சி ஆழமாய் பதிந்து விட்டது.

ராதிகாவின் பக்கத்தில் குழந்தையைப் படுக்க வைத்துக் கொண்டே ''விஜய்... ராதிகாவுக்குச் சூடாக ஒரு கப் பாலாவது, காபியாவது கொடுக்க வேண்டும்'' ஹேமா சொன்னாள்.

விஜய் ராதிகா பக்கம் பார்த்தான்.

''காபியே குடிக்கிறேன். சமையல் அறையில் பால், டிகாஷன் எல்லாம் இருக்கு'' என்றாள் ராதிகா.

விஜய் போகும்போது ராதிகா அழைத்தாள். விஜய் திரும்பிப் பார்த்தான். ''ஹேமாவுக்கும்'' என்றாள் ராதிகா. பத்து நிமிடங்கள் கழித்து விஜய் காபி கலந்து எடுத்து வரும்போது ஹேமா அந்த இடத்தையெல்லாம் சுத்தம் செய்துவிட்டு பாத்ரூமில் சென்று முகம், கைகளை அலம்பிக்கொண்டு டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டே வந்தாள்.

ஹேமா ராதிகாவை மெதுவாக எழுப்பி உட்கார வைத்தாள். விஜய் காபி கோப்பையை ராதிகாவிடம் கொடுத்து விட்டு ஹேமாவுக்கும் கொடுத்தாள்.

''தாங்க்யூ'' என்றாள் ஹேமா. ராதிகாவைப் பார்த்து விட்டு ''நார்மல் டெலிவரி என்பதால் நிலைமையைச்

சமாளிக்க முடிந்தது. ஏதாவது காம்ப்ளிகேஷன் வந்திருந்தால் இந்த நள்ளிரவு வேளையில் சிரமமாகியிருக்கும். நான் டெலிவரி அடெண்ட் செய்து நாளாகி விட்டது. முதலில் நானும் பயந்தேன்'' என்றாள்.

ராதிகா குழந்தையை அபூர்வமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஹேமா நாற்காலியில் அமர்ந்துகொண்டு காபியை ஒரு வாய் பருகினாள். ''ஓ... ரொம்ப நன்றாக காபி கலந்திருக்கிங்க. உங்களுக்கு இந்த வேலையெல்லாம் தெரியுமா?'' வியப்புடன் கேட்டாள்.

''ஆனந்துக்காக ஸ்பெஷலாகக் காபி கலக்க கற்றுக் கொண்டான்'' ராதிகா சொன்னாள்.

''யாரந்த அதிர்ஷ்டசாலி? தம்பியா?'' ஹேமா கேட்டாள்.

''இல்லை.''

''...ளின் பிரதரா?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''...ஹூம்...'' என்றாள் ராதிகா.

''என்ன உறவு?'' ஹேமா கேட்டாள்.

ராதிகா விஜய் பக்கம் பார்த்தாள். அவன் எதுவும் சொல்லவில்லை. குழந்தையையே மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன ஆவான் என்று கேட்டால் ரொம்ப ரொம்ப நெருக்கமானவன். இருவருக்குமிடையே உறவுமுறை எதுவும் இல்லை. ஒன்றாக வளர்ந்தார்கள். நண்பர்கள் என்று சொல்லலாம். விஜய்க்கு ஆனந்த் என்றால் உயிர்.'' ராதிகா விவரமாகச் சொன்னாள்.

''ஓ... அப்படியா?'' என்றாள் ஹேமா.

கால் மணி நேரம் கழித்து ராதிகா உறங்கி விட்டாள். விஜய் எழுந்து வெளியில் வந்தான். ஹேமாவும் பின்னாலேயே வந்தாள்.



''ராதிகாவுக்கு இந்த இஞ்செக்ஷன்களை உடனே போட்டாகணும் விஜய்'' என்றாள்.

விஜய் திரும்பிப் பார்த்தான். அவன் கண்களுக்கு இது வரையில் ஹேமா அழகான பெண்ணைப்போல்தான் தென்பட்டாள். ஆனால் இந்த நிமிடம் தங்கத்திற்கு மெருகேற்றியது போல் அவளுடைய புத்திசாலித்தனம் அந்த அழகை மேலும் அதிகப்படுத்திக் காட்டுவதுபோல் இருந்தது. ஹேமா துணிச்சலுடன், தைரியமாய் மளமளவென்று செயல்பட்டுத் தாயை சேயை வேறாக்கியது அவனுக்குப் பிரமிப்பைத் தந்தது.

அவளிடமிருந்து மருந்துச் சீட்டை எடுத்துக் கொண்டான். செருப்பு போட்டுக் கொண்டு புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

''அருகில் மருந்துக் கடை இருக்கா?'' ஹேமா கேட்டாள்.

''கொஞ்சம் தொலைவு போகணும்'' என்றான்.

''ரொம்ப தூரம் போகணும் என்றால்... இந்த இருட்டு வேளையில்...'' தயங்கிக் கொண்டே சொன்னாள்.

''பரவாயில்லை.'' கதவைத் திறந்து கொண்டு வெளியில் போகப் போனவன் அவள் பக்கம் திரும்பினான். ''கதவைச் சாத்தி தாழ் போட்டுக் கொள்ளுங்கள்...'' எச்சரித்துவிட்டுக் கிளம்பினான்.

அரை மணியானது... ஒரு மணி நேரமும் ஆகி விட்டது.

கதவு சத்தப்படுத்தும் ஓசை கேட்டது.

''யாரு?'' என்றாள் ஹேமா.

''நான்தான்'' என்றான் விஜய்.

ஹேமா கதவைத் திறந்து அவன் உள்ளே வந்ததும் கதவைச் சாத்தி விட்டாள். ஹேமாவின் முகத்தில் தென்பட்ட பதட்டத்தைக் கவனித்தான் விஜய்.

"என்ன ஆச்சு? ராதிகாவும், குழந்தையும் சாதாரணமாக இருக்கிறார்கள் இல்லையா?" ஹேமாவின் முகத்தில் தென்பட்ட பதட்டம் அவனுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

"அவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள். உங்களைப் பற்றித்தான் நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். இஞ்செக்ஷன்ஸ் முக்கியம்தான் என்றாலும் உங்களுடைய நலமும் முக்கியம் இல்லையா? நீங்க திரும்பி வரும் வரையில் ஒரு நிமிடம் ஒரு யுகமாய் தோன்றியது. உங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தால் அந்த வேதனை என்னை வாழ்நாள் முழுவதும் துரத்திக் கொண்டே இருக்கும்..." ஒரே மூச்சில் அவள் சொன்னதைக் கேட்டு விஜய் வியப்புடன் பார்த்தான்.

"கவலைப்படுவானேன் என்று நினைக்கிறீர்களா? நான் தானே உங்களை வெளியில் அனுப்பினேன்" என்றாள் ஹேமா. அவன் மௌனமாய் இஞ்செக்ஷன் பாட்டில்களைக் கொடுக்கப் போனான். ஹேமா அவன் இரு கைகளையும் பற்றிக்கொண்டு "தாங்க் காட்" என்றாள். கவலையும் பயமும் தீர்ந்து விட்ட மகிழ்ச்சியில் என்ன செய்கிறோம் என்று அவனுக்கே புரியவில்லை போலும். ஹேமா இஞ்செக்ஷன் பாட்டில்கள் எடுத்துக் கொண்டு ராதிகாவின் அறைக்குள் சென்றாள்.

விஜய் தன்னுடைய கைகளைப் பார்த்துக் கொண்டான்.

ஹேமா கைகளை விட்டுவிட்டபோதும் அவளுடைய ஸ்பரிசம் இன்னும் கைகளில் இருப்பது போலவே தோன்றியது.

தன்னைப் பற்றி ஆனந்தைத் தவிர வேறு யாரும் கவலைப்பட்டு அவனுக்குப் பழக்கம் இல்லை.

அவன் கட்டிலில் வந்து அமர்ந்துகொண்டான். அவன் கண்களுக்கு முன்னால் ஹேமாவின் உருவம் நிழலாடியது. மெதுவாகத் தன்னையும் அறியாமல் உறங்கி விட்டான்.



# 6

மறுநாள் மாலை...

பிரசாத் வந்து விட்டான். ராதிகாவுக்கு நார்மல் டெலிவரி ஆகி மகள் பிறந்த செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான். கர்ஃப்யூ இன்னும் முழுவதுமாக நீங்கவில்லை.

"தாங்க்ஸ் ஹேமா... உங்களுடைய நன்றிக் கடனை இந்த ஜென்மத்தில் என்னால் தீர்த்துக் கொள்ள முடியாது." இரண்டு கைகளையும் ஜோடித்துக் கொண்டே சொன்னான் பிரசாத்.

"அந்த தாங்க்ஸ் ஏதோ விஜய்க்கே சொல்லுங்கள். நான் இங்கு வருவதற்கு அவன்தானே காரணம்" என்றாள் ஹேமா.

"விஜய் எங்களைச் சேர்ந்தவன்" என்றான் பிரசாத்.

ஹேமாவும் இப்பொ நம் மனுஷியாகி விட்டாள்" ராதிகா சொன்னாள்.

கையில் பட்ட காயத்தினால் விஜய்க்கு நன்றாக ஜுரம் வந்துவிட்டது. ஹேமா அவனை ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லி எச்சரித்தாள்.

பிரசாத்துக்கு சமையல் அறை சமாசாரங்கள் எதுவும் தெரியாது. மகளை பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தானே தவிர மற்ற விஷயங்களைக் கவனிக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. எல்லோரையும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு ஹேமாவின் மீது விழுந்தது.

ஜுரம் தீவிரமாய் இருந்ததால் விஜய் கட்டில் மீது தூங்கிக் கொண்டிருந்தான். கையில் சுருக்கென்று ஏதோ

குத்தியது போல் இருந்ததும் கண்களைத் திறந்து பார்த்தான். எதிரே ஹேமாவின் முகம். புன்முறுவலுடன் தென்பட்டது.

''சாரி... விழிப்பு வந்துவிட்டதா... ரொம்ப நிதானமாய் கவனமாக இஞ்செக்ஷன் போட்டேன்'' என்றாள். அவள் கையில் ஸிரிஞ்ச் இருந்தது.

''எப்படி இருக்கு விஜய்?'' பிரசாத் கேட்டான்.

''எனக்கென்ன? நான் நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்றான் விஜய்.

''நன்றாகத்தான் இருக்கிறாய். ஆனால் ஜுரம் தான் கொஞ்சம் அதிகமாய் இருக்கு. கம்ப்ளீட் ரெஸ்ட் எடுத்துக் கொள்'' பிரசாத் சொன்னான்.

''ஆனந்துக்குப் போன் பண்ணணும்.'' விஜயின் குரல் தெளிவில்லாமல் ஒலித்தது.

''எல்லா போனும் டெட். நீ இங்கே இருக்கிறாய் என்று ஆனந்துக்குத் தெரியும் இல்லையா... கவலைப்பட மாட்டான்'' என்றான் பிரசாத்.

''நான்... நான் உடனே ஊருக்குப் போக வேண்டும்.''

''ஊருக்குப் போக வேண்டுமா! ஜுரம் குறையும் வரை உன்னை எங்கேயும் போக விடமாட்டோம்.'' பிரசாத் தீர்மானமாகச் சொல்லிவிட்டான்.

விஜய் இந்த அளவுக்குப் புலம்பும் அந்த ஆனந்த் எங்கே இருக்கிறான் என்று ராதிகாவிடம் கேட்டாள் ஹேமா.

ராதிகா சுருக்கமாக விஜய் பற்றிச் சொன்னாள். தாய் தற்கொலை செய்துகொண்ட பிறகு அனாதையாகிவிட்ட அவனைத் தீட்சிதர் அழைத்து வந்தது, ஆனந்தும் அவனும் ஒன்றாக வளர்ந்தது, வயது ஆக ஆக ஆனந்த் விஜய் உயிர் நண்பர்களாக மாறியது, விஜய் ஆனந்தை உயிருக்கும் மேலாக நினைப்பது... எல்லாம் விவரமாகச் சொன்னாள்.



இரவாகி விட்டது. ஹேமா அறைக்குள் வந்து விஜயை வலுக்கட்டாயமாய் எழுப்பினாள். முதுகிற்குப் பின்னால் தலையணையை வைத்துக் கட்டில்மீதே உட்காரச் செய்தாள். விஜய்க்கு விழிப்பு வந்துவிட்டது. எதிரே ஹேமா கட்டில்மீது அமர்ந்து கிண்ணத்தில் ஜவ்வரிசி கஞ்சியை ஸ்பூனால் கலந்து கொண்டிருந்தாள்.

''எனக்கு வேண்டாம்...'' விஜய் தலையை குறுக்கே அசைத்தான்.

''ப்ளீஸ்... காலையிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை. ஜுரம் இப்பொ கொஞ்சம் பரவாயில்லை...'' சொல்லிக் கொண்டே ஸ்பூனால் கஞ்சியை எடுத்து வாயருகில் கொண்டு போனாள். அவன் தயக்கத்துடன் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான். அவனுக்கு ரொம்ப சங்கடமாக இருந்தது. இது போன்ற உபசாரங்களை மற்றவர்களுக்குச் செய்துதான் அவனுக்குப் பழக்கமே தவிர மற்றவர்கள் அவனுக்குச் செய்தது இல்லை. ஆனால் விஜயின் தயக்கத்தை, சங்கோசத்தை ஹேமா கொஞ்சம் கூடப் பொருட்படுத்தவில்லை. விஜய் ஹேமாவின் கையில் இருந்த கிண்ணத்தை எடுத்துக் கொண்டு மெல்லமாக குடிக்கத் தொடங்கினான். அவன் முகத்தில் ஜுரத்தின் களைப்பு தெரிந்தது. ஹேமா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஹேமாவின் கண்களுக்கு விஜய் பண்பு நிறைந்தவனாய், தனித்தன்மை வாய்ந்தவனாய் தென்பட்டான்.

ஹேமாவுக்கு முதல் முறையாய் விஜயைச் சந்தித்தது நினைவுக்கு வந்தது. அன்று இரவு தானும் அவனும் தனிமையில் இருக்க நேர்ந்தபோது அவன் எல்லை மீறாமல் மரியாதையுடன் நடந்து கொண்டதை நினைவுகூர்ந்தாள். பெண்களிடம் மரியாதையும் இருப்பதால்தான் அவனால் நிலைதடுமாறாமல் இருக்க முடிந்தது. அவனுடைய தனித்

தன்மை புரிய புரிய ஹேமாவுக்கு அவனிடம் அன்பும் மரியாதையும் ஏற்படத் தொடங்கின.

விஜய்! அவளுக்கு ரொம்ப விருப்பமான பெயர். தனக்குக் கணவனாக வரப் போகிறவனின் பெயர் விஜய் என்று இல்லாவிட்டால் விஜய் என்று மாற்றிவிடுவதாக சினேகிதிகளுடன் பந்தயம் கட்டியது நினைவுக்கு வந்தது.

வேறு வழியில்லாததால் விஜயும், ஹேமாவும் பிரசாத் வீட்டிலேயே இரண்டு நாட்கள் தங்கியிருந்தார்கள். பிரசாத் கலகலவென்று பேசும் சுபாவம் படைத்தவன் என்பதால் இரண்டு நாட்களும் ஜாலியாகப் பொழுது போய்விட்டது. விஜயின் காயமும் ஆறிக் கொண்டு வந்தது. ஹேமா கட்டை பிரித்துவிட்டுப் பாண்டேஜ் போட்டுவிட்டாள். காயம் சீக்கிரமாக ஆறி வருவதைக் கண்டு, ''ஹெல்தியான உடம்பு!'' என்று விஜயைப் பாராட்டினாள்.

அன்று ஹேமா சமையல் செய்தாள். ராதிகாவும் சாப்பிட உட்கார்ந்து கொண்டாள். பிரசாத் கத்திரிக்காய் கறியை ருசி பார்த்துவிட்டு, ''ராதிகா மட்டும்தான் நன்றாகச் சமைப்பாள் என்று பெருமைப்பட்டுக் கொண்டு இருந்தேன். அவளைவிட நன்றாகச் சமைப்பவர்கள் இருக்கிறார்கள் என்று இப்பொழுதுதான் புரிகிறது...'' என்றான்.

''எங்க அம்மா என்னைவிட நன்றாகச் சமைப்பாள்...'' ஹேமா புன்முறுவலுடன் சொன்னாள்.

''இன்னும் கொஞ்சம் போட்டுக் கொள்...'' ராதிகா விஜயிடம் சொன்னாள்.

''போதும்...'' விஜய் தடுத்தான்.

''ஆனந்துக்குத் துணையாக, சொன்ன நேரத்திற்குள் போகவில்லையே என்று விஜய் வருத்தப்படுகிறான் போலும். உனக்குத்தான் தெரியுமே ராதிகா... ஆனந்த் சாப்பிட்டால்தான் விஜய்க்கு வயிறு நிரம்பும். ஆனந்த்



மூச்சை எடுத்துக் கொண்டால்தான் விஜய் உயிர் வாழ முடியும். நட்பு என்றால் இவர்களுடையதுதான். அதிர்ஷ்டம் என்றால் ஆனந்தோடதுதான்.'' கிண்டல் செய்வதுபோல் சொன்னான் பிரசாத்.

ஆனந்த் பற்றி பிரசாத் அப்படிக் கிண்டலாகப் பேசியது தனக்குப் பிடிக்கவில்லை என்பதுபோல் விஜய் மௌனமாய் இருந்துவிட்டான்.

ஹேமா ஆர்வத்துடன் விஜய் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் பதில் எதுவும் சொல்லவில்லை. இது போன்ற சொற்களைக் கேட்டுக் கேட்டுப் பழகிப் போனாற் போல் அவன் முகத்தில் வெறுமை தென்பட்டது.

டி.வி. செய்திகளில் மதியம் மூன்று மணிக்கு மேல் கர்ஃப்யூ உத்தரவை ரத்து செய்வதாக அறிவித்தார்கள்.

''அப்பாடா...'' ஹேமா நிம்மதியாக மூச்சைவிட்டுக் கொண்டாள். ''நான் கிளம்புகிறேன்...'' என்றாள்.

''இன்னும் இரண்டு நாட்களாவது இருங்கள்...'' பிரசாத் வேண்டுகோள் விடுத்தான்.

''ஆமாம்... ஹேமா... இரண்டு நாட்கள் எல்லோரும் சேர்ந்து ஜாலியாக இருக்கலாம்...'' ராதிகா வற்புறுத்தினாள்.

''இல்லை... இல்லை... அங்கே அம்மா ரொம்பக் கவலைப்படுவாள்.'' ஹேமா சொன்னாள்.

பிரசாத் ஹேமாவைக் காரில் இறக்கிவிட்டு வரச் சொல்லி விஜயிடம் சொன்னான்.

கிளம்பும்போது ராதிகா ஹேமாவை ஒரு நிமிடம் நாற்காலியில் வந்து உட்காரச் சொன்னாள்.

''எதுக்கு?'' கேட்டுக் கொண்டே ஹேமா வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''விஜய்! நீயும் வந்து உட்கார்ந்துகொள்...'' பிரசாத் அழைத்தான்.

விஜய் தொலைவிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

''அங்கே இல்லை. இங்கே வந்து உட்கார்ந்துகொள்.'' ஹேமா பக்கத்தில் இருந்த நாற்காலியைக் காண்பித்தான் பிரசாத்.

''வா... விஜய்...'' ராதிகாவும் அழைத்தாள்.

விஜய் புரியாதவனைப் போல் பார்த்துவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டான்.

ராதிகா புதிய உடைகளைக் குழந்தையின் கையால் தொடச் செய்து ஹேமாவிடம் கொடுக்கப் போனாள்.

''இதென்ன?'' மறுப்பது போல் எழுந்துகொண்டாள் ஹேமா. ராதிகா ஹேமாவை எழுந்து கொள்ள விடவில்லை. தோள்களை அழுத்தி உட்கார வைத்தாள்.

''ஹேமா! ப்ளீஸ்... மறுக்காதே... ஏதோ எங்களுடைய சந்தோஷத்திற்காக...''

''ஆமாம் ஹேமா... மறுக்காதிங்க. நீங்க வாங்கிக் கொண்டால்தான் எங்களுக்குத் திருப்தியும், சந்தோஷமும்...'' பிரசாத்தும் வற்புறுத்தினான்.

பிரசாத் விஜயிடம் புதிய உடைகளைக் கொடுத்தான்.

''என்ன பிரசாத்? உனக்கு மூளை கலங்கிவிட்டதா?'' விஜய் நாற்காலியிலிருந்து எழுந்துகொண்டான்.

பிரசாத் விஜயைப் பலவந்தமாய் உட்கார வைத்துக் கொண்டே, ''விஜய்! இன்று வரை நான் எதற்காகவும் உன்னைக் கட்டாயப்படுத்தியதில்லை. இன்று நாங்கள் கொடுப்பதை மறுக்காதே. உனக்குக் காணிக்கை தருவதாக நினைக்காதே. எங்களுடைய சந்தோஷத்திற்காக...''

''விஜய்... நீ மறுத்தால் ஹேமாவும் எடுத்துக்கொள்ள மாட்டாள். நீ எடுத்துக் கொண்டுதான் ஆகணும்...'' ராதிகா சொன்னாள்.

''நான் எடுத்துக்கொள்ளப் போவதில்லை'' என்றாள் ஹேமா.



''ஹேமா... வேண்டாம் என்று சொல்லாதே... குழந்தையின் கையால் கொடுக்கச் செய்திருக்கிறேன்...'' ராதிகா சொன்னாள்.

ஹேமா ராதிகாவின் முகத்தை ஆழமாய் பார்த்தாள். அவளுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இல்லை. ஆனால் ராதிகா முகத்தில் தெரிந்த வேண்டுகோளை அவளால் மறுக்கவும் முடியவில்லை. போகும்போது அவர்களுக்கு வேதனை தருவதிலும் அவளுக்கு விருப்பமில்லை.

தான் எடுத்துக் கொள்ளா விட்டால் ஹேமாவும் எடுத்துக் கொள்ள மாட்டாள் என்று ராதிகா சொன்ன போது விஜய்க்கு ராதிகாவின் மனம் புரிந்தது. ராதிகாவின் மனதை நோக அடிப்பதில் அவனுக்கும் விருப்பம் இல்லை. இது போன்ற மரியாதைகளை ஏற்றுக் கொள்வது அவனுக்குப் பழக்கமும் இல்லை.

ஏற்றுக் கொள்வதா, மறுப்பதா என்ற டைலமாவில் விஜய் இருக்கும்போதே, பிரசாத் அவன் கைகளில் புதிய உடைகளை வைத்து விட்டான். இருவரின் கைகளில் அட்சதையைக் கொடுத்துக் குழந்தையின் தலையில் போடச் சொன்னான். இருவரும் அப்படியே செய்தார்கள்.

ஹேமா கிளம்பும்போது ராதிகா, பிரசாத் அவளை மறுபடியும் வரச்சொல்லி வேண்டுகோள் விடுத்தார்கள். ஹேமா தன்னுடைய முகவரியை விஜயிடம் கொடுத்து, அவனுடைய முகவரியை எழுதிக் கொண்டாள். கார் கிளம்பியது.

சாலையில் நிறைய இடங்களில் எரிந்துபோன கடைகள், கார்கள், ஆட்டோக்கள் தென்பட்டன.

விஜய் டிரைவ் செய்து கொண்டிருந்தான். ஹேமா பக்கத்தில் அமர்ந்திருந்தாள்.

''கை காயம் ஆறிய பிறகு கடிதம் எழுதுவீர்களா?'' ஹேமா கேட்டாள்.

அவன் பதில் எதுவும் சொல்லவில்லை.

''ராதிகாவும், பிரசாத்தும் என்னை மறுபடியும் வீட்டுக்கு வரச் சொல்லி அத்தனை தடவை சொன்னார்கள். நீங்க பேச்சுவாக்கில்கூட என்னை உங்க ஊருக்கு வரச் சொல்லி ஒருதடவைகூடச் சொல்லவில்லையே?''

அவன் மௌனமாய் இருந்தான்.

''வைசாக் வந்தால் எங்க வீட்டுக்குக் கட்டாயம் வாங்க. எங்க அம்மா உங்களைப் பார்த்தால் ரொம்பச் சந்தோஷப்படுவாள்.''

அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை.

அவன் மௌனமாய் இருப்பதைக் கவனித்த ஹேமா தலையைத் திருப்பி அவன் பக்கம் பார்த்தாள். ஆரோக்கிய மாய் பக்கவாட்டில் தென்பட்ட அவன் முகம் ரொம்ப அழகாய் எதிராளியைக் கவர்ந்திழுப்பதுபோல் தென் பட்டது. அவன் முகத்தில் அழகைவிட தனித்தன்மை கொடுத்த கம்பீரம் அதிகமாய் இருந்தது. பொய்யாகக் கோபத்தை வரவழைத்துக் கொண்டு ஏதோ சொல்ல நினைத்த ஹேமா எதுவும் சொல்ல முடியாமல் நின்று விட்டாள். அவனைப் பார்க்கும்போது நட்புணர்வு ஏதோ தோன்றியது. அவனுடன் ஏதாவது பேச வேண்டும் என்பதைவிட அவன் பேசினால் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது.

''நீங்க அழைத்தாலும் அழைக்கா விட்டாலும் நான் உங்கள் வீட்டுக்கு வரப் போகிறேன்'' என்றாள்.

அவன் இதழ்கள் இறுக்கமாய் இருந்தன.

''எதுக்காக என்று தெரியுமா?''

தெரியாது என்பதுபோல் தலையை அசைத்தான்.

''ராதிகாவும், பிரசாத்தும் உங்க ஆனந்த் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆனந்த் எப்படி



இருப்பான் என்று பார்க்கனும். எனக்கு ரொம்ப துடிப்பாய் இருக்கிறது.'' ஹேமா சொன்னாள்.

விஜய் முகம் பிரசன்னமாய் இருந்தது.

''நான் வந்து ஆனந்திடம் என்ன சொல்லப்போகிறேன் தெரியுமா?''

அவன் புன்முறுவலுடன் சாலையைப் பார்த்துக் கொண்டே டிரைவ் செய்து கொண்டிருந்தான்.

''என்ன செய்யப் போகிறேன் என்று சொல்லட்டுமா?'' இரட்டிப்பதுபோல் கேட்டாள் ஹேமா.

அவன் கேட்க தயாராக இருப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான். மலக்பேட் நெருங்கிக் கொண்டிருந்தது. வீடு அருகில் வரப்போகிறது.

''இந்தப் பக்கம் பாருங்கோ...'' ஹேமா சொன்னாள் விஜய் திரும்பவில்லை.

''இந்தப் பக்கம் திரும்பி என்னைப் பாருங்க.'' ஹேமா பிடிவாதம் பிடிப்பதுபோல் சொன்னாள்.

விஜய் தலையைத் திருப்பி ஹேமா பக்கம் பார்த்தான். ஹேமா தன்னுடைய பிடிவாதம் ஜெயித்ததற்குப் புன்முறு வலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் வெற்றியின் பெருமிதத்தில் மின்னிக் கொண்டிருந்தன.

அந்த நிமிடம் அவள் முகம் ரொம்ப மனோகரமாய் இருந்தது. விஜயினால் அவள் முகத்திலிருந்து பார்வையை விலக்கிக் கொள்ள முடியவில்லை.

ஹேமாவும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பார்வையின் அணைப்பில் அவன் இதயம் சிறைப்பட்டு விட்டது போல் இருந்தது.

ஒரு நிமிடம் ஹேமாவும் பேசவில்லை. பிறகு சுட்டு விரலை உயர்த்தி எச்சரிப்பதுபோல் ''ஆனந்திடம் நான் என்ன சொல்லப் போகிறேன் தெரியுமா?'' என்றாள்

சுய உணர்வு அற்றவனைப் போல் விஜய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''விஜய் என்றால் உன் ஒருவனுக்குத்தான் பிடிக்கும் என்று இல்லை. உன்னைவிட அதிகமாய் அவனை விரும்புகிறவர்கள் உனக்குப் போட்டியாக இருக்கிறார்கள் என்று சொல்வேன்...'' ஹேமா சொல்லிக் கொண்டிருந்தாள்.

சைக்கிள் ஒன்று குறுக்கே வந்ததில் சட்டென்று ப்ரேக்கைப் போட்டான். கார் குலுக்கலுடன் நின்றது. சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்த ஹேமா விஜயின் தோளில் இடித்துக் கொண்டாள்.

''ஐ...யாம்... சாரி'' விஜய் சொன்னான்.

''சாரி'' எதிர்பாராமல் அவன்மீது இடித்ததற்கு ஹேமாவும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். விஜயின் தோளில் இடித்ததில் ஹேமாவின் பல்அழுத்தி கீழ்உதட்டில் காயம் ஏற்பட்டது.

''இரத்தம் வருகிறது'' விஜய் சட்டைப்பையிலிருந்து கைக்குட்டையை எடுத்துக் கொடுத்தான்.

ஹேமா சரியாக உட்கார்ந்து கொண்டே, கைக்குட்டையால் உதட்டின் மீது ஒற்றிக்கொண்டாள். வீடு வந்து விட்டது. கார் வீட்டின் முன் நின்ற பிறகும் ஹேமா இறங்கவில்லை. இருவரும் ஒரு நிமிடம் மௌனமாய் இருந்தார்கள்.

''எனக்குத் தெரியும் நீங்க என்ன நினைக்கிறீங்க என்று. நான் கொஞ்சம் அதிகமாய் பேசி விட்டேன் இல்லையா?'' என்றாள் ஹேமா.

அவன் மறுக்கவும் இல்லை. ஏற்கவும் இல்லை. அவன் மௌனமே பதில் தருவதுபோல் இருந்தது. அவன் முகத்தில் ஆழமான கம்பீரத்தைத் தவிர வேறு எந்த உணர்ச்சியும் இருக்கவில்லை.



''உள்ளே வாங்க'' என்றாள்.

அவன் அசையவில்லை.

''உள்ளே வாங்க. நான் எங்கே இருந்தேனோ, யாருடன் இருந்தேனோ சித்திக்குத் தெரிந்தால் அவள் மனதுக்கு நிம்மதியாக இருக்கும்.''

அவன் இறங்கி அவளைப் பின் தொடர்ந்து உள்ளே வந்தான்.

காலிங்பெல் சத்தம் கேட்டு கதவைத் திறந்த அம்மாள் ஹேமாவைப் பார்த்தது வியப்பும், மகிழ்ச்சியும் ஒன்றாக சேர இரண்டு கைகளையும் நீட்டி அவளை அணைத்துக் கொண்டாள். ''ஹேமா! நீ எங்கே இருக்கிறாயோ, எப்படி இருக்கிறாயோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். உன் அம்மா போன் செய்தாள். போனில் அவளால் சரியாகப் பேசக்கூட முடியவில்லை. ஒரே அழுகை...''

''நான் நன்றாகத்தான் இருக்கிறேன் சித்தி... பாதுகாப்பாய்தான் இருந்தேன். இவர்தான் விஜய். என்னைக் காப்பாற்றியவர்...'' என்று விஜயுடன் ராதிகா வீட்டுக்குப் போன விவரங்களைச் சொன்னாள். ஹேமாவின் சித்தி விஜய்க்குப் பலமுறை நன்றியைத் தெரிவித்து விட்டாள். வேண்டாமென்று மறுத்தபோதும் காபி கலந்து எடுத்து வந்தாள். சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டுமென்று வற்புறுத்தினாள்.

விஜய் சற்று நேரம் கழித்துக் கிளம்பினான். ஹேமா அவனை வழி அனுப்புவதற்காக வாசல்வரை வந்தாள். இரவாகி விட்டிருந்தது.

''மறுபடியும் நாம் சந்தித்துக் கொள்கிறோமா?'' ஹேமா கேட்டாள்.

போகப்போன விஜய் நின்றான். ஒரு நிமிடம் கழித்துத் திரும்பினான்.

ஹேமா அவன் வாயிலிருந்து வரப்போகும் பதிலுக்காக ஆர்வத்துடன் காத்திருந்தாள்.

அவன் ஹேமாவின் முகத்தை ஆழமாய் பார்த்துக் கொண்டே "ஊஹூம். நாம் மறுபடியும் சந்தித்துக் கொள்ளப் போவதில்லை." தயக்கமில்லாமல் சொல்லி விட்டு மளமளவென்று காரை நோக்கி நடந்து போனான். காரை ஸ்டார்ட் செய்துவிட்டுக் கிளம்பும் முன் தன்னையும் அறியாமல் திரும்பிப் பார்த்தான். ஹால் ட்யூப் லைட்டின் வெளிச்சம் வராண்டாவில் விழுந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் ஹேமா கற்சிலையைப் போல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் தென்பட்ட உணர்ச்சிகள் அவனுக்குப் புரிந்தன. இன்னதென்று புரியாத வேதனையைத் தாங்கிக் கொள்ள முயற்சி செய்வதுபோல் அவன் தாடை எலும்பு முறுக்கேறியது. மென்மையான கரம் ஒன்று நட்புடன் முன்னால் நீண்டு அவன் கையைப் பற்றிக் கொள்ள துடித்துக் கொண்டிருந்தது. அந்தக் கையைப் பற்றிக் கொள்ளும் நிலையில் அவன் இருக்கவில்லை. வாழ்க்கையில் அவனுக்கு அந்த சுதந்திரம் இல்லை. அதான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு அந்த நட்பை அலட்சியப்படுத்துவது போல் நடந்து கொண்டான். இதுநாள் வரை அவன் தான் எடுத்த முடிவுகளை நினைத்து வேதனைப்பட்டது இல்லை. முதல் முறையாக அவன் மனம் கடிவாளம் அறுந்த குதிரையைப்போல் தடுமாறிக் கொண்டிருந்தது. ஹேமாவுடன் அவனுடைய அறிமுகம் ரொம்ப குறைவு. ஆனால் அவளுடன் இருந்த ஒவ்வொரு நிமிடமும் அவனுக்கு விலை மதிக்க முடியாத பொக்கிஷம் போல் தோன்றியது. அந்த நினைவுகளைத் தன் இதயத்தில் பத்திரமாகப் பூட்டிப் பாதுகாக்க முயற்சித்துக் கொண்டிருந்தான். தன்னுடைய வாழ்க்கையில் எந்த ஒரு பெண்ணுக்கும் இடமிருக்க முடியாது. இந்த விஷயம் அவனுக்கு முன்னாடியே புரிந்து விட்டது. அவனுக்குப் பதினெட்டு வயது இருக்கும் போது கோவில் குருக்களின் மகள் சுமா அவனை விருப்பப்



பட்டாள். ஆனந்த் விஷயத்தில் அவள் சண்டை
போதே அவன் இந்த முடிவுக்கு வந்து விட்டான்
துக்கும் தனக்கும் இருக்கும் நட்பு யாருக்கும் பு
எல்லோரும் ஆனந்துக்காக தான் வாழ்க்கையைத்
வார்த்துக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொள்கிறா
தாய் இறந்த பிறகு தனியனாகி விட்ட தன்னை மறுப
உயிர்ப்பிக்கச் செய்தது ஆனந்தின் நட்புதான். சே
விட்ட தன் மனதுக்கு ஆறுதலாக இருந்தது ஆன
களங்கமற்ற நட்புதான். இது யாருக்கும் புரியாது.

ஆனந்தை நன்றாகப் பார்த்துக்கொள்ள வே
என்று சின்ன வயது முதல் விஜயிடம் சொல்லி
தீட்சிதர் இன்று ஆனந்தை விட்டுத் தொலைவாகப்
விடவேண்டும் என்று மறைமுகமாகச் சொல்லி வரு
ஆனந்துக்கு நல்லது நடக்கும் என்றால் அவனை
தொலைவாகப் போவதற்கு விஜய் தயாராகத்தான்
தான். அது அவனுக்கு வேதனை தந்தாலும் ஆனந்
அதைப் பொறுத்துக் கொள்ளவும் தயாராக இரு
ஆனால் விஜயின் பிரிவைத் தாங்கிக் கொள்ளும் நி
ஆனந்த் இல்லை. அதிலும் ஆனந்தின் உடல்
கொஞ்சம் சுமார்தான். சின்ன வேதனை வந்தாலு
அறுந்த மரம்போல் அப்படியே சாய்ந்து
உயிருக்கும் ஆபத்து ஏற்படும் நிலை சில சமயம்
கிறது. தான் அந்த வீட்டில் தங்கியிருப்பதில் தீட்
கொஞ்சம்கூட விருப்பம் இல்லையென்று
நன்றாகவே தெரியும். ஆனால் ஆனந்துக்குத்
விஷயம் புரியவில்லை. புரியும் விதமாகச் சொல்
என்றாலோ அடுத்த நிமிடம் ஆனந்த்
கொல்லவும் தயங்க மாட்டான். விஜயின் தா
மறுபடியும் முறுக்கேறியது. சத்தியின் முனைய
கொண்டிருப்பவன் ஒரு பெண்ணை தன்னு
கையில் எப்படி வரவேற்க முடியும்? இந்தக் க
யைப் புரிந்து கொண்டதால்தான் விஜய்

கமும் இல்லாமல் மறுபடியும் சந்திக்கப் போவ
ன்று சொல்லிவிட்டான்.

## 7

ன்று நாட்களுக்குப் பிறகு நகர வாழ்க்கை பழைய
நத் திரும்பியது. பிரசாத் வற்புறுத்தியதால் விஜய்
விட்டான். மாம்பழ ஏற்றுமதி காண்ட்ராக்டும்
ய் முடிந்தது.

ராம்ப நல்ல டீல். இதுமட்டும் நீடித்தால் இன்னும்
வருடங்களில் நீ வியாபாரத்தை மேலும்
குக் கொண்டு வர முடியுமா'' என்றான் பிரசாத்.
வு வேளை. எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டுக்
ருந்தார்கள்.

னுடைய சித்தியின் மகள் உமா பி. இ. முடித்து
. விஜய்க்கு அவளைப் பார்க்கலாம் என்ற
எனக்கு...'' ராதிகா சொன்னாள்.

ப்! நீ என்ன சொல்கிறாய்? வெறும் நட்புடன்
ம் பந்தத்தை உறவாக மாற்றிக் கொள்ள
என்று நானும் ராதிகாவும் விரும்புகிறோம்.
சித்தப்பாவுக்கு செராமிக் டைல்ஸின் ஃபாக்டரி
மகன் வெளி நாட்டில் இருக்கிறான். இந்தியா
ட்டான். உமா பெயரிலேயே நிறைய சொத்து
சொந்தமாக வியாபாரம் செய்ய வேண்டும்
வர் நிச்சயமாகக் கை கொடுப்பார்.''

. உமா ரொம்ப அழகாகவும் இருப்பாள்.
றது. முக்கியமாக உங்க இருவருக்கும் ஜோடி
ன்றாக இருக்கும். ஒரு தடவை உமாவைப்
வரலாம்...'' ராதிகா உற்சாகத்துடன்



''நான் திருமணம் செய்துகொள்ளப் போவதி
விஜய் சொன்னான்.

''நிஜமாகவா... ஏன்?'' ராதிகா கேட்டாள்.

''நான் அப்படி முடிவு செய்திருக்கிறேன்...''
சொன்னான்.

''அதாவது... இப்போதைக்குத் திருமணம்
பேச்சு எடுக்க வேண்டாம் என்று முடிவு செ
கிறாயா?'' பிரசாத் கேட்டான்.

''ஊஹூம்... திருமணமே செய்து கொள்ளப்
வதில்லை.'' நிதானமாகச் சாப்பிட்டுக் கொ
உணர்ச்சியற்ற முகத்துடன் சொன்னான் விஜய்.

''எதனால்?'' ராதிகா கேட்டாள்.

''நான் சொல்கிறேன் ராதிகா... விஜய் தி
செய்து கொள்ள மாட்டான். முதலில் ஆனந்
திருமணம் நடக்கவேண்டும். ஆனந்த் மனைவி மக்
சந்தோஷமாக இருப்பதைப் பார்த்த பிறகு விஜய் தி
பற்றி யோசிப்பானோ என்னவோ என்ன... விஜய்
சொன்னது சரிதானே... அப்பொழுதுகூட விஜய் தி
பற்றி யோசிக்க மாட்டாதவனாக இருக்கும். ஏன்
ஆனந்தின் குடும்பம் பெரிதாக ஆக விஜயின்
களும் அதிகரிக்கும். அப்பொ நம்மைப் போன்
களைகூட விஜய் பொருட்படுத்த மாட்டான்.''

திடீரென்று உரையாடல் சீரியஸாக மா
பிரசாத் முகத்தில் வேதனை வெளிப்படையாக

''விஜய்... சில சமயம் நான் முட்டா
யோசிக்கிறேன். உன் சுபாவம் தெரிந்த பிறகு
யில்லாத அறிவுரைகளை வழங்க முற்படுவேன்
யில் ஆனந்த் உனக்காக எதையாவது விட்டு
திருக்கிறானா? நீயாக இருந்தால் அவனுக்காக
துறக்க தயாராக இருக்கிறாய். எங்களைப்
நண்பர்களையும் விலக்கி வைத்து விடுகிறா

சால்லு. சுரேஷ் ஆனந்தை விமரிசிப்பது போல்
ன் என்றுதானே அவனுடைய நட்புக்கு முற்றுப்
வைத்து விட்டாய். நான் உன்னுடைய நண்பன்
எங்கள் எல்லோரையும் போல் நீ சுகமாக,
டிமாக வாழ வேண்டும் என்று விரும்புகிறேன்.
க இந்த பலவீனம்? ஆனந்திடம் உனக்கு இவ்வளவு
மண்ட் என்?''

ஜய் சாப்பிட்டு முடித்து விட்டான். நாப்கின்னால்
ளை ஒற்றிக் கொண்டான். அவன் முகம் சீரியஸாக
து. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

திகா நிலைமையை உணர்ந்து கொண்டாள்.
க் கொள்ளுங்கள் என்பது போல் கணவரின் கைமீது
கத் தட்டினாள்.

ஜய்... நாங்கள் சொல்வது உன்னுடைய நலனை
தான். வேறு விதமாக நினைத்துக் கொள்
'' ராதிகா சொன்னாள்.

க்குத் தெரியும்...'' விஜய் நாற்காலியிலிருந்து
காண்டே சொன்னான்.

ஹட் தட் ஃபெலோ ஆனந்த். அவன் போனால்
க்கு விடிவு காலம் வராது.'' பிரசாத் சொன்

போன விஜய் சரேலென்று திரும்பினான்.
களில் கோபம் கணகணவென்று அக்னியைப்
லித்துக்கொண்டிருந்தது. விஜய் பிரசாதைக்
அடித்து விடப்போகிறான் என்று ராதிகா
டாள். சட்டென்று எழுந்து வந்து விஜயின்
றிக் கொண்டாள்.

விஜய்! ரியல்லி வெரி சாரி. பிரசாத் பற்றி
தரியாதா. முன்பின் யோசிக்காமல் மனதில்
ளியில் சொல்லி விடுவார்'' என்று மன்னிப்புக்



கேட்டுக் கொண்டாள். கணவன் பக்கம் திரும்பி, ''என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறீர்களா? ஒரு நண்பனுக்கு விருப்பமான நபரைப் பற்றிப் இப்படித்தான் பேசுவார்களா? உங்களுக்கு ஆனந்த் என்றால் பொறாமை! விஜய் ஆனந்திடம் பழகும் அளவுக்கு நெருக்கமாக, நட்புடன் உங்களுடன் பழகவில்லை என்று போட்டி மனப்பான்மை!''

''ஷட்டப்!'' பிரசாத் கத்திக் கொண்டே எழுந்தான். எனக்கு...எனக்குப் பொறாமையா?'' மனைவியின் அருகில் வந்தான். ''நண்பர்கள் என்றால் நல்லது கெட்டது எதுவாக இருந்தாலும் வெளிப்படையாகச் சொல்லும் துணிச்சல் இருக்க வேண்டும். அது நம்முடைய கடமை. விஜய் என்ன நினைத்துக் கொண்டால் எனக்கு என்ன? இத்தனை வருடங்களாய் அவனுடன் பழகியிருக்கிறோம். ஒருநாளாவது அவன் சந்தோஷமாய் தனக்காக வாழ்ந்திருக்கிறானா? ஆனந்துக்காக எத்தனை விஷயங்களை ஒதுக்கியிருக்கிறான் தெரியுமா? ஆனந்துடன் அவனுடைய நட்பு ஆழமானதாகவே இருக்கட்டும். ஆனந்த் அவனுடைய உயிருக்கும் மேலானவனாகவே இருக்கலாம். ஆனால் அதற்கும் ஒரு எல்லை இருக்கிறது. தன்னுடைய வாழ்க்கையைப் பணயமாக்க வேண்டிய அவசியம்தான் என்ன? அந்த நிலம், ஃபாக்டரிக்கள் அவற்றுக்காக அவ்வளவு கஷ்டப்பட்டு உழைப்பானேன்?''

விஜய் ஆவேசமாய் மூச்சு விட்டுக்கொண்டிருந்தான். வீட்டை விட்டு வெளியேறப் போனான். ராதிகா அவன் கையைப் பலமாகப் பற்றிக் கொண்டாள்.

அதற்குள் குழந்தை தூக்கத்திலிருந்து எழுந்து அழத் தொடங்கினாள். பிரசாத் போய் குழந்தையைத் தூக்கிக் கொண்டான். குழந்தை பிறந்தபோது விஜய் செய்த உதவி நினைவுக்கு வந்ததும் பிரசாதின் ஆவேசம் குறைந்தது. ராதிகா குழந்தை மீது சத்தியம் செய்து விஜயைப் போகாமல் தடுத்து விட்டாள்.

விஜய் நாற்காலியில் சிலையாய் உட்கார்ந்திருந்தான்.

பிரசாத் குழந்தையைத் தூக்கிக் கொண்டு விஜய் அருகில் வந்தான். அவன் முகத்தில் பச்சாத்தாபம் தெரிந்தது. ''சாரி விஜய். ஆவேசம் வந்தால் என்னால் வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது என்று உனக்குத் தெரியும். நீ என்னுடைய நண்பன். நீ நன்றாக வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். அதைவிட எனக்கு வேறு எண்ணம் எதுவும் இல்லை.''

விஜய் பேசவில்லை.

''உனக்கு எடுத்துச் சொல்லும் அதிகாரம் எனக்கு இருக்கு என்று நினைத்ததால் அப்படி பேசினேன்.''

''ஆனந்த் விஷயத்தில் விமரிசனம் செய்யும் அதிகாரம் யாருக்கும் இல்லை...'' என்றான் விஜய்.

கத்தியைப் போல் கூர்மையாக இருந்த அந்தப் பதில் பிரசாதின் மனதைக் காயப்படுத்தி விட்டதென்று அவன் முகமே பாறைச்சாற்றியது.

''ஓ. கே... ஓ. கே. இனி ஒரு நாளும் இந்தப் பேச்சை எடுக்க மாட்டேன். சரிதானா...'' பிரசாத் சொன்னான்.

அதற்குள் போன் மணி ஒலித்தது. ராதிகா போனை எடுத்தாள். உடனே கணவரை அழைத்து, ''காவல் நிலையத்திலிருந்து பிரதீப். உங்களிடம் பேச வேண்டுமாம்'' என்றாள்.

பிரசாத் ரிசீவரை எடுத்துக் கொண்டான். மறுமுனையிலிருந்து சொல்லப்பட்ட செய்தியைக் கேட்டதும் அவன் முகம் மலர்ந்தது.

''நிஜமாகவா... ரொம்ப சந்தோஷம் பிரதீப்... நாங்கள் இப்பொழுதே கிளம்பி வருகிறோம். ஆமாம்... அந்தப் பெண்ணின் பெயர் ஹேமா. டாக்டராக இருக்கிறாள். அவளுடைய மெடிகல் சான்றிதழ்கள், சில நகைகள், விலை உயர்ந்த புடவைகள் அந்தப் பெட்டியில் இருந்தன,



உடனே வருகிறோம். நீ அங்கேதான் இருப்பாய் இல்லையா...'' ரிசீவரை வைத்துவிட்டு விஜய் பக்கம் திரும்பினான். ''விஜய்... உன்னுடைய ப்ரீஃப்கேஸும், ஹேமாவின் சூட்கேஸும் கிடைத்து விட்டதாம். பிரதீப்பிடம் சொல்லியிருந்தேன். நீ நினைத்தது உண்மையாகி விட்டது. டாக்ஸிக்காரன்தான் அவற்றை எடுத்திருக்கிறான். இரண்டடிகளைக் கொடுத்ததும் உண்மையைச் சொல்லி விட்டான். காவல் நிலையத்திற்கு வந்து பொருட்களை அடையாளம் சொல்லி எடுத்துப் போகச் சொல்கிறான்.''

''அப்பாடா... காணாமல் போன பொருட்கள் திரும்ப கிடைத்தது விசேஷம்தான்...'' ராதிகா மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

''பிரதீப் இந்தக் கேஸில் கவனம் எடுத்துக் கொண்டதால், இவ்வளவு சீக்கிரமாய் விவகாரம் முடிந்தது. வா விஜய்... போகலாம்'' என்றான் பிரசாத். கிளம்பப் போனவன் நின்று, ''ஹேமாவுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டுமே ஊரில் இருக்கிறாளோ...போய் விட்டாளோ...'' என்றான்.

''ஊரில்தான் இருக்கிறாள்...'' ராதிகா சொன்னாள்.

''அப்பொ... போன் செய்து விடு.''

ராதிகா போன் செய்தபோது ஹேமாவின் சித்தி எடுத்தாள். ''ஹேமா ஏதோ வேலையாய் வெளியில் போயிருக்கிறாள். அரை மணியில் திரும்புவாள். அவள் வந்ததும் உனக்குப் போன் செய்யச் சொல்கிறேன்'' என்று சொன்னாள் அந்த அம்மாள்.

விஜய், பிரசாத் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். மறுபடியும் போன் வந்தது. ராதிகா போனை எடுத்து கணவரை அழைத்து ''உங்களுக்குத்தான். சக்கரவர்த்தி கூப்பிடுகிறார்'' என்றாள்.

பிரசாத் போன் எடுத்துப் பேசினான். ரிசீவரை வைத்து விட்டு ''விஜய்! சக்கரவர்த்தியுடன் அர்ஜெண்டாக

ஏர்போர்ட் போக வேண்டும். காவல் நிலையத்திற்கு உன்னுடன் வர முடியாது. போகும்போது என்னை சுதர்சனம் வீட்டில் இறக்கி விடு'' என்றான்.

## 8

விஜய் காவல் நிலையத்திற்குச் சென்றபோது பிரதீப் இருந்தான். ப்ரீஃப்கேஸில் இருந்த தஸ்தாவேஜுகள், பணம் பற்றிய விவரங்களை விஜய் சொன்னான். தஸ்தாவேஜுகள் எல்லாம் சரியாக இருந்தன. பணம் மட்டும் ஆயிரம் ரூபாய் குறைந்திருந்தது. டாக்ஸிக்காரன் ஹேமாவின் நகைகளை நான்காயிரத்திற்கு அடகு வைத்திருந்தான். நகைகளை மீட்க பிரதீப், விஜய் டாக்ஸிக்காரனையும் அழைத்துச் சென்றார்கள். விஜய் மார்வாடியிடம் பணத்தைக் கொடுத்து விட்டு நகைகளை மீட்டான்.

''சர்ட்டிஃபிகேட்களைப் பார்த்துக்கொள். எல்லாம் சரியாக இருக்கு இல்லையா?'' பிரதீப் கேட்டான்.

ஹேமா ஜெனரல் ஃபிஜிஷியன். எல்லாம் மருத்துவ படிப்புக்குச் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள். இரண்டு மூன்று ஆஸ்பத்திரிகளில் வேலை பார்த்ததற்கான சர்டிஃபிகேட்கள்.

இருவரும் காவல் நிலையத்திற்குத் திரும்பி வந்தார்கள். விஜய் தன்னுடைய பொருட்களைப் பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சியாகக் கையெழுத்திட்டான். விஜய்க்காகச் சாட்சி கையெழுத்துப் போட்டவர்களையே ஹேமாவுக்குச் சம்பந்தப்பட்ட பேப்பர்களிலேயும் கையெழுத்துப் போடச் செய்தான்.

''அந்தப் பெண்ணும் சில பேப்பர்களில் கையெழுத்துப் போட வேண்டியிருக்கும்...'' பிரதீப் சொன்னான்.



''ராதிகா போன் செய்து தகவலைத் தெரிவித்து விட்டாள். கட்டாயம் அவள் வருவாள்...'' விஜய் சொல்லிக் கொண்டிருந்த போதே...

''எக்ஸ்க்யூஸ்மீ'' வாசலில் குரல் கேட்டது. பிரதீப் தலையை உயர்த்திப் பார்த்தான்.

''மிஸ்டர் பிரதீப் என்பது...''

அந்தக் குரலைக் கேட்டதும் விஜய் திரும்பிப் பார்த்தான். ஹேமாவும் விஜயைப் பார்த்தாள். ஆனால் அடுத்த நிமிடம் அறிமுகமில்லாதவனைப் பார்த்ததுபோல் பார்த்து விட்டுப் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

''ராதிகா போன் செய்து சொன்னாள். என்னுடைய சூட்கேஸ் கிடைத்து விட்டது என்று பிரசாத் சொன்னாராம். என் பெயர் ஹேமா...'' வாசலிலேயே நின்று கொண்டு சொன்னாள்.

''வாங்க... வாங்க. விஜயும் நானும் இப்பொழுதுதான் உங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.'' பிரதீப் சொன்னான்.

பிரதீப் ஹேமாவை உட்காரச் சொல்லி விட்டு சூட்கேஸில் இருந்த பொருட்களின் விவரங்களைக் கேட்டான். ஹேமா சொன்னாள்.

''எல்லாப் பொருட்களும் சரியாக இருக்கு. உங்கபட்டுப் புடவைகள் மட்டும் காணும். நகைகளை அடகு வைத்திருந்தான். விஜய் பணம் கொடுத்து உங்கள் நகைகளை மீட்டு விட்டான். விஜய்க்கு நீங்க நான்காயிரம் தர வேண்டியிருக்கும். நாற்பதாயிரம் நஷ்டமாக வேண்டிய இடத்தில் நான்காயிரம் மட்டும்தான் போச்சு என்று திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்'' என்றான் பிரதீப்.

ஹேமா சர்டிஃபிகேட்களைச் சரி பார்த்து விட்டு அவற்றை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

''ஓ காட்! இவைதான் எனக்கு முக்கியம்'' என்றாள். ''சர்டிஃபிகேட்கள் தொலைந்து போனால் டூப்ளிகேட் வாங்கிக் கொள்ளலாம்தான். இருந்தாலும் ஒரிஜினல் சர்டிஃபிகேட்ஸ் தொலைந்து போனால் மனதிற்குக் கஷ்டமாக இருக்கும் இல்லையா... செண்டிமெண்ட்!'' என்றாள்.

புரிந்து கொண்டது போல் பிரதீப் புன்முறுவல் செய் தான். கால் மணி நேரம் கழித்து ஹேமா பிரதீப்க்கு நன்றியைத் தெரிவித்து விட்டு எழுந்து கொண்டாள்.

''பிரசாத் ரிப்போர்ட் கொடுத்து நீங்களும் முயற்சி செய்ததில் கையை விட்டுப் போன பொருள் மறுபடியும் கிடைத்து விட்டது. தாங்க் காட்...'' என்றாள்.

போகப் போனவள் ஒரு நிமிடம் நின்றாள். கழுத்தில் இருந்த செயினை எடுத்து விஜய்க்கு எதிரே மேஜை மீது வைத்தாள்.

''தற்பொழுது என்னிடம் பணம் அவ்வளவு இல்லை. உங்கள் பணத்தைக் கொடுத்து விட்டு, பிறகு இதை எடுத்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டு வேகமாய் அந்த இடத்தை விட்டுப் போய் விட்டாள்.

ஹேமா காவல் நிலையத்தில் இருந்த அரைமணி நேரமும் விஜய் பக்கம் பார்க்கவில்லை. ஒரு வார்த்தைகூட பேசவில்லை. விஜயும் அவள் பக்கம் பார்க்கவில்லை. பத்து நிமிடங்கள் கழித்து விஜய் பிரதீபிடம் விடைபெற்றுக் கொண்டு ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

அவன் காரில் வரும்போது சற்று தூரத்தில் சாலை யோரத்தில் ஹேமா சூட்கேஸைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள். ஆட்டோவுக்காகக் கையை நீட்டினாள். ஆட்டோ ஒன்று அவள் அருகில் வந்து நின்றது. தான் போக வேண்டிய இடத்தைச் சொல்லி



யிருக்க வேண்டும். ஆட்டோக்காரன் மறுத்துவிட்டுப் போய் விட்டான். ஹேமா ஆட்டோவுக்காகப் பார்த்துக் கொண் டிருந்தாள்.

விஜய் காரின் வேகத்தைக் குறைத்தான். புருவங்களை உயர்த்தி ஒரு நிமிடம் யோசித்தான். பிறகு மெதுவாகக் காரை ஹேமாவின் அருகில் கொண்டு போய் நிறுத்தினான். ஹேமா அவனைப் பார்த்தாள். ஆனால் புன்னகை செய்ய வில்லை. பேசவும் இல்லை. புதியவனைப் பார்ப்பதுபோல் அலட்சியமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு ஆட்டோ வுக்காகப் பார்க்கத் தொடங்கினாள்.

விஜய் கார் கதவைத் திறந்து ''வாங்க... ட்ராப் செய் கிறேன்...'' என்றான்.

''நோ... தாங்க்ஸ்...'' அவன் பக்கம் பார்க்காமலேயே சொன்னாள்.

32295
4931394

விஜய் ஹேமாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவள் முகத்தில் கோபத்தைவிட வேதனைதான் அதிகமாக இருந்தது. விஜய் இறங்கி வந்து ஹேமா கீழே வைத்திருந்த சூட்கேஸை எடுத்துக் கொண்டான்.

''வேண்டாம்... எனக்கு விருப்பம் இல்லை'' என்றாள்.

''வாங்க...'' விஜய் சூட்கேஸை எடுத்துக் கொண்டு காரின் பின் சீட்டில் வைத்தான்.

''என்னால் போக முடியும்'' குரலை உயர்த்திச் சொன்னாள். அவன் தலையைத் திருப்பிப் பார்த்தான்.

''நான் வர மாட்டேன். சூட்கேஸை கொடுத்து விடுங்கள்.'' கச்சிதமாகச் சொல்வது போல் சொன்னாள்.

சற்று தொலைவில் இருந்த பஸ் ஸ்டாபில் நின்றிருந்த கல்லூரி மாணவர்கள் இந்த ரகளையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் விசில் அடித்தான்.

"ஓ காட்! இவைதான் எனக்கு முக்கியம்" என்றாள். "சர்டிஃபிகேட்கள் தொலைந்து போனால் டூப்ளிகேட் வாங்கிக் கொள்ளலாம்தான். இருந்தாலும் ஒரிஜினல் சர்டிஃபிகேட்ஸ் தொலைந்து போனால் மனதிற்குக் கஷ்டமாக இருக்கும் இல்லையா... செண்டிமெண்ட்!" என்றாள்.

புரிந்து கொண்டது போல் பிரதீப் புன்முறுவல் செய்தான். கால் மணி நேரம் கழித்து ஹேமா பிரதீப்க்கு நன்றியைத் தெரிவித்து விட்டு எழுந்து கொண்டாள்.

"பிரசாத் ரிப்போர்ட் கொடுத்து நீங்களும் முயற்சி செய்ததில் கையை விட்டுப் போன பொருள் மறுபடியும் கிடைத்து விட்டது. தாங்க் காட்..." என்றாள்.

போகப் போனவள் ஒரு நிமிடம் நின்றாள். கழுத்தில் இருந்த செயினை எடுத்து விஜய்க்கு எதிரே மேஜை மீது வைத்தாள்.

"தற்பொழுது என்னிடம் பணம் அவ்வளவு இல்லை. உங்கள் பணத்தைக் கொடுத்து விட்டு, பிறகு இதை எடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லி விட்டு வேகமாய் அந்த இடத்தை விட்டுப் போய் விட்டாள்.

ஹேமா காவல் நிலையத்தில் இருந்த அரைமணி நேரமும் விஜய் பக்கம் பார்க்கவில்லை. ஒரு வார்த்தைகூட பேசவில்லை. விஜயும் அவள் பக்கம் பார்க்கவில்லை. பத்து நிமிடங்கள் கழித்து விஜய் பிரதீபிடம் விடைபெற்றுக் கொண்டு ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

அவன் காரில் வரும்போது சற்று தூரத்தில் சாலையோரத்தில் ஹேமா சூட்கேஸைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள். ஆட்டோவுக்காகக் கையை நீட்டினாள். ஆட்டோ ஒன்று அவள் அருகில் வந்து நின்றது. தான் போக வேண்டிய இடத்தைச் சொல்லி



யிருக்க வேண்டும். ஆட்டோக்காரன் மறுத்துவிட்டுப் போய் விட்டான். ஹேமா ஆட்டோவுக்காகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜய் காரின் வேகத்தைக் குறைத்தான். புருவங்களை உயர்த்தி ஒரு நிமிடம் யோசித்தான். பிறகு மெதுவாகக் காரை ஹேமாவின் அருகில் கொண்டு போய் நிறுத்தினான். ஹேமா அவனைப் பார்த்தாள். ஆனால் புன்னகை செய்யவில்லை. பேசவும் இல்லை. புதியவனைப் பார்ப்பதுபோல் அலட்சியமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு ஆட்டோவுக்காகப் பார்க்கத் தொடங்கினாள்.

விஜய் கார் கதவைத் திறந்து "வாங்க... ட்ராப் செய்கிறேன்..." என்றான்.

"நோ... தாங்க்ஸ்..." அவன் பக்கம் பார்க்காமலேயே சொன்னாள்.

விஜய் ஹேமாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவள் முகத்தில் கோபத்தைவிட வேதனைதான் அதிகமாக இருந்தது. விஜய் இறங்கி வந்து ஹேமா கீழே வைத்திருந்த சூட்கேஸை எடுத்துக் கொண்டான்.

"வேண்டாம்... எனக்கு விருப்பம் இல்லை" என்றாள்.

"வாங்க..." விஜய் சூட்கேஸை எடுத்துக் கொண்டு காரின் பின் சீட்டில் வைத்தான்.

"என்னால் போக முடியும்" குரலை உயர்த்திச் சொன்னாள். அவன் தலையைத் திருப்பிப் பார்த்தான்.

"நான் வர மாட்டேன். சூட்கேஸை கொடுத்து விடுங்கள்." கச்சிதமாகச் சொல்வது போல் சொன்னாள்.

சற்று தொலைவில் இருந்த பஸ் ஸ்டாபில் நின்றிருந்த கல்லூரி மாணவர்கள் இந்த ரகளையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் விசில் அடித்தான்.

32295
4931394

விஜய் பொறுமையாக ஹேமாவுக்காகக் காத்திருந்தான்.

ஹேமா நடுரோட்டில் ரகளை செய்வதில் விருப்பமில்லாததுபோல் வலுக்கட்டாயமாய் வந்து காரில் ஏறிக் கொண்டாள்.

விஜய் சாலையையே கவனமாகப் பார்த்துக் கொண்டு காரைச் செலுத்திக் கொண்டிருந்தான். ஹேமா முகத்தைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''இப்படி வருவது எனக்கு பிடிக்கவில்லை. நாமிருவரும் எப்பொழுதும் சந்தித்துக் கொள்ளக்கூடாது'' என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

''யாராவது உங்கள் மீது அதிகாரம் செலுத்தினால் நீங்க சும்மா இருப்பீங்களா?'' என்று கேட்டாள்.

அவன் பேசவில்லை.

''நடுரோட்டில் சண்டை போடுவது உசிதமில்லை என்று வந்தேனே தவிர, உங்களுக்குப் பயந்து இல்லை'' என்றாள்.

அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை. ஹேமாவும் பேசவில்லை. அவனைவிட இரட்டிப்பு பிடிவாதமாய் தன்னால் இருக்க முடியும் என்பதுபோல் மௌனமாய் இருந்து விட்டாள். இருவரும் ஒரு வார்த்தைகூட பேசிக் கொள்ளவில்லை.

அருகருகில் அமர்ந்திருந்த அந்த இருவரும் வேதனையை, மகிழ்ச்சியை மௌனமாய் பகிர்ந்து கொள்வதுபோல் இருந்தார்கள். அந்த மௌனமே ஆயிரம் எண்ணங்களை வெளிப்படுத்துவது போல் தோன்றியது. வீடு நெருங்கிக் கொண்டிருந்தது. விஜய் சட்டைப்பையிலிருந்து செயினை எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டு ஹேமா பக்கம் பார்த்தான்.



''என்ன இது?'' புரியாதவள் போல் கேட்டாள்.

அவன் எதுவும் சொல்லவில்லை. ஆனால் நீட்டியிருந்த அவன் கை அந்த செயினை எடுத்துக் கொள்ளச் சொல்வது போல் இருந்தது.

''நான் எடுத்துக்கொள்ள மாட்டேன். பணத்தை மணியார்டர் செய்த பிறகு அனுப்புங்கள்'' என்றவள் பிறகு அந்த செயினுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதுபோல் முகத்தைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள். வீட்டின் முன் கார் நின்றதும் ஹேமா கதவைத் திறந்துகொண்டு இறங்கப் போனவள் நின்று ''தாங்க்யூ'' என்றாள்.

விஜய் ஹேமாவின் மடியிலிருந்த பேக்கை எடுத்து ஜிப்பை திறந்து செயினை உள்ளே போட்டு விட்டு ஜிப்பை மூடி, பழைய இடத்திலேயே வைத்து விட்டான். இறங்கும் மும்மரத்திலிருந்த ஹேமா புரிந்து கொள்வதற்குள் இது நடந்து முடிந்து விட்டது.

ஹேமா கண்களை உருட்டி விழித்தாள்.

''எனக்கு வேண்டாமென்று சொன்னேனே. இப்பொ என்னிடம் அவ்வளவு பணம் இல்லை.'' ஹேமா போக்கை கார் சீட் மீதே வைத்துவிட்டு இறங்கினாள். விஜய் அந்தப் பக்கமாய் இறங்கி ஹேமாவின் சூட்கேஸை எடுத்துக் கொண்டிருந்தான். அதற்குள் ஹேமாவின் சித்தப்பா வெளியிலிருந்து ஸ்கூட்டரில் வந்தார்.

''விஜய் என்பது நீங்கதானே... நமஸ்காரம் வாங்க... வாங்க. ஹேமாவின் சூட்கேஸ் கிடைத்துவிட்டதாமே... சற்றுமுன் என் மனைவி தகவல் தெரிவித்தாள். தொலைந்து போன பொருள் மறுபடியும் கிடைத்தது எங்களுடைய அதிர்ஷ்டம்தான். அதிலும் முக்கியமாக ஹேமாவின் சர்ஃடிபிகேட்ஸ், நகைகள். வாங்க... உள்ளே வாங்க'' என்று சொல்லிக் கொண்டே விஜய் கையிலிருந்து சூட்கேஸை எடுத்துக் கொண்டார்.

''அவருக்கு அவசரமான வேலை இருக்கிறதாம் சித்தப்பா... இன்னொரு தடவை எப்பொழுதாவது வருவார். இப்பொ உடனே போகனும்.''

''நீ சொல்வதும் சரிதான். விஜய் தம்பி! ஒரு நிமிடம். இத்தனை தூரம் வந்திருக்கிங்க. ஒரு கப் காபியாவது...''

''சித்தப்பா... நான்தான் சொன்னேனே... அவருக்கு அவசரமான வேலை இருக்குன்னு'' உரத்த குரலில் சொல்லி விட்டு ஹேமா உள்ளே போய் விட்டாள்.

''ரொம்ப நேரம் ஆகாது தம்பி'' வேண்டுகோள் விடுப்பதுபோல் பார்த்தார் அவர்.

''வாங்க... ஒரு நிமிடம் உள்ளே வந்து விட்டுப் போகி றேன்'' என்றான் விஜய்.

''ஹேமா காரில் பேக்கை மறந்து விட்டாள். இந்தாங்க'' என்று அவரிடம் பேக்கைக் கொடுத்தான்.

''ஹேமா! சீக்கிரமாய் காபி கலந்து எடுத்துக் கொண்டு வாம்மா'' உள்பக்கம் பார்த்துக் குரல் கொடுத்தார். பிறகு விஜய் பக்கம் திரும்பி ''உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ... எங்க ஹேமா ரொம்ப நன்றாகக் காபி கலப்பாள்'' பெருமை பொங்க சொன்னார்.

ஹேமா வரும் ஜாடை தெரியவில்லை.

''என்ன ஹேமா... ஆச்சா?'' சித்தப்பா உள் பக்கம் திரும்பிக் குரல் கொடுத்தார்.

''இல்லை சித்தப்பா...'' உள்ளே இருந்து பதில் வந்தது.

''சீக்கிரமாய் கலந்து கொண்டு வாம்மா. வேணும்னா நான் உள்ளே வந்து எடுத்துப் போகிறேன்.''

''நான் காபி கலக்கவே இல்லை சித்தப்பா... நேர மில்லைன்னு சொல்றவங்களை வலுக்கட்டாயமாய் உள்ளே



அழைப்பானேன்?'' கடிந்து கொள்வதுபோல் சொன்னாள் ஹேமா.

''நீ சொல்வதும் சரிதான்... இருந்தாலும் ஏதோ மரியாதைக்காவது... ஒரு நிமிஷம்...'' அவரே பிரிஜ்லிருந்து பழச்சாற்றைக் கலந்து டம்ளரில் எடுத்துக் கொண்டு போனார்.

''இதோ... உன் பேக்கைக் காரில் மறந்து விட்டா யாம்.'' சூட்கேஸில் இருந்த பொருட்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்த ஹேமாவிடம் வந்து கொடுத்து விட்டுப் போனார்.

ஹேமாவின் சித்தப்பா கலகலவென்று பேசும் சுபாவம் படைத்தவர். பத்து நிமிடங்கள் விடாமல் பேசிக் கொண் டிருந்தார். விஜய் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண் தான்.

நடுவில் ஹேமா ஒரு தடவை ஹாலுக்கு வந்தாள். ஏதோ சொல்லப் போனவள் நின்று விட்டாள். நேராக வாசல் வரை சென்றுவிட்டு மறுபடியும் வேகமாய் உள்ளே போய் விட்டாள்.

விஜய் எழுந்து கொண்டான். ஹேமா தன்னிடம் பேசக் கூட விரும்பவில்லை என்று அவனுக்குப் புரிந்தது.

வாசற்படியைத் தாண்டும்போது அவன் மனதில் வெறுமை ஏதோ பரவுவதுபோல் இருந்தது. ஒரு நிமிடம் உள்ளே போய் ஹேமா இருந்த அறையின் வாசல் வரை சென்று ''போய் வருகிறேன்'' என்று அவளிடமிருந்து விடைபெற்றுக் கொள்ள வேண்டுமென்று அவன் மனம் துடித்தது. ஆனால், ஏதோ ஒரு சக்தி அவனைத் தடுத்து நிறுத்தியது. வலுக்கட்டாயமாய் சக்தியைத் திரட்டிக் கொண்டு வெளியில் வந்து காரில் உட்கார்ந்து கொண் டான். காரை ரிவர்ஸ் செய்து திருப்பும்போது தன்னையும் அறியாமல் பார்த்தான். வராண்டா காலியாக இருந்தது. அவன் பெருமூச்சு விட்டான்.

ஹேமா இப்படி நடந்து கொண்டதில் அவனுக்குக் கோபம் வரவில்லை. ஹேமாவை மறக்க முடியாத தன்னுடைய இயலாமையை நினைக்கும்போது அவன் மீதே அவனுக்குக் கோபம் வந்தது......

'மறுபடியும் நாம் சந்தித்துக் கொள்ளப் போவதில்லை' என்று அவ்வளவு கச்சிதமாய் சொன்ன பிறகு அந்தப் பெண்ணை மறுபடியும் பார்க்க வேண்டும் என்று தோன்றியதற்கு...

காவல் நிலையத்தில் ஹேமாவைப் பார்த்ததும் தன் மனதில் ஆனந்த பைரவி ராகம் ஒலித்ததற்கு...

எல்லாவற்றையும்விட அந்த வார்த்தை சொன்னதன் மூலமாய் ஹேமாவின் மனதைக் காயப்படுத்தி விட்டோம் என்று தெரிந்தும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள முடியாமல் போனதற்கு... தன் மீதே கோபம் வந்தது.

விஜய் கீழ் உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டான். எதிரே சைக்கிள் ஒன்று குறுக்கே வந்ததால் சட்டென்று ப்ரேக் போட்டான். மறுபடியும் காரை ஸ்டார்ட் செய்யப் போனபோது டாஷ் போர்டில் சிக்கிக்கொண்டு வெள்ளை காகிதம் ஒன்று கண்ணில் பட்டது. அவன் புருவங்கள் உயர்ந்தன. ஒரு கையால் டிரைவ் செய்து கொண்டே மறுகையால் டாஷ்போர்ட்டைத் திறந்து பார்த்தான். மடித்து வைத்த காகிதத்தில் ஹேமாவின் செயின் பளபளத்துக் கொண்டிருந்தது. அவன் கண்கள் வியப்பால் விரிந்தன. மடங்கியிருந்த காகிதத்தைச் சரி செய்து படித்தான்.

''வாழ்க்கையில் எப்பொழுதும் சந்தித்துக் கொள்ள முடியாத நபரிடம் கடன் வைத்துக் கொள்வதில் எனக்கு விருப்பமில்லை.''

ஹேமாவின் கையெழுத்து அழகாய், முத்துக் கோர்த்ததுபோல் இருந்தது. அந்தக் கையெழுத்தில் அவள் மன உறுதி, தைரியம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.



அவன் மனதை சூழ்ந்திருந்த ஏமாற்றங்கள் சிதறிப்போகத் தொடங்கின. ஹேமாவை மறுபடியும் பார்க்க முடியும்! அந்த வாய்ப்பு முழுவதுமாக அற்றுப் போய் விடவில்லை. விஜய் செயினையும், கடிதத்தையும் பையில் வைத்துக் கொண்டான். சற்றுமுன் விரக்தியாகப் பற்று இல்லாதது போல் தென்பட்ட உலகம் இப்பொ வண்ணமயமாய், ஆர்வம் நிறைந்ததாய் தோன்றியது. காரைச் செலுத்திக் கொண்டே இடக் கையால் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். உள்ளங்கையில் பட்ட செயினின் ஸ்பரிசம் தான் செய்த தவறைச சரிசெய்து கொள்வதற்கு வாய்ப்பு தருவதுபோல் இருந்தது.

## ௯

நான்கு வாரங்கள் கழிந்தன. விஜய் ஹேமாவைப் பற்றி நினைக்கவில்லை. ஆனால் ராதிகா ஹேமாவைப் பற்றி கடிதங்களில் அடிக்கடி எழுதிக் கொண்டுதான் இருந்தாள். விஜயின் பெட்டியில் ஹேமாவின் செயின் அப்படியே இருந்தது. ஹேமா பணத்தை அனுப்பவும் இல்லை. விஜய் செயினைத் திருப்பித் தரவும் இல்லை. என்றாவது ஒருநாள் தானே சுயமாய் ஹேமாவிடம் கொடுக்க வேண்டும் என்று விஜய் முடிவு செய்திருந்தான். மாம்பழத் தோட்டத்திற்கு அடுத்தாற்போல் இருந்த பத்து ஏக்கர் தென்னந்தோப்பு விலைக்கு வந்தது. விஜய் அதை வாங்குவதற்கான ஏற்பாடுகளில் மூழ்கியிருந்தான். தீட்சிதர் இது போன்ற விவகாரங்களில் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு விஜய்க்கு அதிகாரம் வழங்கியிருந்தார்.

தென்னந்தோப்பு வாங்கப் போவதாய் விஜய் வந்து சொன்னபோது தீட்சிதர் உள்ளூர சந்தோஷப்பட்டாலும் வெளியில் பட்டும்படாதது போல் என்னவோப்பா விஜய்...

எல்லாம் உன் இஷ்டம். நீ எது செய்தாலும் ஆனந்தின் நலத்தை உத்தேசித்துதான் செய்வாய் என்று எனக்குத் தெரியும். சொத்து அபிவிருத்தியானால் ஆனந்த் பணக்காரனாவான். ஆனந்த் பணக்காரன் ஆனால் நீயும் பணக்காரன் ஆனாற்போல்தான். நல்ல பெண்ணாகப் பார்த்து இந்த சித்திரையில் ஆனந்தின் திருமணத்தை முடித்துவிட வேண்டும்'' என்றார்.

ஒவ்வொரு சமயம் அவர் சொல்வதைக் கேட்கும் பொழுது விஜய்க்குதான் அனாவசியமாய் அந்தப் பெரியவரை தவறாக நினைக்கிறோமோ என்ற சந்தேகம் வரும்.

விஜய் தோப்பு வாங்கும் விஷயமாய் தஸ்தாவேஜுகளை தயார் செய்வதில் பிஸியாக இருந்தான். அக்ரிமெண்ட் எழுதுவதற்காக ஸ்டாம்பு பேப்பர்களை எடுத்துக் கொள்வதற்காகத் தன்னுடைய அறைக்கு வந்தான்.

ஆனந்த் நிலைக் கண்ணாடியின் முன்னால் நின்று கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''விஜய்! இங்கே வாயேன்.''

காகிதங்களை எடுத்துக்கொண்டு வேகமாய் திரும்பப் போன விஜயை அழைத்தான்.

''அனூ! ரொம்ப அவசரமான வேலையில் இருக்கிறேன். பிறகு வருகிறேன்'' விஜய் படியைத் தாண்டப் போனான்.

''நோ!'' ஆனந்த் கத்தினான். ''போகாதே விஜய். வேலை எப்போதும் இருப்பதுதான். நீ முதலில் இங்கே வா...'' கண்ணாடியில் பார்த்துக் கொண்டே சொன்னான்.



அவன் வார்த்தையை மீறிப்போனால் அதன் பிறகு நடக்கப்போகும் ரகளை என்னவென்று விஜய்க்கு நன்றாகவே தெரியும். இந்த விஷயத்தில் அவனுக்குப் பதினெட்டு வருடங்கள் அனுபவம் இருந்தது. ஆனந்துக்குக் கோபம் வந்தால் சாப்பிட மாட்டான். தண்ணீர்கூட குடிக்க மாட்டான். வெறும் தரையில் படுத்துக் கொள்வான். ஆஸ்மா அட்டாக் வந்து மூச்சு சரியாக விட முடியாமல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பான்.

விஜய் விருப்பமில்லாமலேயே திரும்பி வந்தான். ''என்ன விஷயம்? சீக்கிரமாய் சொல்லு. ஹாலில் பெரிய மனிதர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்...'' என்று அவசரப்படுத்தினான்.

''யார் பெரிய மனிதர்கள்? அவர்களா? என்னைப் பொறுத்தவரை நீதான் இந்த உலகத்திலேயே பெரிய மனிதன். அதனால் உனக்காகத்தான் அவர்கள் காத்திருக்க வேண்டும்.''

''சரி... சரி... சீக்கிரமாகச் சொல்லு...'' கையிலிருந்த காகிதங்களைச் சரிபார்த்துக் கொண்டே சொன்னான்.

''இதோ... என்னைச் சரியாக பாரு.'' ஆனந்த் விஜய் பக்கம் திரும்பி மகிழ்ச்சியுடன் சொன்னான்.

''என்ன விஷயம்?'' காகிதங்களைச் சரி பார்த்துக் கொண்டே நிமிர்ந்து பார்த்த விஜய் கற்சிலையாகி விட்டான்.

ஆனந்தின் கழுத்தில் ஹேமாவின் செயின் மின்னிக் கொண்டிருந்தது.

''எப்படி இருக்கு விஜய்? ரொம்ப நன்றாக இருக்கிறது இல்லையா... எப்போ வாங்கினாய்? டிசைன் ரொம்ப நன்றாக இருக்கிறது.'' ஆனந்த் செயின் விரலால் தொட்டுப் பார்த்துக் கொண்டான். ''தாங்க்ஸ் விஜய். நீ எப்போதும் இந்த மாதிரிதான். எதிர்பாராமல் ஏதாவது பரிசு பொருட்

களைக் கொண்டு வந்து என்னை வியப்பில் ஆழ்த்துவாய். இந்த வாட்சும், மோதிரமும் அப்படி கொடுத்ததுதானே...'' ஆனந்த் அருகில் வந்தான். ''உன்னுடைய வைட் ஷர்ட் எனக்கு ரொம்ப பிடிக்கும். அதை அணிந்து கொண்டு ரமாவின் பிறந்த நாள் விழாவுக்குப் போகணும் என்று நினைத்திருந்தேன். ஷர்ட்க்காக உன் பெட்டியில் தேடியபோது கவரில் பத்திரமாக வைத்திருந்த செயின் கண்ணில் பட்டது. ரொம்ப பிடித்திருந்தது. உடனே போட்டுக் கொண்டு விட்டேன். நன்றாக இருக்கிறதா... சொல்லு'' மறுபடியும் கேட்டான்.

அனூ! அந்த செயின் வேறு ஒருத்தருடையது என்றும் அதை எடுத்து மறுபடியும் உள்ளே வைத்துவிடு என்றும் ஆனந்திடம் விஜய் சொல்லப் போனான். அதற்குள் ஆனந்தின் நண்பர்கள் கிரி, சதிஷ் வந்து விட்டார்கள். ஆனந்த் அவர்களைப் பார்த்ததும், ''இதோ நான் தயாராகத்தான் இருக்கிறேன்'' என்று சொல்லி விட்டு விஜய் பக்கம் திரும்பி ''விஜய்! இந்த அக்ரிமெண்ட் விவகாரத்தில் மூழ்கி வர மாட்டேன் என்று சொல்லி விட்டாய். நண்பர்கள் எல்லோரும் பார்ட்டியில் சந்தித்துக் கொள்ளப் போகிறோம். வருகிறேன்'' என்று கிளம்பினான். வாசற்படியைத் தாண்டப் போன ஆனந்த் திரும்பி விஜய் அருகில் வந்தான். விஜயை இறுக அணைத்துக் கொண்டு ''ஐயாம் ஹேப்பி... விஜய். ஐலைக் திஸ் செயின்* தாங்க்யூ'' என்று சொல்லி விட்டுப் போனான். ஒரு மகன் தன்னுடைய தந்தையை அணைத்துக் கொள்வது போல் ஆனந்த் தன்னை அணைத்துக் கொண்டது கண்டு விஜயினால் எதுவும் சொல்ல முடியவில்லை. கீழே இருந்து ''விஜய்!'' என்று ஆனந்த் குரல் கொடுத்தான். திடுக்கிட்ட விஜய் பால்கனியில் வந்து பார்த்தான். டாப் லெஸ் ஜீப்பில் டிரைவிங் சீட்டில் அமர்ந்து கொண்டிருந்த ஆனந்த் விஜயைப் பார்த்துக் கையை உயர்த்தி அசைத்தான். வெய்யில் பட்டு அவன் கழுத்திலிருந்த செயின் மின்னியது.



விஜய் மூளை கலங்கியவனைப் போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''விஜய்!'' தீட்சிதர் கத்துவது கேட்டது. விஜய் காகிதங்களை எடுத்துக் கொண்டு கீழே ஓடினான்.

தோப்பின் விலையில் பதினைந்தாயிரமாவது குறைக்க வேண்டும் என்று தீட்சிதர் சொன்னதால் பேச்சு வார்த்தைகள் ரொம்ப நேரம் நீடித்தன. அக்ரிமெண்ட் முடியும்போது இரவு ஒன்பது மணியாகி விட்டது. வேலை முடிந்த பிறகு எல்லோரும் கிளம்பிப் போனார்கள். தீட்சிதர் இரவில் பலகாரத்தைச் சாப்பிட்டு விட்டுச் சீக்கிரமாய் உறங்கி விடுவார். ஆனந்த் வீட்டுக்கு வரப் போவதாகப் போன் செய்தான்.

விஜய் காத்திருந்தான். இரவு பதினோரு மணியாகி விட்டது. ஊர் முழுவதும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. ஆனந்த் போன் செய்து ரொம்ப நேரமாகி விட்டது. விஜய் ஹாலில் நடை பயின்று கொண்டிருந்தான். கிளம்புவதற்குத் தாமதமானால் ஆனந்த் மறுபடியும் போன் செய்வானோ? விஜய் மனதில் பலவிதமான எண்ணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

ஆனந்தும் தன் வயதை ஒத்தவன்தான் அவனுடைய நல்லது கெட்டதை அவனே பார்த்துக் கொள்ள முடியும் என்று தனக்குத்தானே தைரியம் சொல்லிக் கொள்ள நினைத்தான் விஜய். இப்பொழுதும் அதே நினைப்புதான். ஆனால் மனதில் வேண்டாத யோசனைகளைக் கடல் அலைகளைப் போல் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

நிசப்தம் நிறைந்த அந்த நேரத்தில் மாட்டு வண்டி ஏதோ வருவதுபோல் சத்தம் கேட்டது.

விஜய் வராண்டாவின் விளக்கைப் போட்டு விட்டுப் பால்கனிக்கு வந்து எட்டிப் பார்த்தான். இரட்டை மாட்டு வண்டி ஒன்று ஆனந்தின் ஜீப்பை இழுத்துக் கொண்டு

வந்து கொண்டிருந்தது. விஜய் திடுதிடுவென்று படியிறங்கி வந்தான்.

ஆனந்தின் ஜீப் மரத்தில் மோதியிருந்ததாம். அவனுக்கு நினைவு இருக்கவில்லை. குடி மயக்கத்தில் இருந்தான்.

''நாங்க வயலிலிருந்து திரும்பி வரும்போது மரத்தில் ஜீப் மோதியிருப்பதைப் பார்த்தோம் சாமீ... அருகில் போய்ப் பார்த்தால் தீட்சிதரின் பேரன் என்று அடையாளம் தெரிந்தது. தம்பிக்கு சுய நினைவு இல்லை. ஜீப்பை வண்டியில் கட்டி இழுத்துக்கொண்டு வந்தோம்'' என்று வண்டியுடன் வந்த உழவர்கள் சொன்னார்கள்.

விஜய் ஆனந்தைக் கவனமாகப் பார்த்தான். பெரிதாக அடி எதுவும் படவில்லை. தோளில் லேசாக சிராய்த்து இருந்தது. விஜய் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விட்டுப் பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டான். ஆனந்தை இருகரங்களாலேயும் தூக்கிக் கொண்டு மாடி அறைக்கு வந்து கட்டில் மீது படுக்க வைத்தான். ஆனந்தின் கழுத்தில் செயின், விரலில் மோதிரம், ரிஸ்ட்வாட்ச் எதுவும் இருக்கவில்லை. கால்களில் போட்டிருந்த விலை உயர்ந்த செருப்புகளைக் கூட யாரோ திருடி விட்டிருந்தார்கள்.

விஜய் கற்சிலையாக அப்படியே நின்று விட்டான்.

## 10

மாலை வேளை. இருள் கவிழும் நேரம். வேணு கோபாலசுவாமி ஆலயத்தில் மாலை நேரத்து தீபாராதனை நடந்துகொண்டிருந்தது. பக்தர்கள் கோவில் பிராகாரத்தில் பிரதட்சிணம் செய்து கொண்டிருந்தார்கள். விஜய் கோவில்



மண்டபத்துப் படிகள் மீது உட்கார்ந்திருந்தான். வெள்ளை பைஜாமா, ஜிப்பா அணிந்துகொண்டு இடக் கையைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்து போயிருந்தான். பக்தர்கள் எல்லோரும் போய் விட்டதை அவன் கவனிக்கவில்லை.

''என்ன விஜய் தம்பீ! ரொம்ப நேரமாய் தனியாய் உட்கார்ந்திருக்கிங்க? இருட்டி விட்டது.'' மண்டபத்தில் அணைந்து போயிருந்த பித்தளை விளக்கை எடுத்துப் போக வந்த குருக்கள் கேட்டார்.

திடுக்கிட்ட விஜய் ''ஒன்று இல்லை'' என்று சமாளித்தான். மனதில் அலை பாய்ந்து கொண்டிருந்த எண்ணங்கள் அவனை வேறு உலகிற்கு அழைத்துச் சென்றிருந்தன. இருட்டிக்கொண்டு வந்ததை அவன் உணரவில்லை.

''ஆனந்த் தம்பி ஊரில் இல்லையா என்ன? இத்தனை சாவகாசமாய் இங்கே உட்கார்ந்திருக்கிங்க?''

விஜயிடம் யார் பேசினாலும் ஆனந்தின் பிரஸ்தாபனை வராமல் இருக்க முடியாது.

''கோவில் கதவுகளைச் சாத்திக்கொண்டு போகப் போகிறேன்'' என்றார் குருக்கள்.

விஜய் தலையை அசைத்தான். அப்படியே உட்கார்ந்திருந்தான். சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்தான். இதுவரையில் அந்த கடிதத்தைப் பத்து தடவைகளாவது படித்திருப்பான். ராதிகா எழுதிய கடிதம் அது.

டியர் விஜய்...

நான், பூஜா, பிரசாத் நலமாக இருக்கிறோம். நீயும் ஆனந்த் மற்றும் தாத்தா நலமாக இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். ஹேமா ரூபாய் நான்காயிரத்திற்கு உன் பெயருக்கு டி. டி. எடுத்து அனுப்பியிருக்கிறாள். அவளுடைய செயின் உன்னிடம் இருக்கிறதாம். டி. டி.

சேர்ந்ததும் செயினைப் பார்சல் செய்து அனுப்பச் சொன்னாள். விசாகப்பட்டணத்தில் நர்ஸிங் ஹோமில் வேலையில் சேர்ந்திருக்கிறாளாம். அந்தக் கடிதத்தையும் இத்துடன் இணைத்திருக்கிறேன். பூஜா மனிதர்களை நன்றாக அடையாளம் கண்டு கொள்கிறாள். மாமா எப்போ வருவார் என்று கேட்கிறாள். பிரசாந்கூட உன்னிடமிருந்து தகவல் வரவே இல்லையே என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். ஹைதராபாத் வந்தால் எங்களோடு நான்கைந்து நாட்களாவது தங்கும் விதமாக நேரத்தை ஒதுக்கிக்கொண்டு வர வேண்டும். எல்லோரையும் கேட்டதாகச் சொல்லவும்.

உன் ராதிகா

இன்று மதியம் தபாலில் இந்த கடிதமும், ரூபாய் நான்காயிரத்திற்கு அவன் பெயரில் டி. டி. யும் வந்தன. கடிதத்தைப் படித்த பிறகு என்ன செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. நடந்ததை ராதிகாவுக்கு விவரமாக எழுதி புதிய செயினை வாங்கி அனுப்பி வைக்கலாம் என்று நினைத்தான். பிரசாத்துக்கு விஷயம் தெரிந்தால் ரகளைச் செய்வான் என்று பயந்தான். ஹேமாவின் செயின் தன் மூலமாய்தான் தொலைந்து விட்டது. அதற்குப் பதிலாக இரண்டு மடங்கு பணம் தரச் சொன்னாலும் கொடுக்கத் தயாராக இருந்தான். ஆனால் ஹேமா! அவனுக்கு ஏனோ தயக்கமாக இருந்தது. ஹேமா இதை எப்படி எடுத்துக் கொள்வாளோ?... பெருமூச்சு ஒன்று அவனையும் அறியாமலேயே வெளியில் வந்தது. ராதிகாஷுக்குக் கடிதம் எழுதி வேறு செயினை வாங்கி அனுப்புவதைவிட, தானே சுயமாய் நேரில் சென்று, விஷயத்தைச் சொல்லி செயினைக் கொடுத்தால் நன்றாக இருக்குமோ... விஜய்க்கு இந்த விஷயம் தர்ம சங்கடமாய் இருந்தது. ஹேமாவுக்கே கடிதம் எழுதிவிடலாம் என்ற நினைப்பு வந்தாலும் சாத்தியப்படாது என்று தோன்றியது. அன்று கொஞ்சம்



கூட தயங்காமல் ''நாம் மறுபடியும் சந்தித்துக் கொள்ளப் போவதில்லை'' என்று சொல்லி விட்டான். தன்னுடைய கடினமான வார்த்தைகள் ஹேமாவின் மனதை எந்த அளவுக்குக் காயப்படுத்தியிருக்கும் என்று அவனால் உணர முடிந்தது. ஹேமாவைச் சந்தித்துதான் ஆக வேண்டும். அடுத்த வாரம் விசாகப்பட்டணத்தில் ஆனந்தின் நண்பன் மோகனின் திருமணம் நடைபெறப் போகிறது. கல்யாண பெண் ராதிகாவுக்கு தூரத்து உறவு ஆக வேண்டும். ஹேமாவும் விசாகப்பட்டணத்தில்தான் இருக்கிறாள். ஆனால் அந்த திருமணத்திற்குப் போவதற்கு ஆனந்த் சுமுகமாய் இல்லை.

''என்ன இருக்கு இந்தத் திருமணங்களில்? எல்லாம் ஒரே மாதிரிதான் இருக்கும். பட்டுப் புடவைகள், நகைகளை அணிந்து கொண்டு பெண்கள் தங்களுடைய ஸ்டேட்டஸைப் பறைசாற்றிக் கொள்வார்கள். உங்க பையன் என்ன செய்கிறான், பெண் என்ன செய்கிறாள் என்று கதைக்கு உதவாத பேச்சுகள்... விலைவாசி உயர்வைப் பற்றி அங்கலாய்த்துக் கொள்வது... எங்க காலத்தில் இப்படி இல்லை என்று வாய் வலிக்க அந்தக் காலத்துப் பெருமைகளைப் பீற்றிக் கொள்வது... வயிறு முட்ட மூன்று வேளையும் சாப்பிடுவது... இதுதானே.''

''அனு! அப்படிச் சொன்னால் எப்படி? மோகன் உன்னை வரச் சொல்லி எத்தனை முறை சொல்லியிருக்கிறான்?''

''என் சார்பில் நீ போய் விட்டு வா.''

''நீயும் வந்தால் நன்றாக இருக்கும்'' விஜய் நயமாகச் சொன்னான். கல்லூரியில் படிக்கும் நாட்களில் மோகனும், ஆனந்தும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். மாணவர்களுக்கிடையில் நடந்த ரகளையில் மோகன் ஆனந்துக்கு உறுதுணையாக இருந்திருக்கிறான். திருமணத் திற்குப் போகவில்லையென்றால் மோகன் ரொம்ப

வருத்தப்படுவான். சில விஷயங்கள் ஆனந்த் மனதில் விழாது. விழுந்தாலும் பொருட்படுத்த மாட்டான். அவன் எப்போதும் மனதிற்கு மகிழ்ச்சி தரும் விஷயங்களையே விரும்புவான். முடிந்த வரையில் எங்கேயாவது வெளி ஊர்களுக்குப் போய்க் கொண்டேயிருப்பான். கை நிறைய பணம். நண்பர்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. நீச்சலடிப்பது என்றால் ஆனந்துக்கு ரொம்ப விருப்பம். கார் ரேஸ் எங்கே நடந்தாலும் பார்க்கப் போய் விடுவான். எதிராளியை எவ்வளவு சீக்கிரமாய் நண்பனாக்கிக்கொண்டு விடுவானோ, அதே அளவுக்குச் சீக்கிரமாய் சண்டை போட்டுக் கொண்டு எதிரியாகி விடுவான். அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடும். கோபம் வந்தால் எரிமலையைப் போல் வெடிக்கும். துக்கம் வந்தால் நில நடுக்கம் வந்தது போல் நிலைதடுமாறுவான். விஜய் ஒருவனால்தான் ஆனந்தின் போக்கைக் கட்டுப் படுத்தி நிலைமையைச் சீர்படுத்த முடியும். சில விஷயங்கள் ஆனந்துக்குப் புரியாது. விஜய் சொன்னால் தவிர ஏற்றுக் கொள்ள மாட்டான்.

மோகன் திருமணத்திற்கு ஆனந்த் போனால்தான் நன்றாக இருக்கும் என்று விஜய் வற்புறுத்தி சொன்னதில் ஆனந்த் ஒப்புக் கொண்டான்.

''ஓ. கே... போகிறேன். ஆனால் நீயும் என்னுடன் வர வேண்டும்'' என்றான்.

''நான் எப்படியும் வரப் போகிறேன். அங்கே ராஜலக்ஷ்மி மேடம் இருக்கிறாள். அவங்களை ஒரு தடவை சந்தித்துப் பேச வேண்டும்'' என்றான் விஜய்.

''ராஜலக்ஷ்மி என்றால் பாங்க் மானேஜராக இங்கே வேலை பார்த்தார்களே... நம் மில்களுக்கு லோன் வாங்கி தந்தாளே... அவங்கதானே.''

ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தான் விஜய். ''இப்போ வைசாக் பிராஞ்சில் மானேஜராக இருக்கிறாள்.



ஒரு தடவை அவங்களைச் சந்தித்து லோன் விஷயமாக என்ன அட்வைஸ் தருவாளென்று கேட்டுக் கொள் கிறேன்.''

''அவங்கதான் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய் விட்டாளே?''

''பரவாயில்லை. எங்கே லோன் அப்ளை செய்ய வேண்டும் என்று அறிவுரை கேட்டுக் கொள்கிறேன்.''

''அவங்களுக்கு உன்னிடம் அபிமானம் அதிகம் இல்லையா?''

''நன்றாக இருக்கு நீ சொல்வது. அன்புடன் பழகிய வர்களை எல்லாம் இப்படிச் சொன்னால் எப்படி?''

ஆனந்த் விஜய்க்கு எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

விஜய் தஸ்தாவேஜுகளைப் படித்துக்கொண்டு இருந் தான்.

''விஜய்!'' ஆனந்த் சீரியஸாக அழைத்தான்.

''என்ன?''

''ஒரு தடவை தலையை உயர்த்தி என் பக்கம் பாரு.''

செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்திவிட்டு விஜய் ஆனந்த் பக்கம் பார்த்தான்.

''லோன் வாங்குவது... தவணைகள் கட்டுவது... மறுபடியும் கவலைப்படுவது... இதற்கு முடிவே இல்லையா? எதுக்கு இத்தனை பணம்? என்ன செய்து கொள்ளப் போகிறாய்?''

''நாளைக்கே உனக்குத் திருமணமாகி நான்கு குழந்தைகள் பிறந்தால் நமக்குப் பணம் நிறைய தேவைப் படும் இல்லையா?'' விஜய் புன்முறுவலுடன் சொன் னான்.

''நான்சென்ஸ்! நான் திருமணமே செய்துகொள்ளப் போவதில்லையென்று ஏற்கனவே உன்னிடம் சொல்லி யிருக்கிறேன்.''

''தாத்தா உனக்காகப் பெண்ணைத் தேடிக்கொண்டு இருக்கிறார். இந்த சித்திரையில் உன்னுடைய திருமணத்தை முடிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.''

''அவ்வளவு விருப்பம் இருந்தால் அவரையே திருமணம் செய்து கொள்ளச் சொல்லு. எனக்கு இப்பொ திருமணம் தேவையில்லை.'' ஆனந்த் மறுப்பதுபோல் தோளைக் குலுக்கினான்.

''பெரியவங்களை அப்படிச் சொல்லலாமா? தப்பு இல்லையா?''

''அவர்தான் நம்மைவிட அதிகமாய் தவறுகளைச் செய்கிறார். அவரைச் சொன்னால் எந்த தவறும் இல்லை.''

''ஆனந்த்! அனாவசியமாக வாதம் புரிய வேண்டாம். திருமணம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ரொம்ப முக்கியம்.'' விஜய் நயமாகச் சொன்னான்.

''அப்படியா!'' ரொம்ப கவனமாய் கேட்டுக் கொள்வது போல் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டான் ஆனந்த்.

''அனூ... இந்த சித்திரையில் உன் திருமணம் முடிந்து விட வேண்டும். தாத்தாவும், நானும் நல்ல பெண்ணாக தேடிக் கொண்டிருக்கிறோம்.''

''பெண்ணைப் பார்த்துவிட்டு என் தலையில் கட்டப் போகிறீர்களா?''

''அனூ... ப்ளீஸ்...'' விஜய் சீரியஸாகப் பார்த்தான்.

''ஓ. கே... ஓ. கே. நீ சொன்னது என்ன? ஒவ்வொரு மனிதனுக்கும் திருமணம் ரொம்ப முக்கியம். அப்படித் தானே...''

ஆமாம் என்பது போல் விஜய் பார்த்தான்.

''அப்பொ உடனடியாக அந்தக் காரியத்தை நீதான் செய்ய வேண்டும். என்னைவிட நீ பெரியவன் இல்லையா...



தாத்தாவிடம் சொல்கிறேன். இந்த சித்திரையில் உன் திருமணம் முடிந்தால் என்னுடைய கடமை முடிந்து விடும்.'' பெரிய மனிதனின் தோரணையில் ஆனந்த் சொன்னதைக் கேட்டு விஜய்க்குச் சிரிப்பு வந்தது.

''சில்லியாகப் பேசாதே'' என்றான்.

ஆனந்த் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான். அறையில் நடை பயின்று கொண்டே விஜய் பக்கம் திரும்பி ''நான் சீரியஸாகத்தான் சொல்கிறேன் விஜய்! உன்னை எனக்கு ரொம்ப பிடிக்கும். உனக்கும் என்னைப் பிடிக்கும்... ஓ. கே... ஆஸ்மா அட்டாக் வந்து திடீரென்று என் மூச்சு நின்று விட்டது என்று வைத்துக் கொள். நீ தனியனாகி விடுவாய் இல்லையா? நான் உயிரோடு இருக்கும்போதே உனக்கு ஒரு நல்ல துணையைத் தேடித் தர வேண்டும்.''

''ஷட்டப் அனூ!'' விஜய் கடிந்து கொண்டான்.

ஆனந்த் திடீரென்று விஜயின் அருகில் வந்து முழங்காலில் அமர்ந்து கொண்டு விஜய் கையைப் பற்றிக் கொண்டான். முகத்தை உயர்த்தி விஜயின் கண்களுக்குள் ஆழமாய் பார்த்துக் கொண்டே ''போகட்டும் ஒரு வேலை செய்வோமா?'' என்றான்.

''என்ன?''

''நாமிருவரும் நமக்குத் தகுந்த பெண்ணிற்காகத் தேடுவோம். யாருக்கு முதலில் கிடைக்கிறாளோ அவளுடன் நிச்சயதார்த்தம் மட்டும் முடிப்போம். இரண்டாவது ஆளுக்கு தகுந்த பெண் கிடைக்கும் வரையில் காத்திருப்போம். கிடைத்ததும் இரண்டு திருமணங்களையும் ஒன்றாக முடிப்போம். என்ன சொல்கிறாய்?''

''இந்த விஷயத்தை இத்துடன் பத்து தடவை சொல்லிவிட்டாய்.''

''ஆனால் ஒரு தடவைகூட நீ பதில் சொல்லவில்லை. அதை மறந்து விடாதே.''

''எனக்கு வேலை இருக்கு.'' விஜய் எழுந்து கொள்ளப் போனான்.

ஆனந்த் விஜயை எழுந்துகொள்ள விடவில்லை. ''இன்று இதற்குப் பதில் சொல்லித்தான் ஆகணும்.''

''அனூ... ப்ளீஸ்...'' விஜய் வேண்டுவது போல் சொன்னான்.

ஆனந்த் விஜயின் முகத்தை ஆழமாய் பார்த்துக் கொண்டே ''எந்தப் பெண்ணாவது உன்னை ரொம்ப விரும்புகிறாள் என்று வைத்துக் கொள்வோம். அப்பொ என்ன செய்வாய்?'' என்று கேட்டான்.

''எனக்கு விருப்பம் இல்லை என்று சொல்லி விடுவேன்.''

''ஊஹூம். நான் அந்தப் பெண்ணை வாழ்த்தி விட்டு உங்கள் இருவருக்கும் திருமணத்தை முடித்து வைப்பேன். தாத்தாவுக்கு ஹார்ட் அட்டாக் வரும் அளவுக்குப் பணத்தைச் செலவழித்துக் கிராண்டாகத் திருமணத்தை நடத்துவேன். உங்க இருவரையும் ஹனிமூனுக்கு சிங்கப்பூருக்கு அனுப்பி வைப்பேன். நீங்க இருவரும் என் கண்முன்னாடி சந்தோஷமாய் குடித்தனம் நடத்துவீங்க. விஜய்! உனக்கு அந்தப் பெண்ணிடம் உனக்கு ரொம்பவும் விருப்பம் ஏற்பட்டு, என்னை அலட்சியம் செய்வாயா?''

''ஆமாம் என்று வைத்துக்கொள்'' ஆனந்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான் விஜய்.

''என்னைப் பொருட்படுத்தவே மாட்டாயா?'' இரட்டிப்பது போல் கேட்டான் ஆனந்த்.

''மாட்டேன்.'' விஜய் திடமான குரலில் சொன்னான்.

ஆனந்தின் கைப்பிடிகள் இறுகின. ''அப்பொ நான் என்ன செய்வேன் தெரியுமா?'' என்று கேட்டான்.



என்ன செய்வாய் என்பதுபோல் பார்த்தான் விஜய்.

''அந்தப் பெண்ணை உன் கண் முன்னாலேயே கத்தியால் குத்திக் கொன்று விடுவேன்.'' கண்முன் அந்த காட்சி நடப்பது போலவே ஆனந்த் தோற்றமளித்தான்.

விஜய் சிரித்தான். ''எனக்குத் தெரியும் அனூ! அதான் நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை.''

''அந்த அப்பாவி பெண் இறந்து போய் விடுவாளே என்றா?''

''இல்லை. நீ ஜெயிலுக்குப் போய் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டாமே என்றுதான்.''

ஆனந்த் விஜயைப் பார்த்தான். விஜய் பேப்பர்களைச் சரி பார்த்துக் கொண்டிருந்தான்.

''விஜய்! அம்மா, அம்மாவின் அன்பு எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. தாத்தாவின் அன்பு ஏனோ போலியாய், மூச்சு முட்டுவதுபோல் இருக்கும். நீ எனக்கு உயிர் நண்பன் மட்டும் இல்லை. அம்மா, அப்பா, கடவுள் எல்லாமே நீதான். நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி விஜய். கடவுளிடம் நான் வேண்டுவது என்ன தெரியுமா? நம்முடைய நட்பைப் புரிந்துகொண்டு, நம் இருவரையும் உயிருக்கு உயிராய் பார்த்துக் கொள்ளும் பெண் விஜய்க்கு மனைவியாக வர வேண்டும் கடவுளே என்று தினமும் பிரார்த்தனை செய்கிறேன். உங்கள் இருவருக்கும் மகனாய் என் வாழ்க்கையை நிம்மதியாய் கழித்து விடுவேன். அப்பொ உடம்புக்கு வந்தாலும் கவலைப்பட வேண்டிய தில்லை.''

''ஏன் எப்போதும் உடல் நலக்குறைவு பற்றியே யோசித்துக்கொண்டிருக்கிறாய்? இப்பொ உன் உடல்நிலை நன்றாகத்தானே இருக்கிறது.''

''எனக்கே தெரியவில்லை விஜய். இப்பொ நான், ஆரோக்கியமாய் இருப்பது போல் தோன்றினாலும் உடல் நலக்குறைவு ஏற்படுவதற்கு முன் சற்று இடைவெளி விட்டதுபோல் தோன்றுகிறது. வாழ்க்கை என்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும். மரணம் என்றால் பயம். பிறந்த ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியாய், சுகமாய் வாழ வேண்டும். கஷ்டங்கள், துக்கங்கள் என்றால் எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்காது.''

''நாணயத்திற்கு இருபக்கங்கள் இருப்பதுபோல் மனிதனின் வாழ்க்கையில் கஷ்ட சுகங்களைத் தவிர்க்க முடியாது.''

''அதைக் கண்டுதான் பயப்படுகிறேன். தன்னுடைய வாழ்க்கையைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியாத மனிதனின் வாழ்க்கை நரகம்தான்.''

''இத்தனைக்கும் நாம் மோகனின் திருமணத்திற்கு போகிறோமா... இல்லையா?''

''போவோம். திருமணத்திற்கு வந்த பெண்களில் உனக்குச் சரியான ஜோடி யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கிறேன்.''

''ஷட்டப் அனூ!'' விஜய் கடிந்து கொண்டான்.

ஆக மொத்தம் திருமணத்திற்கு இருவரும் சேர்ந்து போவதாக முடிவாகி விட்டது. திருமணம் வைசாகில் நடக்கப் போகிறது. ஹேமா இருப்பதும் அந்த ஊரில் தான்.

ஹேமாவைச் சந்தித்து செயின் விஷயத்தை எப்படிச் சொல்வது என்று விஜய் யோசித்துக் கொண்டிருந்தான். அவன் மனம் அதற்கான வழியைத் தேடிக் கொண்டிருந்தது.



## 11

மோகனின் திருமணத்திற்கான ஏற்பாடு சிறப்பான முறையில் நடந்து கொண்டிருந்தன. விஜய், ஆனந்த் திருமணத்தன்று காலையில்தான் போய்ச் சேர்ந்தார்கள். காலை உணவு ஆனதும் ஆனந்த் விஜய் அருகில் வந்தான். ''விஜய்! நானும் சத்யம், சேஷு எல்லோரும் சேர்ந்து அரக்கு வேலி போவதாக முடிவு செய்திருந்தோம். கிளம்புகிறோம்...'' என்றான்.

''அனூ! திருமணத்திற்காக வந்திருக்கிறோம். இன்று இரவு திருமணம். நீ இப்படி கிளம்பிப் போனால் நன்றாக இருக்காது'' என்றான் விஜய்.

ஆனந்த் இரண்டு கைகளையும் ஜோடித்துக் கும்பிடு போட்டான். ''விஜய்! என்னை வற்புறுத்தாதே. இப்போதே இங்கே எனக்கு மூச்சு முட்டுகிறது. உறவினர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் என் உயிர் போய்விடும் போல் இருக்கிறது. மோகன் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டான். அப்படி நினைத்துக் கொண்டாலும் ஐ டோண்ட் கேர். திருமண மண்டபத்திற்கு வந்து விட்டேன். அதுபோதும். உனக்கு ஏதோ வேலைகள் இருப்பதாகச் சொன்னாயே. அவற்றைப் பார்த்துக் கொள். நான் திரும்பும் வரையில் போய் விடாதே'' என்று நீளமாய் லெக்சர் கொடுத்துவிட்டுப் போய் விட்டான். விஜயினால் எதுவும் சொல்ல முடிய வில்லை. போகக்கூடாது என்று அழுத்திச் சொல்லியிருந்தால் ஆனந்த் போயிருக்க மாட்டான்தான். ஆனால் என்ன பிரயோஜனம்? அந்த எரிச்சலை மனதில் வைத்துக்கொண்டு யாருடனாவது சண்டை போடுவான். ஏற்கனவே இது போன்ற அனுபவம் இருந்ததால் விஜய் ஆனந்தைப் போகக் கூடாது என்று வற்புறுத்தவில்லை.

மாலையாகிவிட்டது. திருமணம் இரவு பன்னிரண்டு மணிக்கு என்பதால் சாப்பாடு பந்தி முன்னாடியே நடந்து கொண்டிருந்தது. விருந்தாளிகள் வந்து கொண்டிருந்தார்கள்.

"விஜய்! நீயும் இந்த திருமணத்திற்கு வந்திருக்கிறாயா?" ராதிகா அருகில் வந்துகொண்டே கேட்டாள்.

"ஆமாம்... நீங்க?"

"கல்யாண பெண் பிரசாத்திற்குத் தூரத்து உறவு."

"இது... இது பூஜாதானா?" ராதிகாவின் கையிலிருந்த குழந்தையைப் பார்த்துப் பிரமிப்புடன் கேட்டான்.

"ஆமாம். பூஜா! மாமாவைப் பார்த்தாயா?" ராதிகா பூஜாவை விஜயிடம் கொடுத்தாள்.

பிரசாத் அருகில் வந்தான். "என்ன விஜய்? உன் உடல் மட்டும்தான் கண்ணுக்குத் தெரிகிறது. உயிர் எங்கே?" என்று கேட்டான்.

"ஆனந்த் அரக்கு வேலிக்குப் போயிருக்கிறான்."

"ஹலோ ராதிகா!" ஹேமா அருகில் வந்தாள்.

"ஹலோ ஹேமா... எப்படி இருக்கீங்க?" பிரசாத் குசலம் விசாரித்தான்.

ஹேமா விஜயைப் பார்க்காததுபோல் இருந்து விட்டாள். விஜய் புன்முறுவலுடன் ஹேமாவிடம் பேச நினைத்து மறுபடியும் நின்று விட்டான்.

"இதோ... பூஜா!" ராதிகா மகளைக் காண்பித்தாள்.

"பூஜாவா... நன்றாக வளர்ந்து விட்டாள்." ஹேமா மகிழ்ச்சியுடன் பார்த்தாள்.

ராதிகா விஜய் கையிலிருந்து பூஜாவை எடுத்துக் கொண்டு ஹேமாவிடம் கொடுத்தாள்.

"நீங்க மாப்பிள்ளை சார்பில் வந்தீங்களா இல்லை பெண்ணின் சார்பிலா?" பிரசாத் ஹேமாவிடம் கேட்டான்.



"பெண்ணின் தந்தை அம்மாவின் கொலீக்" ஹேமா சொன்னாள். "எங்கள் வீட்டுக்கு அவசியம் நீங்க வர வேண்டும்."

"கட்டாயம்" என்றாள் ராதிகா.

அதற்குள் யாருடனோ பேசிக் கொண்டு அந்தப் பக்கமாய் நடந்து போய்க் கொண்டிருந்த நடுத்தர வயது கடந்த மாதுவைக் கவனித்த விஜய் பிரசாத்திடம் "ஒரு நிமிடம்..." என்று சொல்லி விட்டு, அவள் அருகில் சென்று "வணக்கம் மேடம்" என்றான். அந்த மாது அவனைப் பார்த்ததும் "விஜய்! நீயா... நலமாக இருக்கிறாயா?" என்று கேட்டாள்.

"நன்றாக இருக்கிறேன் மேடம்."

"தாத்தா எப்படி இருக்கிறார்?"

"நலமாக இருக்கிறார்."

"ஆனந்த்?"

"அவனும் ஓ. கே."

"என்ன விசேஷம்? புதிதாக நிலம் ஏதாவது வாங்கினீர்களா?"

"சமீபத்தில் தென்னந்தோப்பு வாங்கியிருக்கிறோம். நானே உங்களிடம் வந்து பேச வேண்டும் என்று இருந்தேன். இவர்கள் என்னுடைய நண்பர்கள் பிரசாத், ராதிகா."

ராதிகாவும், பிரசாத்தும் அந்த அம்மாளுக்கு வணக்கம் தெரிவித்தார்கள்.

ஹேமாவும் அருகில் இருந்தாள்.

"இவங்க பெயர் ஹேமா." விஜய் ஹேமாவை அறிமுகப்படுத்துவது போல் சொன்னான்.

"ராஜலக்ஷ்மி மேடம் இதற்கு முன் எங்க ஊருக்கு அருகில் இருந்த பிராஞ்சில் வேலை பார்த்துக் கொண்

டிருந்தார்கள். எங்களுக்கு ரொம்பவும் வேண்டியவர்கள்.'' மூவருக்கும் பொதுவாகச் சொன்னான்.

''வணக்கம் மேடம்...'' ஹேமா கைகளைக் கூப்பிக் கொண்டே சொன்னாள்.

''புத்ரபௌத்ராபிரஸ்து'' ராஜலக்ஷ்மி புன்முறுவலுடன் ஆசீர்வதித்தாள்.

உடனே இருவரும் சேர்ந்து சிரித்து விட்டார்கள்.

பிரசாத், ராதிகா, விஜய் மூவரும் புரியாதவர்களைப் போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜலக்ஷ்மி, ஹேமாவின் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு அருகில் இழுத்துக்கொண்டே, ''விஜய்! என் மகளை எனக்கே அறிமுகம் செய்கிறாயா?'' என்றாள்.

''அட... இவங்க உன்னுடைய அம்மாவா?'' பிரசாத் வியப்புடன் கேட்டான்.

''ரொம்ப சந்தோஷம்.'' ராதிகா ஹேமா தனக்குப் பிரசவம் பார்த்த விவரத்தை மளமளவென்று ஒப்பித்தாள்.

''ஹேமா சொல்லியிருக்கிறாள். அது நீங்கதானா... இந்தக் குழந்தைதானே?'' ராஜலக்ஷ்மி பூஜாவைத் தூக்கிக் கொண்டாள். தொலைவில் யாரோ அவளை அழைத்தார்கள். ராஜலக்ஷ்மி பூஜாவை ராதிகாவிடம் கொடுத்துக் கொண்டே ''நீங்க கட்டாயம் எங்கள் வீட்டுக்கு வர வேண்டும்'' என்று போகப் போனவள் விஜய் பக்கம் திரும்பி ''விஜய்... நீயும்'' என்றாள்.

''நான் பாங்கில் வந்து பார்க்கிறேன் மேடம்'' என்றான்.

''பாங்கிற்கு வருவானேன்? நான் இப்பொ உங்கள் ஏரியா மானேஜர் இல்லை. வீட்டுக்குச் சாப்பிடவா... நீங்க எல்லோரும் வர வேண்டும்'' என்று கிளம்பிப் போனாள்.

''உலகம் எத்தனை சின்னது பார்த்திங்களா ஹேமா!



ஒருவருக்கொருவர் ரொம்ப தெரிந்தவர்களாகிவிட்டோம்'' பிரசாத் சொன்னான்.

''கட்டாயம் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்'' ஹேமா போகும்போது மறுபடியும் சொன்னாள்.

''வராமல் இருப்போமா... கட்டாயம் வருகிறோம்.'' வாக்கு தருவதுபோல் சொன்னான் பிரசாத்.

ஹேமா விஜய் பக்கம் பார்த்தாள். விஜய் ஹேமாவையே பார்த்துக் கொண்டிருந்தான். ஹேமா சட்டென்று பார்வையைத் திருப்பிக்கொண்டு கையை அசைத்துவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

திருமணம் நடந்து கொண்டிருக்கும்போது ஹேமா தொலைவில் பெண்களின் கும்பலுக்கு நடுவில் நின்று கொண்டு விஜய் பக்கம் ஓரிரு முறைகள் பார்த்தாள். அவள் விஜய் பக்கம் பார்த்த ஒவ்வொரு தடவையும் விஜய் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

திருமணம் நடந்து கொண்டிருந்தது. ராஜலக்ஷ்மியும், விஜயும் அடுத்தடுத்த நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். சற்று தொலைவில் நின்றிருந்த ஹேமாவை அருகில் அழைத்துதன் பக்கத்தில் காலியாக இருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னாள் ராஜலக்ஷ்மி.

விஜய் பக்கத்தில் அமர்ந்திருந்த பெரியவர் ராஜலக்ஷ்மிக்குத் தெரிந்தவர் போலும்.

''என்ன மிஸ்டர் ரங்கநாதன்? வீட்டில் எல்லோரும் சௌக்கியம்தானே? குழந்தைகள் என்ன படிக்கிறார்கள்? வியாபாரம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே விஜய் பக்கம் திரும்பி ''விஜய்... இப்படி வந்து உட்கார்ந்து கொள்'' என்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டாள். விஜய் எழுந்து போகப் போனான். ''இல்லை... இல்லை... உட்கார்ந்து கொள். பரவாயில்லை'' என்று வற்புறுத்தினாள்.

ஹேமாவும், விஜயும் அருகருகில் அமர்ந்து கொண்டார்கள். ரராஜலக்ஷ்மி ரங்கநாதன் பக்கம் திரும்பி அவருடைய குடும்ப சமாசாரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஹேமா, விஜய் சுற்சிலைகளைப் போல் உட்கார்ந்திருந்தார்கள். இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவில்லை. ரொம்ப கவனமாய் திருமண நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஹால் முழுவதும் சிரிப்பும், கும்மாளமாய், சந்தடியாய் இருந்தது. ஹேமா விஜய் இருவரும் இந்த உலகிலேயே இருக்கவில்லை. இருவருக்குமிடையே ஆழமான மௌனம்.

ஒருவருக்குப் பக்கத்தில் ஒருவர் அமர்ந்திருக்கிறோம் என்ற உணர்வு இருவரின் மனங்களிலும் பரிபூர்ணமாய் நிரம்பியிருந்தது. பூஜா பிறந்த இரவு ஏற்பட்ட மகிழ்ச்சியைப் போலவே, இந்த திருமண நிகழ்ச்சியும் இருவருக்கும் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது. அந்த அனுபவத்தை, மகிழ்ச்சியை இருவரும் மௌனமாய் பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

12

மறுநாள் எல்லோரும் ராஜலக்ஷ்மியின் வீட்டில் சந்தித்துக் கொண்டார்கள்.

''மேடம்... லோன் ஸாங்க்ஷன் செய்வதற்குத் தேவையான எல்லா பேப்பர்களையும் கொடுத்து விட்டேன். அப்படியிருந்தும் அந்த மானேஜர் பானுமூர்த்தி என்னுடைய புரபோசலை ஹெட் ஆஃபீசுக்கு அனுப்பாமல் பெண்டிங்கில் வைத்துவிட்டார். போகட்டும் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போய் விடுவார் என்று எதிர்பார்க்கவும் முடியாது. இப்பொழுதுதான் மாற்றலாகி வந்திருக்கிறார்...'' பிரசாத் புலம்பினான்.

''சாதாரணமாய் பானுமூர்த்தி அப்படிச் செய்ய



மாட்டானே, ரொம்ப நல்லவன். நீங்கதான் எங்கேயோ ஏதோ தவறு செய்திருக்க வேண்டும்.''

''நான் எந்த தவறும் செய்யவில்லை. ஒரு எம். எல். ஏ. விடமிருந்து போன் மூலமாய் ரெகமெண்ட் செய்ய வைத்தேன். அவ்வளவுதான்.''

''அதுதான் விஷயம். பானுமூர்த்திக்கு ரெகமெண்டேஷன் என்றால் சுத்தமாகப் பிடிக்காது. பேப்பர்கள் எல்லாம் சரியாக இருந்தால் தாமதம் செய்யாமல் ஹெட் ஆஃபீசுக்கு அனுப்பிவிடுவான்.''

''அட கடவுளே! அப்போ என்னுடைய புரபோசல் விஷயம் அவ்வளவுதானா?'' பிரசாத் சொன்னான்.

''பானுமூர்த்தி டிரெய்னிங்கிற்காக இந்த ஊருக்கு வரப்போகிறான். நீங்க தெரியாமல் செய்துவிட்ட தவறு இது என்று சொல்லிப் பார்க்கிறேன். வேலை முடிந்துவிடும் என்று உறுதி மொழி தரமுடியாது. அந்த நேரம் அவனுடைய மூட் சரியாக இருந்தால் காரியம் நடக்கலாம். கட்டாயம் நான் முயற்சி செய்கிறேன்.''

''ரொம்ப தாங்க்ஸ் மேடம். இந்த நாட்டில் யாருடன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ புரியவில்லை. சிபாரிசு இல்லையென்றால் சில இடங்களில் வேலையே ஆகாது. நம்மைக் கால்தூசுக்குச் சமமாய் பார்ப்பார்கள். சிபாரிசு செய்ய வைத்தாலோ ஸ்ட்ரிக்ட் ஆக இருக்கும் சில அதிகாரிகள் இதோ... இப்படி நம்மை அழ வைத்து விடுவார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு விரக்திதான் வருகிறது. அதான் விஜயிடம் எனக்கு இரண்டு ஏக்கர் நிலத்தை வாங்கிக் கொடுத்தால் உழுது சாகுபடி செய்து எப்படியோ பிழைத்துக்கொள்வேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்'' என்றான் பிரசாத்.

''அங்கே மட்டும் பாலிடிக்ஸ் இல்லையா? அறுப்பு நடக்கும் நேரத்தில் வெளியூரிலிருந்து கூலி ஆட்களை வரவழைத்துக் கொள்ளலாம் என்றால் உள்ளூர் ஆட்கள்

சம்மதிக்க மாட்டார்கள். இவர்களும் நேரத்திற்கு வர மாட்டார்கள். இக்கரைக்கு அக்கரை பச்சை. என்ன விஜய்! நான் சொல்வது சரிதானே?'' சிரித்துக்கொண்டே சொன்னாள் ராஜலக்ஷ்மி.

அன்று இரவு ராஜலக்ஷ்மி வீட்டில் எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். வங்கிகளில் இருக்கும் பாலிடிக்ஸ் பற்றி, நாட்டின் பொருளாதார சீர்கேட்டைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்ததில் இரண்டு மணி நேரம் எப்படி கழிந்ததென்றே தெரியவில்லை. விஜய், பிரசாத், ராதிகா சேர்ந்து வந்திருந்தார்கள்.

ராஜலக்ஷ்மியின் வீடு ரொம்ப நேர்த்தியாய், அழகாக இருந்தது.

''இந்த டெகரேஷன், நீட்நெஸ் எல்லாம் ஹேமாவுடையதுதான். எனக்கு அதில் பங்கு இல்லை. எடுத்த பொருளை அதே இடத்தில் வைக்கவில்லையென்றால் ஹேமா சும்மாயிருக்க மாட்டாள். எங்கள் வீட்டு ஹிட்லர் அவள்தான்'' என்றாள் ராஜலக்ஷ்மி.

''மம்மீ...!'' ஹேமா பொய்க் கோபத்துடன் பார்த்தாள்.

''ஓ.கே... ஓ.கே...'' ராஜலக்ஷ்மி சிரித்துவிட்டாள்.

அதற்குள் பூஜா விழித்துக்கொண்டு அழத் தொடங்கினாள். ராதிகா எழுந்து கொள்ளப் போனாள். ஏற்கனவே உண்டு முடித்துவிட்ட விஜய் அவளைத் தடுத்து விட்டுக் கையை அலம்பிக்கொண்டு பூஜாவைத் தூக்கிக் கொண்டான்.

அதற்குள் போன் ஒலித்தது.

ஹேமா போய் எடுத்தாள். ''மம்மி... உங்களுக்குத் தான்...'' என்று குரல் கொடுத்தாள். ராஜலக்ஷ்மி போய் ரிசீவரை எடுத்துக் கொண்டாள்.

விஜயினால் பூஜாவைச் சமாதானப்படுத்த முடிய



வில்லை. சின்னக் குழந்தையைச் சரியாகத் தூக்கவும் அவனுக்குத் தெரியவில்லை. ஹேமா அருகில் சென்று பூஜாவை எடுத்துக் கொண்டாள்.

ராதிகா, பிரசாத் உணவு மேஜையருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ராஜலக்ஷ்மி போனில் பேசிக் கொண்டிருந்தாள். விஜய் ஹேமா அவர்களுக்குச் சற்று தொலைவில் இருந்தார்கள்.

''நான்... நான் உங்களுடன் பேசவேண்டும்'' என்றான் விஜய்.

ஹேமா புருவங்களை உயர்த்தி வியப்புடன் பார்த்தாள்.

''நான்... செயினைக் கொண்டு வந்திருக்கிறேன்.''

ஹேமாவின் முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாய் தெரிந்தது. தோள்களை அலட்சியமாகக் குலுக்கிக் கொண்டு, ''கொடுத்து விடுங்கள்...'' என்று கையை நீட்டினாள்.

''ஊஹூம்... உங்களுடன் கொஞ்சம் பேசவேண்டும். பிறகு தருகிறேன்.''

ஹேமா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ப்ளீஸ்...!'' என்றான்.

ஹேமா அவனுடைய குரலையே கேட்டுக் கொண்டிருந்தாள். மந்த்ர ஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருந்த அவன் குரல் கேட்பதற்கு இனிமையாய் இருந்தது. அவன் அப்படி பேசும்போது அருகில் காலடியில் அமர்ந்துகொண்டு அவன் முழங்காலில் கன்னத்தை வைத்துக்கொண்டு, கண்களை மூடிய நிலையில் இன்னும் இன்னும் கேட்க வேண்டும் போல் இருந்தது.

சாதாரணமாய் அழகாய் இருப்பவர்கள்தான் மற்றவர்களால் சுலபமாக ஈர்க்கப்படுவார்கள். ஆனால் விஜய் விஷயம் வேறு. அவனுடைய தனித்தன்மை, கம்பீரமாய்

ஒலிக்கும் அந்தக் குரல் மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் முக்கியமான அம்சங்கள். இந்த விஷயம் அவளுக்குக் கர்ஃப்யூ நாள் அன்றே புரிந்துவிட்டது. அன்று முற்றிலும் பயந்து போயிருந்த சூழ்நிலையில் அவனுடன் நெருக்கமாய் இருந்த அந்த உணர்வு! அந்த நினைவுகளை அவளை ஒவ்வொரு இரவும் துரத்திக் கொண்டுதான் இருந்தன. அந்த நினைவுகள் அவனிடம் அன்பை, விருப்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்தன.

விஜயை அவள் அதற்குப் பிறகு மறுபடியும் பார்க்கவில்லை. பேசவில்லை. குறைந்தபட்சம் மரியாதைக்காகக்கூட ஒரு வாழ்த்து மடலோ, கடிதமோ அனுப்பவில்லை. வேண்டுமென்றே ரொம்ப நாட்கள் வரை செயினுக்காகப் பணத்தை அனுப்பாமல் தாமதம் செய்தாள். அவனும் செயினை அனுப்பவில்லை. ஹேமாவின் மனதில் ஏதோ ஆசை துளிர்விட்டுக் கொண்டிருந்தது. பிறகு டி.டி. எடுத்து ராதிகாவுக்கு அனுப்பினாள். ஹேமாவால் சஸ்பென்ஸை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. செயினாவது திரும்பி வர வேண்டும். ஹேமா எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் எதிர்பார்க்காதது நடந்தது. இரண்டுமே திரும்பி வரவில்லை. விஜய் மனதில் என்ன இருக்கிறதென்று ஹேமாவால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் மனதில் அவனிடம் ஏற்பட்ட அன்பும், அபிமானமும் கொஞ்சம்கூடக் குறையவில்லை. செயின் விஷயம் ரொம்ப சின்னதாகத் தோன்றியது.

விஜய் என்றால் தனக்கு ரொம்ப பிடிக்கும். அவனுடன் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ள முடிந்தால் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைவிட தன்னைவிட அதிர்ஷ்டசாலி யாரும் இருக்கமாட்டார்கள் என்ற உணர்வுதான் மேலோங்கியது.

அவன் இருக்கும் கிராமத்திற்கு நேராகப் போய் அவனைச் சந்தித்தால் என்ன என்றுகூட சிலசமயம் அவளுக்குத் தோன்றியது உண்டு.



விஜய் எங்கேயோ நூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிறான் என்று அவளுக்குத் தோன்றவில்லை. தன் அருகிலேயே இருப்பது போன்ற உணர்வு.

ஹேமாவுக்குத் தன்னுடைய நிலை என்னவென்று புரிபடவில்லை. ''நினைவு வேறு எங்கேயோ இருப்பது போல் நடந்துகொள்கிறாயே... ஏன்?'' என்று விஜய்கேட்டபோது அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

தாயிடம் விஜய் பற்றி அதிகமாகச் சொல்லவில்லை. ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிய இளைஞன் என்று சொன்னதுடன் நிறுத்திக் கொண்டாள். அவனைப் பற்றி தாயிடம் அடிக்கடி பிரஸ்தாபிப்பதை அவள் விரும்பவில்லை. ஏன் என்றால் எத்தனை கஷ்டமானதாக இருந்தாலும் சரி, எதையும் பொருட்படுத்தாமல் மகளின் விருப்பத்தை நிறைவேற்ற துடிக்கும் தாய், இந்த விஷயம் தெரிந்தால் நேராக விஜய் இருக்கும் கிராமத்திற்குச் சென்று தீட்சிதரிடம் பேசி முடித்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பாள்.

நாள் முழுவதும் விஜய் பற்றியே யோசித்துக் கொண்டிருந்த ஹேமாவுக்கு விஜய் ஏற்கனவே தாய்க்கு நன்றாகத் தெரிந்தவனாக இருப்பது, தாய் அவனையும் டின்னருக்கு அழைத்தது, அவனும் மறுக்காமல் வீட்டுக்கு வந்தது... எல்லாமாய் சேர்ந்து அவளுடைய மகிழ்ச்சியைக் கட்டுக்கு அடங்காமல் செய்துவிட்டன. தோகை விரித்தாடும் மயிலைப் போல் அவள் மனம் முழுவதும் உற்சாகம் நிரம்பியிருந்தது.

'நாமிருவரும் மறுபடியும் சந்தித்துக் கொள்ளப் போவதில்லை' என்று கொஞ்சம்கூட தயக்கமில்லாமல் சொன்ன பெரிய மனிதன், தான் அழைக்காமலேயே தன்னுடைய வீட்டுக்கு வந்ததோடு, தன் கையால் பரிமாறிய உணவையும் சாப்பிட்டிருக்கிறான்.

"பூஜாவைப் பார்க்கும்போது உங்களுக்கு எதுவும் நினைவுக்கு வரவில்லையா?" குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டாள்.

விஜய் பூஜாவைப் பார்த்தான். அவன் பார்வை மறுபடியும் ஹேமாவின் மீது படிந்தது. அன்று இரவு ஏற்பட்ட அனுபவம் அவன் கண்களில் அலையைப் போல் முன்னால் வர முயன்று, மௌனத் திரையின் பின்னால் மறைந்து விட்டது.

அந்த நிமிடம் ஹேமாவுக்குத் தோன்றியது. 'இவன் எங்கள் எல்லோரையும் போல் இல்லை. மனதில் என்ன இருக்கிறதென்று எதிராளிக்குத் தெரியாத விதமாய் நடந்து கொள்வது இவனுக்குக் கைவந்த கலை. மனதை எப்போதும் கம்பீரம் என்ற திரையினால் மூடி மறைத்து விடுகிறான்.'

"என்ன விஜய்! அங்கேயே நின்று விட்டாய்... வா... வந்து உட்கார்ந்து கொள்." ராஜலக்ஷ்மி அழைத்தாள்.

"இனி நாங்க கிளம்புகிறோம்" என்றான் பிரசாத்.

ராதிகா குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்.

"பிரசாத்... நாம் மறுபடியும் சந்திப்போம். உங்களுடைய லோன் விஷயமாகப் பானுமூர்த்தியிடம் பேசுகிறேன்" என்றாள் ராஜலக்ஷ்மி.

"தாங்க்யூ மேடம்." பிரசாத் சொன்னான்.

"நீங்களும் ஹேமாவும் ஹைதராபாத்துக்கு வந்தால் கட்டாயம் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்." ராதிகா சொன்னாள்.

"விஜய்! நாங்கள் ராதிகாவின் சித்தப்பா வீட்டுக்குப் போகப் போகிறோம். நீ...?" பிரசாத் கேட்டான்.

"விஜய் இன்னும் கொஞ்ச நேரம் இருப்பான். அவனை நாங்க ட்ராப் செய்கிறோம்" என்றாள் ராஜலக்ஷ்மி.



பிரசாத், ராதிகா கிளம்பிப் போய் விட்டார்கள். "வா விஜய்... வந்து உட்கார்ந்து கொள்." ராஜலக்ஷ்மி சொன்னாள்.

விஜய் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"இன்று எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. ஹேமாவைக் காப்பாற்றியவன் நீதான் என்று கனவில் கூட நான் நினைக்கவில்லை. நான் என்ன செய்தாலும் இந்த நன்றிக்கடனைத் தீர்த்துக்கொள்ள முடியாது. தாத்தா எப்படி இருக்கிறார்? நிலம் ஏதாவது வாங்கினீர்களா?" அன்பு ததும்பும் குரலில் கேட்டாள் ராஜலக்ஷ்மி.

விஜய் தனக்கு ஏற்பட்ட பிரச்னையைப் பற்றிச் சொன்னான். அந்த அம்மாளும் கவனமாகக் கேட்டுக் கொண்டாள்.

"எனக்குத் தெரிந்த விஜயசாமுண்டேஸ்வரி கோ - ஆபரேடிவ் அர்பன் வங்கி இருக்கிறது. அங்கே அப்ளிகேஷனைக் கொடு. அது தனியார் வங்கி. நீயும் மாதா மாதம் தவணைகளை நேரத்திற்குள் கட்டி விடுவாய் என்பதால் பிரச்னை எதுவும் இருக்காது. பெனால்டியுடன் தவணையைச் செலுத்துவதற்கு ஒரு மாதத்தைவிட அதிக அவகாசம் தரமாட்டார்கள். நேராக வந்து சொத்தை ஜப்தி செய்து விடுவார்கள்."

"அந்த பிரச்னையே வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன் மேடம்" என்றான் விஜய்.

"உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா... நான் உங்க ஊர் வங்கியில் பிராஞ்ச் மானேஜராக இருந்தபோது எடுத்துக் கொண்ட லோனுக்குக் காலம் தாழ்த்தாமல் தவணைகளைக் கச்சிதமாகச் செலுத்தி வந்தவன்தானே. உன் விஷயத்தில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அந்த வங்கி மானேஜர் நாராயண சுவாமிக்கு அறிமுகக் கடிதம் ஒன்று எழுதி தருகிறேன். போனதும் அப்ளிகேஷனைப் போட்டு விடு. இது மட்டுமே இல்லை. வேறு எந்த உதவி

தேவையாக இருந்தாலும் தயங்காமல் என்னிடம் கேள்.'' ராஜலக்ஷ்மி மேஜை அருகில் சென்று கடிதத்தை எழுதிக் கொடுத்தாள்.

''தாங்க்யூ மேடம்'' என்றான் விஜய்.

''ஊஹூம். அப்படிச் சொல்லாதே. நான் எத்தனை செய்தாலும் குறைச்சல்தான். ஹேமாவுக்கு நீ செய்த உதவிக்கு இந்த ஜென்மத்தில் என்னால் ஈடு செய்ய முடியாது.'' அவள் கண்கள் பனித்தன.

விஜய் கிளம்புவதற்காக எழுந்து கொண்டான்.

''அப்ளிகேஷனைப் போட்டதும் எனக்கும் ஒரு காப்பியைத் தபாலில் அனுப்பிவிடு.''

''அப்படியே செய்கிறேன் மேடம்.''

விஜய் கிளம்பும்போது ராஜலக்ஷ்மி கடியாரத்தைப் பார்த்துவிட்டு ''இரவு 10-30 மணி ஆகிவிட்டது. ஹேமா இப்போ நைட் ட்யூட்டிக்காக நர்ஸிங் ஹோமுக்கு எப்படியும் போகப் போகிறாள். உன்னை வழியில் டாக்ஸி ஸ்டாண்டில் இறக்கிவிடச் சொல்கிறேன். என்ன ஹேமா... சரிதானே?''

''ஓ. கே. மம்மி...'' என்றாள் ஹேமா.

ஹேமா கார் சாவியை எடுத்து வந்தாள்.

''குட்நைட் மம்மி'' என்றாள்.

''போய் வருகிறேன் மேடம்...'' விஜய் கைகளைக் கூப்பி வணங்கினான்.

ஹேமா காரேஜ்லிருந்து காரை வெளியில் எடுத்தாள். விஜய் பின்னால் இருந்த கதவைத் திறக்கப் போனான். அவனுடன் பேசிக் கொண்டே வழியனுப்ப வந்த ராஜலக்ஷ்மி முன் பக்க கதவைத் திறந்து கொண்டே ''முன்னால் உட்கார்ந்து கொள் விஜய்'' என்றாள். விஜய் உட்கார்ந்து கொண்டதும் கார் நகர்ந்தது.



# 13

நிலவின் ஒளியில் ஊர் முழுவதும் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது. வானத்தில் மேகங்கள் நிலாவோடு கண்ணா மூச்சி விளையாடிக் கொண்டிருந்தன. ஹேமா டிரைவ் செய்து கொண்டிருந்த கார் கடற்கரைச் சாலையில் வேகமாய் போய்க் கொண்டிருந்தது. கார் கிளம்பியதிலிருந்து ஹேமா, விஜய் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. விஜய் பேசினால் தவிர தானாகப் பேசக் கூடாது என்று ஹேமா முடிவு செய்திருந்தாள். விஜய் ஏதோ நினைவில் வெளியில் பார்த்துக் கொண்டு இருந்தான். அரிதாகக் கிடைத்த தனிமை! விஜய் எதையும் பொருட்படுத்தாதவன் போல் அப்படி மௌனமாய் இருந்தது ஹேமாவின் மனதிற்கு வேதனையை அளித்தது. பேச வேண்டும் என்று சொன்ன பெரிய மனிதன் அரை மணி நேரமாய் இந்த உலகிலேயே இல்லாததுபோல் உட்கார்ந்திருக்கிறான். அவன் மனதில் என்னதான் இருக்கிறது? என்ன செய்வதென்று ஹேமாவுக்குப் புரியவில்லை.

கார் சாலை ஓரமாய் நின்றது. தொலைவில் ஆங்காங்கே சில கார்கள் பார்க் செய்யப்பட்டு இருந்தன. காரின் பானெட் மீது நிலவின் ஒளி பிரதிபலித்துக் கொண்டிருந்தது. மேகக் கூட்டம் ஒன்று நிலவின் ஒளியைத் துரத்திக் கொண்டிருந்தது. தொலைவிலிருந்து வரும் கடல் அலைகளின் ஓசை சூழ்நிலையின் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தது.

கார் நின்றதும் விஜய் திடுக்கிட்டவன் போல் பார்த்தான். ''இதென்ன? கார் இங்கே நிற்கிறது?'' என்றான்.

''நீங்க என்னுடன் பேசவேண்டுமென்று சொன்னீர்களே?'' என்றாள்.

அவன் ஒரு நிமிடம் மௌனமாய் இருந்தான்.

ஹேமாவும் இருபங்கு மௌனத்துடன் பானெட் மீது பிரதிபலித்துக் கொண்டிருந்த நிலா வெளிச்சத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் சட்டைப் பையிலிருந்து பாக்கெட்டை எடுத்தான்.

ஹேமா தலையைத் திருப்பி விஜய் பக்கம் பார்க்கா விட்டாலும் ஏதோ நகைப் பெட்டியை நகத்தால் நெம்பி திறப்பதை உணர முடிந்தது.

விஜயின் உள்ளங்கை ஹேமாவின் முன்னால் நீண்டது. ஹேமா பார்வையைத் தாழ்த்திக் கொண்டு பார்த்தாள். அவன் உள்ளங்கையின் நடுவில் திறந்த வாக்கில் சின்ன நகைப் பெட்டி இருந்தது. அதில் செயின் ஒன்று பளபளத்துக் கொண்டிருந்தது.

ஹேமா பார்த்துக் கொண்டே இருந்தாள். அவன் எதுவும் பேசவில்லை.

''என்ன இது?'' கேட்டாள்.

''செயின்.''

''என்னுடைய செயினை என்னிடம் தந்துவிடப் போகிறீர்கள். இத்துடன் நம்முடைய அறிமுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாற்போல்தானா?'' என்றாள். அவன் இப்படி மௌனமாய் திருப்பித் தருவது அவளுக்கு ஏனோ பிடிக்கவில்லை.

''செயினை தருகிறேன். ஆனால் இது உங்களுடைய செயின் இல்லை.'' அவனுடைய குரல் கொஞ்சம் கூட தடுமாற்றமில்லாமல் தெளிவாய் ஒலித்தது.

ஹேமா அவன் பக்கம் திரும்பி, புரியாதவள் போல் பார்த்தாள்.

''செயின் என்னுடையது இல்லையா?'' வியப்புடன் கேட்டாள்.



இல்லை என்பது போல் தலையை அசைத்தான்.

''வேடிக்கையாக இருக்கிறதே...'' ஹேமா அவன் கையிலிருந்து நகையை எடுத்துக் கொண்டு பார்த்தாள். நிஜம்தான். அது அவளுடையது இல்லை. அதைவிட பெரிதாக, புதிய மெருகுடன் ஜொலித்துக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியாய் உள்ளே வந்த நிலவின் ஒளி செயினை முத்தமிட்டு விலகியது.

''ஆமாம். இது வேறே செயின்தான்.'' அவனுடைய முகத்தை ஆழமாய் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''ஆமாம்.'' அவன் சாலையைப் பார்த்துக்கொண்டே பதில் சொன்னான்.

''புதுசா?''

''ஆமாம்.''

''எனக்காக வாங்கினீர்களா?'' ஹேமாவின் மனதில் மகிழ்ச்சி அலையைப்போல் பொங்கியது.

''ஆமாம்.''

''எதற்காக?'' மனதில் இருந்த மகிழ்ச்சி அவள் கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அவன் உடனே பதில் சொல்லவில்லை.

ஹேமா அவனையே பிரமிப்பு கலந்த மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனும் தலையைத் திருப்பி ஹேமாவின் முகத்தை ஆழமாக நோக்கினான்.

''சொல்லு விஜய்! என்ன இது?''

''சாரி...''

''எதற்கு?''

''உன்னுடைய செயின் தொலைந்து போய்விட்டது. ரொம்ப துரதிர்ஷ்டம்! அதற்குப் பதிலாக இதைக் கொடுக்கிறேன்.''

ஹேமாவுக்கு அவன் சொன்னது புரியவில்லை.

''என்னது?'' என்றாள்.

''இதுவும் கிட்டத்தட்ட அதே டிசைன்தான். எவ்வளவு முயற்சி செய்தாலும் அதே டிசைன் உள்ள செயின் கிடைக்கவில்லை.''

''என்னுடைய செயின் என்னவாச்சு?''

''தொலைந்துவிட்டது. எப்படி தொலைந்தது என்று மட்டும் கேட்காதே. நான் வேண்டுமென்று தொலைக்கவில்லை!'' தாழ்ந்த குரலில் சொன்னான்.

ஹேமாவுக்கு லேசாக விஷயம் புரியத் தொடங்கியது.

''அந்த செயின் தொலைந்து விட்டதற்காக இதைத் தருகிறீர்களா?'' என்றாள்.

''ஆமாம். தவறாக நினைத்துக் கொள்ளாதே. இப்படி நடந்ததற்கு நான் ரொம்ப...'' பாதியிலேயே நிறுத்தி விட்டான். அவன் குரலில் வேதனை, இயலாமை, பச்சாத்தாபம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ஹேமா அந்த செயினை ஒரு நிமிடம் ஆழ்ந்து நோக்கினாள். அடுத்த நிமிடம் உடலில் இருக்கும் சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டு அந்த நகையை வெளியில் வீசி எறிந்தாள்.

அக்னிக் குழம்பைப் போல் குரல் வளையத்திலிருந்து வெளியேற துடித்துக் கொண்டிருந்த துக்கத்தைக் கட்டுப்படுத்த மூச்சை உள்ளே அடக்க முயன்றாள். ஆனால் சாத்தியப்படவில்லை! ஏமாற்றம்! எதிர்பாராத போது யாரோ பின் முதுகில் கத்தியால் குத்திய வேதனை! தன்னால் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லையே என்ற இயலாமை! துக்கம் தொண்டையை அடைக்க உள்ளங் கையால் கழுத்தின் மீது பலமாக அழுத்திக் கொண்டாள்.

ஹேமாவின் மனதில் அலைபோல் எழும்பிய உணர்வுகளை விஜயினால் புரிந்துகொள்ள முடிந்தது.



அவன் எதுவும் சொல்லவில்லை. ஒரு நிமிடம் சலனமற்று அப்படியே உட்கார்ந்திருந்தான். பிறகு கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான்.

நிலா வெளிச்சத்தில் மணலில் செயினுக்காக தேடினான். ஹேமாவுக்குக் காரை ஸ்டார்ட் செய்து உடனே அந்த இடத்தை விட்டுப் போய் விடவேண்டும் என்று தோன்றியது. ஆனால் போக முடியவில்லை. கை கால்கள் செயல்களை மறந்து விட்டதுபோல் சலனமற்று இருந்தன. சக்தியைத் திரட்டிக் கொள்ள முயன்றாள்.

விஜய்க்கு செயின் கிடைத்துவிட்டது. செயினில் ஒட்டிக்கொண்ட மணலைத் தட்டிவிட்டு சட்டைப்பையில் வைத்துக் கொண்டே வந்தான். அதற்கு முன்பே ஹேமா காரை ஸ்டார்ட் செய்துவிட்டாள். அவன் கை நீண்டு வந்து ஹேமாவின் கையைப் பற்றிக் காரை நிறுத்தியது.

ஹேமா அவன் கையை வேகமாய் தள்ளிவிட்டாள்.

''ப்ளீஸ்!'' அவன் குரலில் இயலாமை, வேதனைக் மறைமுகமாக வெளிப்பட்டன.

ஹேமா ஆவேசமாக சொன்னாள். ''நீங்க செயினை கொடுக்காமல் இருந்திருந்தாலும் பரவாயில்லை. என்னிடம் இந்த விஷயத்தைச் சொல்லாமல் இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.''

''சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று நினைத்தேன்'' என்றான்.

''எனக்கு நகை முக்கியமில்லை!'' ஹேமாவின் குரல் கோபமாய் ஒலித்தது.

ஒரு நிமிடம் மௌனம். ''எனக்குத் தெரியும்'' என்றான்.

''உங்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இப்படி இன்னொரு செயினை கொடுத்துவிட்டுக் கடமை முடிந்தது

என்பதுபோல் நடந்து கொண்டிருக்க மாட்டீர்கள். அன்று நாம் இனி எப்பொழுதும் சந்தித்துக் கொள்ளப் போவதில்லை என்றும் சொல்லியிருக்க மாட்டீர்கள்.''

அவன் பேசவில்லை. மறுக்கவில்லை. அவளைத் தேற்றுவதற்கு முயற்சி செய்யவில்லை. ஹேமாவுக்கு அழுகை பொங்கிக்கொண்டு வந்தது. இப்பொழுதாவது அவள தன் மனதில் இருப்பதைப் புரிந்து கொண்டதுபோல் பேசவில்லையே. அதே மௌனம். அந்த மௌனம் எதிராளிக்குக் கடினமான தண்டனையாக இருக்குமென்று அவன் உணர்ந்து கொள்ளவில்லை.

திடீரென்று ஹேமா சொல்லத் தொடங்கினாள். ''நம்முடைய அறிமுகத்தை என்னால் மறக்க முடியவில்லை. உங்களை எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது. எதனால் என்று கேட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது. இதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது. அதைப் பற்றி நான் யோசிக்கவும் இல்லை. சின்ன வயதிலிருந்தே என்னுடைய விருப்பு வெறுப்புகளை வெளிப்படையாக, எந்த தயக்கமும் இல்லாமல் சொல்லும் பழக்கம் எனக்கு இருக்கிறது. என்னுடைய அம்மா என்னை வளர்த்த விதம் அப்படி. நான் உங்களுடன் என்ன பேசுகிறேன் என்று நன்றாக உணர்ந்துதான் பேசுகிறேன். நீங்கள் உங்கள் வாயால் சொன்னால் கேட்டு நான் மகிழ்ச்சி அடைய வேண்டிய வார்த்தைகளை நான் உங்களிடம் சொல்கிறேன். உணர்ச்சி வசப்பட்டு நான் எதுவும் சொல்லவில்லை. எனக்குத் தெரியும். நான் சாதாரணமான பெண் இல்லை. படித்திருக்கிறேன். டாக்டராக வேலை பார்க்கிறேன். மனிதர்களின் விருப்பு, வெறுப்புகளை, அவர்களுடைய நடவடிக்கைகளை என்னால் புரிந்து கொள்ள முடியும். என்னிடம் உங்களுக்கு வெறுப்பு இல்லை என்று புரிந்து கொண்டேன். உங்கள் மனதில் இருப்பதை அந்த கடவுளே வந்தால்கூட சொல்ல வைக்க முடியாது என்றும் புரிந்துகொண்டேன். என்னால்



உங்களை மறக்கவே முடியவில்லை. அன்று கர்ஃப்யூ இருந்த இரவு... பூஜா பிறந்த சமயம்... அதன்பிறகு உங்களுக்கு அடிபட்டு ஜுரம் வந்தது... இவைதான் அடிக்கடி நினைவுக்கு வருகின்றன. உங்களை எனக்கு எப்பொழுதிலிருந்தோ தெரியும் என்பது போல் தோன்றுகிறது. இத்தனை நாள் நான் உங்களை விட்டுத் தொலைவாக எதற்காக இருக்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை.'' மடை திறந்ததுபோல் சொல்லிக் கொண்டிருந்த ஹேமா திடீரென்று நிறுத்தினாள். இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு ''ஓ...காட்! நான் எவ்வளவு முட்டாள்தனமாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். ச்சீ...ச்சீ'' ஹேமா திடீரென்று கார் கதவைத் திறந்து கொண்டு வேகமாகத் தொலைவுக்குப் போய் விட்டாள்.

விஜய் கற்சிலையாக உட்கார்ந்திருந்தான். அவன் தாடை எலும்பு முறுக்கேறிக் கொண்டது. அவனையும் அறியாமல் பெருமூச்சு ஒன்று வெளியில் வந்தது.

அவன் ஒரு முடிவுக்கு வந்தவன்போல் காரை விட்டு இறங்கினான். கார் கதவைச் சாத்திவிட்டு அப்படியே நின்றான். மேகங்களை ஜெயித்து விட்டதுபோல் நிலா வெளிச்சம் எங்கும் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது.

ஹேமா தொலைவில் கடற்கரையில் கற்பாறை ஒன்றின்மீது முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

இரண்டு நிமிடங்கள் கழிந்தன. ஹேமாவின் தலைமீது கை ஒன்று படிந்தது. தலையை உயர்த்திப் பார்த்தாள்.

எதிரே நிலா வெளிச்சத்தில் விஜய்!

ஹேமா விருட்டென்று அவன் கையைத் தள்ளிவிடப் போனாள். அவன் தன் கையை அசைய விடவில்லை.

''ஹேமா!'' முதல்முறையாக அவன் அவளைப் பெயரைச் சொல்லி அழைத்தான்.

''வீட்டுக்குப் போகலாம்... வா!'' நயமாக அழைத்தான்.

''நான் வரவில்லை. நீங்க போங்க.'' தலையைக் குனிந்து கொண்டாள்.

''ப்ளீஸ்.'' அவன் குரலில் வேண்டுகோள் இருந்தது.

''ஐ... ஹேட் மை செல்ஃப்...ச்சீ...ச்சீ!'' ஹேமாவின் குரலில் அபிமானமும் துக்கமும் போட்டியிட்டன.

அவன் பக்கத்தில் அமர்ந்துகொண்டான்.

''மைகாட்... நான்... நான்...'' அவள் குரலில் சுய கௌரவம் வெள்ளம்போல் பொங்கிக் கொண்டு வந்தது.

விஜய் ஹேமாவின் தலையை தன் அருகில் இழுத்துக் கொண்டான்.

ஹேமா அவனிடமிருந்து விடுபடுவதற்காகப் போராடிக் கொண்டிருந்தாள்.

''கொஞ்சம்கூட வெட்கம் இல்லாமல் சொல்லி விட்டேன்.'' ஹேமா இன்னும் ஏதோ சொல்லப் போனாள். விஜய் சுட்டுவிரலை உதட்டின் மீது வைத்துத் தடுத்தான். ''உன்னால் மனிதர்களை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். அப்படித்தானே. உனக்குத் தெரிந்த விஷயத்தை நான் மறுபடியும் சொல்லத்தான் வேண்டுமா?'' விஜய் கைகள் ஹேமாவின் தோள்களைச் சுற்றிப் படிந்தன. ஹேமாவின் முகம் அவன் மார்பில் பட்டுக் கொண்டிருந்தது. இருவரும் மௌனமாய் ஒரே சிலையைப் போல் இருந்து விட்டார்கள். அவன் வாயால் சொல்லாத உணர்வுகள் எல்லாம் அவன் ஸ்பரிசத்தின் மூலமாய் அவளுடைய இதயத்திற்குள் பிரவகித்துக் கொண்டிருந்தன. அவன் தன்னுடையவன் என்று அவளுக்குப் புரிந்து விட்டது. அவனுடைய அணைப்பில் எல்லையில்லாத மகிழ்ச்சி... சுகம்... திருப்தி. இந்த உலகில் வேறு எந்த



சந்தோஷமும் இந்த அபூர்வமான மகிழ்ச்சிக்கு ஈடாகாது. அதனால்தான் என்னவோ, பெண்ணாகப் பிறந்தவள் தான் விரும்பியவனுக்காக வாழ்க்கையில் எதையும் விட்டுக் கொடுப்பாள். அந்த நெருக்கத்திலும் அவனிடம் ஏதோ மதிப்பும், கம்பீரமும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. அது பிறவியிலேயே ஏற்பட்ட பண்பு! ஹேமா ரொம்ப விருப்பமாய் அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''என்னால் இனி உங்களைவிட்டு இருக்க முடியாது.'' ஹேமா தன் மனதில் இருப்பதை வெளிப்படையாக சொல்லி விட்டாள்.

''என்னைப் போன்றவனை விரும்பினால் கஷ்டங்களை விலை கொடுத்து வாங்குவதுபோல்தான். உனக்கு விருப்பமான வாழ்க்கையை என்னால் கொடுக்கமுடியுமா?'' சந்தேகத்தை வெளிப்படுத்தினான்.

''என்னுடைய அம்மாவிடம் கேளுங்கள். சொல்வாள். நான் ரொம்ப அல்ப சந்தோஷி.''

ஹேமாவுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. அவன் மனதில் இருந்த மௌனச்சுவரை இடித்துவிட்டாள். விஜய் வெளிப்படையாகப் பேசுகிறான். தன் மனதில் இருப்பதை ஒப்புக் கொண்டு விட்டான். ''விஜய்! இனியும் என்னைத் தொலைவில் இரு என்று சொல்லி விடாதே. உன் அருகில் இருந்தால் எத்தனை கஷ்டங்களை வேண்டுமானாலும் என்னால் எதிர்கொள்ள முடியும். உன்னை விட்டுப் பிரிந்திருக்கும் இந்த வேதனை உலகத்தில் எல்லா வேதனைகளை விட பெரியது. அம்மாவிடம் பேசு. நம் விருப்பத்தை மறுக்க மாட்டாள். அம்மாவுக்கு உன்னிடம் மதிப்பும் மரியாதையும் அதிகம். நான் உன்னுடையவள். இனிமேல் உன் பிரச்னைகளும் என்னைச் சேர்ந்தவை.''

ஹேமா இப்படி சொன்னதும் விஜய் இருகரங்களால் அவள் முகத்தை ஏந்திக் கொண்டான். நிலா வெளிச்சத்தில் ஹேமாவின் முகம் மகிழ்ச்சியால் ஒளி வீசிக் கொண் டிருந்தது. அவன் ஹேமாவின் கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்தான். அவள் மனதிலிருப்பதைக் கண்ணாடி யைப்போல் அந்த கண்கள் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

அவன் ஹேமாவை மேலும் இறுக அணைத்துக் கொண்டான்.

''ஹேமா!'' அவன் குரல் கம்பீரமாய் ஒலித்தது.

''ஊம்.''

''நாம் திருமணம் செய்து கொள்வதற்குக் கொஞ்சம் நாள் ஆகும்.''

''சரி.''

''அது வரையில் நம்முடைய அறிமுகம் யாருக்கும் வெளியில் தெரிய வேண்டாம்.''

''அப்படியே.''

''நான் அருகில் இல்லாவிட்டால், கண்ணில் தென்படா விட்டால் கோபப்படக் கூடாது.''

''ஊஹூம், கோபப்பட மாட்டேன்.''

அவன் இதழ்கள் அவள் நெற்றியில் மென்மையாகப் பதிந்தன.

ஹேமா திடீரென்று அவன் கழுத்தைச் சுற்றிலும் கைகளை மாலையாகப் போட்டுக் கொண்டு முகத்தை உயர்த்தினாள்.

சற்று நேரம் கழித்து கார் கடற்கரைச் சாலையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தது.

விஜய் டிரைவ் செய்து கொண்டிருந்தான். ஹேமா பக்கத்தில் அமர்ந்து கொண்டிருந்தாள். விஜயின் கை ஹேமாவின் கையைப் பற்றியிருந்தது.



ஹேமா அடிக்கடி கழுத்தில் இருந்த செயினை கையால் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். நடு நடுவில் விஜயைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜயும் தலையைத் திருப்பிப் பார்த்தான். அவனுக்குப் புரிந்தது. கடவுள் தன்பால் கருணைகாட்டி மென்மையான ஒரு இதயத்தை தனக்கு வரமாகக் கொடுத்திருக்கிறார். தான் இத்தனை அதிர்ஷ்டக்காரன் என்று கனவில்கூட நினைக்கவில்லை. ஆனால்... ஆனால் துரதிர்ஷ்டமும் தன்னை விடவில்லை. விஜய் பெருமூச்சு விடுத்தான்.

## 14

''விஜய்!'' பின்னாலிருந்து யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

அறையில் மேஜையருகில் உட்கார்ந்து கொண்டு வங்கிக்கு அனுப்ப வேண்டிய செக்குகளை எழுதிக் கொண் டிருந்த விஜய் தலையைத் திருப்பிப் பார்த்தான். எதிரே நிலைப்படியருகில் தீட்சிதர் நின்றிருந்தார். விஜய் எழுதிக் கொண்டிருந்ததை நிறுத்தி விட்டான். பேனாவை மூடி விட்டு எழுந்து நின்று கொண்டான்.

தீட்சிதர் உள்ளே வந்தார்.

''என்ன செக் அது?'' மேஜைமீது இருந்த செக் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டார்.

''வங்கிக்கு அனுப்ப வேண்டிய தவணைக்கான செக்.''

உள்ளே வந்தவர் கட்டில் மீது அமர்ந்து கொண்டார். தோளிலிருந்து நழுவப் போன அங்கவஸ்திரத்தைச் சரியாக போட்டுக் கொண்டே ''உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டுமென்று வந்தேன்'' என்றார்.

விஜய் உட்கார்ந்து கொண்டான். அவன் முகம் எப்பொழுதும் போலவே கம்பீரமாய் இருந்தது.

''எனக்கும் வயதாகி விட்டது. ஆனந்தைப் பார்த்தால் உடல்நலம் சரியில்லாதவன்.''

விஜய் கேட்டுக் கொண்டிருந்தான்.

''இந்த வீட்டு விவகாரங்களைப் பார்த்துக் கொள்வதற்காக ஒரு மானேஜரைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறேன்.''

விஜய் பேசவில்லை. அவன் முகத்தில் கம்பீரம் கொஞ்சம்கூட குறையவில்லை. கையிலிருந்த பேனாவை மேஜை மீது செக் புத்தகத்தின் பக்கத்தில் வைத்து விட்டான்.

அவர் விஜய் முகத்தையே கவனமாகப் பரிசீலித்துக் கொண்டிருந்தார். அவர் எதிர்பார்த்தது போல் திடுக்கிடலோ, கோபமோ, வியப்போ எதுவும் அந்த முகத்தில் தென்படவில்லை.

''பதினெட்டு வருடங்களாக நீ எனக்கு இந்த வீட்டுப் பொறுப்புகளில் முக்கியமாக ஆனந்த் விஷயத்தில் ரொம்ப உறுதுணையாக இருந்து வந்தாய். ஆனந்த் பெரியவனாகி விட்டான். நீயும் ஒரு நிலைக்கு வந்து விட்டாய். என்னால் முடிந்த வரையில் உன்னை நன்றாகவே கவனித்து வந்தேன். எம். ஏ. வரையில் படிப்பு சொல்லிக் கொடுத்தேன். இத்தனை நாள் உணவுக்கும், உடைக்கும் குறையில்லாமல் பார்த்துக் கொண்டேன்.''

இந்தச் சொற்களைக் கேட்டதும் விஜய்க்கு ஏனோ விஷத்தை விழுங்குவது போல் வேதனை ஏற்பட்டது.

தீட்சிதர் சமயம் பார்த்து நடுநடுவில் இந்த வார்த்தையை நினைவுப்படுத்திக் கொண்டே இருப்பார்.

''உன்னைப் பற்றிய என் கடமை முடிந்தது. அதே போல் இந்த வீட்டைப் பொறுத்த வரையிலும், ஆனந்த் பொறுத்த வரையிலும் உன் கடமை முடிந்து விட்டது. நீ மட்டும் எத்தனை நாட்களுக்கு இந்த வீட்டுக்காக உன்



வாழ்க்கையைத் தாரை வார்ப்பாய்? உன் வாழ்க்கையை நீ பார்த்துக் கொள்ள வேண்டும். ஏதோ பெரியவன் என்ற முறையில் நான் இருப்பதால் இன்னி வரையில் ஓடி விட்டது. நாளைக்கு ஆனந்துக்குத் திருமணம் ஆகி விட்டால் ஏதாவது பிரச்னைகள் வரலாம். அதனால் முன்னாடியே...'' அவர் ஒரு நிமிடம் நிறுத்தினார்.

விஜய் காத்திருந்தான்.

''நீயும் ஒரு வழியைப் பார்த்துக் கொள்வது நல்லது. என்ன சொல்கிறாய்?''

''ஆனந்திடம் ஒருமுறை பேசிவிட்டு...'' விஜய் சொல்லிக் கொண்டிருந்தபோதே அவர் விருட்டென்று எழுந்தார்.

''அதோ... அந்த வார்த்தைதான் எனக்குப் பிடிக்கவில்லை. நீ இல்லாவிட்டால் தான் உயிரோடு இருக்க முடியாது என்ற அளவுக்கு ஆனந்த் மீது உன் பாதிப்பை ஏற்படுத்தி விட்டாய். ஒவ்வொரு விஷயத்தையும் உன்னிடம் கேட்டுக் கொண்டுதான் செய்ய வேண்டும் என்று சொல்வான். நீ இல்லாமல் இருக்க முடியாது என்பான். விஷயம் தெரிந்தால் உன்னை வாசற்படியைத் தாண்டவிட மாட்டான்.''

அவர் வாயிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த சொற்கள் இடிமுழக்கம் போல் ஒலித்துக் கொண்டிருந்தன. நழுவப் போன அங்கவஸ்திரத்தை வேகமாய் மேலே இழுத்துக்கொண்டு ''இதில் ஆனந்தின் பிரஸ்தாபனையே இல்லை. உன்னை இந்த வீட்டிலிருந்து போகச் சொல்வதும் ஆனந்தின் நலத்திற்காகத்தான். நீ நிஜமாகவே ஆனந்தின் நலத்தை விரும்புகிறவனாக இருந்தால் மறு பேச்சு பேசாமல் போய் விடுவாய். ஆனந்தைப் பொறுத்தவரையில் நீயாகப் போய்விட்டது போல் இருக்க வேண்டும். உன் விருப்பத்தை அவன் கனவில்கூட மறுக்க மாட்டான். ஏதாவது வேலையைத் தேடிக்கொள். போய்விடு. உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். இந்த வீட்டி

லிருந்து, ஆனந்தின் வாழ்க்கையிலிருந்து போய்விடு...'' அருகில் வந்து கைகளைக் கூப்பினார். ''ஆனந்துக்கு உன்னிடமிருந்து விடுதலை கொடு. நான் எத்தனை வேதனைப்படுகிறேன் என்று அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும். ஆனந்துக்காக எந்தப் பெண்ணைப் பார்த்தாலும், அவனுக்குப் பக்கத்தில் இருக்கும் உன்னைத்தான் கேட்கிறார்கள். இதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை.'' அவர் கண்கள் சிவந்து விட்டன. சுட்டு விரலை உயர்த்தி விஜய் பக்கம் நீட்டினார். ''அன்று நாதியத்தவன் என்றும் ஆனந்துக்குத் துணையாக இருப்பாய் என்றும் ஆசைப்பட்டு உன்னை அழைத்து வந்தேன். இன்று ஆனந்துக்கு உயிராக மாறிவிட்டு அதிகாரம் முழுவதும் உன் கையில் எடுத்துக்கொண்டு விட்டாய். தான் எதை இழந்துகொண்டிருக்கிறோம் என்று அந்தப் பைத்தியக்காரனுக்குப் புரியவில்லை.'' அவர் அங்கவஸ்திரத்தை எடுத்துவிட்டு மார்பில் படாரென்று அறைந்து கொண்டார்.

''அது வரையில் கூட பரவாயில்லை. ஆனால் பயங்கரமான எதிர்காலம் என் கண்களுக்கு முன்னால் தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனந்துக்காக நான் கஷ்டப்பட்டு தேடி நல்ல பெண்ணாகத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்தால் அந்தப் பெண்கூட விட்டில் பூச்சியைப் போல் உன்பால் ஈர்க்கப்பட்டு விடுவாள். நீ இந்த வீட்டில் இருக்கக் கூடாது. எப்படிப் போவாயோ எனக்குத் தெரியாது. போய் விடு...உடனே போய்விடு. ஆனந்தின் திருமணம் நடப்பதற்கு முன்பே நீ இந்த வீட்டிலிருந்து போய்விடவேண்டும். அதுவும் கூடிய சீக்கிரத்தில் நடந்தாக வேண்டும். நேற்று இரவிலிருந்து எனக்குத் தூக்கமேஇல்லை. தண்ணீர்கூட குடிக்கப் பிடிக்கவில்லை. ஆனந்த் என்ன சொல்கிறான் தெரியுமா? அவன் திருமணம் செய்து கொள்ள மாட்டானாம். உனக்கும், உன் மனைவிக்கும்தான் ஒரு மகனாய் வாழ்க்கையைக் கழித்து விடுவானாம். உன்னை மட்டுமே இல்லை. உனக்கு மனைவியாக வரப் போகிறவள், அவள் யாராக



இருந்தாலும் சரி அவனுக்குப் பிடிக்குமாம். என்னை வாயைத் திறக்கக் கூடாது என்று சொல்கிறான். இனி அவனுக்காக எந்தப் பெண்ணையும் பார்க்க வேண்டாம் என்று சொல்கிறான். நீ அவனை விட்டுத் தொலைவாகப் போய்விட்டால் ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து ஆனந்துக்குத் திருமணம் முடிப்பேன். அவனும் மற்றவர்களைப் போல் மனைவி, மக்களுடன் சந்தோஷமாய் வாழ்க்கை நடத்துவான். இப்பொ அவனுக்கு உன்னைப் பற்றிய யோசனைதான். எங்கே உனக்கு அநியாயம் நடந்து விடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறான்.

''நீ ரொம்ப புத்திசாலி. நட்பு என்ற பெயரில் அவனைப் பைத்தியக்காரனாக ஆக்கி விட்டாய். அவனிடம் அன்பாக இருப்பதுபோல் நடித்துக் கொண்டே இந்த வீட்டின் அதிகாரத்தை உன் கைப்பிடியில் வைத்துக்கொண்டு விட்டாய். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். நீ போய் விடு. அதுவும் கூடிய சீக்கிரத்தில். உன் வெளியேற்றம் ரொம்ப இயற்கையாக இருக்க வேண்டும். நான் இப்படிச் சொன்னேன் என்று ஆனந்திடம் சொன்னாயோ... என் பிணத்தைத்தான் பார்ப்பாய். அன்று உன்னை அழைத்து வந்தபோது நீ இப்படி பூதமாய் மாறி என் முதுகில் ஏறி என்னையே பிடுங்கி தின்பாய் என்று நினைக்கவில்லை. இனிமேலாவது என்னைப் பிடித்த சனி விலக வேண்டும். எல்லோரின் கண்களுக்கு ஆனந்த் ஆனந்த் போல், என்னுடைய பேரனாகத் தென்பட வேண்டும். உன்னுடைய நிழலாக இல்லை!!'' அவர் வேகமாய் அந்த இடத்தை விட்டு வெளியேறினார்.

## 15

அறையிலிருந்த நிசப்தம் விஜயின் முகத்தைப் பார்த்து நடுங்கிக் கொண்டிருப்பது போல் இருந்தது. காற்று கூட அவனைப் பிரியத்துடன் தொட நினைத்துப் பயந்து போய்

32295

கதவு அருகிலேயே நின்று விட்டது. விஜயின் கைகள் மேஜையின் விளிம்பைப் பலமாகப் பற்றிக்கொண்டன. ஆயிரம் கசையடிகளை மௌனமாய் ஏற்றுக் கொண்டது போல் அவன் முகத்தில் வேதனை பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

தான் இந்த வீட்டை விட்டுப் போய்விட வேண்டும். இது அவர் தனக்கு விதித்த தண்டனை. குழந்தைத்தனம் மாறாத, நிர்மலமான ஆனந்தின் முகம் அவன் கண்கள் முன் நிழலாடியது.

''விஜய்! என்னை விட்டுப் போகப் போகிறாயா?'' என்று கேட்பது போல் இருந்தது.

விஜய் பெருமூச்சு விடுத்தான். இந்த வெளியேற்றத்தைத் தவிர்க்க முடியாது. தீட்சிதரின் மனதில் இருக்கும் பயம் புரிந்த பிறகு இந்த சுற்று வட்டாரத்தில் இருக்கக் கூடாது. விஜய் உட்கார்ந்து கொண்டு தலையைப் பிடித்துக் கொண்டான். நெற்றிப் பொட்டில் நரம்புகள் துடித்துக் கொண்டிருந்தன. தன்னால் போய் விடமுடியும். ஆனால் ஆனந்துக்குப் புரியாது. அது போன்ற யோசனையே அவனுக்கு வராது. தீட்சிதர் எத்தனையோ முறை அவமானப் படுத்துவது போல் பேசியிருக்கிறார். ஆனால் இன்று... இன்று ஆனந்துக்கு மனைவியாக வரப்போகிறவளை யாரென்று கூடத் தெரியாத அந்த அப்பாவியையும் தன்னையும் இணைத்து...

விஜய் கண்களை மூடிக்கொண்டான். பற்களால் கீழ் உதட்டை அழுத்திக் கொண்டான். அவனால் இந்த வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

திடீரென்று அவனுக்கு ஹேமாவிடம் போய் விட வேண்டும் போல் தோன்றியது. அவள் மடியில் தலையைச் சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டாலாவது இந்த நரகத்திலிருந்து விடுதலை கிடைக்காதா?



விஜய் கண்களைத் திறந்து சரியாக உட்கார்ந்து கொண்டான். தான் எவ்வளவு தவறாக யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆனந்தால் இதைத் தாங்க முடியுமா? ஊஹூம்... இந்தப் பிரச்னையைத் தான்தான் தீர்க்க வேண்டும். ஏதாவது வேலையைத் தேடிக் கொள்ள வேண்டும். ஹேமா தன் வாழ்க்கையில் நுழைந்து விட்டாள் என்று ஆனந்திடம் சொல்லிவிட வேண்டும் என்று தோன்றியது. ஆனால் தான் இப்பொ வெளியேறிவிட்டால் அதற்குக் காரணம் ஹேமா தான் என்று முடிவு கட்டிவிடுவான். நேராக ஹேமாவின் வீட்டுக்குப் போய் அவளை அவமானப்படுத்துவதுபோல் பேசிவிடுவான். ஹேமாவை இந்தக் கஷ்டங்களிலிருந்து தொலைவாக வைக்க வேண்டும். தன்னை நேசிப்பவர்களை அவமானப்படுத்தும் உரிமை தனக்கு இல்லை. விஜய்க்கு ஒரு விஷயம் மட்டும் நன்றாகப் புரிந்தது. தன்னால் இப்போதைக்கு ஹேமாவைத் திருமணம் செய்து கொள்ள முடியாது.

ஃ ஃ ஃ

காலிங்பெல் ஒலித்தது. நர்ஸிங்ஹோமுக்குப் போவதற்காக ஏற்கனவே தாமதமாகி விட்டதென்று மளமளவென்று தயாராகிக் கொண்டிருந்த ஹேமா வாசற்கதவைத் திறந்தாள்.

எதிரே விஜய்!

''ஓஹ்...'' ஹேமாவின் கண்கள் மகிழ்ச்சியால் மின்னின.

''பிஸியா?'' விஜய் கேட்டான்.

''நோ...'' என்று சொல்லிக் கொண்டே வழியைவிட்டு விலகினாள். விஜய் உள்ளே வந்தான்.

''கொஞ்சம் நேரம் நான் உட்கார்ந்து கொள்ளலாமா? ரொம்ப நேரம் எடுத்துக் கொள்ள மாட்டேன்.''

''நோ... நோ...'' மகிழ்ச்சியின் மிகுதியில் உரத்த குரலில் சொன்னாள் ஹேமா... கொஞ்ச நேரமா? ஒரு

மாதத்திற்குப் பிறகு சந்தித்துக் கொள்கிறோம். எனக்கு நிறைய நேரம் பேசவேண்டும். ஒரு நிமிடம்... இதோ வந்து விடுகிறேன்.'' சொல்லிக் கொண்டே போன் அருகில் ஓடினாள்.

டயல் செய்து ''கருணா... என்னால் ட்யூட்டிக்கு வர முடியாது. இன்று ஒருநாள் மட்டும் என் ட்யூட்டியை நீயே பார்த்துக் கொள். ஓ.கே.தானே'' என்று போனை வைத்து விட்டாள்.

விஜய் ப்ரீஃப்கேஸைத் திறந்து கவரை எடுத்துக் கொடுத்தான். ''இதை அம்மாவிடம் கொடுக்க வேண்டும். வங்கியின் டிரஸ்ட் மெம்பர் கொடுத்து அனுப்பினார்'' என்றான்.

''அம்மா இல்லை. உறவினர் வீட்டு திருமணத்திற்காகப் பெங்களூர் சென்றிருக்கிறாள்.'' ஹேமா சொன்னாள்.

''லோன் சா[illegible]க்ஷன் ஆகிவிட்டது. நிலத்தை வாங்கி விட்டேன்.'' விஜய் சொன்னான்.

''அந்த வேலையில் பிஸியாக இருந்ததால் ஒருமுறை கூட என்னைப் பற்றிய நினைவு உங்களுக்கு வரவில்லை. அப்படித்தானே'' என்றாள்.

இல்லையென்பது போல் விஜய் தலையை அசைத்தான்.

ஹேமா எழுந்து போய் வாசற்கதவைச் சாத்திவிட்டு வந்தாள்.

''விஜய்!'' திடீரென்று சோபாவின் அருகில் அவன் காலடியில் முழங்காலில் அமர்ந்து கொண்டாள். அவன் கையை இரு கரங்களால் பற்றிக் கொண்டே சொன்னாள். ''விஜய்! நேராக ஊருக்கு வந்து உங்களைச் சந்திக்க வேண்டுமென்றும், போனாவது செய்ய வேண்டும் என்றும் எத்தனையோ முறை தோன்றினாலும், உனக்கு ஏதாவது



இடைஞ்சல் ஏற்படுமோ என்று கட்டுப் படுத்திக் கொண்டேன். அது எனக்கு எவ்வளவு வேதனையாக இருந்தது தெரியுமா?'' சொல்லிக் கொண்டே அவன் மடியில் முகத்தை புதைத்துக் கொண்டாள். ''அம்மாவிடம் சொல்லி விடவேண்டும் என்றும், அம்மாவே போய் உங்க வீட்டில் பேசினால் நன்றாக இருக்குமென்றும் நினைத்தேன். ஆனால் உன்னிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு மேற்கொண்டு செயல்படுவதுதான் மரியாதை என்று தோன்றியது.'' என்றவள் அவன் இடுப்பைச் சுற்றிக் கைகளைப் பிணைத்துக் கொண்டாள். ''விஜய்! அம்மா நாளைக்கு வந்து விடுவாள். அவள் வரும் வரை நான் உன்னைப் போக விடமாட்டேன்.''

விஜய் கண்களை மூடிக் கொண்டான். அவனுக்கு ஏனோ நிம்மதியாக இருந்தது. மனதில் எங்கேயோ ஆழமாகப் பட்ட காயத்திற்கு ஹேமாவின் சொற்கள் மருந்து தடவியதுபோல் இருந்தன. தீட்சிதர் கடுமையாக எச்சரித்து விட்டுப்போன இந்த பதினைந்து நாட்களுக்குள் அவன் மனதளவில் ரொம்ப களைத்துப் போயிருந்தான். ஹேமாவின் நெருக்கம் அவனுடைய களைப்பைப் போக்குவதுபோல் இருந்தது. தன்னுடைய வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம், மதிப்பு இருப்பதுபோல் தோன்றியது.

''ஹேமா!'' ஹேமாவின் தலை மீது கையை வைத்து கோதிக் கொண்டிருந்தவன் திடீரென்று நின்று விட்டான். தான் வந்த காரியம் என்ன? செய்கிற காரியம் என்ன? இது வரையில் அவன் கஷ்டப்பட்டு ஏற்படுத்திக் கொண்ட சுய கட்டுப்பாடுகள் எல்லாம் ஹேமாவின் விஷயத்தில் மாயமாய் மறைந்து போவானேன்?

அவன் நிமிர்ந்து சரியாக உட்கார்ந்து கொண்டான். மெதுவாகத் தன் இடுப்பைச் சுற்றிப் பின்னியிருந்த ஹேமாவின் கைகளை விடுவித்தான். அவள் கைகளைப் பற்றி எழுப்பினான். ஹேமா எழுந்து சோபாவில் அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

மறு நிமிடம் அவள் தலை அவன் தோள் மீது சாய்ந்தது. ''விஜய்!'' உள்ளங்கையை அவன் முன்னால் நீட்டினாள். ''என்னை முறை நன்றாக கிள்ளு. நீ வந்தது கனவுபோல் தோன்றுகிறது. இந்த ஒரு மாதமாய் உனக்காக ரொம்ப எதிர்பார்த்தேன். எவ்வளவு எதிர்பார்த்தேன் என்றால் இனி நீ வரமாட்டாய் என்று முடிவு செய்து விட்டேன். உனக்கு வேறு பெண்ணுடன் ஏதோ பலமான காரணங்கள் இருப்பதால் திருமணம் நடந்து முடிந்திருக்கும் என்று கூட நினைத்தேன்.''

விஜயின் இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது.

''எனக்கு எதுவும் தோன்றவில்லை. நர்ஸிங்ஹோம் போகக் கூட பிடிக்கவில்லை. ஒரு வாரம் விடுமுறை எடுத்துக் கொண்டேன். வீட்டில் இருந்தால் பொழுது போகவில்லை. வெளியில் போனாலும் மனதிற்கு அமைதி கிடைக்கவில்லை. சினேகிதிகள் வந்தால் அவர்களுடன் கலகலப்பாகப் பழக பிடிக்கவில்லை. ஒருநாளும் எனக்கு இப்படித் தோன்றியதில்லை. ஒருநாள் உறக்கம் வராமல் கட்டில் மீது அமர்ந்திருந்தேன். அம்மா வந்தாள். ''என்ன ஆச்சு பேபி? ஏன் இப்படி ரெஸ்ட் லெஸ்ஸாக இருக்கிறாய்?'' என்று கேட்டாள்.

''ஒரு பிரண்டை பார்க்க வேண்டும்போல் இருக்கிறது'' என்றேன்.

''இவ்வளவுதானா... போய் விட்டு வாயேன்'' என்றாள்.

''நானா?''

''யாரென்று சொல்லு. காரை அனுப்பி வரவழைக்கிறேன்'' என்றாள்.

அது நீதான் என்று சொல்லிவிட வேண்டுமென்று நாக்கின் நுனி வளர வந்த வார்த்தையைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். இந்த விஷயத்தை நீதான் அம்மாவிடம் சொல்ல வேண்டும். அந்த மகிழ்ச்சியே வேறு. நான்



ரொம்ப மாறிப்போய் விட்டேன். இதுவரையில் அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுவேன். மகிழ்ச்சியாக இருந்தாலும் துக்கமாக இருந்தாலும் அம்மாவுடன் பகிர்ந்து கொள்வதுதான் என் வழக்கம். ஆனால் இப்பொ அப்படி தோன்றுவதில்லை. சந்தோஷமாக இருந்தாலும் வேதனையாக இருந்தாலும் உன்னுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது'' ஹேமா தன் சுட்டுவிரலால் அவன் மார்பைச் சுட்டிக்காட்டினாள்.

விஜய் அந்த கையைப் பற்றிக்கொண்டு மார்போடு இணைத்துக் கொண்டான்.

''என்ன விஜய்? எதைப் பற்றி யோசிக்கிறாய்?'' ஹேமா கேட்டாள்.

''நான் எவ்வளவு துரதிர்ஷ்டசாலி என்று.''

''ஏன் இப்படிச் சொல்கிறாய்?''

''மனப்பூர்வமாக நேசிக்கும் பெண்ணை உடனே திருமணம் செய்து கொண்டு கையுடன் அழைத்துச்செல்ல முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன் என்பதால்.''

ஹேமாவின் முகம் மலர்ந்தது. அவன் தோளில் மறுபடியும் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

ஒரு நிமிடம் இருவரும் அடுத்தவரின் ஸ்பரிசத்தில் கிடைக்கும் மகிழ்ச்சியை அனுபவத்தில் உணருவதுபோல் அப்படியே இருந்து விட்டார்கள்.

அதற்குள் போன் ஒலித்தது. ஹேமா அவனைவிட்டு விலக மனம் இல்லாமலே எழுந்து போனாள்.

ரிசீவரை எடுத்து ''மம்மி இல்லை. நாளை வருவாள். விஷயத்தைச் சொல்லுங்கள். நோட் செய்து கொள்கிறேன். அம்மா வந்ததும் உங்களுக்கு போன் செய்யச் சொல்கிறேன்'' என்றவள் மறுமுனையில் சொல்லப்பட்ட தகவலை நோட் செய்து கொண்டு போனை வைத்து விட்டாள்.

''சாரி. காபி கலந்து தருகிறேன்.'' சமையலறை பக்கம் போகப் போனாள்.

''ஹேமா! வேண்டாம்.'' மறுப்பது போல் சொன்னான்.

''சமைக்கவே இல்லை. சமையல்கார அம்மாள் இன்று விடுமுறை. எங்கேயாவது வெளியில் போய் சாப்பிடு வோமா?''

அவன் தலையை அசைத்தான்.

பத்து நிமிடங்கள் கழித்து இருவரும் கிளம்பினார்கள். குன்றுமீது இருந்த ''ராக் காஸல்'' ஹோட்டலில் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

சாப்பிடும்போது ஹேமா தன்னுடைய எதிர்கால திட்டங்களைப் பற்றிச் சொன்னாள்.

''என்னுடைய கிளாஸ்மேட் உஷாவும் நானும் சேர்ந்து இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்குள் சொந்தமாக ஒரு நர்ஸிங் ஹோமை நிறுவ வேண்டும் என்று திட்டம் வைத்திருந்தோம். அப்பொ நான் திருமணத்தைப் பற்றி யோசிக்கவே இல்லை. ஆனால் இப்பொ என்னுடைய எண்ணங்கள் மாறிவிட்டன. யாராக இருந்தாலும் தன்னுடைய தொழிலைப்பற்றி ப்ளான் செய்யும்போது, திருமணத்திற்குப் பிறகா முன்னாடியா என்று யோசிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை திருமணம், குழந்தை களுக்கு முக்கியத்துவம் அதிகம். அதனால் கூடியசீக்கிரத்தில் நாமிருவரும் திருமணம் செய்து கொண்டால்...''

ஹேமா படித்த பெண். தன்னைப் பற்றியும், தன் எதிர்காலத்தைப் பற்றியும் திடமான அபிப்பிராயங்களை வைத்திருப்பவள். வெளிப்படையாகப் பேசிக் கொண் டிருந்தாள்.

இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள். பேரர் ஐஸ்க்ரீமை கொண்டு வந்து இருவருக்கும் முன்னால் வைத்தான்,



''ஹேமா!'' விஜய் அழைத்தான்.

''ஊம்.''

''நான் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டும்.''

அவன் ஐஸ்க்ரீமை ஸ்பூனால் எடுத்து சாப்பிடப் போனான். ஸ்பூனை உதட்டை அருகில் கொண்டு போகும் போது ஹேமா அவன் கையைப் பற்றி தடுத்து நிறுத்தி தன் உதட்டருகில் கொண்டு வந்தாள். தன்னுடைய ஸ்பூனால் ஐஸ்க்ரீமை எடுத்து அவனுக்கு ஊட்டினாள்.

''என்ன விஷயம்?'' என்றாள்.

''நம்முடைய திருமணம் இப்போதைக்கு நடைபெற முடியாது.''

''எதனால்?''

அவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

''எனக்குத் தெரியும்'' என்றாள்.

அவன் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

''ஆனந்தின் திருமணம் முடிந்தால் தவிர நம் திருமணம் நடைபெற வாய்ப்பு இல்லை. அப்படித் தானே.''

''ஆனந்தைப் பற்றி உனக்கு...''

''ராதிகா சொல்லியிருக்கிறாள். எனக்கு முழுவதுமாகத் தெரியா விட்டாலும் ஓரளவுக்கு விஷயம் தெரியும். ஆனந்த் உங்களுடைய நெருங்கிய நண்பன். அவனும் உங்களிடம் உயிர் வைத்திருக்கிறான்.''

விஜய் எளிதாக மூச்சை விட்டுக் கொண்டான். ஹேமாவுக்கு விலாவாரியாகச் சொல்ல வேண்டிய தேவை யில்லை,

''திருமணத்தைத் தள்ளிப் போடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் நம்முடைய என்கேஜ் மெண்ட் முடிந்துவிட வேண்டும். நாம் அடிக்கடி சந்தித்துக் கொள்வது உலகத்தாரின் பார்வையில் வேறு விதமான எண்ணங்களுக்கு இடம் அளிக்கக் கூடாது.''

சாப்பிட்டு முடித்ததும் இருவரும் பார்க்கில் உட்கார்ந்து கொண்டார்கள்.

மரத்தின் கீழே பழுத்த இலைகள் உதிர்ந்து கிடந்தன. சின்னக் குழந்தைகள் காய்ந்த இலைகள் மீது ஓடி அவை சலசலப்பதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந் தார்கள்.

''விஜய்!'' ஹேமா அழைத்தாள்.

அவன் முகத்தைத் திருப்பிப் பார்த்தான்.

ஹேமா சின்னக் குழந்தைகளையே பார்த்துக் கொண் டிருந்தாள். உனக்குக் குழந்தைகள் என்றால் பிடிக்குமா?'' தாழ்ந்த குரலில் கேட்டாள்.

''ரொம்ப...'' அவனும் குரலைத் தாழ்த்திப் பதில் சொன்னான்.

''அந்தக் குழந்தை ரொம்ப அழகாக இருக்கிறாள் இல்லையா...'' என்றாள்.

''ஆமாம்.''

ஹேமாவின் கை அவன் கை மீது படிந்தது. அந்த தொடுகை அவனுக்கு உயிர் தருவதுபோல், இந்த உலகில் இருக்கும் வேதனைகளை எல்லாம் சகித்துக் கொள்ளும் சக்தியைத் தருவது போல் இருந்தது. ஆனால் ஹேமாவின் கையைத் தன் கையில் எடுத்துக் கொள்ளாமல் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.

''நான் இன்று இரவு கிளம்புகிறேன்.'' விஜய் சொன் னான்.



''ரயில் எத்தனை மணிக்கு? எப்பொ கிளம்பணும்?'' பதட்டத்துடன் கேட்டாள்.

''இன்னும் சரியாக அரை மணியில். 6-30 மணிக்கு ரயில் இருக்கிறது.''

ஹேமா கடியாரத்தைப் பார்த்தாள். ''நேரமாகி விட்டது'' என்றாள்.

''பரவாயில்லை. இருபது நிமிடங்களில் ரயில் நிலையத் திற்குப் போய் விட முடியும்.''

''இன்று போய்த்தான் ஆக வேண்டுமா?''

''வேறு வழியில்லை.''

''அப்பொ கிளம்பு. உன்னை ஸ்டேஷனில் இறக்கி விட்டுப் போகிறேன்'' என்றாள்.

''நானே போய் விடுவேன்.''

''ப்ளீஸ். வேண்டாமென்று மறுக்காதே. நீ இந்த ஊரில் இருக்கும் குறைவான நேரத்தில் உன்னுடனே இருக்கும் வாய்ப்பு எனக்குக் கொடு.''

அவனால் மறுக்க முடியவில்லை.

ஹேமா விஜயை ரயில் நிலையத்தில் இறக்கி விட்டாள். ப்ளாட்ஃபாரத்தின் மீது ரயில் புறப்பட தயாராக இருந்தது. விஜய் ரயிலில் ஏறப் போனவன் திரும்பி ஹேமாவின் பக்கம் பார்த்தான்.

''போய் வருகிறேன் ஹேமா!'' அவன் கண்கள் ஹேமாவின் முகத்தையே அபூர்வமாய் பார்த்துக் கொண் டிருந்தன.

''மறுபடியும் எப்பொ வருகிறாய்?''

அவன் சட்டைப் பையிலிருந்து கவரை எடுத்துக் கொடுத்தான். ''இதைப் படி.''

ஹேமா சந்தோஷமாக வாங்கிக் கொண்டாள்.

"அம்மாவை எப்பொ சந்திக்கப் போறீங்க?" என்று கேட்டாள்.

ரயில் நகர்ந்து கொண்டிருந்தது.

விஜய் ஹேமாவின் கையைப் பற்றி அழுத்தினான்.

"என்ன?" என்றாள் ஹேமா.

விஜய் ஹேமாவின் கைகளை விட்டு விட்டான். சட்டென்று நகரும் ரயிலில் ஏறிக் கொண்டான்.

"சீக்கிரமாய் வந்து விடு" நகரும் ரயிலுக்குச் சமமாய் நடையை எட்டிப் போட்டுக் கொண்டே சொன்னாள்.

"விஜய்!" என்று கையை நீட்டினாள். விஜயும் கையை நீட்டினான். ஹேமா அந்தக் கையைப் பிடித்துக் கொண்டாள்.

ரயில் வேகத்தை எட்டியது. ஹேமா கையை விட்டு விட்டாள். விஜய் ஹேமாவை, ஹேமா விஜயைக் கண் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

ரயில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

விஜய் ஜன்னல் அருகில் உட்கார்ந்து கொண்டு வெளியில் பார்த்துக் கொண்டிருந்தான். மரங்கள், மின்சாரக் கம்பங்கள் எல்லாம் வேகமாய் பின்னோக்கிப் போய்க் கொண்டிருந்தன.

விஜய் பெருமூச்சு விட்டான். தான் கொடுத்த கடிதத்தை ஹேமா உடனே படிப்பாள் என்று அவனுக்குத் தெரியும். கடிதத்தைக் கொடுத்ததும் ஹேமாவின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி நினைவுக்கு வந்தபோது அவனுக்கு வேதனையாக இருந்தது. அந்தக் கடிதத்தைக் கொடுப்பதற்காகத்தான் அவன் அந்த ஊருக்கு வந்தான். ஹேமாவிடம் சுயமாகச் சொல்ல வேண்டும் என்று முயற்சி செய்தான். சாத்தியப்படவில்லை. நன்றாக யோசித்து கடிதம் எழுதி



னான். கடிதத்தில் தன் மனதில் இருப்பதை விவரமாக எழுதி விட்டான். தன் கடமையைச் செய்து விட்டான். கடிதத்தில் அவன் எழுதிய வரிகள் அவன் கண்முன் தோன்றின.

டியர் ஹேமா,

இந்த கடிதத்தைச் சுயமாய் உன்னிடம் தருவதற்காகத் வந்தேன். தபாலில் அனுப்பும் தைரியம் எனக்கு இல்லாமல் போய் விட்டது. ஹேமா! நம் திருமணம் எந்த சூழ்நிலையிலும் நடைபெற வாய்ப்பு இல்லை. வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்க முடிவு செய்து விட்டேன். காரணம் என்னவென்று கேட்காதே. என்னுடைய இந்த முடிவுக்கு யாரும் பொறுப்பு இல்லை. தயவு செய்து இந்த விஷயத்தில் மேற்கொண்டு எந்த பேச்சுகளும் வேண்டாம். உன்னை எவ்வளவு வேதனைப்படுத்துகிறேன் என்று எனக்குத் தெரியும். அதான் மன்னிப்பு கேட்கப் போவதில்லை. எனக்குக் கடிதம் எழுதுவதோ, போன் செய்வதோ, என்னைப் பற்றி நினைப்பதோ கூடாது. எனக்கு விருப்பம் இல்லை. நம்முடைய அறிமுகம் இத்துடன் முடிந்து விட்டது.

விஜய்.

விஜய் பெருமூச்சு விட்டான். தன்னுடைய கடமையை நிறைவேற்றி விட்டான். தனக்கு ஹேமா என்றால் ரொம்ப பிடிக்கும். ஹேமாவைத் தன்னுடைய பிரச்னைகளுடன் இணைப்பதில் அவனுக்கு விருப்பமில்லை.

அவள் எதிர்பார்த்த வாழ்க்கையைத் தன்னால் தர முடியாது. ஹேமா தன்னை முழுவதுமாகக் கணவனுக்கு அர்ப்பணித்துக் கொள்வாள். ஆனால் தன்னால் அப்படி முடியாது. வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று தீட்சிதர் சொல்லி விட்டார். போகாமல் இருக்க முடியாது. இதன் விளைவு ஆனந்த் மீது எப்படியிருக்குமோ? எப்படி இருந்தாலும் தான் ஏற்றுக்

கொண்டுதான் ஆக வேண்டும். தன்னால் இனி அந்த வீட்டில் இருக்க முடியாது. ஒவ்வொரு நிமிடமும் தீட்சிதர் தன் பார்வையால் அவனுடைய ஒவ்வொரு அசைவையும் வேட்டையாடிக் கொண்டிருந்தார். ஆனந்தை எப்படி சம்மதிக்க வைப்பது என்பதுதான் இப்பொ முக்கியமான பிரச்னை. எத்தனை பெரிய துரதிர்ஷ்டம் தன்னுடையது? தேவதை போன்ற தாய்! அவன் சிறுவயதில் இருக்கும்போதே தூக்குப் போட்டுக் கொண்டு அவனைத் தனியனாக்கி விட்டாள். மகனைப் பற்றி யோசிக்கவே இல்லை. பத்து வயது சிறுவன் தன் மனிதர்கள் என்று யாருமே இல்லாமல், பணமும் இல்லாமல் இந்த உலகில் வாழ்வதற்கு எத்தனை கஷ்டப்பட வேண்டியிருக்கும் அவள் யோசிக்கவேயில்லை. விஜய்க்கு அவளிடம் கோபம் வரவில்லை. வாழ்க்கையிடம் அவளுக்கு இந்த அளவுக்கு விரக்தி ஏற்பட காரணமாக இருந்த வேதனைகளை நினைத்தால் இரக்கம்தான் ஏற்படும். அவள் மட்டும் இன்னும் இரண்டு, மூன்று வருடங்கள் பொறுமையாக இருந்திருந்தால் பொறுப்பை தன்னுடைய கைகளில் எடுத்துக் கொண்டிருப்பான். இப்பொ பெரியவன் ஆன பிறகு ஆனந்தின் நட்பைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் இருக்கிறான். தன்னை மனதார நேசித்த ஹேமாவைச் சொந்தமாக்கிக் கொள்ள தன்னால் முடியவில்லை. தான் செய்த தவறு என்ன? கடவுள் தன் வாழ்க்கையில் மட்டும் அடிக்கடி இப்படி துயரத்தை நிரப்புவானேன்? விஜயின் தனிமை ஆயிரம் மடங்காகி விட்டது போல் இருந்தது.

அவன் கண்களுக்கு முன் மறுபடியும் அதே காட்சி...

தாயின் பிணத்தின் அருகில் பத்து வயது சிறுவன் இரவு முழுவதும் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். வெளியில் ஹோவென்று மழை பெய்து கொண்டிருந்தது. தூரத்து உறவினர்களுக்குத் தகவல் போயிருக்கிறது. அவர்கள் மனம் இறங்கி, அந்த மழையில் எரிச்சல்



அடையாமல் வர வேண்டும். அவர்களின் வருகைக்காக காத்திருந்தான். எதிரே அன்பே உருவான தாயின் உடல். எங்கும் கற்பூரத்தின் நெடி. அந்த குளிர்ச்சி, கற்பூர நெடி மரணத்தின் தொடுகையைப் போல் இருந்தது. மழைக்கு மின்சாரம் போய் விட்டது. எழுந்து போகப் போனவன் தாயின் கால் பட்டு குப்புற விழுந்தான். சுவாமி அறையில் இருந்த பித்தளை விளக்கில், தாய் முதல் நாள் ஊற்றியிருந்த எண்ணெய் இருந்தது. திரியைப் போட்டு விளக்கை ஏற்றி அதைக்கொண்டு வந்து தாயின் தலைமாட்டில் வைத்தான். மழை இன்னும் வேகமாய் பெய்து கொண்டிருந்தது.

நள்ளிரவில், தாயின் பிணத்தை அப்படி பார்க்கும் போது, அவன் கண்களிலிருந்து கண்ணீர் மடை திறந்த வெள்ளமாய் பெருகிக் கொண்டிருந்தது. அந்த பயங்கரமான தனிமை, பதினெட்டு வருடங்கள் கழிந்த பிறகும், வாழ்க்கையைத் தன் வசத்தில் எடுத்துக் கொண்ட பிறகும் தன்னைத் துரத்திக் கொண்டிருக்கிறது.

ரயில் வேகமாய் போய்க் கொண்டிருந்தது. விஜயின் கண்களுக்கு முன்னால் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த ஹேமாவின் முகம் தென்பட்டது.

தன்னுடைய வாழ்க்கையில் விடியல் ஏற்படப்போகும் சமயம். தானே கதவை இழுத்துச் சாத்தி விட்டான். இருட்டில் மறுபடியும் தனிமையுடன் போராட வேண்டிய நிலைமை. பிரியாத நிழலைப் போல் தன்னை இந்த தனிமை விடாமல் துரத்தி வருகிறது. இதுதான் தன்னுடைய வாழ்க்கை. அவனுக்குப் புரிந்து விட்டது. சிலருக்கு இன்று கஷ்டங்கள் இருக்கலாம். நாளையாவது நன்றாக இருக்காதா... கஷ்டங்கள் தீர்ந்து சுகமாக இருக்க மாட்டோமா என்ற எதிர்பார்ப்பு இருக்கும். ஆனால் தனக்கு? நாளை இன்னும் எத்தனை கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டுமோ என்ற பயம்! சிலருடைய வாழ்க்கை இப்படித்தான்.

ரயில் போய்க் கொண்டிருந்தது. ஹேமாவை விட்டுத் தொலைவாக, சாசுவதமாக தன்னை அழைத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தது. ஹேமாவை இனி எப்பொழுதும் சந்திக்க மாட்டான். சந்தித்தாலும் முன்பின் அறியாதவர்களைப் போல் இருப்பார்கள். பொறுமையாக இருந்ததற்கு, கஷ்டப்பட்டு வாழ வேண்டும் என்று கொள்கையைக் கடைபிடித்து வந்த தனக்கு விதி அளித்த பரிசு இது. கடவுள் கொடுத்த தீர்ப்பைத்தான் ஏற்றுக் கொண்டு தானாக வேண்டும். விருப்பம் இருக்கா இல்லையா என்ற பிரஸ்தாபனையே இங்கு இல்லை. வேதனைப்பட்டுக் கொண்டு இருப்பதா இல்லை... இது இவ்வளவுதான் என்று மனதைத் தேற்றிக்கொண்டு தைரியமாக வாழ்க்கையைத் தொடருவதா... இரண்டே வழிகள். விஜய் எப்போதும் இரண்டாவது வழியைத்தான் தேர்ந்து எடுப்பான். இப்பொழுதும் அதைத்தான் பின்பற்றினான்.

ஃ ஃ ஃ

''விஜய்! விஜய்'' ஆனந்த் ஆஸ்பத்திரி படுக்கையில் படுத்துக் கொண்டு தூக்கத்திலேயே அழைத்துக் கொண்டிருந்தான். அவன் பக்கத்திலேயே நாற்காலியில் அமர்ந்திருந்த விஜய் ''அனூ... அனூ...'' என்று அவன் தலை மீது கையை வைத்துக் கொண்டே அழைத்தான்.

ஆனந்த் விஜயின் கையைப் பலமாகப் பற்றிக் கொண்டான்.''

''என்னை விட்டுப் போகாதே விஜய்!'' ஆனந்த் புலம்பினான்.

''எங்கேயும் போக மாட்டேன்.

''எனக்குத் தெரியும், உனக்குத் தொல்லை தருகிறேன் என்று. நான் சீக்கிரமாகச் செத்துப் போனால் நன்றாக இருக்கும்.''

''அனூ! தூங்கு.'' விஜய் ஆனந்தின் தலையைக் கோதிக்கொண்டே சொன்னான். ''அனாவசியமான எண்ணங்களை உன் மனதில் வர விடாதே அனூ!''



ஆனந்த் தூக்க மயக்கத்திலேயே கண்களைத் திறந்தான். விஜயின் கையைப் பற்றிக் கொண்டு நெற்றி மீது வைத்துக் கொண்டான். ''கடவுள் எனக்கு நல்ல உடல் வலிமையைத் தரவில்லை. அடடா! தவறு செய்து விட்டோமே என்று பச்சாத்தாபப்பட்டு உன்னைப் போன்ற நண்பனை எனக்குத் துணையாகக் கொடுத்திருக்கிறான். அப்படித்தானே! நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி இல்லையா!''

''தூங்கு அனூ!'' விஜயின் குரல் கனிவுடன் ஒலித்தது.

''தூக்கம் வரவில்லை, பயமாக இருக்கிறது.''

''பயமா! எதற்கு?''

''தூங்கி விட்டால் மறுபடியும் விழிப்பே வராதோ என்று.''

''வேண்டாத யோசனை என்றால் இதுதான்.''

''அடிக்கடி எனக்கு இந்தப் பயம் வந்து கொண்டு தான் இருக்கிறது.''

''அனூ! ரிலாக்ஸ்... ஜஸ்ட் ரிலாக்ஸ்...'' விஜய் குரல் மென்மையாய் ஒலித்தது.

கதவு மீது யாரோ விரலால் தட்டிய சத்தம் கேட்டது.

ஆனந்த் விஜய் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

நர்ஸ் உள்ளே வந்தாள்.

''டாக்டர் வந்து கொண்டிருக்கிறாள்'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஹேமா உள்ளே வந்தாள்.

''ஹௌ ஆர் யூ மிஸ்டர் ஆனந்த்?'' கேட்டுக் கொண்டே அருகில் வந்தாள். விஜய் எழுந்து நாற்காலியை உட்கார்ந்து கொள்வதற்கு வசதியாக நகர்த்தினான்.

ஹேமா உட்காரவில்லை. ஆனந்தின் கையைப் பற்றிக் கொண்டு நாடியைப் பரிசீலித்தாள். ஸ்டெதஸ்கோபை மார்பின் மீது பரிசோதித்தாள். ஆனந்த் ஹேமாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஹேமா அவனிடம் ''பலவீனம் இன்னும் குறைய வில்லை. இப்பொ ஒரு இஞ்செக்ஷன் தரச் சொல்கிறேன். கொஞ்சம் தெம்பு வரும்'' என்றாள்.

''எங்க விஜய்.'' கட்டில் கால்மாட்டில் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு மௌனமாக நின்று கொண் டிருந்த விஜயைக் காண்பித்துக் கொண்டே சொன்னான் ஆனந்த்.

ஹேமா விஜய் பக்கம் பார்த்தாள்.

விஜய் மரியாதை நிமித்தம் புன்முறுவல் செய்தான்.

''குட் நைட் மிஸ்டர் ஆனந்த்.'' ஹேமா போகும் போது சொன்னாள்.

''குட் நைட் டாக்டர்.'' ஆனந்த் சொன்னான். நர்ஸ் அவனுக்கு இஞ்சக்ஷனைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''டாக்டர்!'' ஹேமா வாசல் படியைத் தாண்டும் போது ஆனந்த் அழைத்தான்.

''யெஸ்.'' ஹேமா திரும்பிப் பார்த்தாள்.

''மே ஐ நோ யுவர் நேம் ப்ளீஸ்?'' ஆனந்த் கேட்டான்.

ஹேமாவின் கண்கள் விஜய் பக்கம் திரும்பப் போய் நின்று விட்டன.

''ஹேமா...'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

மாத்திரைகளை எடுத்துக் கொண்டிருந்த நர்ஸிடம் ''சிஸ்டர்... அந்த மாத்திரைகளை நாளைக்குப் போட்டுக் கொள்கிறேன்'' என்றான் ஆனந்த்.

''நாளைக்கா! உங்களுக்கு ஹேமா மேடம் பற்றித் தெரியாதா? சொன்ன பேச்சைக் கேட்காத நோயாளியை உடனே வீட்டுக்கு அனுப்பி விடுவாள்.''



''அப்படியா!'' உடனே ஆனந்த் மறுபேச்சு பேசாமல் மாத்திரைகளைப் போட்டுக் கொண்டான்.

நர்ஸ் போய் விட்டாள்.

''என் கண்களுக்கு டாக்டர் ஹேமா தேவதைபோல் தென்படுகிறாள்.'' ஆனந்த் சொன்னான்.

''தூங்கு அனூ...'' விஜய் நயமான குரலில் சொன் னான்.

பத்து நிமிடங்கள் கழித்து ஆனந்த் உறங்கிவிட்டான்.

விஜய் ஜன்னல் அருகில் உட்கார்ந்து புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். கௌண்டர் அருகில் இருந்த ஹேமா நோயாளி சீரியஸாக இருப்பதாகவும் உடனே வரச் சொல்லி யாருடனோ சொல்லிக் கொண்டிருந்தாள். சற்று நேரம் கழித்து விஜய் இருந்த அறையின் வாசல் வழியாய் நோயாளியை ஸ்ட்ரெச்சரில் அழைத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். ஹேமாவும் அவர்களுடன் சேர்ந்து விரைவாக நடந்து போய் விட்டாள். விஜய் பெரிய விளக்கை அணைத்து விட்டு விடிவிளக்கைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டான். ஜன்னல் வழியாய் வானத்தில் நட்சத்திரங்கள் தென்பட்டன. விடியற்காலை வேளையில் மெலிதாகக் காற்று சில்லென்று வீசிக் கொண் டிருந்தது. அந்தக் காற்று அவன் முகத்தில் பட்டுக் களைப்பைப் போக்குவது போல் இருந்தது. மனதில் பதிந்திருந்த ஹேமாவின் முகத்தை அழித்து விட்டு அந்த இடத்தை சூனியத்தால் நிரப்புவதற்கு அவன் செய்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

## 16

நான்கு நாட்கள் கழித்து...

ஆனந்த் அன்றுதான் ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகப் போகிறான்.

தீட்சிதரும், ஹரியும் அறையில் இருந்தார்கள். விஜய் போய் பில்லை செட்டில் செய்துவிட்டு வந்தான்.

''கிளம்புவோமா?'' விஜய் கேட்டான்.

''ஒரு நிமிடம்...'' என்றார் தீட்சிதர்.

''தாத்தா! டாக்டர் ஹேமாவிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போகலாம்.'' ஆனந்த் சொன்னான்.

''எனக்கும் அதுதான் மரியாதை என்று தோன்றுகிறது'' என்றார் தீட்சிதர். பிறகு விஜய் பக்கம் திரும்பி, ''விஜய்! டாக்டர் ஹேமா எங்கே இருக்கிறாள் என்று பார்த்துவிட்டு ஒரு முறை இங்கே வரச் சொல்லி சொல்லு.'' ஆணையிடுவதுபோல் சொன்னார்.

''டாக்டரை அப்படி அழைப்பது மரியாதையாக இருக்காதோ என்னவோ...'' விஜய் சொன்னான்.

''நன்றாகச் சொன்னாய் போ... ஹேமா இங்கே டாக்டராக இருப்பது உண்மைதான் என்றாலும் என்னுடைய தங்கையும் கூட. ஆனந்த் என்னுடைய நண்பன். நான் போய் அழைத்து வருகிறேன்.'' சொல்லிக் கொண்டே ஹரி வெளியில் சென்றான்.

பத்து நிமிடங்களுக்குள் ஹேமா வந்தாள்.

''ஹலோ ஆனந்த்! ஃபீலிங் பெட்டர்.'' ஆனந்தைக் குசலம் விசாரித்துக் கொண்டே நேராக அவனருகில் சென்றாள்.

''தாங்க்யூ டாக்டர்.'' ஆதரவுடன் ஒலித்த ஹேமாவின் குரலைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான் ஆனந்த்.

''நேரம் தவறாமல் மருந்துகளைச் சாப்பிட வேண்டும்.'' சுட்டுவிரலை உயர்த்தி மிரட்டுவதுபோல் சொன்னாள்.

''அதோ எங்க விஜய்! நான் மருந்துகளைச் சாப்பிடவில்லை என்றால் சும்மா இருப்பானா?'' என்றான்.



''அம்மா... ஹேமா... ஒரு தடவை வந்து உங்க அம்மாவைப் பார்க்க வேண்டும். ஹரியை அழைத்துக் கொண்டு வருகிறேன்.'' தீட்சிதர் சொன்னார். ஆனந்தின் கையைப் பிடித்துக் கொண்டு நாடியைப் பரிசீலித்துக் கொண்டிருந்த ஹேமாவைப் பார்க்கும்போது அவர் கண்களுக்கு நிறைவாக இருந்தது.

''ஓ... கட்டாயம் வாங்க...'' என்றாள் ஹேமா.

''டாக்டர்... நீங்களும் எங்கள் வீட்டுக்கு வர வேண்டும். எங்களுக்குத் தோட்டம் ஒன்று இருக்கிறது. அதைப் பார்த்தால் தவிர விஜய் பற்றி உங்களுக்குப் புரியாது.''

''அப்படியா!'' ஹேமா விஜய் பக்கம் பார்த்தாள்.

விஜய் ஆனந்தின் மருந்துகளைக் கவனமாகப் பரிசீலித்துக் கொண்டிருந்தான். தீட்சிதருக்கு ஆனந்த் இப்படி விஜய் பற்றிச் சொல்லி ஹேமாவின் கவனத்தை அவன் பக்கம் திருப்பியது பிடிக்கவில்லை.

''நீயும் கட்டாயம் ஒருமுறை எங்கள் வீட்டுக்கு வர வேண்டும். ஹரி! ஹேமாவையும், அம்மாவையும் அழைத்துக் கொண்டு வருவது உன் பொறுப்பு'' என்றார்.

''அப்படியே செய்கிறேன் தாத்தா... எனக்கும் அந்தத் தோட்டம் என்றால் ரொம்ப பிடிக்கும். ஹேமா! நீ ஒரு தடவை பார்த்தால் விடவே மாட்டாய். எத்தனை விதமான மலர்கள் இருக்கும் தெரியுமா!'' ஹரி சொன்னான்.

ஹேமா ஆனந்த் போட்டுக் கொள்ள வேண்டிய மருந்துகளைப் பற்றி, எடுத்துக் கொள்ள வேண்டிய ஜாக்கிரதைகளைப் பற்றி மற்றொருமுறை சொன்னாள்.

''போய் வருகிறோம் டாக்டர்'' என்றான் ஆனந்த்.

''ஊஹூம். ஆஸ்பத்திரியை விட்டு வெளியில் போகும் போது அப்படி சொல்லக் கூடாது. 'போகிறோம்' என்று

சொல்ல வேண்டும்.'' ஹேமா புன்முறுவலுடன் சொன்னாள்.

''சரியாகச் சொன்னாய் அம்மா...'' என்றார் தீட்சிதர். ''இதோ பாரும்மா... உன்னைப் பார்த்த வேளை ரொம்ப யோகமான வேளையாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனந்தின் உடல் நல விஷயத்தில் இப்பொ எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்து விட்டது. நமக்குத் தெரிந்த பெண் டாக்டராக அதுவும் இவ்வளவு அருகில் இருக்கிறாள் என்றால் மனதிற்குத் தெம்புதானே. ஆனந்துக்குத் திடீர் திடீர் என்று இந்த நோய் உயிருக்கு ஆபத்தாகிவிடும் அளவுக்குக் கொண்டு போய்விடுகிறது. நான் அம்மாவை வந்து பார்க்கிறேன். ஹரியை அழைத்துக் கொண்டு வருகிறேன். ஹரி இப்பொ உன்னுடைய அண்ணன் மட்டுமே இல்லை. எங்களுடைய மானேஜரும் கூட'' என்றார்.

''தாத்தா!'' என்றான் ஆனந்த்.

''ஆமாண்டா கண்ணா... விஜய்க்குக் கொஞ்சம் கூட ஓய்வு இல்லாமல் எப்போதும் வேலைதான். விஜய்க்கு ஒத்தாசையாக யாராவது இருந்தால் தேவலை என்று நீயும் ரொம்ப நாளாக சொல்லிக் கொண்டிருந்தாய் இல்லையா. ஹரியும் வேலைக்காகத் தேடி வருகிறான். எல்லா வேலைகளும் தெரியும். மோட்டார் சைக்கிள் ஓட்டுவான். மில்லுக்கும், தோட்டத்திற்கும் தினமும் போய் வருவான். நம் மனிதர்களைச் சேர்ந்த பையன். அவனுக்கு நல்ல வேலை கிடைக்கும் வரை நாம் உதவி செய்ததுபோல் இருக்கும். நம் விஜய்க்கும் கொஞ்சம் ஓய்வு கிடைத்தாற் போலிருக்கும்.''

''ஆமாம் ஆனந்த். நானும் தாத்தாவும் நேற்றுதான் இந்த முடிவுக்கு வந்தோம்.'' ஹரி மகிழ்ச்சியுடன் சொன்னான்.



''விஜய்க்குத் தெரியுமா?'' ஆனந்த் கேட்டான்.

''விஜய்க்குத் தெரியாமல் நம் வீட்டில் துரும்பாவது அசையுமா அனூ. முதலில் விஜயிடம்தான் சொன்னேன். 'ஹரி நம்பிக்கையானவன். எனக்கும் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும்' என்று சொன்னான்.''

தீட்சிதர் சொல்வதை நம்புவதா வேண்டாமா என்று யோசிப்பதுபோல் ஆனந்த் விஜய் பக்கம் பார்த்தான். விஜய் பில்களை மடித்துச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் ஹேமா, ''எங்க ஹரி உங்களைப் போன்ற பெரியவர்களின் கீழே இருந்தால் நல்லதுதான். எங்க சித்தி ரொம்ப சந்தோஷப் படுவாள்.'' மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

ஹேமா இப்படிச் சொன்னதும் ஆனந்தின் முகம் மலர்ந்தது.

''டாக்டர்! நீங்க எப்பொ எங்க வீட்டுக்கு வரப் போறீங்க? சொல்லுங்க.'' என்றான் ஆனந்த்.

''ஹரி எப்பொ அழைத்து வருகிறானோ அப்பொ...'' என்றார் தீட்சிதர்.

ஹேமா புன்முறுவலுடன், ''இந்த நர்ஸிங் ஹோம் நடத்துகிற ரமாதேவி என்பவள் என்னுடைய சினேகிதியின் தாய். அவள் இப்பொ வெளி நாட்டுக்குப் போயிருக்கிறாள். அடுத்த வாரம் வருவாள். அதுவரையில் இந்த ஆஸ்பத்திரியைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு என்னுடையது. எப்பொ வருகிறேன் என்று முன்கூட்டியே தகவல் தெரிவிக்கிறேன்.'' ஹேமா சொன்னாள்.

விஜய் தலையை உயர்த்தவில்லை. அவர்களுடைய உரையாடலுடன் தனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதுபோல் ஆனந்தின் பொருட்களைப் பேக்கில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

''வருகிறேன்...'' ஹேமா எல்லோருக்கும் பொதுவாகச் சொல்லிவிட்டு விஜய் பக்கம் திரும்பி மௌனமாக நின்றாள்.

ஆனந்த் சொன்னான் ''விஜய்! டாக்டர் ஹேமா கிளம்புகிறாள்.''

விஜய் தலையை உயர்த்தினான்.

''வருகிறேன்...'' ஹேமா தெளிவில்லாமல் சொல்லி விட்டு வாசலை நோக்கி நடந்தாள். தீட்சிதர் அவளை வழியனுப்புவதுபோல் கூட நடந்தார்.

''விஜய்!'' ஆனந்த் அழைத்தான். விஜய் அருகில் வந்தான்.

ஆனந்த் விஜய் பக்கம் பார்த்து முகவாயைச் சுட்டிக் காட்டிக் கொண்டே, ''ஷேவ் செய்து கொள்ளாததால் கரடியைப்போல் தென்படுகிறேனா என்ன?'' என்று கேட்டான்.

''இல்லை...'' விஜய் சொன்னான்.

''ஹேமாவைப் பார்க்கும்போது தேவதைபோல் இருக்கிறாள் இல்லையா?'' ஆனந்த் கேட்டான்.

விஜய் பேசவில்லை.

''தாத்தா ஹரியை மானேஜராக வைத்துக் கொண் டிருக்கிறாராமே?''

விஜய் ஆமாம் என்பதுபோல் தலையை அசைத்தான்.

''ஒருமுறை இங்கே வா...'' ஆனந்த் அழைத்தான்.

விஜய் மேலும் அருகில் வந்தான். ஆனந்த் தலையை விஜயின் வயிற்றின் மீது சாய்த்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். ''என் தலைமீது உன் கையை வைத்துக் கொள்.'' வேண்டுவதுபோல் சொன்னான் ஆனந்த். விஜய் அப்படியே செய்தான்.

''விஜய்! இப்பொ நான் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன் என்று தெரியுமா... புதிதாக மறுபடியும்



பிறவி எடுத்து இந்த உலகில் காலடி எடுத்து வைத்தது போல் தோன்றுகிறது. எப்போதும் ஆரோக்கியமாக இருக்கும் உங்களைப் போன்றவர்களுக்கு நித்யமும் நோயுடன் போராடிக் கொண்டிருக்கும் எங்களைப் போன்ற வர்களின் வேதனை புரியாதோ என்னவோ? ஒவ்வொரு முறையும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியில் வரும்போது எனக்கு இந்த உலகம் நூறு மடங்கு அழகாகத் தெரியும். இப்பொ... இப்பொ ஆயிரம் மடங்கு அழகாக இருப்பது போல் தோன்றுகிறது. விஜய்! நான் மட்டும் ஏன் இப்படி உடல் நலம் சரியில்லாதவனாய் இருக்கிறேன்? ஒரே திரியாய் உயிர் போனாலும் பரவாயில்லை. இந்த நரகத்தை, வேதனையை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

விஜய் ஆனந்தின் கிராப்பை சரி செய்து கொண்டே சொன்னான். அந்த நிமிடம் ஆனந்த் அவன் கண்களுக்கு ஒரு குழந்தையைப்போல் தோன்றினான்.

''அனூ! கடவுள் ஒவ்வொரு மனிதனுக்கு ஒவ்வொரு விதமான வேதனையைத் தருவார். வேதனையே இல்லாத வாழ்க்கை இருக்காது.''

அதற்குள் தீட்சிதரும் ஹரியும் வந்தார்கள்.

விஜய் ஆனந்தின் தலையைக் கோதிக் கொண்டிருக்கும் காட்சி அவர்கள் கண்ணில் பட்டது.

தீட்சிதர் பற்களை இறுக கடித்துக் கொண்டு தாழ்ந்த குரலில் ''ஹரி! பார்த்தாயா... என்னவோ எல்லோரையும் விட தான் ஒருத்தன்தான் ஆனந்துக்கு நெருக்கமானவன் என்பதுபோல் நடந்து கொள்வான்'' என்றார்.

''புரிந்து விட்டது தாத்தா. நீங்க நிச்சிந்தையாக இருங்கள். கல்லூரியில் படிக்கும்போது இதைவிட ஆழமான நட்பு இருந்தவர்களையே பிரித்திருக்கிறேன். மானேஜர் பதவியில் என்னை உட்காரவைத்து சாட்டையை

என் கையில் கொடுத்து விட்டீர்கள் இல்லையா... இனி விஜய்க்கு நான் யாரென்று புரிய வைக்கிறேன்.'' ஹரி சொன்னான்.

## 17

''வணக்கம் அம்மா!'' என்றார் தீட்சிதர்.

''வாங்க... வாங்க... உங்களைப் போன்ற பெரியவர்கள் எங்க வீட்டுக்கு வந்தது ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. ஹேமா உங்களைப் பற்றியும் ஆனந்தின் உடல்நலக் குறைவு பற்றியும் சொல்லி இருக்கிறார்.'' ராஜலக்ஷ்மி தீட்சிதரை வரவேற்றுக்கொண்டே சொன்னாள்.

தீட்சிதருடன் ஹரியும் வந்திருந்தான். அவர்களுக்குப் பின்னால் வந்த டிரைவர் பழக்கூடை, ஸ்வீட் பாக்கெட்டுகளைக் கொண்டு வந்து மேஜைமீது வைத்துவிட்டுப் பணிவுடன் பின்னால் திரும்பிப் போய்விட்டான்.

''பெரியம்மா! உங்கள் வீட்டுக்கு வரவேண்டும் என்று கடந்த பத்து நாட்களாக நினைத்து வருகிறோம். இந்த மில், தோட்டம் சம்பந்தப்பட்ட வேலைகளினால் ஒரு நிமிடம்கூட ஓய்வு கிடைக்கவில்லை.'' உட்கார்ந்து கொண்டே சொன்னான் ஹரி. ஹரியின் தோரணை ரொம்பவே மாறியிருந்தது. விலை உயர்ந்த ஆடைகளை உடுத்தியிருந்தான். பெரிய பதவியில் இருப்பது போல் அவன் பேச்சில் மிடுக்கு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

தீட்சிதர் சரிகை வேஷ்டி, அங்கவஸ்திரம், பட்டு ஜிப்பா அணிந்திருந்தார். நெற்றியில் விபூதி பட்டை, அவற்றின் நடுவில் இருந்த குங்குமப் பொட்டு அவரை பக்திமானாகப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.



''மகள் வீட்டில் இல்லையா?'' சோபாவில் உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

''இருக்கிறாள். குளித்து விட்டு இப்பொழுதுதான் வந்தாள்'' என்றவள், ''ஹேமா... தீட்சிதர் வந்திருக்கிறார்.'' உள்பக்கம் பார்த்துவிட்டுக் குரல் கொடுத்தாள்.

''இதோ வந்துவிட்டேன் 'மம்மி...'' ஹேமா படுக்கை அறையிலிருந்து பதில் சொன்னாள்.

தீட்சிதர் வீடு முழுவதும் பரிசீலிப்பது போல் பார்த்தார். அவருக்குத் திருப்தியாக இருந்தது. வீட்டில் ஆண் துணை இல்லாவிட்டாலும், கணவர் இறந்து போய் பத்து வருடங்களுக்குமேல் ஆகிவிட்டாலும், ராஜலக்ஷ்மி குடும்பக் கௌரவத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறாள். வங்கியில் அதிகாரியாய் அவளுக்கு நல்ல பெயர் இருக்கிறது. ஒரே மகள். ஹேமாவும் படிப்பு, அழகு, குணம் எல்லாவற்றிலும் ஒன்றோடு ஒன்று போட்டி போடும் விதமாக வைரமாய் ஜொலித்துக் கொண்டிருக்கிறாள்.

ஹேமா வந்தாள்.

''வணக்கம். சௌக்கியமாக இருக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''வாம்மா... உட்கார்ந்து கொள்...'' அன்புடன் சொன்னார்.

ஹேமா அவர் உட்கார்ந்திருந்த சோபாவின் மறுமுனையில் அமர்ந்துகொண்டாள்.

''ஆனந்த் எப்படி இருக்கிறான்?'' ஹேமா கேட்டாள்.

''நன்றாக இருக்கிறான். உன் கையில் அமிருதம் ஏதோ இருக்க வேண்டும். கொஞ்சம் தேறி இருக்கிறான். இவ்வளவு ஆரோக்கியமாய் இதற்கு முன் அவனை நான் பார்த்ததில்லை.''

''நீங்க ரொம்பதான் புகழறீங்க. எல்லோரும் கொடுக்

கும் மருந்துகளைதான் நானும் கொடுத்தேன்'' என்றாள் ஹேமா.

''இல்லை ஹேமா. ஆனந்த் இப்பொ ரொம்ப நனறாக இருக்கிறான்.'' ஹரி சொன்னான்.

''மிகைப்படுத்தி சொல்வதாய் நினைக்காவிட்டால் எங்க ஹேமாவின் கைராசி ரொம்ப நல்லது என்று எல்லோரும் சொல்வார்கள்'' என்றாள் ராஜலக்ஷ்மி.

''பார்த்தாயா... உங்க அம்மாவே சொல்லி விட்டாள்...'' என்றார் திட்சிதர்.

''நான் நம்ப மாட்டேன்.'' ஹேமா சோபாவிலிருந்து எழுந்து கொண்டே சொன்னாள். ''மம்மி! நீ பேசிக் கொண்டிரு. நான் ஒரு நோயாளியைப் பார்க்கப் போக வேண்டும். கிளம்புகிறேன்.''

''வந்தவர்களுக்கு என்ன வேண்டுமோ கேள் பேபி. காபி சாப்பிடுவீர்களா இல்லை டிபன் சாப்பிடலாமா?'' என்று திட்சிதர் பக்கம் திரும்பி கேட்டாள்.

''எங்கள் வீட்டு நிர்வாகம் முழுவதும் ஹேமாவுடையதுதான். உணவு மேஜையருகில் வரும்வரை அன்று என்ன சமையல் என்று எனக்குத் தெரியாது. விருந்தாளிகள் வந்தால் அவர்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு அவளுடையதுதான்.'' மகளை பெருமை பொங்க பார்த்துக் கொண்டே சொன்னாள் ராஜலக்ஷ்மி.

''மம்மி... புகழ்வதைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளேன்.'' ஹேமா வேண்டுகோள் விடுத்தாள்.

''இல்லாததை ஒன்றும் உங்க அம்மா சொல்லிவிடவில்லையே?'' என்றார் தீட்சிதர்.

''என்ன சாப்பிடுகிறீர்கள்? காபி, டீ, பால் மோர்... ஏதாவது...''

''காபி குடிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை...'' தீட்சிதர் சொன்னார்.



சொல்லுங்கள் என்பது போல் பார்த்தாள்.

''ஆனந்த் என்னை அழைப்பது போல் நீயும் என்னை தாத்தா என்று அழைக்க வேண்டும்.''

ஹேமா ராஜலக்ஷ்மி பக்கம் பார்த்தாள்.

ராஜலக்ஷ்மி புன்முறுவலுடன் ''ஆனந்தைப் போல் ஒருமையில் பேசும் அளவுக்கு நெருக்கம் இல்லை. பெரியவர்களை அப்படி பேசுவதும் நன்றாக இருக்காது. தாத்தா என்று அழைத்தாலும் பன்மையில் விளிப்பதுதான் மரியாதை'' சொன்னாள்.

''அம்மாடியோவ்'' எங்க தாத்தாவை என்னைத் தவிர வேறு யாரும் அப்படி கூப்பிடக் கூடாது என்று ஆனந்த் என்னுடன் சண்டைக்கு வந்தால்...'' ஹேமா பயந்து விட்டதுபோல் நடித்தாள்.

ஹேமா இப்படி சொன்னதும் திட்சிதர் சிரித்து விட்டார். ''அப்படி எதுவும் நடக்காது. சின்ன வயதிலிருந்து தனியாக வளர்ந்து விட்டான். வேறு யாராவது அவனுடைய தாத்தாவை அப்படி அழைத்தால் விருப்பப்பட மாட்டானோ என்னவோ. ஆனால் நீ அவனுடைய டாக்டர். நீ அழைத்தால் சந்தோஷப்படுவான்.''

''அப்படின்னா ஓ. கே. உங்களுக்குக் காபி கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி விட்டு உள்ளே போனாள்.

''விஜய் எப்படி இருக்கிறான்?'' ராஜலக்ஷ்மி கேட்டாள்.

''இரண்டு நாட்களுக்கு முன் தோட்டத்தில் வேலையை முடித்துக் கொண்டு வரும்போது காலில் கண்ணாடித் துண்டு குத்திவிட்டது. காயம் கொஞ்சம் ஆழம்தான்.''

சமையல் அறை பக்கம் போய்க் கொண்டிருந்த ஹேமா சட்டென்று நின்று விட்டாள். பின்னால் திரும்ப நினைத்துக் கட்டுப்படுத்திக் கொண்டாள். தீட்சிதரும்,

ராஜலக்ஷ்மியும் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஹேமா காபி கலந்து எடுத்து வந்தாள்.

திட்சிதர் காபி கோப்பையை எடுத்துக் கொண்டு டீபாய் மீது வைத்து விட்டு ''ஒரு நிமிடம் இப்படி சோபாவில் உட்கார்ந்து கொள் அம்மா'' என்றார்.

ஹேமா உட்கார்ந்து கொண்டாள்.

திட்சிதர் ஒரு பாக்கெட்டை எடுத்து ஹேமாவின் கைகளில் வைத்தார்.

''என்ன இது?'' ஹேமா எடுத்துக் கொள்ளவில்லை. சந்தேகமாகப் பார்த்தாள்.

''பெரிதாக ஒன்றுமில்லை. ஆனந்த் ஆஸ்பத்திரியிலிருந்து நல்லபடியாகத் திரும்பி வந்தான். எல்லாம் உன் கைராசிதான். அன்று அவனைச் சேர்க்கும்போது பிழைப்பான் என்று நான் நினைக்கவில்லை. என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் வகையில் சின்ன அன்பளிப்பு.''

''அன்பளிப்பு எதுவும் வேண்டாம். என்னுடைய ட்யூட்டியை நான் செய்தேன்'' என்றாள் ஹேமா.

''இந்த ஃபார்மாலிடீஸ் எல்லாம் எதற்கு?'' ராஜலக்ஷ்மி சொன்னாள்.

''அப்படியில்லை பெரியம்மா. வயதில் பெரியவர். மனப்பூர்வமாய் தருகிறார். எடுத்துக் கொண்டால்தான் நன்றாக இருக்கும். மறுக்காதீர்கள்.'' ஹரி வற்புறுத்தினான். அந்தப் புடவையை ஹேமா எடுத்துக் கொள்ளவில்லையென்றால் சிக்கலாகிவிடும். கடையில் பேரம் பேசி முன்னூறு ரூபாய் குறைத்துப் புடவையை வாங்கியிருக்கிறான். அந்த விஷயத்தைத் திட்சிதரிடம் சொல்லாமல் அந்த பணத்தை அமுக்கி விட்டான். ஹேமா புடவையை வாங்கிக் கொள்ளவில்லை என்றால் புடவையைக் கடையில் திருப்பி தரச் சொல்வார் திட்சிதர். அந்த முன்னூறு ரூபாய் எப்பவோ செலவழிந்து போய்விட்டது.



ஹரியும் சேர்ந்து வற்புறுத்தியதில் ராஜலக்ஷ்மியால் மறுக்க முடியவில்லை.

''புடவை, பழம், ஸ்வீட்ஸ் இதெல்லாம் என்ன? நிறைய செலவு செய்திருக்கீங்களே?'' என்றாள் ராஜலக்ஷ்மி.

''ஏதோ என்னுடைய திருப்திக்காக...'' என்றார் திட்சிதர்.

ஹேமா காபி கோப்பையை எடுத்து அவரிடம் கொடுத்தாள்.

''நீங்க கட்டாயம் எங்க வீட்டுக்கு வரவேண்டும்'' என்றார் திட்சிதர்.

''கட்டாயம் வருகிறோம்...'' என்றாள் ராஜலக்ஷ்மி.

''எப்பொ வருகிறீர்கள் என்று சொல்லுங்கள். ஆனந்தை ஹேமா பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் நான் சொன்னது பொய் இல்லை என்று புரிந்து கொள்வாள். அவனை இன்னிக்கு என்னுடன் வரச் சொல்லி சொன்னேன். பெண்களுடன் அவன் அதிகமாகப் பழகியது கிடையாது. கூச்சம் அதிகம்'' என்றார் திட்சிதர்.

''நாளை மறுநாள் விடுமுறைதானே பெரியம்மா. வாங்களேன்.'' ஹரி சொன்னான்.

''நான் இப்பொ விடுமுறையில்தான் இருக்கிறேன்'' என்றாள் ராஜலக்ஷ்மி.

''நாளை மாலை எனக்கு ஃப்ரீதான் மம்மி.'' ஹேமா சொன்னாள்.

''அப்பொ நாளை மாலை வருகிறோம்...'' ராஜலக்ஷ்மி சொன்னாள்.

''நாளைக்கு வந்தால் தோட்டத்திற்குப் போய்ப் பார்க்கலாம். மலைபோல் பறித்து வைத்திருக்கும் பூக்களை ஆட்கள் மாலையாகத் தொடுத்துக் கொண்டிருக்கும் காட்சி பார்க்கவே நன்றாக இருக்கும்'' என்றான் ஹரி.

ஹரியும், தீட்சிதரும் விடைபெற்றுக் கொள்வதற்காக எழுந்து கொண்டார்கள்.

ஹேமா மாத்திரைகளைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''என்னம்மா இது?'' என்றார்.

''விஜய்! அதான் உங்க விஜய்க்குக் காலில் கண்ணாடி குத்திவிட்டது என்று சொன்னீர்களே. என்னிடம் சாம்பிள் ஆக வந்த மாத்திரைகளைத் தருகிறேன்'' என்றாள்.

''அப்படியா... ரொம்ப பெரிய மனசு உனக்கு. நல்லா யிருக்கணும். சீக்கிரமே கல்யாண பிராப்திரஸ்து.''

''உங்களைப் போன்ற பெரியவர்களின் ஆசீர்வாதம் தான் முக்கியம். எங்க ஹேமாவுக்கு நல்ல வரன் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.'' ராஜலக்ஷ்மி சொன்னாள்.

''நிச்சயமாகச் சொல்கிறேன். உங்க ஹேமாவுக்கு என்ன குறைச்சல். சாட்சாத் மகாலக்ஷ்மியைப்போல் இருக்கிறாள். எந்தப் பையன் கொடுத்து வைத்திருக் கிறானோ...'' எழுந்து கொண்டே சொன்னார் தீட்சிதர்.

காரில் வரும்போது தீட்சிதர் சட்டைப் பையிலிருந்து ஹேமா விஜய்க்காகக் கொடுத்த மாத்திரைகளை எடுத்து ஜன்னல் வழியாக வெளியில் வீசி எறிந்தார். முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டு டிரைவருடன் பேசிக் கொண்டிருந்த ஹரி இதைக் கவனிக்கவில்லை.

''ஹரி! நாளை மாலை நாலு மணிக்கு காரை எடுத்துக் கொண்டு போய் உன் பெரியம்மாவையும் ஹேமாவையும் அழைத்துக் கொண்டு வா...'' என்று சொன்னார்.

''கட்டாயம். காரில் கொஞ்சம் ரிப்பேர் இருக்கிறது என்று டிரைவர் சொல்கிறான்'' என்ற ஹரி டிரைவர் பக்கம் திரும்பி, ''எவ்வளவு செலவாகும்?'' என்று கேட்டான்.



''ஐநூறு அறுநூறு வரையில் ஆகலாம் சார். திறந்து பார்த்தால்தான் சொல்ல முடியும்.'' பதில் சொன்னான் டிரைவர்.

''அவ்வளவு எதுக்கு? எனக்குத் தெரிந்த மெகானிக் இருக்கிறான். முன்னூறு ரூபாய்க்குள் வேலையை முடித்துத் தருவான்'' என்றான் ஹரி.

தீட்சிதர் ரூபாயை எடுத்துக் கொடுத்தார். ''காலை யிலேயே காரைச் சரி செய்து வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

''அப்படியே செய்கிறேன்...'' பணிவாகச் சொன்னான் ஹரி. ஹரியின் அறிவுரையை ஏற்றுக் கொண்டு சமீபத்தில் தான் டிரைவரை அமர்த்தியிருந்தார் தீட்சிதர்.

''எல்லாவற்றுக்கும் விஜய்தான் வரவேண்டும் என்றால் எப்படி முடியும்? டிரைவர் என்று ஒருத்தன் இருந்தால் மற்ற வேலைகளுக்கும் நமக்கு உதவியாக இருப்பான்'' என்று ஹரி சொன்னபோது தீட்சிதருக்கும் சரி என்று பட்டது.

''சம்பளம் எவ்வளவு தர வேண்டியிருக்கும்?''

''ரொம்ப ஒன்றும் தர வேண்டியதில்லை. எனக்குத் தெரிந்த பையன் ஒருத்தன் இருக்கிறான். நான் பேசிக் கொள்கிறேன்.'' ஹரி சொன்னான்.

டிரைவரை ஏற்பாடு செய்து கொண்ட பிறகு விஜய் கையில் கார் கிடைக்காதவாறு சாமர்த்தியமாகச் செயல் பட்டார் தீட்சிதர். ஆனந்த் நண்பர்களுடன் சுற்றும் ஜீப் ரிப்பேராகி கேரேஜில் கிடந்தது.

விஜய் கைக்குக் கார் தராமல் ஹரியை அங்கேயும் இங்கேயும் காரில் அனுப்புவது தீட்சிதருக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவர் முன்னாடியே ஹரியிடம் சொன்னார். ''உங்க பெரியம்மாவிடம் என்ன சொல்வாயோ, எப்படி சொல்வாயோ எனக்குத் தெரியாது. ஆனந்தின் திருமணம்

ஹேமாவுடன் நடக்கும் விதமாகச் செய்ய வேண்டும். எனக்கு ஹேமாவைப் பிடித்திருக்கிறது. ஆனந்துக்கும் அவளை ரொம்ப பிடித்திருக்கிறது. உங்க பெரியம்மா சொன்னால் ஹேமா ஒப்புக் கொள்வாள் இல்லையா?''

''கட்டாயம் ஒப்புக் கொள்வாள்.''

''உங்க பெரியம்மாவுக்கு ஆனந்தைப் பிடிக்கும் என்று தான் நினைக்கிறேன்.''

''நிச்சயமாகப் பிடிக்கும். சொத்தும், நல்ல சம்பிர தாயமும் இருக்கிற வரன்தான் வேண்டுமென்று பெரியம்மா எதிர்பார்க்கிறாள். அந்த இரண்டும் உங்களிடம் தாராளமாய் இருக்கிறது. ஆனந்தும் இப்பொ கொஞ்சம் உடல் தேறி பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறான். உங்களுக்கு அந்தச் சந்தேகமே வேண்டாம்'' என்றான் ஹரி.

ஃ ஃ ஃ

ஆனந்த் அறையில் கூண்டில் அடைபட்ட புலியைப் போல் நடைபயின்று கொண்டிருந்தான். கோபமும், வேதனையும் அவன் முகத்தில் பிரதிபலித்துக் கொண் டிருந்தன.

இரவு பத்துமணி ஆகிவிட்டது.

படிகளில் சத்தம் கேட்டது.

ஆனந்த வாசற்படி அருகில் சென்றான்.

விஜய் தலையைக் குனிந்து கொண்டு ரெயிலிங்கை பிடித்துக் கொண்டு மெதுவாகப் படிகளை ஏறிக் கொண்டிருந்தான்.

ஆனந்த் நிலைப்படியில் கதவில் சாய்ந்து கொண்டு கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

அருகில் வந்த பிறகு விஜய் தலையை உயர்த்திப் பார்த்தான்.



''அனூ! நீ இன்னும் உறங்கவில்லையா?'' புன்முறுவலுடன் கேட்டான்.

''நீ... நீ எங்கே போயிருந்தாய்? முதலில் அதைச் சொல்லு.''

''டவுனுக்கு.''

''டவுனுக்குப் போயிருந்தாயா? கொஞ்சமாவது என்னைப் பற்றிய நினைவு இருந்தால் இப்படிச் செய்திருப்பாயா?''

''என்ன நடந்தது?'' விஜய் கண்களில் பதட்டம் தென்பட்டது.

''என்ன நடந்தது?'' ஆனந்த் விஜய் கேட்ட அதே தொனியைப் பின்பற்றினான். ''எதுவும் தெரியாததுபோல் கேட்கிறாயே. நிஜமாகவே உனக்குத் தெரியாதா?''

''என்ன ஆச்சு அனூ?''

''என்ன ஆச்சு என்று என்னையே விசாரிக்கிறாயா? இன்னிக்கு நம் வீட்டுக்கு விருந்தாளிகள் வருகிறார்கள் என்று உனக்குத் தெரியும் இல்லையா?''

''தெரியும்.''

''தெரிந்த பிறகும் டவுனுக்குப் போயிருக்கிறாய்? அப்படி என்ன அவசர வேலை?''

''கோபாலன் மாமாவுக்கும் அவருடைய மகன்களுக்கும் சொத்து விவகாரத்தில் ஏதோ தகறாரு. லாயரை அறிமுகப் படுத்தி வைக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டதால், நம் லாயரிடம் அழைத்துச் சென்றேன்.''

''ஏன்? அவர்களுடைய வீடு பற்றிக்கொண்டு எரிகிறதா? இன்னிக்குத்தான் உனக்கு நேரம் கிடைத்ததா? வீட்டுக்குக் கெஸ்டுகள் வருகிறார்கள் என்று சொல்லியிருந்தேனே.''

விஜய் பேசவில்லை.

''ராஜலக்ஷ்மி மேடமும், ஹேமாவும் வருகிறார்கள்

என்று சொல்லியிருந்தேன். இதோ வருகிறேன் என்று சொன்ன பெரிய மனிதன் வருகிற ஜாடையே காணும். கோபாலன் மாமா வீட்டுக்கு ஆளை அனுப்பினால் டவுனுக்குப் போயிருப்பதாக அவருடைய மனைவி சொன்னாளாம். கால்வலி முழுவதுமாக குறையாத நிலையில் போகாவிட்டால்தான் என்ன?''

''நான் இருப்பது அவ்வளவு முக்கியம் என்று நினைக்க வில்லை.'' விஜய் தாழ்ந்த குரலில் சொன்னான்.

''முக்கியம்... இல்லையா? எனக்கு விருப்பமானவர்கள் வீட்டுக்கு வரும்போது என்னுடன் சேர்ந்து என் பக்கத்தில் இருப்பது உனக்கு முக்கியமாகத் தோன்றவில்லையா? விஜய்! என்ன ஆச்சு உனக்கு? புதிதாக பேசுகிறாய்?''

''நான் அத்தனை தூரத்திற்கு யோசிக்கவில்லை.''

''விஜய்! போய் விடு. இனி என்னிடம் எதுவும் சொல்லாதே.'' ஆனந்த் கத்தினான்.

விஜய் எப்பொழுதும் போல் ஆனந்தைச் சமாதானப் படுத்த முயற்சி செய்யவில்லை. ஆழமாய் பெருமூச்சு விட்டுப் பின்னால் திரும்பினான். நிதானமாகப் படிகளில் இறங்கி போய்க் கொண்டிருந்தான். அந்தச் செயலில் கோபமோ, அவமானமோ எதுவும் இல்லை. ஸ்திரமான முடிவுக்கு வந்தனைப் போல் நிதானமாக இறங்கிப் போய்க் கொண்டிருந்தான்.

''விஜய்!!'' ஆனந்த் குரலை உயர்த்தி அழைத்தான்.

விஜய் நின்று திரும்பிப் பார்த்தான்.

ஆனந்த் சொன்னான். ''இன்றுடன் உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.''

சரி என்பது போல் பார்த்துவிட்டு விஜய் படியிறங்கப் போனான்.

ஆனந்த் நாலே எட்டில் வேகமாய் இறங்கி விஜய்



அருகில் சென்று அவனைப் பலமாகப் பிடித்துக் கொண் டான்.

''நிஜமாகவே போய் விடுவாயா?''

விஜய் பதில் சொல்லவில்லை.

''சொல்லு விஜய். நிஜமாகவே போய் விடுவாயா?''

விஜய் முகத்தில் தென்படும் மௌனமே அவன் கேள்விக்குப் பதில் சொல்வதுபோல் இருந்தது.

ஆனந்த் விஜயின் கையைப் பலமாகப் பற்றிக்கொண்டு தன் அறைக்கு இழுத்து வந்து நாற்காலியில் வலுக்கட்டாய மாக உட்கார வைத்தான்.

''உன்னுடைய உத்தேசம்தான் என்ன?'' ஆனந்த் கேட்டான்.

''ஒன்றுமில்லை.''

''இன்னிக்கு ஹேமாவும், ராஜலக்ஷ்மி மேடமும் நம் வீட்டுக்கு வந்திருந்தார்கள்...''

''வரப் போகிறார்கள் என்று தெரியும்.''

''வீட்டுக்கு விருந்தாளிகள் வரும்போது நீ இப்படி போனது மரியாதைதானா? நீ இல்லாவிட்டால் கொஞ்சம் கூட நன்றாக இல்லை. ராஜலக்ஷ்மி மேடமும் உன்னைக் காணுமே என்று கேட்டார்கள். எனக்கும் தாத்தாவுக்கும் அவர்களுடன் உரையாட தெரியவில்லை. நானும், ஹரியும் அவர்களைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றோம். நீ அந்தத் தோட்டத்தை எவ்வளவு கஷ்டப் பட்டு முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறாய் என்று விலா வாரியாகச் சொன்னேன். ஹேமா உன் கால் வலிக்காக மருந்துகளைக் கொடுத்து அனுப்பினாளாம். நம் தாத்தா ஞாபக மறதியாய் அதை அங்கேயே வைத்துவிட்டு வந்து விட்டேன் என்று சொன்னார்.''

''நான் மருந்து போட்டுக் கொண்டு விட்டேன்.'' விஜய் வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டே சொன் னான். அவன் முகத்தில் களைப்பு வெளிப்படையாய்

தெரிந்தது. வலுக்கட்டாயமாய் வரவழைத்துக் கொண்ட பொறுமை கண்களில் தென்பட்டது.

ஆனந்த் விஜயைப் பார்த்து இருகரங்களை ஜோடித்துக் கொண்டே சொன்னான். ''தயவு செய்து என்னைக் கொல்லாதே விஜய்... சமீபகாலமாய் நீ வித்தியாசமாய் நடந்துகொள்கிறாய். டிரைவரை வைத்துக் கொள்ளுங்கள் என்று தாத்தாவிடம் சொன்னாயாம். ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் ஒதுக்கிக்கொண்டு இருக்கிறாய். உன் போக்கைப் பார்த்தால் கடைசியில் என்னை விடுவித்துக் கொள்வதற்கு இது முன்னுரையோ என்று தோன்று கிறது.''

விஜய் பேச வில்லை.

ஆனந்த் அப்பொழுதுதான் கவனமாகப் பார்த்தான்.

''விஜய்! ஏன் என்னவோ போல் இருக்கிறாய்? உடம்பு சரியாக இல்லையா?'' பதட்டத்துடன் கேட்டான்.

''நன்றாகத்தான் இருக்கிறேன்.''

''இல்லை விஜய். இதற்குமுன்பு நான் உன்னை இப்படி பார்த்ததே இல்லை.'' ஆனந்த் சின்னக் குழந்தையைப் போல் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டான். ''சாரி... விஜய். நான் ஒரு முட்டாள். காரணமே இல்லாமல் உன்மீது கோபம் கொள்கிறேன். ஹேமா வந்திருந்தாள். எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. பக்கத்தில் நீ இல்லாத தால் அந்த சந்தோஷம் பாதியாகி விட்டது போல் தோன்றியது.''

''ஆனந்த்! உனக்கு எத்தனையோ முறை சொல்லி இருக்கிறேன், நீ தானாக மனிதர்களுடன் பழக கற்றுக் கொள்ள வேண்டுமென்று. நான் எப்போதும் இருக்க மாட்டேன் இல்லையா.''

''இல்லாமல் எங்கே போவாய்?''

''எது வேண்டுமானாலும் நடக்கலாம். நாளைக்கே நான் இறந்து போகலாம்.''



விஜய் சொல்லும் போதே ஆனந்த் சட்டென்ற வாயைப் பொத்தி விட்டான்.

''அப்படி சொல்லாதே விஜய். ப்ளீஸ்! சாவு வந்து நம் இருவரையும் பிரிக்கும் என்றால் அது முதலில் எனக்குத் தான் நிகழ வேண்டும். உன் மடியில் தலையை வைத்துக் கொண்டு நிம்மதியாக என் கடைசி மூச்சு பிரிய வேண்டும்.''

விஜய் பேசவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண் டான்.

ஆனந்த் விஜயின் முகவாயைப் பற்றித் தன் பக்கம் திரும்பினான்.

''பார்த்தாயா விஜய், நான் எவ்வளவு சுயநலக்கார னாய் இருக்கிறேன் என்று. என்னுடைய மகிழ்ச்சியைத் தான் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ எவ்வளவு வேதனைப்படுவாய் என்று கொஞ்சம்கூட யோசிக்கவில்லை. சாரி விஜய். நான் இப்பொ சந்தோஷமாக இருக்கிறேன். என்னுடைய சந்தோஷமும் உனக்கு முக்கியம்தானே. அதனால் இனி அந்த டாபிக்கை விட்டு விடுவோம். ஹேமாவுக்கு உன் அறையைக் காண்பித்தேன். உங்க அம்மா வின் போட்டோவையும் காண்பித்தேன்.''

''எதற்காகக் காண்பித்தாய்?'' விஜய் உடனே கேட்டான்.

''உன் பிரஸ்தாபனை வராமல் என்னால் பேச முடியுமா? டின்னர் முடிந்த பிறகு தாத்தா, ராஜலக்ஷ்மி மேடம், ஹரி எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். தாத்தா என்னை ஹேமாவுக்கு மாடியைச் சுற்றிக் காண் பிக்கச் சொன்னார். உன் அறைக்கு அழைத்துப் போனது, மேஜைமீது நீயும் உன் அம்மாவும் சேர்ந்து இருக்கிற போட்டோவை அவள் பார்த்தது எல்லாம் சகஜமாய் நடந்து விட்டது. இதோ இந்த இடத்தில்தான் இருவரும் இரண்டு மணி நேரம் உட்கார்ந்திருந்தோம். நம்முடைய சின்ன வயதில் நடந்த நிகழ்ச்சிகள், எனக்காக ஸ்கூலில்

நீ அடி வாங்கியது, எனக்கு ஜுரம் வந்தால் தாத்தா உனக்குச் சாப்பாடு போடாமல் உன்னைப் பட்டினி போட்டது, தாத்தாவுக்கு இப்பொ உன்னைப் பிடிக்காமல் போனது... எல்லாவற்றையும் சொல்லி விட்டேன்.''

''யூ ஆர் எஃபூல். வீட்டு விஷயங்களை இப்படி யாராவது வெளியில் சொல்வார்களா?'' விஜய் பற்களைக் கடித்துக் கொண்டே சொன்னான்.

ஆனந்த் நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டு சிரித்தான். ''ஏனோ தெரியவில்லை. ஹேமாவின் கண்களில் ஏதோ மந்திர சக்தி இருக்கிறது. எல்லாவற்றையும் சொல்லி விட்டேன். நீயும் இருந்திருந்தால் மூவரும் சேர்ந்து ஜாலியாகப் பேசிக்கொண்டு இருந்திருப்போம். நாம் எப்படியும் அவர்கள் வீட்டுக்குப் போகப் போகிறோம். திங்கள்கிழமை ஹேமாவுக்குப் பிறந்த நாளாம். ராஜலக்ஷ்மி மேடம் சொன்னாள். ''ஆனந்த் திடீரென்று எழுந்து போய் நிலைக் கண்ணாடியின் முன் நின்றான். தன்னுடைய உருவத்தைக் கவனமாய் பார்த்துக் கொண்டே ''விஜய்! என்னுடைய உடல் நலம் இப்பொ நன்றாகத்தானே இருக்கிறது?'' என்று கேட்டான். ஷர்ட்டின் நுனியை இழுத்துப் பார்த்தான். ''கொஞ்சம் பூசியிருக்கிறேன். ஷர்ட் சின்னதாகி விட்டது. ஐயாம் ஹேப்பி. பருமனாகி விட்டேன் என்றால் ஏன் ஆக மாட்டேன்?'' என்றான்.

''குட் நைட் அனூ.''

''ஓ. கே. குட் நைட். நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்.'' கண்ணாடியில் பார்த்துக்கொண்டே சொன்னான் ஆனந்த்.

விஜய் தன்னுடைய அறைக்கு வந்தான்.

அவனுடைய களைப்பு இரு மடங்காகி விட்டதுபோல் இருந்தது. அறைக்குள் வந்ததும் தாயின் போட்டோவை ஒரு முறை பார்த்தான். ஷர்ட்டைக் கழட்டி ஹேங்கரில்



மாட்டி விட்டுக் கட்டில்மீது அமர்ந்து கொண்டான். தலையணைக்கருகில் சின்ன பாக்கெட் ஒன்று இருந்தது. எடுத்துப் பார்த்தான். அதில் மருந்துகள் இருந்தன. ஒரு காகிதத்தில் எந்த மருந்துகள் எந்த வேளைக்குப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பு எழுதி கீழே ஹேமா என்ற கையெழுத்தும் இருந்தது.

விஜய்க்குக் கால் ரொம்ப வலித்தது. பின்னால் நகர்ந்து தலையணையில் தலையைச் சாய்த்துக் கொண்டான். காகிதத்தில் ஹேமாவின் கையெழுத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ரொம்ப உயர்ந்த மனம் ஹேமாவுக்கு. தன்னை மன்னித்து விட்டாள். கண்கள் ஈரமாவதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஜன்னல் வழியாக வீசிக் கொண்டிருந்த குளிர்ந்த காற்று களைத்துப் போயிருந்த அவனுடைய உடலுக்கு இதம் தருவது போல் இருந்தது.

தீட்சிதர் முதல் நாளே விஜயை அழைத்து ஹேமாவும், அவளுடைய தாயும் மறுநாள் சாப்பிட வரப் போவதாகவும், அப்பொழுது விஜய் வீட்டில் இல்லாமல் வேறு எங்கேயாவது போய்விட வேண்டுமென்றும் ஆணையிடுவது போல் சொன்னார்.

''ஆனந்த் ஹேமாவுடன் தனிமையில் இருக்க வேண்டும். நீ வீட்டில் இருந்தால் ஆனந்த் உன்னைவிட மாட்டான். ஹேமா ஆனந்தின் வருங்கால மனைவி. ஹேமாவும் ஆனந்தும் தனியாகப் பேசிக் கொள்ள வாய்ப்பு தரவேண்டும். உனக்கு இது கஷ்டமாக இருந்தாலும். ஆனந்துக்காக இதை செய்துதான் ஆக வேண்டும்.''

காலையிலேயே விஜய் வேலை இருப்பதாகச் சொல்லி லாயர் வீட்டுக்குப் போனான். அவர் இன்று டவுனுக்குப் போகப் போகிறார் என்று ஏற்கனவே அவனுக்குத் தெரியும். அவருடனேயே டவுனுக்குப் போய் விட்டான். அவன்

மனம் முழுவதும் வேதனையும், துக்கமும் நிரம்பியிருந்தன. எத்தனை நாட்கள் இப்படி கண்ணாமூச்சி விளையாடுவது? ஆனந்திடம் வெளிப்படையாகப் பேசிய பிறகு இந்த இடத்தை விட்டுப் போய் விடுவதுதான் சிறந்தது. ஆனால் ஆனந்துக்குத் தீட்சிதர் மீது கோபம் வந்தால்? சின்ன வயதில் ஒருமுறை தீட்சிதர் தன்னை அநியாயமாக அடித்து விட்டார் என்று தெரிந்தபோது ஆனந்த் அடுப்பி லிருந்து எரியும் கொள்ளிக் கட்டையை எடுத்து, தீட்சிதரின் முதுகில் வைத்து விட்டான். விஜய்க்குத் தீட்சிதரிடம் எந்த பயமும் இல்லை. ஆனந்திடம் இருக்கும் இந்த ஆவேசம்தான் அவனைப் பின்வாங்க வைக்கிறது. தனக்கும் ஆனந்துக்கும் நடுவில் யாராவது வந்தால் அவன் சகித்துக் கொள்ள மாட்டான். முன்பின் யோசிக்காமல் எரிமலையிலிருந்து பொங்கிவரும் அக்னிக் குழம்பைப்போல் எதிராளியை எரித்துச் சாம்பலாக்கி விடுவான். விஜய் பெருமூச்சு விடுத்தான். ஹேமாவை இந்த வீட்டுக்கு வரவழைத்து அந்தக் கடவுள் தன் பொறுமையை மேலும் சோதிக்கிறார்.

## 18

அன்றுதான் ஹேமாவின் பிறந்தநாள். முதல்நாளே ஆனந்த் ஹேமாவுக்குப் பிறந்தநாள் பரிசு வாங்குவதற்குக் கடைகடையாய் ஏறி இறங்க வைத்து விஜயை ரொம்பவும் அலைக்கழித்து விட்டான்.

''ஹேமா சாதாரண பெண் இல்லை. பரிசு பொருள் ரொம்ப வித்தியாசமானதாக இருக்க வேண்டும். என்ன கொடுத்தால் நன்றாக இருக்கும்?'' ஆனந்த் விஜயிடம் கேட்டான்.

''என்ன வாங்கலாம்?'' யோசிப்பதுபோல் பார்த்தான் விஜய். உண்மையில் அவன் எதையும் யோசிக்கவில்லை.



ஆனந்த் பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும். சின்ன வயதிலிருந்தே அவன் அப்படித்தான். அவனால் சுயமாக ஒரு முடிவுக்கு வரமுடியாது. எதிராளி சொன்னது பிடிக்காது. கடைசியில் அவசர அவசரமாக ஏதோ ஒரு முடிவு செய்துவிடுவான். இப்பொழுதும் அதுதான் நடக்கப் போகிறது.

''விஜய்! எனக்கும் ஹேமாவுக்கும் திருமணம் செய்து வைக்கலாமென்று தாத்தாவும், ராஜலக்ஷ்மி மேடமும் பேசி வருகிறார்கள். நானும் அதற்கு ஆட்சேபணை எதுவும் சொல்லவில்லை, மைகாட்! நான் இவ்வளவு கொடுத்து வைத்தவனா! நீ எனக்கு நண்பனாக கிடைத்ததே பெரிய அதிர்ஷ்டமாக நினைத்து வருகிறேன்... ஹேமா எனக்கு மனைவியாக வந்தால்? விஜய்! என் அதிர்ஷ்டத்தை உன்னால் நம்ப முடிகிறதா?''

நம்புகிறேன் என்பதுபோல் பார்த்தான் விஜய்.

''விஜய்! ஹேமா பற்றி உன் அபிப்பிராயம் என்ன? நாங்க இருவரும் திருமணம் செய்து கொண்டால் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு சந்தோஷமாக வாழ முடியுமா? என்னைப் பொறுத்தவரையில் நான் மகிழ்ச்சி யாக இருப்பேன் என்று தோன்றுகிறது. தாத்தாவுக்கு என்னுடைய முடிவு சொல்ல வேண்டும். என்ன சொல்லட்டும்?''

''இந்த விஷயத்தில் நீ சுயமாக முடிவு செய்ய வேண்டும்'' என்றான் விஜய்.

''நான் எந்த விஷயத்திலாவது உன் அறிவுரை யில்லாமல் முடிவு செய்திருக்கிறேனா? விஜய்! முதலில் ஹேமாவின் மனதில் என்ன இருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு வேலை செய்கிறாயா... 'எங்க விஜய் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டுமாம்' என்று ஹேமாவிடம் சொல்லி விடுகிறேன். நீங்க இருவரும் சேர்ந்து ஏதாவது ஹோட்டலுக்கு டின்னருக்குப் போய் வாருங்கள்.''

''வேண்டாம். நடக்காத காரியம்.''

''ஏன் நடக்காது? நீ பேசவில்லை என்றால் எப்படி? ஹேமாவிடம் பேசினால்தான் உனக்கும் புரியும். விஜய்! இந்த விஷயத்தில் நான் உன்னைத் தவிர வேறு யாரையும் நம்ப மாட்டேன். ஹேமாவுடன் பேசிய பிறகு, அவளைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நீ சொன்னால் நான் தாத்தாவுக்குக் க்ரீன் சிக்னல் தருகிறேன்.''

''அனூ! தயவுசெய்து என்னை இதில் இழுக்காதே. தாத்தா சொல்வதைக் கேள்.''

''நானா!'' ஆனந்த் விஜயின் தோள்களைப் பலமாகப் பற்றிக் குலுக்கினான். ''இப்படிப் பேசுவது நீதானா? அந்தக் கிழவர் எவ்வளவு சுய நலம் பிடித்தவர் என்று மறந்து விட்டாயா? பணத்திற்காக அவர் எதையும் செய்வார். ஹேமாவை அவருக்குப் பிடித்திருக்கிறது என்றால் அதற்கான காரணம் உனக்குப் புரியவில்லையா? ஹேமா இந்த வீட்டுக்கு மருமகளாக வந்தால் தங்கச் சுரங்கமே இந்த வீட்டுக்குக் கிடைத்ததுபோல்தான். ஹேமாவுக்குச் சொத்து நிறைய இருக்கிறது. அதோடு டாக்டர் என்பதால் நல்ல வருமானமும் இருக்கும். ஹரி தாத்தாவிடம் சொல்லி யிருக்கிறான்.''

''அதில் தவறு என்ன இருக்கிறது? அனூ! யாராக இருந்தாலும் உயர்வான இடத்திலிருந்து சம்பந்தம் வர வேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள்.''

''நாம் மட்டும் நினைத்துக் கொண்டால் போறாது. அடுத்தவர்களுக்கும் நம்மைப் பிடித்திருக்க வேண்டும். ஹேமாவும் சின்னக் குழந்தையொன்றும் இல்லை... அவள் மனதில் வேறு யாராவது இருக்கலாம் இல்லையா. யாரும் இல்லையென்றால் நான் அதிர்ஷ்டசாலிதான். என்ன விஜய்? பேசவே மாட்டேன் என்கிறாய். உன் கவனம் இங்கே இல்லையா என்ன?''



''அப்படி ஒன்றும் இல்லை அனூ.''

''நீ பேசி முடித்த பிறகு நானும் ஹேமாவுடன் ஒரு தடவை பேசி அசல் விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்.''

''எந்த விஷயம்?''

''நீ எனக்கு எவ்வளவு முக்கியமானவன் என்று சொல்லப் போகிறேன். என்னைவிட அதிகமாய் உன்னை மதிக்க வேண்டும் என்றும், அன்பாக பழக வேண்டும் என்றும் சொல்லப் போகிறேன்.''

''ஷட்டப் அனூ.''

''உண்மையாகத்தான் சொல்கிறேன். உன்னிடம் அன்பாக இருக்க வேண்டுமென்று சொல்லப் போகிறேன். சொந்த அண்ணனைவிட அதிகமாய், உடன்பிறப்பாய் எண்ணவேண்டுமென்று சொல்லப் போகிறேன்.''

விஜய் தலையைத் திருப்பிக் கொண்டு ஜன்னல் வழியாய் வெளியில் பார்க்கத் தொடங்கினான்.

ஃ ஃ ஃ

''இதோ பார் விஜய்! இன்று மாலை நாம் ஹேமா வீட்டுக்குப் போக வேண்டும். நீ மட்டும் என்னிடம் சொல்லாமல் எங்கேயாவது போனாயோ தெரியும் சேதி. ரொம்ப பொல்லாதவனாகி விடுவேன். அப்புறமாய் என்னைக் குற்றம் சொல்லக் கூடாது. ஆமாம்...'' மிரட்டுவதுபோல் சொன்னான் ஆனந்த்.

விஜய் ஆனந்த் பக்கம் பார்த்தான். அந்தப் பார்வை எப்போதும் இல்லாத விதமாய் வேதனையை, கோபத்தை அடக்கியிருப்பதுபோல் தென்பட்டது.

ஆனந்த் அருகில் வந்தான். விஜயின் தோளில் கையைப் பதித்துக் கொண்டே ''ஐயாம் சாரி விஜய். என்னுடைய பிடிவாத குணத்தால் சிலசமயம் உன் உயிரை எடுத்து விடுகிறேன் இல்லையா...'' என்றான்.

மாலையாகி விட்டது.

பார்ட்டிக்கு விஜய் எந்த உடைகளைப் போட்டுக் கொள்ள வேண்டுமென்று ஆனந்த் செலக்ட் செய்தான்.

''அவ்வளவு விலை உயர்ந்த உடைகள் இப்பொ வேண்டாம்'' விஜய் மறுத்தான்.

''இப்பொ இல்லாவிட்டால் எப்பொ போட்டுக் கொள்ளப் போகிறாய்? நான் சொன்னதற்கு மறுப்பு சொல்லாதே.''

ஆனந்த் டிரெஸ் செய்து கொள்வதற்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது.

''விஜய்! நான் நன்றாக இருக்கிறேனா?'' ஆனந்த் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

''நன்றாக இருக்கிறாய்.''

''இப்படி மொட்டையாகச் சொன்னால் எப்படி? விவரமாகச் சொல்லு.''

''ஆரோக்கியமாய் இருக்கிறாய். உடல் எடை கூடியிருக்கிறது. உடைகளும் பொருத்தமாக இருக்கின்றன.''

''தாங்க்யூ.'' திருப்தியாகச் சொன்னான் ஆனந்த்.

ஆனந்த் விஜய் இருவரும் தயாராகி படியில் இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். தீட்சிதரும், ஹரியும் கீழே ஹாலில் அவர்களுக்காகக் காத்திருந்தார்கள்.

''அனூ! விஜயின் பாடு தேவலை. உரிமை இருப்பவனை விட இரவல்காரன்தான் சுகப்படுவானாம்.'' ஹரி சொன்னான்.

தீட்சிதர் விஜயைப் பார்த்ததும் பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டார்.

ஆனந்துக்காக நண்பர்கள் வந்திருந்தார்கள்.

''விஜய்! இப்போதே அவர்களுடன் பேசிவிட்டு அனுப்பி விடுகிறேன்...'' என்று சொல்லிவிட்டு முன் அறைக்குப் போனான். ஹரி வந்தவர்களுக்குக் காபி



ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகச் சமையல் அறை பக்கம் போனான்.

தீட்சிதர் விஜயைப் பார்த்து ''விஜய்... ஒருமுறை இப்படி வா'' என்று தன்னுடைய அறையை நோக்கிப் போனார்.

விஜய் அவரைப் பின்பற்றிச் சென்றான்.

''உட்கார்ந்து கொள்...'' என்றார்.

விஜய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

தீட்சிதர் ஜிப்பாவின் ஜேபியிலிருந்து சின்ன நகைப் பெட்டியை எடுத்து திறந்து விஜய் கையில் கொடுத்தார்.

''வைர மோதிரம்! ஹேமாவுக்காக வாங்கினேன். எப்படி இருக்கு?'' என்று கேட்டார்.

''நன்றாக இருக்கிறது.''

''நாம் இப்பொ அவர்களுடைய வீட்டுக்குப் போகிறோம் இல்லையா. உன் மீது ஒரு பொறுப்பை சுமத்தப் போகிறேன். தன் மகள் ஹேமாவை ஆனந்துக்குக் கொடுப்பதில் ராஜலக்ஷ்மி அம்மாளுக்கு விருப்பம்தானாம். ஹரி சொல்கிறான். எனக்கும், அந்த அம்மாளுக்கும் நடுவில் இந்த பிரஸ்தாபனையை யாராவது எடுக்க வேண்டும். எனக்கு உன்னைவிட முக்கியமானவர்கள் யாரும் இல்லை. இன்று மாலை பார்ட்டி நடக்கும்போது ராஜலக்ஷ்மி அம்மாளிடம் திருமண பிரஸ்தாபனையை நான் கொண்டு வரவேண்டுமென்று நினைத்திருப்பதாக சொல்லு.'' தோட்டத்தை விற்று விட்டு நர்ஸிங்ஹோம் கட்டி ஹேமாவுக்குத் தர நினைத்திருப்பதாகவும் சொல்லு.''

இந்த வார்த்தையைக் கேட்டதும் விஜய் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''தோட்டத்தை விற்கப் போகிறீர்களா?'' தன்னையும் அறியாமல் கேட்டு விட்டான்.

''ஆமாம். எனக்கோ வயதாகி விட்டது. ஆனந்தால் தோட்டத்தைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ள முடியாது. அதை விற்று விட்டு நர்ஸிங் ஹோம் ஒன்று கட்டி ஹேமாவிடம் ஒப்படைத்தால் ஆனந்தும் ஹேமாவும் அதைக் கவனித்துக் கொள்வார்கள். ஹரி எப்படியும் அவர்களுக்குத் துணையாக இருப்பான். என்ன சொல்கிறாய்?''

விஜய் கீழ் உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டான்.

''இது ஹரி சொன்ன யோசனைதான். சின்னவனாக இருந்தாலும் முன்யோசனை அதிகம். நர்ஸிங்ஹோம் ஆனந்த் பெயரில் இருக்கும். விற்பதற்கு உரிமை இல்லாத வகையில் உயில் எழுதிவைக்கிறேன். இத்தனை நாள் தோட்டமாய் இருந்த சொத்து நர்ஸிங்ஹோமாக உருமாறும். அவ்வளவுதான். இதில் நமக்கு எந்த நஷ்டமும் இல்லை.''

விஜய் மௌனமாய் இருந்து விட்டான். அவன் இதயத்தில் பெரும் புயல் வீசிக் கொண்டிருந்தது. அவன் பத்து வருடங்களாக உயிரைக் கொடுத்து ராப்பகலாய் உழைத்து வளர்த்த தோட்டம் அது. கண்களுக்கு முன் இடிந்து போவதுபோல் இருந்தது. மிகவும் பிரியமான ஒன்று சமூலமாய் நாசமாகிக் கொண்டிருக்கும்போது ஏற்படும் வேதனை!

எவ்வளவு கட்டுப்படுத்திக் கொண்டாலும் அவன் முகத்தில் வேதனையின் நிழல் படிவதைத் தடுக்க முடியவில்லை.

திட்சிதர் விஜயின் முகத்தைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். விஜய் முகத்தில் தென்பட்ட வேதனை அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தது. மனிதனைக் கத்தியால் குத்தி அந்தக் குறுதியைப் பார்த்து மகிழ்ந்து போகும் பைசாச குணம். விஜயை இந்த மாதிரி வீழ்த்தியது அவருக்குப் பெருமையாக இருந்தது.



திட்சிதர் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்த வைர மோதிரத்தை வெளியில் எடுத்துக் காண்பித்தார். ''ஹேமாவுக்குப் பிறந்த நாள் பரிசாக இதை கொடுக்கப் போகிறேன். அளவு சரியாக இருக்கும் இல்லையா?'' என்று கேட்டார்.

விஜய் தலையை அசைத்தான்.

''விஜய்!'' ஆனந்த் அழைக்கும் குரல் கேட்டது.

திட்சிதர் உடனே சொன்னார். ''இந்த விஷயங்கள் எதுவும் ஆனந்துக்குத் தெரியாது. தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. நீ நிஜமாகவே ஆனந்தின் நலனை வேண்டுபவனாக இருந்தால் ராஜலக்ஷ்மி அம்மாளிடம் பேசி இந்த இடம் முடிகிற விதமாய் பார். உன்மீது மதிப்பு வைத்து இந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். என்னால் அந்த அம்மாளிடம் நேராகப் பேச முடியாது என்றோ இல்லை உன்னை விட்டால் வேறு ஆள் கிடையாது என்றோ நினைத்து விடாதே.''

விஜய் பேசவில்லை.

ஆனந்த் உள்ளே வந்தான். இருவரின் முகங்களை மாறி மாறிப் பார்த்தான்.

ஓரடி முன்னால் வைத்து விஜய் பக்கம் திரும்பி ''என்ன விஜய்? இங்கே ஏதோ ரகசியமாய் பேச்சு வார்த்தை நடப்பதுபோல் தெரிகிறதே'' என்றான்.

''அப்படி எதுவும் இல்லை'' என்றான் விஜய்.

''எதுவும் இல்லையென்று சொல்வானேன் விஜய்? இன்று இல்லா விட்டாலும் நாளைக்காவது ஆனந்திடம் சொல்லித்தானே ஆகணும். ஆனந்த்! விஜய் எனக்கு ஒரு நல்ல ஐடியா சொன்னான், தோட்டத்தை விற்றுவிட்டு நர்ஸிங்ஹோம் ஒன்று கட்டினால் நன்றாக இருக்குமென்று.''

''என்ன? தோட்டத்தை விற்பதா?'' ஆனந்த் சரேலென்று விஜய் பக்கம் திரும்பினான். அருகில் சென்று ''நீதானா இந்த வார்த்தையைச் சொன்னது?'' விஜயின் தோள்கள் மீது கைகளைப் பதித்து விட்டுக் கண்களுக்குள் ஊடுருவுவதுபோல் பார்த்தான். ''நீ என்மீது உயிரை வைத்திருப்பதுபோல் அந்தத் தோட்டத்தின்மீதும் உயிரை வைத்திருக்கிறாயே விஜய்! அதை விற்று விடப் போகிறீர்களா?''

''முழுவதுமாகக் கேள் ஆனந்த். வேலையாட்களுடன் நம்மால் மாரடிக்க முடியவில்லை. விஜய்க்கும் ரெஸ்ட் வேண்டும் இல்லையா? விஜய் சொன்ன ஐடியா எனக்கு ரொம்ப பிடித்து விட்டது. தோட்டத்திற்குப் பதிலாக நர்ஸிங்ஹோம் இருக்கும். ஹேமா போன்றவர்களின் கைகளில் அதை ஒப்படைத்தால் எல்லோருக்கும் லாபம் தான். சொத்து அபிவிருத்தியானது போலவும் இருக்கும். எல்லோருக்கும் நிம்மதி கிடைக்கும். வருமானமும் பெருகும். விஜய் எப்போதும்போல் தோட்டத்திற்குப் பதிலாக நர்ஸிங் ஹோமை மேல் பார்வை பார்த்துக் கொண்டிருப்பான்.''

பின்னாலிருந்து சமாதானப்படுத்துவது போல் தாத்தா சொல்வதைக் கேட்க கேட்க ஆனந்தின் முகத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த கோபம் மாயமாய் மறைந்து விட்டது. அவன் கண்களில் பிரமிப்பும், மகிழ்ச்சியும் போட்டியிட்டன.

விஜயின் கையை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டான். ''வண்டர்ஃபுல் ஐடியா! என் ஆருயிர் நண்பன் நீதான். உனக்கு மட்டும் எப்படி இவ்வளவு நல்ல ஐடியாக்கள் வரும்?'' என்று சொல்லிக் கொண்டே விஜயை எழுப்பிவிட்டான்.

தீட்சிதர் பக்கம் திரும்பினான். ''ஓ. கே. தாத்தா. விஜய் சொன்ன பிரபோசலை நானும் ஒப்புக் கொள்



கிறேன்.'' விஜயின் கையைத் தன் கையுடன் இணைத்து உயரே தூக்கிக் கொண்டே சொன்னான்.

''எனக்குத் தெரியும் ஆனந்த். விஜய் சொன்ன பேச்சை ஒரு நாளும் நீ தட்ட மாட்டாய் என்று.'' வெற்றி பெருமிதத்துடன் விஜய் பக்கம் பார்த்துக் கொண்டே சொன்னார் தீட்சிதர்.

விஜய் எப்போதும் போல சுற்சிலையாய் மௌனமாய் இருந்து விட்டான்.

32295
4 9 1394

## 19

ஹேமாவின் பிறந்த நாள் விழா நன்றாக நடந்தது. நிறைய பேர் வந்திருந்தார்கள். எல்லோரையும் தன் வீட்டுக்கு அழைக்கவேண்டுமென்று நினைத்திருந்ததாகவும், அதற்கு இன்றுதான் சந்தர்ப்பம் கிடைத்ததாகவும் ராஜலக்ஷ்மி சொன்னாள். ராஜலக்ஷ்மியின் உறவினர்கள், சக ஊழியர்கள், ஹேமாவின் கிளாஸ் மேட்ஸ், கோ டாக்டர்ஸ்... எல்லோரும் வந்திருந்தார்கள். ஹேமாவின் நண்பர்கள் சிலர் பாட்டுபாடி டான்ஸ் செய்தார்கள். ராஜலக்ஷ்மியின் சக ஊழியர்களில் ஒருவர் மிமிக்ரி செய்து எல்லோரையும் சிரிக்க வைத்தார்கள். ஹால் முழுவதும் சிரிப்பும், கும்மாளமுமாய் அதிர்ந்து கொண்டிருந்தது. உணவு பொருட்களும் ரொம்ப உயர்தரமாக, ருசியாக இருந்தன. பஃபே முறை என்பதால் அவரவர்கள் தங்களுக்கு வேண்டியதைத் தட்டில் பரிமாறிக்கொண்டு கும்பல் கும்பலாய் நின்றுகொண்டு, உட்கார்ந்துகொண்டு, பேசிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் கலகலவென்று பேசிக்கொண்டு இருந்ததில் பதினொரு மணி ஆனதே தெரியவில்லை.

தீட்சிதருக்கு அங்கு வந்த மக்களைப் பார்க்கப் பார்க்க உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளமாய் பொங்கியது. ஆன

துணை இல்லாத குடும்பம். தாய், மகள் இருவரும் சம்பாதிப்பவர்கள். அவர்களிடம் நூறு ரூபாய் கொடுத்தால் அது ஆயிரம் ரூபாயாக விருத்தியாகும் என்பது உறுதி. எப்படியாவது ஹேமாவை ஆனந்துக்கு மணம் முடிக்க வேண்டுமென்று அவருக்குத் திடமாய் தோன்றி விட்டது. திரிவேணி சங்கம்மாய் அழகு, குணம், படிப்பு ஒன்றாக இணைந்து உருவெடுத்தது போல் ஆனந்தின் பக்கத்தில் ஹேமா அமர்ந்திருக்கும் அந்தக் காட்சி பார்க்கும்போது தன்னுடைய பூஜைகளை ஏற்றுக்கொண்டு சாட்சாத் லக்ஷ்மி தேவியே பிரத்யட்சமாகி விட்டதுபோல் தோன்றியது. விஜயை அவர் ஒரு கண்ணால் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். விஜய் எங்கேயோ தொலைவில் மக்களுக்கு நடுவில் இருந்தான். ஹரி புதிதாக உயர்ந்து விட்ட ஹோதாவைப் பறைச்சாற்றிக் கொள்ளும் வகையில் அலட்டலுடன் பேசிக் கொண்டிருந்தான்.

அன்று மாலை ஆனந்தும், மற்றவர்களும் வந்திருக்கிறார்கள் என்று தாய் வந்து அழைத்தபோது, அடுத்த அறையில் சினேகிதிகளுடன் பேசிக் கொண்டிருந்த ஹேமா நிதானமாக ஒரு நிமிடம் கழித்து வெளியில் வந்தாள்.

தீட்சிதரும், ஹரியும் முன்னால் நுழைந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் ஆனந்தும், விஜயும் உள்ளே வந்தார்கள்.

ஹேமா விஜயைப் பார்த்து ஒரு நிமிடம் அப்படியே நின்று விட்டாள். வெள்ளை நிற பனாரஸ் பட்டுப் புடவையில் மெலிதாக ஜரிகை பார்டரும், ரோஸ் நிற நூலில் ஜரிகையும் கலந்து வேலைபாடு நிறைந்திருந்த தலைப்பும், பொருத்தமான ப்ளவுஸும் அணிந்து, கழுத்தில் மெலிதான முத்துமாலையுடன் நின்றிருந்த ஹேமா இமய மலையின் மானஸரோவரத்திலிருந்து பறந்து வந்த அன்னப்பறவையைப் போல் இருந்தாள்.

''ஹலோ ஆனந்த்!'' ஹேமா வரவேற்பதுபோல் சொன்னாள்.



''மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே...'' பொக்கேவைக் கொடுத்துக் கொண்டே சொன்னான் ஆனந்த்.

''தாங்க்யூ'' என்றவள் தீட்சிதர் பக்கம் திரும்பி நமஸ்காரம் தாத்தா! நலமாக இருக்கிறீர்களா?'' குசலம் விசாரித்தாள்.

''சௌபாக்யவதி பவ!'' அவர் ஹேமாவின் தலைமீது கையை வைத்து ஆசீர்வதித்தார். சில்க் ஜிப்பாவின் பையிலிருந்து சிவப்பு அட்டைப் பெட்டியை எடுத்து ''பிறந்த நாளுக்காக ஆனந்த் சார்பிலும், என்னுடைய சார்பிலும் இந்த சின்ன பரிசு'' என்று கொடுக்கப் போனார்.

''நோ பிரசண்டேஷன்ஸ்...'' ஹேமா மறுத்தாள்.

''இல்லை... ஏதோ என்னுடைய சந்தோஷத்திற்காகக் கொண்டு வந்தேன். வேண்டாமென்று சொல்லி இந்த கிழவனுக்கு வேதனையை அளிக்காதே...'' என்று அவர் சொல்லும்போது ஹேமாவால் அவரை எதுவும் சொல்ல முடியவில்லை. அதைப் பெற்றுக்கொண்டு ''மம்மி! பிரசண்டேஷன்ஸ் எதுவும் வேண்டாமென்று நீயாவது சொல்லு!'' தாயின் கையில் கொடுத்து விட்டாள்.

''ஹேமா! கொடுக்க முடிந்தவர்கள் கொடுக்கும்போது எடுத்துக்கொள்ள வேண்டும். என்னைப் போன்ற ஏழையால் எதையும் கொடுக்க முடியாது'' என்றான் ஹரி.

சினேகிதி யாரோ அழைத்ததும் ஹேமா அந்த இடத்தை விட்டுச் சென்றாள்.

''விஜய்! என்ன இது? என்ன ஆச்சு உனக்கு? ஹேமாவை விஷ் செய்யவில்லையே, ஏன்?'' ஆனந்த் கேட்டான்.

விஜய் பதில் சொல்லவில்லை.

ஹேமா சினேகிதிகளுடன் பேசிக்கொண்டே தொலைவிலிருந்து விஜயைக் கவனித்துக் கொண்டிருந்தாள். விஜய்

சற்று இளைத்து விட்டதுபோல் தென்பட்டான். அவன் முகத்தில் புன்முறுவலும், கம்பீரமும் அப்படியே இருந்தன.

ஹேமாவின் சினேகிதி ரூபா வந்தாள். தொலைவில் நின்றிருந்த விஜயைப் பார்த்துக் கொண்டே "அந்த ஹேண்ட்சம் கை யாரு ஹேமா?" என்று கேட்டாள்.

"எங்களுக்குத் தெரிந்தவன்தான்." புன்முறுவலுடன் சொன்னாள் ஹேமா.

"என்ன? யாரோடும் சேராமல் தனியாக உட்கார்ந்திருக்கிறானே?"

"அவன் அப்படித்தான்." என்றாள் ஹேமா.

"நான் போய் ஒருபிடி பிடிக்கட்டுமா?"

"தோற்றுப் போய்விடுவாய். அனாவசியமாய் முயற்சி செய்யாதே." எச்சரிப்பதுபோல் சொன்னாள் ஹேமா.

"நானா? தோற்பதா? ஹூம்" என்று பெருமை பொங்க ஒரு பார்வையை வீசிவிட்டு விஜய் அருகில் சென்றாள். தொலைவிலிருந்து ஹேமா இருவரையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். விஜய் ரூபாவுடன் மரியாதைக்காக இரண்டு வார்த்தைகளைப் பேசிவிட்டு, பக்கத்தில் கிடந்த நாளேட்டை எடுத்துக் கொண்டு சீரியஸாகப் படிப்பதில் மூழ்கிவிட்டான்.

ரூபா திரும்பி வந்தாள். "நீ சொன்னது உண்மைதான். அதோ வசந்தாவும், லக்ஷ்மியும் அவன் அருகில் போய்க் கொண்டிருக்கிறார்கள்." சுட்டிக் காட்டினாள். ஹேமா ரூபா இருவரும் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரூபாவிடம் பேசியது போலவே அவர்களுடன் இரண்டு வார்த்தைகளைப் பேசிவிட்டுப் பேப்பரில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். ஆனந்த் யாருடனோ பேசி முடித்துவிட்டு விஜய் பக்கத்தில் வந்து அமர்ந்து



கொண்டான். வசந்தாவும், லக்ஷ்மியும் அவனுடன் பேசத் தொடங்கினார்கள். ரூபாவும் போய் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். சிரிப்பும், பேச்சுமாய் அந்த இடம் அதிர்ந்து கொண்டிருந்தது. ஹேமாவும் போய் அவர்களுடன் சேர்ந்து உட்கார்ந்து கொண்டாள். பத்து நிமிடங்கள் கழித்து ஹேமா விஜய் இருந்த பக்கம் பார்த்தாள். விஜயும், ராஜலக்ஷ்மியும் ஒரு பக்கமாய் உட்கார்ந்து கொண்டு சீரியஸாகப் பேசிக்கொண்டு இருந்தார்கள். "இந்த இருவரும் ஒன்றுதான். எங்கே இருந்தாலும் சீரியஸாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்." நினைத்துக் கொண்டாள் ஹேமா.

பதினோரு மணியாகி விட்டது. பெரும்பாலான விருந்தாளிகள் சென்று விட்டார்கள்.

ஹேமா மாடி அறையில் நகைகளைக் கழட்டிக் கொண்டிருந்தாள்.

ராஜலக்ஷ்மி வந்தாள்.

"ஹேமா! விஜய் உன்னிடம் தனியாக ஏதோ பேச வேண்டுமாம். இங்கே வரச் சொல்லட்டுமா?"

"என்னுடனா?" என்றாள்.

"ஆமாம்."

"இந்த நேரத்தில் என்ன பேசப் போகிறான்?" ஹேமா கேட்டாள்.

"விஜய் வெட்டியாகப் பேசும் ஆள் இல்லை. ஏதோ முக்கியமான விஷயமாகத்தான் இருக்கும். கேட்டுத்தான் பாரேன்." ராஜலக்ஷ்மி போய் விட்டாள்.

ஹேமா நகைகளை டிரஸ்ஸிங் டேபிள் மீது வைத்தாள்.

'என்ன பேசப் போகிறான்?' என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அவனருகில் செல்ல வேண்டுமென்றும், பேச வேண்டுமென்றும் அவள் மனம் துடியாய் துடித்துக்

கொண்டிருந்தது. ஆனாலும் அப்படிச் செய்யவில்லை. அவன் மரியாதைக்காகக் கூட தன்னிடம் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவில்லை. அவன் வருவான் என்று அவள் கனவில் கூட நினைக்கவில்லை. விஜயைத் தான் தனியாக அழைக்காவிட்டாலும் அவன் சுயமாய் வந்ததே ஒரு விசேஷம். மேலும் தன்னுடன் பேச வேண்டு மென்று தன் தாயாரிடம் சொன்னது அதைவிட பெரிய விசேஷம். அவன் சொல்ல நினைத்த விஷயம் என்னவாக இருக்கும்? திட்சிதரும், ஆனந்தும் கிளம்பிப் போய் ஒரு மணி நேரம் ஆன பிறகும் அவன் இங்கே தங்கிவிட்ட காரணம் என்ன? யோசித்துக் கொண்டிருந்த ஹேமாவுக்குப் பின்னாலிருந்து காலடிச் சத்தம் கேட்டது.

ஹேமா திரும்பவில்லை.

''ஹேமா'' என்று அழைக்கும் குரல் கேட்டது.

ஹேமா திரும்பிப் பார்த்தாள். எதிரே வாசற்படியில் விஜய்!

''ஒரு நிமிஷம் பேச வேண்டும்.'' அவன் கேட்டான்.

ஹேமா நாற்காலியை நகர்த்தினாள். உள்ளே வரச் சொல்லி ஹேமா தன்னை அழைப்பாளோ என்று அவன் ஒரு நிமிடம் காத்திருந்தான். ஹேமா அழைக்கவில்லை. அவனே உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டான். ஹேமா டிரஸ்ஸிங் டேபிள் மீது சாய்ந்து கொண்டு அவன் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தை களுக்காகக் காத்திருந்தாள்.

''ஹேமா!''

ஹேமா தலையைத் திருப்பிக் கொண்டு வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜய் ஒரு நிமிடம் நின்றான். பிறகு சொன்னான். ''நான் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டு மென்று வந்திருக்கிறேன்.''

ஹேமா பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.



''அம்மாவிடம் பேசிவிட்டேன். இந்த விஷயத்தில் உன் முடிவுதான் தன்னுடைய முடிவு என்று சொல்லி விட்டார்கள்.''

ஹேமா கேட்டுக் கொண்டிருந்தாள்.

''திட்சிதர் ஆனந்துக்கும் உனக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று விரும்புகிறார்.''

ஹேமா திடுக்கிட்டுத் தலையை உயர்த்தி அவன் பக்கம் பார்த்தாள்.

ஹேமாவின் கண்களுக்குள் ஆழமாய் பார்த்துக் கொண்டே கொஞ்சம் கூட தயக்கமில்லாமல் சொன்னான். ''ஆனந்துக்கும் உனக்கும் மணம் முடித்து தோட்டத்தை விற்றுவிட்டு உனக்கு நர்ஸிங்ஹோம் கட்டி தருவாராம்.''

ஹேமாவின் கண்கள் பெரிதாயின. மூக்கின் நுனி அதிர்ந்து கொண்டிருந்தது.

''ஆனந்தின், உடல் நலமும் இப்பொ நன்றாக இருக்கிறது. ஆஸ்மாவைத் தவிர அவனுக்கு வேறு எந்த பிராப்ளமும் இல்லை. ஆஸ்மா ஒரு நோயே இல்லை என்று மெடிகல் ஜர்னல்கள் சொல்கின்றன. ஆனந்த் ரொம்ப நல்லவன், புரிந்து கொள்ள முடிந்தால்...''

''ஸ்டாபிட்!'' ஹேமா உரத்த குரலில் கத்தினாள். ''விஜய்! நீ...'' ஹேமா அவனருகில் வந்தாள். சுட்டு விரலைக் காட்டிக் கொண்டே ''நீ... நீதானா இப்படிச் சொன்னது...'' நிற்க வைத்துக் கேட்பதுபோல் கேட்டாள். அந்தக் கண்களில் தென்பட்ட சிவப்புக் கோடுகள் அவள் இதயத்தின் ஜுவாலையைப்போல் இருந்தன.

''ஹேமா!''

''ஆனந்தை... நான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமா? செய்து கொண்டால் உனக்கு... உனக்குச் சந்தோஷமாக இருக்குமா?'' இரட்டிப்பதுபோல் கேட்டாள்.

''என்னைவிட சந்தோஷப்படக் கூடியவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். ஆனந்தைப் புரிந்து கொண்டால் அவனை நேசிக்காமல் யாராலும் இருக்க முடியாது.''

''நான் உன்னைப் பற்றிக் கேட்கிறேன். ஆனந்தை நான் கல்யாணம் செய்து கொண்டால் உனக்கு மகிழ்ச்சியாக இருக்குமா?''

விஜய் தலையை அசைத்தான்.

''ஏன்? எதனால் அந்த சந்தோஷம்?''

''ஆனந்த் என்றால் எனக்கு ரொம்ப பிடிக்கும். என்னுடைய உயிர் நண்பன். உண்மையிலேயே...'' அவன் மேலும் ஏதோ சொல்லப் போனான். அவன் கன்னத்தில் பளாரென்று அறை விழுந்தது.

''ஐ ஹேட் யூ. இந்த அளவுக்கு எனக்கு யார்மீதும் வெறுப்பு ஏற்பட்டதில்லை...'' ஹேமா மறுபடியும் கையை உயர்த்திப் போகும்போது விஜய் பலமாகப் பற்றிக் கொண்டு தடுத்துவிட்டான்.

''என் மனதில் இருப்பது யார் என்று தெரிந்தும், யாருக்கு நான் சொந்தமாக வேண்டுமென்று நினைக்கிறேன் என்று தெரிந்தும்... நீ இந்தப் பேச்சுவார்த்தை நடத்த வந்திருக்கிறாயா? உன்னைக் காதலித்த பெண்ணை நீயே இன்னொருவனிடம் போகச் சொல்லிச் சொன்னால் அதற்குப் பெயர் என்ன தெரியுமா? விபசாரம்! என்னை வேசியாக இருக்கச் சொல்கிறாயா?''

''ஹேமா! ப்ளீஸ்.''

ஹேமா இரண்டு கைகளாலும் அவன் தலைமுடியைப் பற்றிக் கொண்டாள். கோபத்தால், ஆவேசத்தினால் அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

''ஹேமா! ப்ளீஸ்.'' அவன் தடுக்க முயன்று கொண்டிருந்தான். ஹேமா சுழல்காற்று போல் அவனைச் சுற்றிக் கொண்டு கைப்பிடிகளை இறுக்கி அவனைக் குத்தப் போனாள்.



விஜய் ஹேமாவை வலுக்கட்டாயமாய் இழுத்து வந்து கட்டில் மீது உட்கார வைத்தான். படிகள் மீது யாரோ வந்து கொண்டிருக்கும் பேச்சு குரல் கேட்டது. விஜய் சட்டென்று எழுந்து போய் கதவைச் சாத்தினான். பிறகு கலைந்து போன தலைமுடியை விரல்களால் சரி செய்து கொண்டே கதவின் மீது சாய்ந்து கொண்டு ஒரு நிமிடம் அப்படியே நின்று கொண்டான்.

''நான் உன்னை வெறுக்கிறேன். என்னை இப்படி அவமானப்படுத்துவதற்கு உனக்கு எவ்வளவு தைரியம்? நீ எனக்குக் கொடுக்கும் பிறந்த நாள் பரிசு இதுதானா?''

ஹேமா தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள்.

விஜய் அருகில் வந்தான். ''ஹேமா!'' ஏதோ சொல்லப் போனான்.

''போய் விடு... இந்த இடத்தை விட்டு உடனே போய் விடு. இனி ஒரு நாளும் என் கண்ணில் படாதே. அசல் நான் உன்னை என் பிறந்த நாளுக்கு அழைக்கவேயில்லை. அழையாத விருந்தாளியாய் வந்து விட்டு என்னை அவமானப்படுத்துவானேன்? இனி ஜன்மத்தில் உன் முகத்தை எனக்குக் காண்பிக்காதே...''

விஜய் ஒரு நிமிடம் அப்படியே நின்றான்.

பிறகு கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான். அடுத்த நிமிடம் அந்த வீட்டை விட்டு வெளியேறி விட்டான்.

## 20

இரவு ஏழு மணி.

பனிக்காலம் ஆனதால் சீக்கிரமாகவே இருட்டி விட்டது. கோவில் மண்டபத்தில் குருக்கள் ஏற்றியிருந்த விளக்கில் எண்ணெய் தீர்ந்து விட்டது போலும். வேகமாய்

வீசிக் கொண்டிருந்த குளிர்ந்த காற்றுக்குப் படபடத்துக் கொண்டிருந்தது.

விஜய் மண்டபத்திலிருந்த தூண் மீது சாய்ந்து கொண்டு படிமீது உட்கார்ந்திருந்தான். அவன் தோளைச் சுற்றிலும் ஷால் போர்த்தியிருந்தது. ஏதோ ஆழமான யோசனையில் மூழ்கியிருப்பதுபோல் தென்பட்டான்.

''ஐ ஹேட் யூ'' ஹேமா சொன்ன வார்த்தைகள் அவன் மனதில் அலைமோதிக் கொண்டிருந்தன. அவன் இதழ்களில் வருத்தம் கலந்த புன்னகை ஒன்று மலர்ந்தது. அவனுக்கு வேண்டியதும் அதுதான்.

ஹேமாவின் பிறந்த நாள் முடிந்து இருபது நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனந்த் ஹேமா அடிக்கடி சந்தித்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனந்த் ஹேமாவைச் சந்தித்த போதெல்லாம் இரட்டித்த உற்சாகத்துடன் அவர்களுக்கு நடுவில் நடந்த உரையாடலை ஒன்றுகூட விடாமல் அப்படியே விஜயிடம் ஒப்பித்துக் கொண்டிருந்தான்.

தீட்சிதர் தோட்டத்தை விற்கப் போவதாய் தெரிந்த போது ஊரில் எல்லோரும் வியப்படைந்து விட்டார்கள். அவர்களால் நம்ப முடியவில்லை. ''எதற்காக விற்கப் போகிறார்கள்? நீ எப்படி சும்மாயிருக்கிறாய்?'' என்று விஜயிடம் கேட்டார்கள். தோட்டத்திற்காகப் பாடுபட்டு உழைக்கும்போது எல்லாம் உனக்குத்தான் என்று சொன்ன தீட்சிதர் இப்பொ அந்தப் பேச்சையே எடுக்கவில்லை.

கோவில் கதவைத் திறந்து கொண்டு யாரோ பெண்கள் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

விஜய் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்து விட்டான். தோட்டத்தை விற்பது என்றால் தன் உடலில் ஒரு பகுதியை வெட்டுவது போல்தான். இது தெரிந்தும் தீட்சிதர் பொருட்படுத்தவில்லை. போகட்டும் தோட்டத்தை விற்றுவிடுவதால் தனக்கு எதுவும் நேர்ந்து



விடாது. தன் உடலில் இன்னும் தெம்பும், திடமும் நிறையவே இருக்கின்றன. இரண்டு வருடங்கள் கஷ்டப் பட்டால் மறுபடியும் தன்னால் ஒரு தோட்டத்தை உருவாக்க முடியும். வாழ்க்கையில் எதன் மீதும் பற்றுதல் வைக்கக் கூடாது என்று தோன்றியது. முக்கியமானதேதோ தன்னிடமிருந்து கொள்ளையடித்து விட்டது போன்ற உணர்வு. மறுபடியும் அத்தனை உழைப்பதற்கு உடம்பிலும், உள்ளத்திலும் உற்சாகம் இருக்கவில்லை. வாழ்க்கையில் தான் விரும்பியது தனக்குக் கிடைக்காது. விதி தனக்குக் கொடுத்ததை மௌனமாய் ஏற்றுக் கொள்வதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை. ஏனோ விரக்தியாய் இருந்தது.

நிலவின் ஒளியைப் பார்க்காத வரையில் இருளைத் தாங்கிக் கொள்ள முடியும்.

நிலவே தன் வாழ்க்கையில் நுழையப் போகும்போது தானே கதவைச் சாத்திக்கொண்டு விட்டான். இன்று இந்த இருள் இன்னும் கறுப்பாய், விகாரமாய் தோன்ற தொடங்கியது.

இத்தனை நாளாய் பொறுமை என்று நினைத்தது இன்று இயலாமையாய் தோன்றியது.

விஜய் விரல்களால் நெற்றிப் பொட்டை அழுத்திக் கொண்டான். அவன் காதுகளில் ஹேமா அன்று ஆவேசமாய், கோபமாய் சொன்ன வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டிருந்தன. ''உன்னைக் காதலித்த பெண்ணை நீயே இன்னொருவனிடம் போகச் சொன்னால் அதற்கு பெயர் என்ன தெரியுமா? விபச்சாரம்!'' அவன் தாடை எலும்பு இறுகியது. கீழ் உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டான். அந்தச் சொற்கள் கூர்மையான ஆயுதம் போல் அவன் உள்ளத்தை அறுத்துக் கொண்டிருந்தன. ஒரு பக்கம் தீட்சிதர். இன்னொருபக்கம் ஆனந்த். இருவருக்கும் நடுவில் வாயைத் திறக்க முடியாத தன்னுடைய இயலாமை.

எப்போதும் இல்லாத விதமாய் தன்னுடைய இயலாமையைக் கண்டு தன்மீதே அவனுக்கு எரிச்சல் ஏற்பட்டது. இதன் முடிவு எங்கே என்று தெரியவில்லை.

மண்டபத்தின் படிகளில் யாரோ பெண்மணி ஏறி வந்து கொண்டிருந்தாள். புடவையின் சலசலப்புடன், மெலிதான நறுமணம் காற்றுடன் மிதந்து வந்தது.

விஜய் சரியாக உட்கார்ந்து கொண்டான்.

எதிரே ஹேமா நின்றிருந்தாள்.

அவன் குழப்பத்துடன் பார்த்தான். ஹேமா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனையும் அறியாமல் அவன் கண்களில் மகிழ்ச்சி பொங்கி வந்தது. ஆனால் உடனே மாயமாய் மறைந்து விட்டது. இனம் தெரியாத வேதனை ஏதோ அவன் அடிமனதில் அலைக் கழித்துக் கொண்டிருப்பதை, சக்தியைத் திரட்டிக்கொண்டு அவன் உடல் அந்த வலியைத் தாங்கிக் கொண்டிருப்பதை அந்த கண்களில் உணர முடிந்தது.

''விஜய்!'' ஹேமா அழைத்தாள்.

அவன் எழுந்து கொள்ளப் போகும்போது கையை நீட்டி தடுத்தாள்.

''நான் உன்னுடன் பேசத்தான் வந்திருக்கிறேன்.'' ஹேமா அதே படியில் சற்று தள்ளி உட்கார்ந்து கொண்டாள்.

''ஹரி வரும்போது கூட வந்தேன். ஆனந்த் வீட்டில் இல்லை. தாத்தா ஏதோ வேலையாய் கர்ணம் மாமா வீட்டுக்குப் போயிருக்கிறாராம். ஹரி போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். நான் லக்ஷ்மியைத் துணையாக அழைத்துக்கொண்டு கோவிலுக்கு வந்தேன். நீ ஊரில் இல்லையென்றே நினைத்தேன்.

விஜய் கேட்டுக் கொண்டிருந்தான்.

''விஜய்... ஐயாம் சாரி. என் பிறந்த நாளன்று நான் ரொம்ப சிறுபிள்ளைத்தனமாய் நடந்து கொண்டேன்.



ஆவேசமடைந்து உன்னை வாய்க்கு வந்தபடி பேசினேன். அவமானப்படுத்தினேன். பிறகு ரொம்ப வருத்தப்பட்டேன். என்மீதே எனக்குக் கோபம் வந்தது.

விஜய் கேட்டுக் கொண்டிருந்தான். ஹேமாவின் பேச்சைக் கேட்க கேட்க அவன் மனதில் கொந்தளித்துக் கொண்டிருந்த எரிமலை ஏதோ அணைந்து விட்டதுபோல் அமைதி குடியேறிக் கொண்டிருந்தது. எதிர்பாராத விதமாய் ஹேமா இப்படி வந்தது... அருகில் அமர்ந்து கொண்டு பேசியது அவன் வேதனையைக் குறைத்துக் கொண்டிருந்தது. அவனுள் புதிதாக சக்தி ஏதோ பிறப்பதுபோல் தோன்றியது. ஹேமாவுக்கும் தனக்கும் இருக்கும் நட்பு சாசுவதமாக அறுந்து போகவில்லை. ஹேமா தன்னுடன் பேசுவதை விரும்புகிறாள்.

''உங்களுக்குத் தெரியுமா? தாத்தா தோட்டத்தை. விற்கப் போகிறாராமே?''

தெரியும் என்பதுபோல் விஜய் தலையை அசைத்தான்.

''எனக்குத் தெரிந்தவரை அந்தத் தோட்ட[illegible] என்றால் உனக்கு உயிர். அதை விற்பதற்கு எப்படி நீ சம்மதம் தெரிவித்தாய்?''

அவன் பேசவில்லை.

''சொல்லு விஜய். பேசு... உன் மௌனத்தினால் என்னைக் கொல்லாதே. சொல்லு. எதற்காகச் சம்மதித்தாய்?''

''அது அவர்களுடைய சொத்து. வேண்டாமென்று சொல்வதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது.'' விஜய் பதில் சொன்னான்.

''அதிகாரம்... இல்லையா? பதினைந்து வருடங்களாய் அந்தத் தோட்டத்தை முன்னுக்குக் கொண்டு வருவ[illegible]ற்காக அத்தனை பாடுபட்ட உனக்கு அதிகாரம் இல்லையா?

நேற்று வந்த ஹரி எல்லா விஷயங்களிலும் தலையை நுழைத்து முடிவு செய்து வருகிறான். இப்பொ தோட்டத்தை விற்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?''

''நர்ஸீங்க் ஹோம் கட்டப் போகிறார்களாம்.''

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்? அசல் இந்த யோசனை முதலில் யாருடைய மூளைக்கு வந்தது? அது இப்பொ என் அம்மாவின் மூளையிலும் ஏறிவிட்டது. எப்போதும் ஒரு சினேகிதியாய் என் விருப்பு வெறுப்புகளை மதித்து வந்த அம்மா இந்த விஷயத்தில் ஒரு தாயாக என்னை அடக்கி ஆளுவதற்கு முயற்சி செய்கிறாள்.''

விஜய் கேட்டுக் கொண்டானே தவிர எந்த கருத்தும் வெளியிடவில்லை.

ஹேமா ஆவேசத்தை அடக்கிக் கொண்டே சொன்னாள். ''எனக்கு... எனக்கு உன் மீதுதான் கோபம் வருகிறது. இதற்கெல்லாம் காரணம் நீதான். நீ ஏன் வாயைத் திறக்க மறுக்கிறாய்? உன் மனதில் இருப்பதை வெளிப்படையாக எதிராளிக்குச் சொல்ல தயங்குவானேன்? அவர்கள் உன்னைக் கொள்ளை அடிக்கும் விதமாக நடந்து கொள்ளும்போது ஒரு வார்த்தை...ஒரே ஒரு வார்த்தையில் உன் எதிர்ப்பை ஏன் தெரிவிக்கக்கூடாது? எதனால் இந்த அடிமைத்தனம்? உன் வாழ்க்கையை அவர்கள் விலை கொடுத்து வாங்கி விட்டார்களா? வெளி உலகத்தில் நீ காண்பிக்கும் சாமர்த்தியம், திறமை எல்லாம் இவர்களிடம் வரும்போது எதற்கும் பிரயோஜனமில்லாமல் போவானேன்?''

விஜய் வாயைத் திறக்கவில்லை.

''விஜய்! எதற்காக இப்படி கை கால்களைக் கட்டிப் போட்டிருப்பது போல் நடந்து கொள்கிறாய்? உங்களுக்கு நடுவில் இருக்கும் அந்தப் பந்தம்தான் என்ன? அவர்களுடைய சுயநலம் எனக்குப்புரிகிறது. உன் மௌனம்தான் கொஞ்சம் கூட புரியவில்லை'' ஹேமா சற்று நிறுத்தி



பெரிதாக மூச்சை எடுத்துக் கொண்டாள். ''எனக்குத் தெரியும். நீ என்னைவிட்டுத் தொலைவாகப் போனதற்குக் காரணம், இவர்களுக்குப் பதில் சொல்ல முடியாததால் என்று விஜய்! உன்னைப் பற்றிக் கொஞ்சம்கூடப் பொருட்படுத்தாதவர்களுக்காக நம் வாழ்க்கையை ஏன் பணயம் வைக்கிறாய்? என்னை எவ்வளவு வேதனைப்படுத்துகிறாய் என்று உனக்குப் புரியவில்லையா?'' ஹேமாவின் குரல் கம்மியது.

விஜய் சட்டென்று எழுந்து கொண்டு போகப் போனான்.

ஹேமா அவன் கையைப் பற்றி இழுத்து உட்கார வைத்தாள். தன்னைத் தானே சமாளித்துக் கொண்டு ''உட்கார்ந்து கொள். எத்தனை திடமாக முடிவு செய்து வைத்திருந்தாலும் நம் விஷயத்தைப் பற்றிப் பேச்சை எடுக்காமல் என்னால் இருக்க முடியவில்லை. நான் உன்னிடம் ஆனந்த் பற்றி ஒரு முக்கியமான விஷயம் பேசுவதற்காக வந்திருக்கிறேன். சமீப காலமாய் ஆனந்தின் உடல்நலம் நன்றாகத்தான் இருக்கிறது. லேசாக பூசியும் இருக்கிறான். பழைய போட்டோக்களைப் பார்க்கும்போது எனக்கே வித்தியாசம் தெரிகிறது. ரொம்ப சுறுசுறுப்பாகத் தென்படுகிறான். இதுவரையில் அவன் இந்த அளவுக்கு உற்சாகமாக இருந்தது இல்லை என்று தாத்தாவும் சொன்னார். நீ கவனித்தாயா?''

கவனித்தேன் என்பதுபோல் விஜய் தலையை அசைத்தான்.

''இது உண்மையான ஆரோக்கியம் இல்லை. செயற்கையானது. ஆனந்த் ட்ரக் ஏதோ எடுத்துக் கொள்கிறான். அது மனிதனைச் சுறுசுறுப்பாக இயங்க வைக்கும். புதிதாக சக்தி வந்ததுபோல் தோன்றும். எடை கூடுவதோடு முகமும் பிரகாசமாக இருக்கும். உடல் நிறமும் மெருகேறியதுபோல் தென்படும். ஆனால்

போகப் போக இந்த மருந்து வேலை செய்யாது. அதிக அளவில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். நீண்ட நாட்கள் பயன்படுத்துவதால் கிட்னிக்கள் பாதிக்கப்படும். இதயம் பலவீனமாகிவிடும். அது ஒரு விஷ வளையம். அந்த சிலந்தி கூட்டிற்குள் சிக்கிக் கொண்டுவிட்டால் வெளியேறுவது ரொம்ப கஷ்டம். இந்த மருந்தை அரசாங்கம் தடை செய்திருக்கிறது. ஆனால் ப்ளாக் மார்க்கெட்டில் இதன் விற்பனை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனந்த் இந்த டிரக்கை யார் மூலமாய் வாங்குகிறான் என்று தெரிந்துகொள்ளவேண்டும். ஆனந்த் இந்த மருந்துக்கு ஏற்கனவே அடிமையாகிவிட்டிருப்பான் என்று தோன்றுகிறது.''

விஜய் ஹேமா பக்கம் திரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''ஆனந்தின் இந்தப் பழக்கத்தை நிறுத்துவதற்காக என்னால் ஆன முயற்சியை நானும் செய்கிறேன். ஆனந்த் என்றால் எனக்கும் பிடிக்கும். களங்கமற்ற மனம் அவனுடையது. அவனிடம் ஒரே ஒரு பலவீனம் இருக்கிறது. தான் எப்போதும் அழகாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பான். தன்னுடைய மஞ்சள் நிற மேனியைக் கண்டு பெருமிதம் கொள்ளும் குணம். ஆனால் எதிராளிக்குத் தீங்கு நினைக்கும் கீழ்த்தரமான எண்ணம் அவனுக்குக் கிடையாது. முக்கியமாக உன்னை உயிருக்கும் மேலாக விரும்புகிறான்.''

ஹேமா சற்று நிறுத்திவிட்டு மீண்டும் சொன்னாள்.

''எந்த ஆனந்துக்காக நீ என்னைத் தொலைவில் வைத்திருக்கிறாயோ, அதே ஆனந்த் மூலமாய் நான் அந்த வீட்டில் நுழைந்திருக்கிறேன். வேடிக்கையாக இல்லை? நான் உன்னை விரும்புகிறேன் என்று ஆனந்த் புரிந்து கொள்ளும் நாளுக்காகக் காத்திருக்கிறேன். இதன் நடுவில் தாத்தாவும், அம்மாவும் வேறுவிதமாக யோசித்து வருகி



றார்கள். இந்த நர்ஸிங்ஹோம் பிரஸ்தாபனை அம்மாவை ஈர்த்து விட்டது. ஆனந்தின் மகிழ்ச்சிக்காகத் தாத்தா எதை வேண்டுமானாலும் செய்வார் என்று அம்மாவுக்கு நன்றாகவே புரிந்து விட்டது. என் பிறந்த நாள் அன்று அவர் விலை உயர்ந்த வைர மோதிரத்தைப் பரிசாகக் கொடுத்தார். அதைத் திருப்பி அனுப்பி விடச் சொல்லி அம்மாவிடம் நான் சொல்லி விட்டேன். ஆனால் அம்மா கேட்க மறுக்கிறாள். 'அவசரப்படாதே பேபி. நன்றாக யோசித்துக் கொள்' என்று சொல்கிறாள். மோதிரத்தைத் திருப்பி அனுப்பவில்லை என்றால் திருமணத்திற்கு நாங்கள் சம்மதித்து விட்டதாக தாத்தா நினைத்துக் கொள்வார். விஜய்! இத்தனை நேரமாய் நான் இத்தனை விஷயங்களை சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஒன்றுக்காவது பதில் சொல்லியிருக்கிறாயா? எதைப் பற்றியாவது உன் அபிப்பிராயத்தை வெளியிட்டு இருக்கிறாயா?'' ஹேமா கேட்டாள்.

விஜயின் கைகள் மண்டபத்தில் விரிசல் விழுந்த இடத்தில் முளைத்திருந்த புற்களைப் பிடுங்கிக் கொண்டிருந்தன. ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தான். அவன் வாயைத் திறந்து எதையும் சொல்லாவிட்டாலும் அந்த மௌனமே அவளுக்குப் பதில் சொல்வதுபோல் இருந்தது. என்ன சொல்ல முடியும்? அவனுக்கு எல்லா விஷயங்களும் தெரியும். தன்னுடைய உடலில் உயிர் இருக்கும்வரை ஆனந்துக்கு வேதனை தரும் வேலையை விஜய் செய்ய மாட்டான். ஆனந்துக்காக எத்தனை கஷ்டங்களை வேண்டுமானாலும் கடின சிலையைப்போல் தாங்கிக் கொள்வான். அதன் விளைவுகளை அலட்சியமாய் எதிர் கொள்வான். விஜயை வெறுக்க வேண்டுமென்றும், அவனுடைய அலட்சியப்போக்கிற்குக் கோபித்துக் கொள்ள வேண்டுமென்று ஹேமா திடமாக முடிவு செய்து கொண்டாலும், அவனுடைய மறுபக்கம் புரியும்போது, தவறு செய்யாதவனைத் தண்டிப்பது அநியாயம் என்று

அவள் மனமே அவளுக்கு எதிராகப் போர்க்கொடியை உயர்த்தியது.

யாரையாவது உண்மையாகக் காதலித்தால் அந்தக் காதலில் சுயநலம் இருக்கக் கூடாது. விஜய் தன்னை விரும்புகிறான். ஆனால் அவன் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏதோ ஒன்று தன்னை நெருங்க முடியாமல் அவனைத் தடுத்துக் கொண்டிருந்தது.

ஹேமாவுக்குப் புதிதாகப் பிரச்னை ஒன்று கிளம்பி யிருந்தது. தீட்சிதர் தனக்கும் ஆனந்துக்கும் திருமண பிரஸ்தாபனை கொண்டு வந்ததோடு தன்னுடைய தாய்க்கு நர்ஸிங் ஹோமை இரையாக வைத்து தூண்டில் போட்டி ருக்கிறார். மகளின் எதிர்காலத்தின லட்சியம் நர்ஸிங் ஹோம் அமைப்பதுதான் என்று அந்த தாய் திடமாய் நம்பியிருந்தாள். ஆனந்த் ஆரோக்கியமாய், அழகாக இருக்கிறான். முக்கியமாக நல்லவன். தாத்தாவின் ஆதரவு வேறு இருக்கிறது. எந்தவிதமான பொறுப்புகளும் இல்லாதவன். ஆனந்துக்கு ஹேமாவை ரொம்ப பிடித்திருக் கிறதென்று ஹரி தினமும் ராஜலக்ஷ்மியிடம் பாடம் போல் ஒப்பித்துக் கொண்டிருந்தான். இந்தப் பிரச்னையை எதிர் கொள்வதில் திடீரென்று தான் தனித்து விடப்பட்டதுபோல் ஹேமாவுக்குத் தோன்றியது. தன்னை நேசித்த விஜய் தனக்கு உறுதுணையாக நிற்க மறுக்கிறான். இது நாள் வரை ஒரு சிநேகிதியைப்போல் தன்னுடைய பிரச்னை களைக் கேட்டுத் தீர்வு சொல்லும் தாய் இன்று தீட்சிதர் பக்கம் சேர்ந்து கொண்டு அவர் சொல்வதுதான் சரி என்கிறாள். இந்தப் போராட்டத்தை அவள் தனியாக எதிர்கொள்ள வேண்டியதுதான்.

ஹேமா விஜயைச் சற்று கோபத்துடன் பார்த்தாள். பிறகு அவனை அழவைப்பதற்காக "அந்த ஆனந்தையே திருமணம் செய்து கொண்டு உன்மீது பகை சாதித்தால் என்ன என்று கூடத் தோன்றுகிறது" என்றாள்.



"அதைவிட மகிழ்ச்சியான விஷயம் எனக்கு வேறு இருக்க முடியாது..." என்றான் விஜய்.

ஹேமா தோற்றுப் போய் விட்டதுபோல் பார்த்தாள். "மகிழ்ச்சியா! எதற்கு?"

"உன்னைப் போன்ற திறமை சாலி, நல்ல குணம் கொண்ட பெண் ஆனந்துக்கு மனைவியாக வந்தால் அவனைப்பற்றி இனி எனக்கு எந்தப் பயமும் இருக்காது. எந்தக் கவலையும் இல்லாமல் கிளம்பி விடுவேன்."

"எங்கே?"

விஜய் பேசவில்லை. ஹேமாவுக்கு அவனுடைய சுபாவம் நன்றாகப் புரிந்து விட்டது. எதிராளிக்குதான் புரிய வேண்டுமென்பதை விட புரியாமல் இருப்பதற்காகத் தான் அவன் முயற்சி செய்வான். அவன் மனதில் இருக்கும் எண்ணங்கள் அவனுக்கு மட்டுமே சொந்தம். எதிராளிக்கும் தனக்கும் நடுவில் மௌனம் என்ற இடைவெளியை ஏற்படுத்தி யாரும் அவனை நெருங்காமல் கவனமாக இருப்பான்.

ஹேமா ஆழமாய் மூச்சு விடுத்துக் கொண்டே சொன்னாள். "அதாவது என்னை விட ஆனந்தின் நலம் தான் உனக்கு முக்கியம். அப்படித்தானே. தாங்க்ஸ் விஜய்... இந்த விஷயத்தை வெளிப்படையாக ஒப்புக் கொண்ட தற்கு. ஆனந்தும் நீயும் கிட்டத்தட்ட சமவயதில் இருப்ப வர்கள். ஆனந்தைப் பார்த்துக் கொள்வதற்குப் பெருந் துணையாக அவனுடைய தாத்தா இருக்கிறார். நீ எதற்கு அவனை இப்படி நிழலைப்போல் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறாய்?"

"........."

"பதில் சொல்லு விஜய்."

"........."

"ப்ளீஸ்!"

"நீங்கள் எல்லோரும் இப்பொழுதுதான் என் வாழ்க்கையில் வந்திருக்கிறீர்கள். இந்த உலகில் எனக்கு என்று ஒரு இடம் இல்லாதபோது ஆனந்தின் நட்பு எனக்கு எல்லாவற்றையும் கொடுத்தது. முக்கியமாய் நானும் ஒரு மனிதனாக வாழ்வதற்குப் பற்றுகோலாக இருந்தது. இது யாருக்கும் புரியாது. ஆனந்துதான் எனக்குத் துணையாக இருக்கிறான். உடலைப் பொறுத்தவரை அவன் பலவீன மாக இருக்கலாம். ஆனால் தேவைப்பட்டால் எனக்காக இந்த உலகத்துடன் மட்டுமே இல்லை அவனுடைய தாத்தாவுடன் சண்டை போடுவதற்குக் கூட அவன் தயங்க மாட்டான். எல்லோரும் நான் ஆனந்துக்கு உறுதுணையாக இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆனந்திடமிருந்துதான் எனக்கு அந்த சக்தி கிடைத்திருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. ஆனந்தின் மகிழ்ச்சிதான் எனக்கு முக்கியம். ஹேமா! உன் மனதில் இருப்பது என்னவென்று எனக்குத் தெரியும். வாழ்க்கையில் எனக்குச் சில தடைகள் இருக்கின்றன. அவற்றை மீறிக் கொண்டு என்னால் வரமுடியாது. நீ தனித்தன்மை படைத்தவள். சுதந்திரமாய் இருப்பவள். எனக்காக உன் சுதந்திரத்தை, தனித்தன்மையை விட்டுக் கொடுக்கச் சொல்வது கொஞ்சம் கூட நியாயம் இல்லை. ஒரு முறை என் மனம் என் வசத்தில் இருக்கவில்லை. சுய நலம் என் கண்களை மறைத்து விட்டது. உன்னைத் திருமணம் செய்து கொண்டு எனக்கு என்று ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் அது எவ்வளவு தவறான யோசனை என்று எனக்கே புரிந்து விட்டது. உன்னைத் திருமணம் செய்து கொண்டு ஆனந்துக்கு வேதனையைத் தருவதை விட ஆனந்துக்கு அருகில் இருந்து உனக்கு வேதனையைத் தருவதுதான் உத்தமம் என்று தோன்றியது."

"எனக்கு... எனக்கு வேதனை தருவது உனக்குச் சங்கடமாக, கஷ்டமாக இல்லையா?" தாழ்ந்த குரலில் கேட்டாள், ஹேமா.



'ஊஹூம். வேதனை ஏற்பட்டால் என்னை விட்டுத் தொலைவாகப் போய்விடுவாய். உன் வாழ்க்கையைப் பற்றி யோசிக்கத் தொடங்குவாய். இந்தப் புதைகுழியிலிருந்து விடுபடுவாய். நான் வேண்டுவதும் அதுதான்." நிதான மான குரலில் சொன்னான் விஜய்.

ஹேமாவின் கண்களில் நீர் சுழன்றது. "விஜய்! உன்னை முழுவதுமாகப் புரிந்து கொள்ளும்போது உன்மீது விருப்பம் இன்னும் அதிகமாகிக் கொண்டே போகிறது. நம் இருவருக்கும் நடுவில் இருக்கும் இடைவெளி கூட புரிகிறது. விஜய்! நாமிருவரும் திருமணம் செய்து கொள்ளா விட்டாலும் சினேகிதர்களாக இருக்கலாம் இல்லையா. நான் அந்த முடிவுக்குத்தான் வந்திருக்கிறேன். ஒருவரை நாம் மனப்பூர்வமாக நேசித்தால், அவர்களிடம்தான் நமக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என்றால்... ஹூ கேர்ஸ் ஃபர் தி மேரேஜ்? திருமணம் செய்து கொள்ளாமலேயே நட்பை மட்டும் தொடர்ந்து கொண்டு ஒருவருக்காக ஒருவர் மௌன பந்தத்தில் கட்டுப்பட்டு வாழும் ஜோடிகளை எனக்குத் தெரியும். எனக்கு ஒன்று மட்டும் புரிகிறது விஜய். ஆனந்துக்கு நான் நெருக்கமானவளாக இருந்தால், உனக்கு அருகில் இருப்பதுபோல்தான். அதனால்தான் இந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிறேன். அம்மாவையும், தாத்தாவையும் எதிர்கொள்ள வேண்டு மென்றால் ஆனந்துடன் நட்பாக இருப்பது ஒன்றுதான் வழி. விஜய்! நான் சொல்வது உனக்குப் புரிகிறது இல்லையா..." ஹேமா கேட்டாள்.

கிளம்புவதற்காக எழுந்து கொண்ட விஜய் ஹேமாவின் காலடியில் கீழ்ப்படிகட்டில் உட்கார்ந்து கொண்டான். ஹேமா பக்கம் திரும்பி அவள் கண்களுக்குள் எதையோ தேடுவதுபோல் பார்த்தான். ஹேமா கண் இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இருவரையும் நிலாமௌனமாய் கவனித்துக் கொண்டிருந்தது.

விஜயின் குரல் மென்மையாக ஒலித்தது. "ஹேமா!

எனக்குப் புரிகிறது. ஆனால்... வேண்டாம்... இந்த வேலையை நீ செய்யாதே. பிறகு ரொம்ப வேதனைப்பட வேண்டியிருக்கும். ஆனந்த் பற்றி உனக்கு முழுவதுமாகத் தெரியாது. அவன் நல்லவனாக இருப்பது ஓரளவுக்குத் தான். அவனுக்கு ஏமாற்றம் ஏற்பட்டால் அடிபட்ட புலியாகிவிடுவான். நல்லது கெட்டதைப் பார்க்கமாட்டான். உன்னை நான் காப்பாற்ற முடியாத சூழ்நிலையை உருவாக்கிவிடாதே. அதை என்னால் தாங்க முடியாது.''

ஹேமா நிலவொளியில் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் கண்களில் தன்னைப் பற்றிய கடமை உணர்வு தெரிந்தது. பண்பு நிறைந்த இந்த மனிதனுக்காக எத்தனை ஜென்மங்கள் வேண்டுமானாலும் தன்னால் காத்திருக்க முடியும்.

''இனி கிளம்புவோமா... நேரமாகி விட்டது.'' விஜய் எழுந்துகொண்டே சொன்னான்.

ஹேமா கையை நீட்டினாள்.

அவனையும் அறியாமல் அவன் கை நீண்டு வந்து மறுபடியும் பின்னால் போகப் போனது.

ஹேமா சட்டென்று விஜயின் கையைப் பற்றிக் கொண்டு எழுந்தாள். இருவரும் நிலா வெளிச்சத்தில் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

விஜய் ஹேமாவின் கையை விடுவித்துக் கொள்ள வில்லை. கடைசி படியை இறங்கும்போது ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மனதில் ஏதோ நிறைவு ஏற்பட்டதுபோல் இருவரின் முகமும் ஒளி வீசிக் கொண்டிருந்தன. ஹேமா விஜயும் வீட்டுக்கு வந்த போது தீட்சிதர் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு ஹாலில் வேக வேகமாய் நடைபயின்று கொண்டிருந்தார்.

''தாத்தா! நீங்க வந்து விட்டீர்களா?'' ஹேமா விசாரித்தாள். ''ஹாஸ்பிடலில் இன்னிக்கு எனக்கு



ட்யூட்டி இல்லை. எனக்குப் பொழுதே போகவில்லை. ஹரியோடு மோட்டார் சைக்கிளில் வந்து விட்டேன். ஆனந்த் இல்லை. நீங்களும் இருக்கவில்லை. லக்ஷ்மி கோவிலுக்குப் போகிறேன் என்றதும் அவளுடன் கோவிலுக்குப் போய் விட்டேன். அங்கே விஜய் தென் பட்டான்'' என்றாள்.

''லக்ஷ்மி எல்லா விவரங்களையும் சொல்லி விட்டாள்'' என்றார் தீட்சிதர். தேன் தடவியது போல் புன்முறுவல் மலர்ந்த இதழ்களுடன் ஹேமாவுடன் பேசிக் கொண்டிருந் தாலும், அவருடைய பார்வை கத்தியைப் போல் கூர்மை யாய் விஜயைப் பார்த்துக் கொண்டிருந்தன.

ஹேமாவும் விஜயும் சேர்ந்து வருவதைப் பார்த்த போது அவர் இதயத்தில் யாரோ தீ மூட்டியது போல் இருந்தது.

அதற்குள் ஆனந்த் வந்தான்.

''ஹேமா! எப்போ வந்தாய்?'' ஹேமாவைப் பார்த்ததும் அருகில் சென்றான்.

''ரொம்ப நேரமாகி விட்டது.''

''ரொம்ப நேரமாகிவிட்டதா!'' ஆனந்த் நொந்து கொள்வதுபோல் பார்த்தான். விஜயைப் பார்த்து ''விஜய்! ஹேமாவைத் தனியாக விட்டு விட்டாயா? தோட்டத் திற்காவது அழைத்துச் சென்றிருக்கக் கூடாதா?'' என்று கேட்டான்.

''லக்ஷ்மீ! ஹேமாவுக்குச் சாப்பிட ஏதாவது கொடுத் தாயா?'' லக்ஷ்மியை விரட்டினான்.

விஜய் ஆனந்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஹேமா சொன்னது உண்மைதான். இதுவரையில் எப்பொழுதும் காணாத உற்சாகமும், மகிழ்ச்சியும் ஆனந் திடம் தென்பட்டுக் கொண்டிருந்தன. அவனால் ரொம்ப நேரம் ஒரு விஷயத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. சேர்ந்தாற்போல் ஒரு இடத்தில் அவனால் உட்கார்ந்து

கொள்ள முடியவில்லை. பரபரவென்று அலைந்து கொண்டிருந்தான். பார்ப்பவர்களின் கண்களுக்கு அது இளமையின் துள்ளல்போல் தெரியும்.

ஹேமாவுக்குப் பிடிக்குமென்று எண்ணெய் கத்தரிக்காய் கறியைத் தயாரிக்கச் சொல்லி ஆனந்த் லக்ஷ்மியிடம் ஆணையிட்டான்.

ஒரு மணி நேரம் கழித்து எல்லோரும் சாப்பிட உட்கார்ந்து கொண்டார்கள். ஆனந்த் விருப்பப்பட்டான் என்று டின்னர் செட், டைனிங் டேபிள் எல்லாம் எப்பொழுதோ வாங்கியிருந்தார் திட்சிதர். ஆனந்த் சுயமாய் உணவு மேஜை மீது எல்லாவற்றையும் எடுத்து வைத்தான். உதவிக்கு வரப்போன விஜயை 'ஹேமாவுடன் பேசிக்கொண்டிரு' என்று பிடித்துத் தள்ளி விட்டான். ஹரி வழக்கம்போல் மிடுக்காக அங்கேயும் இங்கேயும் சுற்றிக் கொண்டிருந்தான். நடுநடுவில் திட்சிதரிடம் சென்று விஜய் பற்றி ஏதாவது கோள் மூட்டிக்கொண்டு அவருக்குத் திருப்தி ஏற்படும் விதமாக நடந்து கொண்டிருந்தான்.

எல்லோரும் சாப்பிட உட்கார்ந்து கொண்டார்கள்.

திட்சிதரையும் வரச் சொன்னான் ஆனந்த். ''நான் எதுக்கு ஆனந்த்? ஏதோ கொஞ்சம் பலகாரம் சாப்பிடுகிறவன். விஜய்க்கும் இப்பொ பசியாக இல்லையோ என்னவோ. தோட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை எடுக்கச் சொல்லியிருந்தேன். ஹரி, நீ, ஹேமா மூவரும் சேர்ந்து சாப்பிடுங்கள்'' என்றார்.

விஜய் தஸ்தாவேஜுகள் வைத்திருந்த அலமாரி பக்கம் போகப் போனான்.

ஆனந்த் அவனைத் தடுத்துக்கொண்டே ''அதெல்லாம் ஒன்றும் நடக்காது. எல்லோரும் சேர்ந்து ஜாலியாகப் பேசிக்கொண்டே சாப்பிடலாம், விஜய்! இப்படி வா,



லக்ஷ்மீ... தாத்தாவுக்குப் பலகாரத்தை எடுத்துக் கொண்டு வா...'' என்றான்.

ஹேமாவுக்குப் பக்கத்தில் விஜயை உட்காரவைத்து எதிர்பக்கம் அமர்ந்து கொண்டான் ஆனந்த். சாப்பிடும்போது ஆனந்த் ஹேமாவுக்கு வற்புறுத்தி மேலும் மேலும் பரிமாறச் செய்தான். ஹேமா விஜயின் தட்டில் கறி, கூட்டு, சாம்பார் முதலியவற்றை அதிகமாகப் பரிமாறினாள்.

''உன்னுடைய நண்பன் பேசவே மாட்டானா ஆனந்த்.'' திடீரென்று ஹேமா கேட்டாள்.

''அவன் பேச வேண்டியதையும் சேர்த்து நானே பேசி விடுகிறேன் இல்லையா... அதான்'' ஆனந்த் பதிலளித்தான்.

''உங்களுடைய நட்பைப் பார்க்கும்போது எனக்குப் பொறாமையாக இருக்கிறது. இப்படி ஒருவரை ஒருவர் உயிருக்கும் மேலாக நேசிப்பவர்களை நான் பார்த்ததே இல்லை.''

''நீ நினைக்கும் அளவுக்கு ஒற்றுமை ஒன்றும் இல்லை. எங்களுக்கு நடுவில் சில கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.'' ஆனந்த் சொன்னான்.

''கருத்து வேறுபாடா?'' ஹேமா வியப்புடன் பார்த்தாள்.

''ஆமாம். விஜயைத் திருமணம் செய்து கொள்ள சொல்லி வற்புறுத்தி வருகிறேன். என் பேச்சைக் கேட்க மறுக்கிறான்.''

''ஆச்சாரி மாமா சொன்ன சம்பந்தம் ஒன்று ரெடியாக இருக்கு.'' ஹரி சொன்னான்.

''விஜய் மட்டும் ஊம் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும். நாளைக்கே நிச்சயதார்த்தம் முடிந்து விடும். பெண் நன்றாகப் படித்திருக்கிறாள். ஒரே பெண்.

தந்தை பெரிய இஞ்சினீயர். சொத்தும் நிறைய இருக்கிறது. அவர்கள் விஜயை வீட்டோடு மாப்பிள்ளையாக வரச் சொல்லிக் கேட்கிறார்கள்'' என்றார் தீட்சிதர்.

ஹேமா கடைக் கண்ணால் விஜய் பக்கம் பார்த்தாள்.

விஜய் கர்ம சிரத்தையாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

''தாத்தா... உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்? உனக்கு விருப்பமான பெண்ணை விஜய் செய்துகொள்ள மாட்டான். விஜய் விருப்பப்பட்ட பெண்ணை நீ ஏற்றுக் கொண்டு மறுபேச்சு பேசாமல் திருமணத்தை முடிக்க வேண்டும்.''

''ஏதோ ஒன்று. விஜய் சீக்கிரமாய் முடிவு செய்வது நல்லது. அவரவர்களுக்கு மனைவி, மக்கள், வீடு வாசல், சொந்த சம்பாத்தியம் என்று இருப்பது நல்லது'' என்றான் ஹரி.

ஹேமாவுக்குத் தயிரைப் பரிமாறிக் கொண்டிருந்த ஆனந்த் சட்டென்று திரும்பி ஹரி பக்கம் பார்த்தான். அவன் கண்கள் அக்னியைப்போல் ஜொலித்துக் கொண்டிருந்தன.

''ஹரி! திருமணத்தைத் தவிர விஜய்க்கு வீடுவாசல் சொந்த சம்பாத்தியம் எல்லாமே இருக்கின்றன. அப்படி பார்த்தால் நீ சொன்ன அறிவுரை எனக்கும் பொருந்தும். விஜய் உழைத்துச் சம்பாதிப்பதை உட்கார்ந்து சாப்பிடுகிறேன் என்று என்னைக் குத்திக் காண்பிக்கிறாயா?''

''அய்யய்யோ! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை ஆனந்த்!'' ஹரி இடக் கையால் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

''இனி ஒரு நாளும் இதுபோன்ற தேவையற்ற அறிவுரைகளை வழங்காதே. பேசுவதற்கு முன்பு யாரோடு பேசுகிறோம் என்ன பேசுகிறோம் என்று நினைவில் வைத்துக்கொண்டு பேசு.''



''ஹரி இப்பொ எதுவும் சொல்லி விடவில்லை ஆனந்த்.'' தீட்சிதர் சமாளிக்க முயன்றார்.

ஹேமா ஆனந்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். விஜயை யாராவது ஏதாவது சொன்னால் ஆனந்த் பொறுத்துக் கொள்ள மாட்டான் என்று புரிந்தது.

சாப்பாடு முடிந்ததும் தீட்சிதர் ஹேமாவை இறக்கி விட்டு வரச்சொல்லி ஆனந்திடம் சொன்னார். ஹரியையும் கூடப் போகச் சொன்னார். ஆனந்த் காரின் சாவியை எடுத்து வந்து பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்த விஜயின் கைகளில் வைத்தான். ''வா விஜய்! இருவருமாகச் சேர்ந்து போய் ஹேமாவை இறக்கி விட்டு வருவோம்'' என்றான்.

''பகல் முழுவதும் வேலை செய்து விஜய் களைத்துப் போயிருப்பான். கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும்'' என்றார் தீட்சிதர்.

''விஜய்க்கு எப்பொ ரெஸ்ட் கொடுக்க வேண்டுமென்று எனக்கு நன்றாகத் தெரியும் தாத்தா. வேண்டுமானால் நீ ஓய்வு எடுத்துக்கொள் வா... ஹேமா...'' என்றான் ஆனந்த்.

விஜய் காரை கேரேஜ்லிருந்து வெளியில் எடுத்தான். டிரைவிங் சீட்டிலிருந்து இறங்கப் போனவனை ஆனந்த் தடுத்தான்.

''ஹேமா... வாங்க'' என்று விஜய் பக்கத்தில் அமரச் சொன்னான்.

ஹேமா வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''குண்டும் குழியுமாய் இருக்கும் இந்தச் சாலையில் என்னைவிட விஜய் நன்றாக டிரைவ் செய்வான். நான் காரை ஓட்டினால், வீட்டுக்குப் போனதும் நீங்க உடல் வலிக்கு மருந்தை சாப்பிட வேண்டியிருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே ஹேமாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான், அவனுக்கு, இடம் கொடுப்பதற்காக ஹேமா மேலும் விஜய் பக்கம் நகர்ந்து கொண்டாள்.

கார் கிளம்பும்போது ஆனந்தும், ஹேமாவும் தீட்சிதரைப் பார்த்துக் கையை அசைத்தார்கள். பின் சீட்டில் உட்கார்ந்திருந்த ஹரி ''தாத்தா! நான்காலையில் பஸ்ஸில் வந்து விடுகிறேன். நேராகத் தோட்டத்திற்கு போய்விடுவேன்'' என்று விடைபெற்றுக் கொண்டான். அவரும் சரி என்பதுபோல் தலையை அசைத்தார்.

கார் கிளம்பி விட்டது. தீட்சிதரின் கண்களுக்கு முன்னால் விஜயின் தோளில் இடித்துக் கொள்ளும் அளவுக்கு நெருக்கமாக ஹேமா உட்கார்ந்திருக்கும் காட்சி நிழலாடியது. முட்கள்மீது உட்கார்ந்திருப்பதுபோல் இருந்தது அவருக்கு. ஆனந்தைத் தேடிவந்தவர்கள் விஜயைப் பார்த்ததும் அவனை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள நினைத்தது நினைவுக்கு வந்தது. ஹேமா விஷயத்திலும் அப்படி நடக்கப் போகிறதோ என்ற அச்சம் தோன்றியது. இந்த முறை அவர் பிடிவாதமாக இருந்தார். ஹேமா ஆனந்தின் மனைவி ஆவதை யாராலும் தடுக்க முடியாது. தேவைப்பட்டால் எதை செய்யவும் அவர் தயாராக இருந்தார்.

## 21

இரண்டு மாதங்களில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன.

ராஜலக்ஷ்மியின் சித்தப்பா, ப்ளூஸ்டார் ஹோட்டல் முதலாளியான ராகவன் ஹார்ட் அட்டாக்கில் இறந்து போய் விட்டார். அவருடைய மகன்கள் ஏற்கனவே அமெரிக்காவில் செட்டில் ஆகியிருந்தார்கள். தனியாக இருக்கும் தாயைத் தங்களுடன் அழைத்துப் போக விரும்புவதால் ஹோட்டலை விற்று விடலாம் என்று முடிவு செய்து நாளேடுகளில் விளம்பரம் செய்தார்கள். ராஜலக்ஷ்மியும், தீட்சிதரும் அந்த ஹோட்டலைப் பார்த்து விட்டு



வந்தார்கள். நர்ஸிங் ஹோமாக மாற்றுவதற்கு ஏற்ற கட்டடம் என்று தீர்மானித்து அதை வாங்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். இரண்டு லட்ச ரூபாய்கள் குறைவாகக் கொடுத்தாலும் மொத்த பணத்தைக் காஷ் ஆக கொடுக்க வேண்டுமென்று ஹோட்டலை விற்பவர்கள் சொல்லிவிட்டார்கள். ராஜலக்ஷ்மி தன்னால் பதினைந்து லட்சம் வரை தரமுடியும் என்றும் மீதி முப்பத்தி ஐந்து லட்சத்தை ஏற்பாடு செய்து தரச்சொல்லி தீட்சிதரிடம் கேட்டுக் கொண்டாள். முழு பணத்தை தானே தருவதாகவும், ஹேமாவுக்கும் ஆனந்துக்கும் நிச்சயதார்த்தத்தை முடித்து விடச சொல்லி தீட்சிதர் சொன்னார். ராஜலக்ஷ்மி ஹேமாவை வற்புறுத்துவது போல் சொன்னாள்.

''ஹேமா! ஆனந்திடம் எனக்கு எந்தக் குறையும் தென்படவில்லை. உங்க இருவரின் ஜோடி பொருத்தமும் நன்றாகத்தான் இருக்கிறது. நீ கொஞ்சம் கவனமாக இருந்தால் அவனுடைய ஆஸ்மாவும் கண்ட்ரோலில் இருக்கும். திருமணம் ஆன பிறகு இதைவிட பெரிய நோய் ஏதாவது வந்தால் நம்மால் என்ன செய்ய முடியும்? நர்ஸிங் ஹோம் என்பது உன் வாழ்க்கையின் லட்சியம். இத்தனை சின்ன வயதில் நல்ல எதிர்காலம் அமைகிறது என்றால் அது உன்னுடைய அதிர்ஷ்டம்தான். நான் நிச்சயதார்த்தத்திற்கு நாள் பார்க்கட்டுமா?''

''மம்மி... எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டும்.'' மெடிகல் ஜர்னலைப் படித்துக் கொண்டிருந்த ஹேமா தலையைத் திருப்பாமலேயே சொன்னாள்.

ராஜலக்ஷ்மி வந்து ஹேமாவின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். மகளின் கைகளிலிருந்து புத்தகத்தைப் பிடுங்கி மேஜைமீது போட்டு விட்டு ''பேபி! உன்னை எப்போதும் எந்த விஷயத்திலும் வற்புறுத்தியதில்லை. அப்படித்தானே...'' என்றாள்.

''ஆமாம். தாங்க்ஸ் மம்மி'' என்றாள் ஹேமா.

ராஜலக்ஷ்மி சீரியஸாகப் பார்த்துக் கொண்டே, "ஆனந்த் விஷயத்தில் உன்னைக் கொஞ்சம் விட்டுக் கொடுக்கச் சொல்கிறேன். நல்ல எதிர்காலம் அமைய வேண்டுமென்றால் சின்ன விருப்பங்களைத் தியாகம் செய்து தான் ஆக வேண்டும்..." என்றாள்.

"ஆமாம் மம்மி... அத்தனை பெரிய அதிர்ஷ்டம் கிடைக்க வேண்டுமென்றால் இந்த சின்ன உயிரைத் தியாகம் செய்ய வேண்டும். அப்படித்தானே." குறும்பாகப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

ராஜலக்ஷ்மியால் பதில் சொல்ல முடியவில்லை. "பேபீ... என் பேச்சை நீ மறுக்கக் கூடாது. நான் நன்றாக யோசித்துதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன்."

"நானும் நன்றாக யோசித்துதான் சொல்கிறேன். மம்மீ! நர்ஸிங் ஹோமை நிறுவுவது என்னுடைய வாழ்க்கையின் லட்சியம். இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் மற்றவர்கள் கொடுக்கும் பிச்சையில் அது உருவாகக் கூடாது. என்னுடைய சொந்த முயற்சியால் அந்தக் கனவு நிறைவேற வேண்டும்."

"அப்படி பார்த்தால் அதுவும் உன்னுடையதுதான், திட்சிதர் சொத்தையும், ஆனந்தையும் உன்னிடம் ஒப்படைப்பதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறார்."

"மம்மி! எனக்கு ஒரு விஷயம் மட்டும் புரியவில்லை. ஆனந்தை நான் திருமணம் செய்து கொள்வது அவனுக்கு மனைவியாக இருப்பதற்காகவா இல்லை அவனுடைய சொத்தைக் காவல் காப்பதற்கா?"

"ஹேமா... விதண்டா வாதம் செய்து உரையாடலைத் திசை திருப்பி விடுகிறாய்."

"உன்னால் பதில் சொல்ல முடியாதபோது இப்படித் தான் கோபித்துக் கொள்வாய்" என்றாள் ஹேமா.



ராஜலக்ஷ்மியால் பதில் சொல்ல முடியவில்லை.

"நர்ஸிங் ஹோம் நிறுவுவதில் உனக்கு விருப்பம் இருக்கா இல்லையா?"

"அவர்களுடைய பணத்தில் வேண்டாம்."

"போகட்டும். ஆனந்தின் திருமணம்?"

"ஆனந்தைத் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று என் பிறந்த நாள் அன்றே சொல்லி விட்டேன். நீ தான் வைர மோதிரத்தைத் திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறாய்."

"திருமணம் செய்து கொள்ளாமல் இப்படியே இருந்து விடப் போகிறாயா?" ராஜலக்ஷ்மி. கோபமாகச் சொன்னாள்.

"தெரியாது. இப்பொ நான் அந்த விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை."

"பேபீ! அம்மா சொன்ன பேச்சை நீ கேட்டுத்தான் ஆகவேண்டும்." குரலை உயர்த்தினாள் ராஜலக்ஷ்மி.

ஹேமா தோள்களைக் குலுக்கிக் கொண்டாள். "எந்த விஷயத்திலும் சொந்தமாக யோசித்து முடிவு செய்ய வேண்டும் என்று சின்ன வயதிலிருந்து சொல்லிக் கொடுத்தது நீதான்." ஹேமா அங்கிருந்து போய் விட்டாள்.

ராஜலக்ஷ்மி தலையைப் பிடித்துக் கொண்டாள். ஹேமாவுக்காக அந்த அம்மாள் நிறைய வரன்களைப் பார்த்தாள். டாக்டர்கள்... லாயர்கள்... வியாபாரத்தில் கொடி கட்டி பறந்து கொண்டு இருப்பவர்கள்... பெரிய பெரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்... ஆனால் ஹேமாவுக்கு ஆனந்த் கணவனாக வந்தால் அவளுக்கு முழு சுதந்திரம் இருக்கும். முக்கியமாக ஆனந்துக்குப் பின்னால் இருக்கும் சொத்து! ஹேமாவின் எதிர்காலம் தங்க

தாம்பாளத்தில் வைத்ததுபோல் இருக்கும். ஹேமாவுக்கு இது புரியவில்லை. இந்த வயதில் இது சகஜம்தான். ராஜலக்ஷ்மி யோசித்தாள். நிச்சயதார்த்தத்தைச் சில மாதங்கள் தள்ளிப் போட முடிந்தால் நன்றாக இருக்கும். தீட்சிதருக்கு நயமாக எடுத்துச் சொல்ல வேண்டும். அது ஒன்றும் கஷ்டமாகத் தோன்றவில்லை. ஹேமாவை மருமகளாக்கிக் கொள்ள வேண்டுமென்று அவர் ரொம்ப தீவிரமாக இருக்கிறார். ராஜலக்ஷ்மி தன்னுடைய மைத்துனரும், லாயரும் ஆன ஹரிச்சந்திராவுக்குப் போன் செய்தாள்.

''சின்ன பிரச்னை. நேரில் வந்து பேசிக்கிறேன்'' ராஜலக்ஷ்மி சொன்னாள்.

## 22

ராஜலக்ஷ்மியின் பிரச்னைக்குச் சுலபமாகத் தீர்வு கிடைத்துவிட்டது. லாயர் ஹரிச்சந்திராவிடம் தீட்சிதரும், ராஜலக்ஷ்மியும் போனார்கள். லாயர் சொன்னபடி செயல்படுவதாக முன்னாடியே தீர்மானித்து இருந்தார்கள். தீட்சிதரும் சம்மதம் தெரிவித்தார்.

லாயர் ஹரிச்சந்திரா இருவருக்கும் பொதுவாக யோசனை வழங்கினார்.

ஆனந்த் ஹேமாவின் திருமணத்திற்கு இப்போதே அவசரப்பட வேண்டாம். ஹேமா சற்று அவகாசம் தேவை என்று சொல்கிறாள்.

நர்ஸிங் ஹோமுக்காகத் தேவைப்படும் பணம் ஐம்பது லட்சம் முழுவதும் தீட்சிதரே தராமல், ராஜலக்ஷ்மியும், தீட்சிதரும் ஆளுக்குப் பத்து லட்சம் ரூபாய்களைக் கொடுக்க வேண்டுமென்றும், மீதிப் பணத்தை லோன்



மூலமாய் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் யோசனை சொன்னார். ஆஸ்பத்திரியை நிர்வகிப்பதாக ஒரு கமிட்டியை ஏற்படுத்த வேண்டும். அதில் ராஜலக்ஷ்மி, தீட்சிதர், ஹேமா, ஆனந்த் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

''இன்னொரு நபர் வேண்டும்'' என்றார் லாயர்.

தீட்சிதர் ஹரியின் பெயரைச் சொன்னார்.

லோன் எடுத்துக் கொள்வதற்குப் பதில் தானும் ஹரியும் பார்ட்னர்களாகச் சேர்ந்து ஆளுக்கு இருபது லட்சம் தருவதாகத் தீட்சிதர் சொன்னார். பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்கள். எந்தக் காரணத்தினாலாவது, எந்த உறுப்பினருக்காகவது ஆஸ்பத்திரியின் மானேஜ்மெண்ட் பிடிக்கவில்லை என்றால் அவர்கள் தங்களுடைய முதலீட்டைத் திரும்ப பெற்றுக் கொண்டு கமிட்டியிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

அடுத்த ஞாயிறு அன்று தீட்சிதர் வீட்டில் இதற்காக அக்ரிமெண்டில் கையெழுத்துப் போட வேண்டுமென்று முடிவு செய்தார்கள்.

''அன்றே தோட்டத்தை விற்பதற்கான அக்ரிமெண்டை ஏற்பாடு செய்கிறேன். அதையும் உங்கள் கையாலேயே முடித்துவிடலாம்.'' லாயரிடம் சொன்னார் தீட்சிதர். விஷயம் சுமுகமாக முடிந்ததற்கு ராஜலக்ஷ்மியும் மகிழ்ச்சி அடைந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டது.

தீட்சிதர் வீடு சந்தடியாய் இருந்தது. தோட்டத்தை வாங்குபவர்களும் வந்திருந்தார்கள். லாயர் ஹரிச்சந்திரா வந்து விட்டார். ராஜலக்ஷ்மியும், ஹேமாவும் காலையிலேயே வந்துவிட்டார்கள். விஜய், ஆனந்த் வீட்டிலேயே இருந்தார்கள். ஆனந்த் ஜலதோஷத்தினால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்த ஹேமா மருந்தை

எழுதிக் கொடுத்தாள். விருந்தாளிகளைக் கவனிக்கும் பொறுப்பு தன் மீதுதான் இருப்பதுபோல் ஹரி பரபரப்புடன் அலைந்து கொண்டிருந்தான். நர்ஸிங்ஹோம் நிர்வாக கமிட்டியில் தன்னையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப் போவதாய் தீட்சிதர் சொன்னபோது ஹரி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''தாத்தா! என்னையும் உங்கள் வீட்டு நபராக ஏற்றுக் கொண்டதற்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை'' என்று சொன்னவன் தடாலென்று அவருடைய கால்களில் விழுந்து வணங்கினான்.

''நர்ஸிங் ஹோம் யோசனை சொன்னது நீதானே?'' என்றார் தீட்சிதர்.

ஆனந்த் உள் அறையில் ஹரிச்சந்திராவுடன் பேசிக் கொண்டிருந்தான்.

''நான்சென்ஸ்! விஜய் இல்லாமல் நர்ஸிங்ஹோமா? லாயர் சார்... எங்கள் தாத்தாவுக்கு மூளை கலங்கிப்போய் விட்டது. நான் சொன்னதுபோல் எழுதுங்கள். கமிட்டி பிரசிடெண்ட் ராஜலக்ஷ்மி, வைஸ் பிரசிடெண்ட் தாத்தா, டிரெஷரர் விஜய், ஆர்கனைஸிங் கோ ஆர்டினேட்டர் டாக்டர் ஹேமா, நான் அட்வைசர். யாரும் என்னுடைய அறிவுரைகளைப் பொருட்படுத்தப் போவதில்லை... அதனால் எனக்கு எந்தப் பொறுப்பும் இருக்காது.''

''தாத்தா ஒப்புக் கொள்வாரோ மாட்டாரோ?''

''நான் ஒப்புக் கொள்வேனா இல்லையா என்றுதான் அவர் யோசிக்க வேண்டும். நிர்வாக அதிகாரம் முழுவதும் விஜயின் கையில்தான் இருக்க வேண்டும். விஜய் கஷ்டப்பட்டு முன்னுக்குக் கொண்டு வந்த தோட்டத்தை நர்ஸிங் ஹோமாக நாங்கள் மாற்றிக் கொள்கிறோம். தோட்டத்தின் நிர்வாகம் விஜயின் கைகளில் இருந்தது போலவே நர்ஸிங் ஹோமின் நிர்வாகமும் விஜயிடம்தான் இருக்க



வேண்டும். நான் சொன்னது நடக்காது என்றால் இந்த நர்ஸிங்ஹோமும் இருக்காது. தோட்டத்தை விற்கப் போவதும் இல்லை.'' ஆனந்த் தீர்மானமாகச் சொல்லி விட்டான்.

ஹரிச்சந்திரா தீட்சிதர் பேசினார். தோட்டத்தின் நிர்வாகம் விஜய் பார்த்துக் கொண்டு வந்ததால், சுற்று வட்டாரத்தில் இருக்கும் கிராமத்து மக்களுக்கு இடையில் இந்த வீடு செழிப்பாக மாறியதற்குக் காரணம் விஜய்தான் என்ற நம்பிக்கை ஆழமாகப் பதிந்து விட்டது. அதைப் போக்குவதற்காகத்தான் தீட்சிதர் இந்த நர்ஸிங் ஹோம் யோசனைக்கு ஒப்புக் கொண்டார். ஆனால் ஆனந்த் எதையும் காதில் வாங்கிக் கொள்வதாக இல்லை. பதினெட்டு வருடங்களாய் அவர் இதற்காகத்தான் பாடு பட்டுக் கொண்டு இருந்தார். ஆனந்த் விஜயை இந்த வீட்டிலிருந்து நகரவிட மாட்டான். தன்னால் அவனை வெளியேற்றவும் முடியாது.

தீட்சிதர் ஆனந்த் கொடுத்த வார்னிங்கையும் கேட்டார். ராஜலக்ஷ்மியின் முன்னால் இதையெல்லாம் வெளிப்படுத்துவது சரியில்லை. ஆனந்த் தன்னை லட்சியப் படுத்தவில்லை என்று தெரிந்தால் அந்த அம்மாள் தன்னை குறைவாக மதிப்பிடலாம்.

''அது என்னுடைய யோசனைதான். விஜயை மறுபடியும் பொறுப்புகளில் சிக்க வைக்க வேண்டாமென்று தான் அப்படி சொன்னேன். ஆனந்தின் விருப்பம்போலவே நடக்கட்டும்'' என்றார் தீட்சிதர்.

தோட்டத்தை வாங்கப் போகிறவர்களும் வந்திருந்தார்கள். ஹரிச்சந்திரா ஒப்பந்த பத்திரத்தை எழுத முற்பட்டபோது, தோட்டத்தை முன்னுக்குக் கொண்டு வந்த விஜய்க்குக் கூட இந்த விற்பனையில் எந்த ஆட்சேபணை இல்லையென்றும், தன்னுடைய முன்னிலையில்தான் ஒப்பந்தம் நடக்கிறது என்றும் எழுதி,

அதில் விஜயும் கையெழுத்துப் போட வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

''தோட்டம் ஆனந்தின் பெயரில் இருக்கிறது. அவன் கையெழுத்துப் போட்டால் போதும்'' என்றார் தீட்சிதர்.

''தாத்தா! விஜயும் கையெழுத்துப் போடட்டும். தோட்டம் என் பெயரில் இருந்தால்தான் என்ன? கஷ்டப் பட்டு உழைத்து அதை முன்னுக்குக் கொண்டு வந்தது விஜய்தானே. விஜய் கையெழுத்துப் போட்டால் உனக்குத் தான் நல்லது. இனி ஒரு நாளும் அவன் இந்த விஷயத்தில் உன்னைக் கேள்வி கேட்க முடியாது. லாயர் உன் நல்லதிற்கு சொன்னால் புரியாதா உனக்கு?'' என்றான் ஆனந்த்.

விஜய் அக்ரிமெண்டை எழுதினான்.

எல்லோரும் கையெழுத்துப் போட்டார்கள். கையெழுத்துப் போட்ட பிறகு விஜய் ஆழமாய் மூச்சு எடுத்துக் கொண்டதை ஹேமா கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். அவன் முகத்தில் இருந்த கம்பீரம் மட்டும் குறையவே இல்லை.

தோட்டத்தை வாங்கியதற்கான பணத்தையும், செக்கையும் ஆனந்திடம் கொடுக்கப் போனபோது ஆனந்த் விஜய் பக்கம் சுட்டி காட்டினான். அவர்கள் விஜயிடம் கொடுத்தார்கள். விஜய் அதை தீட்சிதரிடம் கொடுத்தான்.

நர்ஸிங் ஹோம் சம்பந்தப்பட்ட ஒப்பந்த பத்திரம் தயாராகி விட்டது. எல்லோரும் அதில் கையெழுத்து போட வேண்டும்.

விஜய் ஆனந்திடம் சொன்னான். ''அனூ! எனக்கு இண்ட்ரெஸ்ட் இல்லை. இந்த நர்ஸிங்ஹோம் விஷயத்தில் என்னை விட்டு விடு ப்ளீஸ்.''

''விஜய்! உனக்கு விருப்பம் இல்லையென்றால் நர்ஸிங்க்ஹோம் பிரபோசலையே விட்டு விடுவோம்'' என்றான் ஆனந்த்.



விஜய் பேசவில்லை.

''சொல்லு விஜய். நீ இல்லாமல் நானோ, நான் இல்லாமல் நீயோ எங்கேயாவது இருந்திருக்கிறோமா?''

''இருக்க வேண்டும். எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது.''

''லாயர் சார். இந்த அக்ரிமெண்ட் கான்சல்!'' ஆனந்த் தீர்மானமாகச் சொல்லி விட்டான்.

ஹேமா அந்த இருவரையும் பார்த்துக் கொண் டிருந்தாள். விஜய் நாற்காலியின் கையைப் பிடித்துக் கொண்டு ஏதோ யோசிப்பதுபோல் நின்றிருந்தான். அவன் அடிமனதில் புதையுண்டு கிடந்த வேதனை ஏதோ கம்பீரம் என்ற முக்காட்டை விலக்கி வெளியில் வர துடித்துக் கொண்டிருந்தது.

தீட்சிதரும், ராஜலக்ஷ்மியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''விஜய்! என்ன இது? ஆனந்த் இவ்வளவு சொல்லும் போது கேட்டால்தான் என்ன? ஹேமாவின் எதிர்காலத்தை நாசமாக்குவாயா?'' ஹரி இடைபுகுந்து சொன்னான்.

''ஷட்டப்! இது எங்க இருவருக்கும் சம்பந்தப்பட்டது. நீ எதற்காக மூக்கை நுழைக்கிறாய்?'' ஆனந்த் கண்களை உருட்டி விழித்தான். ஹரி ரொம்ப அவமானமாய் உணர்ந்தான். ஏதோ சொல்லப் போனவன் தீட்சிதர் ஜாடை காட்டியதைக் கவனித்து நின்று விட்டான்.

''விஜய்! உனக்கு இதில் ஆட்சேபணை என்ன?'' ராஜலக்ஷ்மி எரிச்சலுடன் கேட்டாள். ஆனந்தின் போக்கு அந்த அம்மாளுக்குப் புரிபடவில்லை. விஜய் இல்லை என்றால் அடிகூட எடுத்து வைக்க மாட்டான்போல் இருக்கிறது. விஜய் என்றால் அவளுக்கு அபிமானம் இல்லாமல் இல்லை. ஆனால் அது ஓரளவுக்குத்தான். ஹேமாவின்

எதிர்காலத்திற்கு அவன் தடையாக இருந்தால் அதை சகித்துக் கொள்ளும் அளவுக்குப் பெருந்தன்மை அவளிடம் இல்லை.

''என்ன செய்ய வேண்டுமோ சொல்லுங்கள்.'' ஹரிச்சந்திரா கேட்டார்.

ஹேமா அவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டு அமைதியாக விஜய் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். ஹேமா தாயுடன் சேர்ந்து வந்தாலும் இங்கு நடக்கும் நிகழ்ச்சியில் தனக்குக் கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லாதது போல் இருந்தாள்.

''அக்ரிமெண்டை எழுதுங்கள்.'' விஜய் லாயரிடம் சொன்னான்.

அக்ரிமெண்ட் எழுதி முடித்ததும் எல்லோரும் கையெழுத்துப் போட்டார்கள். மானேஜிங் கமிட்டியி லிருந்து தன்னை நீக்கி விட்டார்கள் என்று ஹரிக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

''தாத்தா! சற்றுமுன் தோட்டத்திற்காகக் கொடுத்த செக்கையும், பணத்தையும் விஜயிடம் கொடுங்கள்'' என்றான் ஆனந்த்.

''இப்பவே எதுக்கு?'' என்றார் அவர்.

''இன்னிக்கு நல்லநாள் என்று ராஜலக்ஷ்மி மேடம் சொன்னார்கள் இல்லையா. கமிட்டியின் டிரஷரர் விஜய். டிரஷரர் அவர்களிடம் நர்ஸிங்ஹோம் சம்பந்தப்பட்ட பணத்தை ஒப்படைத்து விடு.''

தீட்சிதரின் முகம் வெளிறிப் போய் விட்டது. எல்லோரும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர் இருப்புப்பெட்டியைத் திறந்து பணத்தையும், செக்கையும் எடுத்து விஜய் கையில் கொடுத்தார்.

ஹேமா உள்ளே போய் லக்ஷ்மியிடம் கேட்டு ஒரு தட்டில் மைசூர்பாக் துண்டங்களை எடுத்து வந்து முதலில்



ஆனந்திடம் கொடுத்தாள். ஆனந்த் விஜயிடம் கொடுக்கச் சொன்னான். ஹேமா விஜய் அருகில் சென்றாள். ஸ்வீட்டைக் கொடுத்துக் கொண்டே ''ஹார்டியஸ்ட் கங்கிராஜுலேஷன்ஸ். ஐ விஷ் ஆல் தி பெஸ்ட் இன் தி வர்ல்ட்'' என்றாள்.

விஜய் ஹேமாவைப் பார்த்தான். ஆனால் தாங்க்ஸ் சொல்லவில்லை.

ஹேமாவின் கண்கள் மகிழ்ச்சியால் மின்னிக் கொண் டிருந்தன. ஆனந்திடம் ஸ்வீட்டைக் கொடுத்துக்கொண்டே ''ஆனந்த்! உன் பிரண்டுக்குக் கொஞ்சம்கூட மரியாதையே தெரியவில்லை. நான் பெஸ்ட் விஷஸ் சொன்னால் தாங்க்ஸ் கூட சொல்லவில்லை.'' புகார் செய்வதுபோல் சொன்னாள்.

ஆனந்த் விஜய் பக்கம் சங்கடமாய் பார்த்தான். பிறகு புன்முறுவலுடன் ''அவன் சார்பில் நானே தாங்க்ஸ்சொல்லி விடுகிறேன். எங்க விஜயை குற்றம் சொல்லாதே. தோட் டத்தை விற்று விட்ட வேதனையில் இருக்கிறான்'' என்றான்.

''வேதனையா! எதுக்கு? இத்தனை நாள் தோட்ட மாக இருந்த சொத்து இன்று நர்ஸிங் ஹோமாக மாறப் போகிறது. அவ்வளவுதானே! யாராவது வற்புறுத்தி னார்களா என்ன? அவனும் சம்மதித்த பிறகுதானே ஒப்பந்தம் செய்யப்பட்டது?''

''ஹேமா! ஒருவிதமாய் இதுவும் வற்புறுத்தல்தான். அதுவும் நான்தான் ரொம்ப வற்புறுத்தினேன். பல வருடங் களாய் விஜய் ராப்பகல் பாராமல் அந்த தோட்டத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கிறான். மழை, வெய்யில் எதையும் பொருட்படுத்த மாட்டான். தோட்டத்திற்காக சிரமப்படும்போது பசி, தாகம் கூட இருக்காது அவனுக்கு. அந்த கஷ்டத்திலிருந்து அவனை எப்படி மீட்கலாம் என்று

வழியைத் தேடிக் கொண்டிருந்த எனக்கு உங்க நர்ஸிங் ஹோம் தங்கமான வாய்ப்பாக தோன்றியது. தோட்டத்தை விற்று விடலாம் என்று நான் வற்புறுத்தினேன். என்ன செய்வது? சிலசமயம் அவர்களுடைய நன்மைக்காக வேதனை தருவதைத் தவிர்க்க முடியாது.''

ஹேமா விஜய் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டதுபோல் அவன் முகம் கடின சிலையைப் போல் இருந்தது. அக்ரிமெண்டுக்கு சம்பந்தப்பட்ட காகிதங்களின் நகலை தீட்சிதர் ராஜலக்ஷ்மியிடம் கொடுத்தார்.

ஹேமா எல்லோருக்கும் இனிப்பை வழங்கினாள்.

ஹரியைக் காணவில்லை.

''ஹரி எங்கே?'' என்று கேட்டாள்.

''சற்றுமுன் மோட்டார் சைக்கிளில் எங்கேயோ கிளம்பிப் போனான்'' என்றார் ஹரிச்சந்திரா.

இதைக் கேட்டதும் தீட்சிதரும், ராஜலக்ஷ்மியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஹேமா தாயின் அருகில் அமர்ந்து கொண்டாள். மகிழ்ச்சியால் இருக்கும்போது தாயின் கையை தன்னுடைய இரண்டு கைகளிலும் எடுத்துக் கொள்வது அவள் வழக்கம். இப்பொழுதும் அதேபோல் செய்தாள்.

''சந்தோஷம்தானே ஹேமா!'' ராஜலக்ஷ்மி கேட்டாள்.

''ரொம்ப... தாங்க்ஸ் மம்மி.''

மகிழ்ச்சியின் மிகுதியில் ஒளிவீசிக் கொண்டிருந்த மகளின் முகத்தைப் பார்க்கும்போது ராஜலக்ஷ்மிக்கு திருப்தியாக இருந்தது.



# 23

ராஜலக்ஷ்மி, ஹரிச்சந்திரா, தீட்சிதர், ஆனந்த் எல்லோருமாய் சேர்ந்து அங்கிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் கிராமத்திற்கு வந்திருக்கும் காஞ்சி பெரியவரைத் தரிசனம் செய்து கொள்ள சென்றிருந்தார்கள். அவர்களை அழைத்துச் செல்லும்படி ஆனந்த் விஜயிடம் கேட்டபோது தனக்கு வேறு வேலை இருப்பதாகச் சொல்லி வெளியில் கிளம்பி போய்விட்டான்.

''இன்னிக்கு விஜயை வற்புறுத்த வேண்டாம். வாங்க, நானே அழைத்துச் செல்கிறேன்'' என்றான் ஆனந்த்.

''நான் வரமாட்டேன். இது போன்ற விஷயங்களில் எனக்கு அவ்வளவாக நாட்டமில்லை.'' ஹேமா சொன்னாள்.

''ஹேமா சின்ன வயதிலிருந்தே இப்படித்தான்'' என்றாள் ராஜலக்ஷ்மி.

அவர்கள் கிளம்பிப் போய்விட்டார்கள். ஹேமா லக்ஷ்மியிடம் உட்கார்ந்து கொண்டு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள். சில சமையல் குறிப்புகளை அவளிடம் கேட்டுக் கொண்டாள்.

''இந்த சமையல் எல்லாம் ஆனந்த் தம்பிக்கு ரொம்ப பிடிக்கும்'' என்றாள் லக்ஷ்மி.

''விஜய்க்கு எது பிடிக்கும்?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''அய்யோ ராமா! பதினெட்டு வருடங்களாய் ஆனந்தையும், விஜயையும் இந்தக் கையால்தான் வளர்த்தேன். அவன் ஒருநாள் கூட இது நன்றாக இருக்கு என்று அதிகமாய் சாப்பிட்டதோ, நன்றாக இல்லை என்று தட்டில் மிச்சம் வைத்து விட்டுப் போனதோ கிடையாது. ஆனந்த் தம்பிதான் அப்படி செய்வான்'' என்றாள்.

''விஜய் தோட்டத்திற்கு எத்தனை மணிக்குப் போவான்?''

''காலையில் ஆறுமணிக்கே போய்விடுவான். தான் முன்னாடி போகாவிட்டால் வேலையாட்கள் தாமதமாக வருவார்கள் என்பான்.'' லக்ஷ்மி இரவு சமையலுக்காக வெண்டைக்காயை நறுக்கிக் கொண்டிருந்தாள். இளசாக தளதளவென்று இருந்த வெண்டைக்காய்களை ஹேமா கையில் எடுத்துக் கொண்டாள்.

''உங்க தோட்டத்தில் விளைந்ததா?''

''ஆமாம். தினமும் சமையலுக்கு வேண்டிய கரிகாய் புதுசாக தோட்டத்திலிருந்து வந்துவிடும்.''

''விஜய் காலையில் கிளம்பும்போதே காபி, டிபனை கொடுத்து விடுவாயா?''

''ஊஹூம். நான் அவ்வளவு சீக்கிரமாக எழுந்து கொள்ள மாட்டேன். விஜய் தம்பிதான் விடியற்காலையிலேயே எழுந்து கொள்வான். எழுந்ததும் கீழே வந்து டிகாஷனை இறக்கி பாலை காய்ச்சி வைப்பான். குளித்து முடித்து காபி கலந்து குடித்துவிட்டு எனக்கும் கலந்து தருவான். மூட்டு வலியால் அவதிப்படுகிறேன் இல்லையா? காலை வேளையில் சுடச்சுட காபி உள்ளே போனால்தான் சுறுசுறுப்பாக இருக்கும். சின்ன வயதிலிருந்தே அப்படித் தான். எனக்கு ஜுரம் வந்தால் பெரிய அய்யாவோ, ஆனந்த் தம்பியோ பொருட்படுத்தியதில்லை. விஜய் தம்பி தான் எனக்கு ஜவ்வரிசி கஞ்சி செய்து கொடுப்பான். போர்வையைப் போர்த்திக் கொண்டு சமையல் அறை வாசற்படியில் உட்கார்ந்து கொண்டு சமையல் எப்படி செய்வது என்று சொல்லித் தருவேன். ஒரு தடவை சொன்னால்போதும், மறக்கவே மாட்டான்.''

''ஆனந்தும், விஜயும் சண்டை போட்டுக் கொண்டதே இல்லையா?''



''சண்டையா! ஒருநாளும் இல்லை. சூரியன் மேற்கில் உதயிப்பான் என்பது எவ்வளவு பொய்யோ, அவர்கள் சண்டை போட்டுக் கொள்வதும் அப்படித்தான். இருவரையும் பார்த்தால் ராமலக்ஷ்மணர்கள்தான் நினைவுக்கு வருவார்கள். உண்மையைச் சொல்கிறேன் தாயே! இந்த வீட்டில் ஆனந்த் இருந்ததால் விஜயால் இருக்க முடிந்தது. விஜய் இருந்ததால்தான் நானும் குப்பனும் இருக்க முடிந்தது. விஜய் இல்லையென்றால் தீட்சிதரின் முன் கோபத்திற்கு எப்போதோ இந்த வீட்டை விட்டுப் போயிருப்போம்.''

''போகட்டும். இத்தனை நாட்கள் எப்படியோ சமாளித்து விட்டீர்கள். குழந்தைகுட்டி வேறு இல்லை உங்களுக்கு. பிற்காலத்தில் விஜய் உங்களை நன்றாகவே பார்த்துக் கொள்வான்...'' ஹேமா எழுந்து கொண்டே சொன்னாள்.

ஹேமாவுக்கு பொழுது போகவில்லை. புத்தகங்களைப் புரட்டினாள். டி.வி.யைப் போட்டு அணைத்தாள். மெதுவாக ஒவ்வொரு படியாய் ஏறி மாடியில் விஜய் அறைக்குள் நுழையப் போனாள்.

சட்டென்று வாசற்படியிலேயே நின்று விட்டாள். அறையில் விஜய் ஈசிச்சேரில் உட்கார்ந்து கொண்டிருந்தான். முழங்கையை நெற்றிமீது வைத்துக் கண்களை மூடியிருந்தான். அவன் உட்கார்ந்திருந்த விதத்தைப் பார்க்கும் போது ஹேமாவுக்கு உள்ளே காலடி எடுத்து வைக்கும் தைரியம் இருக்கவில்லை. ஒரு நிமிடம் தயங்கினாள். பிறகு துணிச்சலை வரவழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

விஜய் அருகில் சென்று அவன் நெற்றி மீது கையை வைத்தாள்.

அவன் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான். ஹேமாவைப் புரிந்து கொண்டதுபோல் பார்த்தான். மறு

திமிடம் புரிந்து கொள்ளாததுபோல் யோசனையில் மூழ்கி விட்டான்.

''விஜய்!'' மென்மையான குரலில் அழைத்தாள். விஜயிடமிருந்து பதில் இல்லை. ஹேமாவுக்குப் பயமாக இருந்தது.

ஒரு மனிதன் வாயை விட்டு அழுதால் நம்மால் தேற்ற முடியும். மிகப் பிரியமானதேதோ கண்களுக்கு முன்னால் எரிந்து சாம்லாகும்போது, எதையும் செய்ய முடியாத இயலாமை அவன் கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. சுற்றிலும் சூனியத்தைத் தவிர வேறு எதுவும் தென்படாதபோது மனிதனுக்கு ஏற்படும் தனிமையின் வேதனை!

''விஜய்! ஆர் யூ ஆல் ரைட்!'' ஹேமா கேட்டாள்.

சுய உணர்வு பெற்றவனைப்போல் விழித்தான் விஜய். எதிரில் ஹேமா நிற்கிறாள் என்று புரிந்தது. நெற்றி மீது இருந்த ஹேமாவின் கையை நகர்த்தி விட்டு எழுந்து கொண்டான். நெற்றிப் பொட்டை விரல்களால் அழுத்திக் கொண்டான்.

''தலையை வலிக்கிறதா?'' ஹேமா கேட்டாள்.

''இல்லை.''

''ஏதோ வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டு வெளியில் போயிருந்தாயே. வீட்டுக்குத் திரும்பி எப்பொ வந்தாய்?'' ஹேமா வியப்புடன் கேட்டாள்.

விஜய் பதில் சொல்லவில்லை. நாற்காலியிலிருந்து எழுந்து போய் ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டு நின்றான்.

''காபி கலந்து எடுத்து வருகிறேன். மாத்திரையைப் போட்டுக் கொள்.''

''வேண்டாம்.''



''தலைவலி குறையும்.''

''பரவாயில்லை.''

ஹேமா அருகில் வந்தாள். ''விஜய்!'' என்று அழைத்தாள்.

''கீழே போ ஹேமா.''

''ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லு. தோட்டத்தை விற்று விட்டார்களே என்று வேதனையாக இருக்கிறதா?''

அவன் மௌனமாய் இருந்தான்.

''அந்தத் தோட்டத்தை விட்டுக் கொடுப்பது அவ்வளவு கஷ்டம் என்று தெரிந்தும் வாயைத் திறக்காமல் இருந்தாய். அவர்கள் கஷ்டப்படுத்தினால் மௌனமாகச் சகித்துக் கொள்வானேன்? ஏதாவது கேட்டால் ஆனந்துக்காக என்பாய். உன் மனதில் இருப்பதை ஆனந்துக்குச் சொல்லாமல் ஏமாற்றி வருகிறாய். இதுதான் உண்மையான நட்பின் இலக்கணமா?''

''ஹேமா! ப்ளீஸ் கீழே போய் விடு.''

''பெரிய தோட்டம்! போனால் போகட்டும். சனி விட்டது என்று...''

விஜய் சரேலென்று ஹேமா பக்கம் திரும்பினான். அவன் கண்களில் தென்பட்ட கோபத்தைப் பார்த்து ஹேமா வியப்படைந்தாள். கைப்பிடிகளை இறுக்கிக் கொண்டு கோபத்தை, வேதனையைக் கட்டுப்படுத்திக் கொண்டான் விஜய். அவன் தாடை எலும்பு இறுகியது. ''உனக்கு எதுவும் தெரியாது, தெரியாதவற்றைப் பற்றி நீ பேசாதே... ப்ளீஸ் போய் விடு.''

''போய் விடுகிறேன். போகும்முன் உன்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகிறேன். உன் வேதனை என்னவென்று உன்னைவிட எனக்கு நன்றாகத் தெரியும். உனக்கு எது பிடிக்கும் என்றுகூட எனக்குத் தெரியும்.

இன்று எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. விஜய்! இனி என்னைத் தொலைவாக இரு என்று உன்னால் சொல்ல முடியாது. ஹாஸ்பிடல் விஷயமாக நான் அடிக்கடி உன்னைச் சந்தித்துப் பேச வேண்டியிருக்கும். மாட்டேன் என்று உன்னால் சொல்ல முடியாது. புரிகிறதா! அதான் மகிழ்ச்சியாய் இருக்கிறேன்.''

கீழே கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. ஹேமா சட்டென்று அறையை விட்டு வெளியேறப் போய் திரும்பிப் பார்த்தாள்.

தனிமையே சிலையாய் உருவானதுபோல் விஜய் நின்றிருந்தான். ஹேமா அவனருகில் ஓடி வந்தாள். அவனை இறுக அணைத்துக்கொண்டு, தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள். ''நானும் மற்றவர்களைப் போல் உனக்கு வேதனையைத் தருகிறேன் இல்லையா. என்ன செய்யட்டும்? எப்படி இருக்க வேண்டுமென்று நினைக்கிறேனோ அப்படி இருக்க என்னால் முடியவில்லை, விஜய்! எல்லாம் நம்முடைய நல்லதிற்குத்தான்'' என்றாள்.

படிகளில் ஆனந்தின் குரல் கேட்டது.

விஜய் ஹேமாவின் அணைப்பிலிருந்து மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொண்டான்.

ஹேமா விஜய் தாயின் போட்டோ அருகில் போய் நின்றுகொண்டாள்.

ஆனந்த் உள்ளே வந்தான்.

''ஹேமா! இங்கே இருக்கிறாயா? விஜய் வீட்டுக்கு வந்து விட்டான் இல்லையா. அங்கே எனக்குப் பொழுதே போகவில்லை. ரொம்ப போர் அடித்தது. விஜய் வீட்டுக்கு வந்தானோ இல்லையோ என்று அதே கவலைதான்'' என்றவன் விஜய் அருகில் சென்று ''என்ன விஜய்?



என்னவோ போல் இருக்கிறாய். உடல் நலம் சரியாக இல்லையா?'' நெற்றி மீது கையை வைத்தான். ''டாக்டரம்மாமே எதிரில் இருக்கிறாள். பரிசோதனை செய்து பார்க்கச் சொன்னால் போச்சு. ஹேமா! ஒரு தடவை விஜயை டெஸ்ட் செய்து விடு. ஜுரம் வந்ததுபோல் உடம்பு சூடாக இருக்கு'' என்றான்.

''அஹா! நான் நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்றான் விஜய்.

''இந்த போட்டோ ரொம்ப நன்றாக இருக்கிறது. அப்பொ விஜயின் வயது எவ்வளவு?'' ஹேமா கேட்டாள்.

''விஜய் பற்றி எது தெரிந்துகொள்ள வேண்டுமானாலும் என்னிடம் கேள். நான் சொல்கிறேன். விஜய்க்கு அப்பொ இரண்டு வயது...'' ஆனந்த் சொன்னான்.

லக்ஷ்மி மூவருக்கும் காபி கொண்டு வந்தாள்.

ஆனந்த் காபியைக் குடித்துக் கொண்டே சொன்னான். ''காஞ்சி பெரியவர் நர்ஸிங் ஹோமுக்கு முகூர்த்தம் குறித்து தந்தார்கள். இந்த மாதம் இருபத்தி எட்டாம் தேதி நல்ல நாளாம். அன்று திறப்பு விழாவை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்.''

அரை மணி கழித்து ராஜலக்ஷ்மி, ஹரிச்சந்திரா, ஹேமா கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

விஜய் கீழே இறங்கி வரவில்லை. ஆனந்தும், தீட்திதரும் விடை கொடுத்தார்கள்.

கார் கிளம்பும்போது ஹேமா மாடி ஜன்னல் பக்கம் பார்த்தாள். ஜன்னல் காலியாக இருந்தது. விஜய் தென்படவில்லை.

# 24

நர்ஸிங்ஹோம் திறப்பு விழா எளிமையான முறையில் நடந்தது. அனுபவம் மிகுந்த டாக்டர்களை ஹேமா தன்னுடைய சக ஊழியர்களாக எடுத்துக் கொண்டாள். எல்லா ஏற்பாடுகளும் கச்சிதமாக, சிறப்பாக இருந்தன. ஹேமாவுக்குத் தெரிந்த டாக்டர்கள் எல்லோரும் அவளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். இத்தனை சின்ன வயதிலேயே நல்ல எதிர்காலம் அமைவது அவளுடைய அதிர்ஷ்டம் மற்றும் திறமை என்று பாராட்டினார்கள். ராஜலக்ஷ்மியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தன்னுடைய வருங்கால மருமகன் என்று ஆனந்தை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினாள்.

திட்சிதருக்கு தான் செய்த பூஜைகளுக்குப் பலன் கிடைத்து விட்டதுபோல் மகிழ்ச்சியாக இருந்தது. எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாக, சின்ன குறைகூட இல்லாமல் செய்து முடித்த விஜய் கெஸ்டுகள் வரும்போது தொலைவாக நின்று கொண்டிருந்தான். அதைப் பார்த்த ஆனந்த் விஜயின் கையைப் பிடித்து அழைத்து வந்தான். இத்தனை குறைவான நேரத்திற்குள், இந்த நர்ஸிங்ஹோம் சகலவிதமான சௌகரியங்களுடன் தொடங்குவதற்கு விஜயின் உழைப்புதான் காரணம் என்று எல்லோருக்கும் முன்னால் சொல்லிவிட்டு "ஐ லவ் ஹிம்" என்று அணைத்துக் கொண்டான். போட்டோ கிராபர்கள் பளிச் பளிச் என்று ப்ளாஷ்கள் மின்ன போட்டோக்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

டின்னர் முடியும்போது ஹேமா ஐஸ்க்ரீம் கப்பைக் கொண்டு வந்து விஜயிடம் கொடுத்தாள்.

"தாங்க்யூ" என்று சொன்னாள். அவன் மௌனமாக ஐஸ்க்ரீம் கப்பைப் பெற்றுக்கொண்டான்.



"விஜய்! நான்... ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்" என்றாள்.

அவன் ஹேமாவின் முகத்தில் தென்பட்டுக் கொண்டிருந்த மகிழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"நர்ஸிங்ஹோமைப் பார்க்கும்போது தோட்டத்தை இழந்த வேதனை குறைந்து விட்டதா?" ஹேமா கேட்டாள்.

"ஊஹூம்." அவன் மறுப்பதுபோல் தலையை அசைத்தான். "அதற்கு ஈடு இணை எதுவும் இருக்க முடியாது. தோட்டத்தை இழப்பதால் என் வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுமையை யாரும் தீர்த்துவிட முடியாது. காலை வேளையில் செடிகளுக்கு நடுவில் சுற்றி வரும்போது இளம் பச்சை நிறத்தில் துளிர்த்துக் கொண்டிருக்கும் இலைகளை, மொட்டுகளை, மலர்களை, காய்களை... பார்க்கும்போது கிடைக்கும் மகிழ்ச்சி எனக்கு வேறு எதிலும் கிடையாது."

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஹேமா புன்முறுவலுடன் சொன்னாள். "விஜய்! நமக்கு ஒரு விஷயத்தில் எப்பொ விருப்பம் ஏற்படும் சொல்லு? சில நாட்கள் கஷ்டப்பட்டு உயிரைக் கொடுத்து அதை முன்னுக்குக் கொண்டு வரும் போதுதானே! அதன் வளர்ச்சியைக் காணும்போது மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கை. சில நாட்கள் போனால் இந்த நர்ஸிங் ஹோமும் உனக்கு விருப்பமானதாக மாறிவிடும். இங்கே நோயாளிகளைக் குணமாக்கி அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்து தருவோம்."

அதற்குள் ஆனந்த் அங்கே வந்தான். "என்ன? என்னை தனியாக விட்டுவிட்டுப் பேசிக் கொண்டு இருக்கிறீர்களே?" என்றான்.

"விழா ஏற்பாடுகள் நன்றாக இருப்பதாக எல்லோரும் பாராட்டினார்கள். அதான் விஜய்க்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்." ஹேமா சொன்னாள்.

''ஹேமா சொல்வது உண்மைதான் விஜய்.''

''விஜய்க்கு ஸ்வீட் கொடுங்கள் ஆனந்த்'' என்றாள் ஹேமா.

ஆனந்த் ஐஸ்க்ரீமை ஸ்பூனால் எடுத்து விஜயின் வாயருகில் கொண்டு போனான். வேண்டாமென்று மறுத்துக் கொண்டே விஜய் ஓரடி பின்னால் வைத்தான். ஆனந்த் விஜயின் கழுத்தைச் சுற்றிக் கையைப் போட்டு வலுக்கட்டாயமாய் ஐஸ்க்ரீமை ஊட்டி விட்டான். பளிச் பளிச்சென்று காமெராக்கள் மின்னின.

''இந்த போட்டோ கிராபர்களுக்கு வேறு வேலையே இல்லையா? நம்மையே போட்டோ எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.'' ஆனந்த் எரிச்சலுடன் சொன்னான்.

விழா முடிந்து விட்டது. ராஜலக்ஷ்மியும், தீட்சிதரும் கிளம்பி விட்டார்கள். ஹேமா ஒவ்வொரு அறையாகச் சுற்றி வந்து கொண்டிருந்தாள்.

இத்தனை நாள் இனியதொரு கனவாய் இதயத்தினுள் மலர்ந்திருந்த மாளிகை இன்று கண்களுக்கு எதிரே நிஜமாய் வீற்றிருக்கிறது. லட்சியத்தை அடைவதற்கான பாதை அவள் கண்களுக்குத் தெளிவாகத் தென்பட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

ஹேமா ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தாள். அவளால் தன்னுடைய அதிர்ஷ்டத்தை நம்ப முடியவில்லை. தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் நோயாளிகளுக்கு அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தாள்.

'டிரஷரர்' என்று எழுதியிருந்த அறைக்குள் நுழைந்தாள். விசாலமான மேஜை. பைல்களை வைப்பதற்காக அலமாரி, பீரோ எல்லாமே இருந்தன. ஹேமா விஜய்க்காக சுழலும் நாற்காலியைத் தேர்ந்தெடுத்து வாங்கியிருந்தாள். மேஜைமீது போன், ரைட்டிங் பேட், கால்குலேட்டர் வைக்கப்பட்டிருந்தன.



ஹேமா நாற்காலியில் அமர்ந்து கொண்டு மெதுவாக அப்படியும், இப்படியுமாகச் சுழன்றாள்.

அதற்குள் வாசற் கதவு அருகில் அரவம் கேட்டது. விஜய் உள்ளே வந்தான்.

பைல்களை, விசிடர்ஸ் கையெழுத்துப் போட்ட ரிஜிஸ்டரை எடுத்து வந்த விஜய் அவற்றை மேஜைமீது வைத்தான்.

32295
4931394

''விஜய்!'' ஹேமா அழைத்தாள்.

''ஊம்.''

ஹேமா நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டாள். நாற்காலியைச் சுட்டிக் காண்பித்துக் கொண்டே, "ஒரு தடவை இந்த நாற்காலியில் உட்கார்ந்து கொள்'' என்றாள்.

விஜய் பதில் சொல்லவில்லை. பைல்களை அலமாரியில் வைத்துப் பூட்டிக் கொண்டிருந்தான்.

''ப்ளீஸ்!'' என்றாள்.

''ஊஹூம்.''

''எதனால்?''

''நான் இங்கே இருக்கப் போவதில்லை. எனக்கு வேலை கிடைத்துவிட்டது ஹேமா. பெங்களூருக்குப் போகப் போகிறேன்.''

ஹேமா வியப்புடன் பார்த்தாள்.

''நிஜமாகவா? ஆனந்த் உன்னைப் போக விடுவானா?''

''இப்பொ அந்த நிலைமை இல்லை. ஆனந்துக்கு நீங்கள் எல்லோரும் இருக்கிறீர்கள். வேண்டுமென்றால் ஆனந்த் பெங்களூருக்கு வந்து சில நாட்கள் என்னுடன் தங்கி விட்டு வருவான்.''

''ஆனந்த் சம்மதம் கொடுத்துவிட்டானா?''

''ஒரு விஷயம் நிச்சயமாக நடக்க வேண்டும் என்று நான் விரும்பினால் ஆனந்த் அதை மறுக்க மாட்டான்.''

''திடீரென்று இந்த முடிவுக்கு வர காரணம்?'' வருத்தமும், துக்கமும் ஹேமாவின் குரலில் வெளிப் பட்டன.

''என்னுடையது இல்லாத உலகத்தில் என்னால் வாழ முடியாது.''

''என்னைப் பற்றி யோசித்தாயா?''

''உன்னைப் பற்றி உன்னால் நன்றாக யோசிக்க முடியும். வாழ்க்கையில் உனக்கென்று ஒரு லட்சியம் இருக் கிறது. அதற்காகக் கடினமாக உழைப்பாய். அதைப் பற்றியே யோசிப்பாய். நர்ஸிங்ஹோம் என்பது உன் வாழ் நாளின் கனவு. அதை உன்னால் அடைய முடிந்தது.'' விஜய் பெருமூச்சு விட்டான். ''நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி ஹேமா!''

''விஜய்! நீ இந்த நர்ஸிங் ஹோமுக்கு டிரஷரர்.''

''நான் வேண்டாமென்று மறுக்கும் பொறுப்புகளை என்மீது யாராலும் திணிக்க முடியாது.''

''ஆனந்தை விட்டு விட்டுப் போகிறாயா? உன்னால் போக முடியுமா?''

''போக முடியும் என்ற தைரியம் இப்பொழுதுதான் ஏற்பட்டது. ஏன் என்றால் ஆனந்தின் வருங்கால மனைவி நீ. அவனை நிச்சயமாகப் பொறுப்பாக, கவனமாகப் பாதுகாத்துக் கொள்வாய் என்று தெரியும்.''

''நான் ஆனந்துடன் பழகுவது உன் அருகில் இருப் பதற்காகத்தான் என்று ஏற்கனவே உன்னிடம் சொல்லி யிருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன். நான் ஆனந்தைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்.''

''இந்த நர்ஸிங்ஹோம் உருவானதற்குக் காரணமே ஆனந்த்தான். சுயநலம் பிடித்த பெண்ணாக நீ இருக்க



மாட்டாய் என்று நம்புகிறேன். ஆனந்த் உன்னை விரும்பு கிறான். அவன் விருப்பத்தை மறுத்து அவன் வாழ்க்கையை வேதனை மயமாக்கி விடாதே. ஹேமா! நம்மை நம்பியவர் களை ஒரு நாளும் பின் முதுகில் கத்தியால் குத்தக் கூடாது. என்னால் நிச்சயமாக அப்படி நடந்துகொள்ள முடியாது. குட்நைட் ஹேமா. விஷ் யூ ஆல் தி பெஸ்ட்.'' விஜய் வெளி யில் வந்து விட்டான். ஒரு நிமிடம் நின்றான். மறுபடியும் உள்ளே போய் ஹேமாவிடம் ஏதாவது பேசவேண்டும் என்று தோன்றியது. உடனே கட்டுப்படுத்திக் கொண் டான். நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் நினைவுக்கு வந்ததும், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டுப் போய் விட்டான்.

ஐந்து நிமிடங்கள் கழித்து ஆனந்த் ஹேமா அறைக்கு கதவைத் திறந்துகொண்டு வந்தான். ஹேமா மேஜைமீது தலையைச் சாய்த்துக்கொண்டு, விசும்பி, விசும்பி அழுது கொண்டிருந்தாள். ஆனந்த் ஒரு நிமிடம் அப்படியே பார்த்தான். ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவன், மனதை மாற்றிக் கொண்டு மௌனமாய் அந்த அறையை விட்டு வெளியேறி விட்டான்.

## 25

''யாரு? இந்த போட்டோக்களை எடுத்தது யாரு? அப்படி கீழ்த்தரமாக எழுதியவன் யாரு? யாரந்த ஆசிரியர்? என்னைப் பற்றி என்ன நினைத்துக்கொண்டிருக்கிறான்? அவன் கையை ஒடித்துவிடுகிறேன். அவர்களைக் கொன்றால் தவிர எனக்கு அமைதி கிடைக்காது. விஜய்! விடு என்னை. வெடி குண்டுகளை வைத்து அவன் அலுவலகத்தை நாசமாக்கினால் தவிர எனக்குத் தூக்கம் வராது.'' ஆனந்த் புஸ்புஸ்வென்று மூச்சை விட்டுக்கொண்டு விஜயின் பிடியி லிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயன்று கொண் டிருந்தான். ஆனந்தை இறுக்கமாக பிடித்துக் கொண்டு அவனை அமைதிப்படுத்த விஜய் செய்து கொண்டி ருந்தான்.

மேஜை மீது ''செய்திகள்'' என்ற நாளேடு பிரித்த நிலையில் கிடந்தது. அதில் முதல் பக்கத்தில் நர்ஸிங் ஹோம் திறப்பு விழா நடந்த அன்று ஆனந்த் விஜயை அணைத்துக் கொண்டிருந்த புகைப்படம் பிரசுரமாகி இருந்தது. அதன் கீழே 'ஐ லவ் யூ'' என்று எழுதியிருந்தது. பக்கத்திலேயே பெரிய எழுத்துகளில் ''டாக்டர் ஹேமாவின் திருமணத்திற்குத் தடை! ஆனந்த் விஜயின் உடைமையா?'' என்று தலைப்பும், அதன் கீழே விரிவான செய்தியும் பிரசுரமாகியிருந்தன.

அந்த எழுத்துகளைப் பார்க்கப் பார்க்க விஜய்க்குக் கோபம் அதிகரித்துக் கொண்டிருந்தது. மனதைக் கட்டுப் படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தான்.

''அனூ! கோபப்பட்டுப் பிரயோஜனம் இல்லை. என் பேச்சை கேள். அமைதியாக இரு'' என்றான் விஜய்.

''அமைதியாக இருக்கணுமா! இந்த ஜென்மத்தில் என்னால் மறுபடியும் அமைதியாக இருக்க முடியுமா? ச்சீ... ச்சீ. இப்படி கீழ்தரமாக எழுதுவதற்கு எப்படித் தோன்றியது? விஜய்! இந்த மனிதர்களின் பொறாமைக்கு ஒரு எல்லையே இல்லையா?'' நாளேட்டில் பிரசுரமாகி யிருந்ததைச் சுட்டிக் காட்டிக் கொண்டே சொன்னான் ''இதை படித்தபிறகு என்னால் உயிரோடு இருக்க முடியுமா? நண்பனை அன்புடன் அணைத்துக்கொண்டால், இருவரும் ஹோமோக்கள் என்று எழுதி விடுவார்களா... ச்சீ... ச்சீ... இனி இந்த உலகம் என்னைச் சந்தேகமாய் பார்க்காதா? அந்தப் பார்வையை என்னால் தாங்க முடியுமா? என்னால் தெருவில் பழையபடி நடமாட முடியுமா? நண்பர்களுக்கு என் முகம் காண்பிக்க முடியுமா?

யாரு விஜய்? இப்படி செய்தது யாரு? நம் இருவர் மீது இந்த அளவுக்குத் துவேஷம் யாருக்கு இருக்க முடியும்? நம்முடைய நட்பை இப்படிக் கொலை செய்ய முயற்சி செய்தது யாரு?''



''ஆனந்த்! நம்மைப் பிடிக்காதவர்கள்... யாரோ ஏதோ உளறினால் என்ன ஆகிவிடும்? வேலை வெட்டி இல்லாத வர்கள், மனநிலை வக்கரித்துப் போனவர்கள் அல்பத்தன மாய் மகிழ்ச்சியைத் தேடிக் கொண்டால் நாம் என்ன செய்யமுடியும்? வாழ்க்கையில் திடமான மனத்துடன் செயல் பட வேண்டிய நேரம் இது. என் பேச்சை கேள்...'' விஜய் நயமாகச் சொல்லிக்கொண்டே ஆனந்தின் தோளில் கையைப் பதிக்கப் போனான்.

எப்போதும் இல்லாத விதமாக ஆனந்த் விஜயின் கைகளை, யாராவது பார்த்து விடுவார்களோ என்று பயந்து விட்டதுபோல் தள்ளி விட்டான். ''வேண்டாம் விஜய். என்னைத் தொடாதே. என் மனதை இவர்கள் களங்கப்படுத்தி விட்டார்கள். உன்னுடைய ஸ்பரிசம் எனக்கு விஷம்போல் தோன்றுகிறது. நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன்? எதற்காக என்மீது இப்படி சேற்றை வாரி இறைத்திருக்கிறார்கள். என்னை உயிருக்கு மேலாகப் பார்த்துக் கொள்ளும் உன்னை நடுத்தெருவுக்கு இழுத்திருக் கிறார்கள். என்னால் இனி உயிரோடு இருக்க முடியாது. நேற்று ஹேமா சொன்ன செய்தியிலேயே எனக்குப் பாதி உயிர் போய் விட்டது.'' ஆனந்த் கட்டில் மீது விழுந்து தலையணையில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தான். அந்தக் அழுகையில் அவனுடைய இயலாமை, வேதனை வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

விஜய் அவனைச் சமாதானப்படுத்துவதற்காக அருகில் சென்று ''அனூ!'' என்று தலைமீது கையை வைத்தான். ஆனந்த் அந்த கையைத் தள்ளி விட்டான். சட்டென்று கட்டில்மீது ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டு, ''என்னிடம் இனி எதுவும் சொல்லாதே. சாவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. அப்பொழுதுதான் இந்தப் பழி என்னைவிட்டு விலகும்.'' ஆனந்தின் அழுகை மடை திறந்த வெள்ளமாய் பொங்கி வந்தது.

தீட்சிதர் அந்த அறையிலேயே நாற்காலியில் அமர்ந் திருந்தார்.

இரத்தம் முழுவதும் வற்றி விட்டதுபோல் அவர் முகம் வெளிறிப்போய் இருந்தது. அவர் கையில் ந்யூஸ் பேப்பர் இருந்தது. அதில் ஆனந்த் விஜயை அணைத்துக் கொண் டிருக்கும் போட்டோ, சின்ன வயதில் எப்போதோ விஜயின் மடியில் ஆனந்த் தலையை வைத்துக் கொண்டு படுத் திருக்கும் போட்டோ பிரசுரமாகி இருந்தன.

''இது நிச்சயமாக அந்த ஹரியின் வேலைதான். அவன் தான் நம் வீட்டு ஆல்பத்திலிருந்து இந்த போட்டோவைத் திருடியிருப்பான். அவனைத் தவிர வேறு யாருக்கும் வாய்ப்பு இல்லை. துணிச்சலும் இருக்காது. ஆனந்த்! நான் அப்போதே நினைத்துக் கொண்டேன். விஜய் விஷயத்தில் நீ ஹரியை நிறைய தடவை அவமானப்படுத்தி இருக்கிறாய். நர்ஸிங்ஹோம் மானேஜ்மெண்ட் கமிட்டியில் அவன் பெயர் இல்லாமல் செய்துவிட்டாய். ஹரி ஏதோ விதமாய் உன் மீது பழி தீர்த்துக் கொள்வான் என்று நினைத்தேன். ஆனால் இப்படி செய்வான் என்று நினைக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் நீதான். நீ ஹரியை நம்முடன் இருக்க விட்டிருந்தால் இந்தப் பிரச்னையே வந்திருக்காது. இப்பொ விஷயம் எந்த அளவுக்குப் போய் விட்டது பார்...'' தலையில் அடித்துக் கொண்டே சொன்னார் தீட்சிதர்.

தலையணையில் முகம் புதைத்து அழுது கொண் டிருந்த ஆனந்த் சட்டென்று தலையை உயர்த்தி அவர் பக்கம் பார்த்தான். அடுத்த நிமிடம் தலையணையை இரு கைகளாலும் எடுத்து தரையில் வீசி எறிந்தான். கீழே குதித்து ஒரே எட்டில் தீட்சிதர் அருகில் வந்தான்.

''தாத்தா! இதற்கெல்லாம் காரணம் நீதான். நீயே தான். விஜய் மீது இருக்கும் பகைமையினால் ஹரிக்கு ஆதரவு கொடுத்தாய். வீட்டு அதிகாரம் முழுவதும்



அவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நினைத்தாய். அவனை இரையாகப் பயன்படுத்தி விஜய் மீது பழியைத் தீர்த்துக் கொள்ளப் பார்த்தாய். ஆனால் உன் இலக்கு தவறிவிட்டது. அவன் என்னைப் பழி வாங்கிவிட்டான். என் வாழ்க்கையை நாசமாக்கி விட்டான். இதற்கெல்லாம் நீதான் காரணம். சின்ன வயதில் கொள்ளிக் கட்டையால் உன் முதுகை சுட்டேன். அன்றே உன் தலைக்குக் கொள்ளி வைத்திருக்க வேண்டும். என்னைப் பிடித்த சனி நீதான்.''

ஆனந்தின் கைகளுக்கு மிருகபலம் வந்து விட்டது. கண்கள் நெருப்பை உமிழ்ந்தன. ''விஜயிடமிருந்து ரகசியத்தை மறைத்து வைத்து துரோகம் செய்துவிட்டாய். அது எனக்கு நீ செய்த துரோகம். உன்னைக் கொன்றால் தான் என் மனதுக்கு அமைதி கிடைக்கும்.'' ஆனந்த் இரு கைகளால் தீட்சிதரின் கழுத்தை நெறித்துக் கொண்டு இருந்தான். விழிகள் பிதுங்க தீட்சிதர் துடித்துக் கொண் டிருந்தார். விஜய் சட்டென்று இருவரையும் பிரித்தான்.

''நீங்க இங்கிருந்து போய்விடுங்கள்.'' தீட்சிதரிடம் சொன்னான் விஜய்.

''அசல் இதற்கெல்லாம் காரணகர்த்தா நீதான்.'' தீட்சிதர் விஜய்மீது எரிந்து விழுந்தார்.

''வாயை மூடு கிழப்பிணமே!'' ஆனந்த் கத்திக் கொண்டே முழுங்காலை உயர்த்தி தீட்சிதரின் வயிற்றில் உதை கொடுக்கப் போனபோது விஜய் ஆனந்தின் இடுப்பைச் சுற்றிலும் கையைப் போட்டு பக்கத்தில் இழுத்தான்.

''அந்தக் கிழவனை இப்போதே கொன்று விடுகிறேன்'' என்று கத்திக் கொண்டிருந்த ஆனந்தை விஜய் கட்டில் பக்கம் வலுக்கட்டாயமாய் இழுத்துக் கொண்டு போனான்.

''நடுவில் நான் என்ன செய்து விட்டேன்?'' தீட்சிதரும் கோபமாய் கத்தினார்.

''நீங்க முதலில் அறையை விட்டு வெளியில் போய் விடுங்கள்.'' விஜய் உரத்த குரலில் சொன்னான்.

''போகாதே... நில்லு!'' ஆனந்த் விஜயின் கையிலிருந்து விடுவித்துக் கொள்ள துடித்துக் கொண்டிருந்தான். பேரனின் ஆவேசத்தைப் பார்க்கும்போது தீட்சிதருக்குப் பயமாக இருந்தது. அறையவிட்டு வெளியேறினார்.

ஆனந்த் விஜயின் பிடியிலிருந்து விடுபட்டு ஒரே எட்டில் தீட்சிதரைத் தொடர்ந்து வாசற்கதவை நோக்கி ஓடப் போனான். ஆனால் விஜய் ஒரே பாய்ச்சலில் ஆனந்த் அருகில் சென்று பிடித்துக் கொண்டான்.

''விடு... விடு என்னை...'' ஆனந்த் வெறிபிடித்த வனைப்போல் கத்திக் கொண்டிருந்தான். அவனைக் கட்டுப் படுத்த முடியவில்லை. விஜய் கையை நீட்டி ஆனந்தின் கன்னத்தில் இழுத்து ஒரு அறைவிட்டான்.

அதிர்ச்சி அடைந்ததுபோல் ஆனந்த் நின்று விட்டான். மூளை மரத்து விட்டதுபோல் சிலையாகி விட்டான்.

''விஜய்! நீ... நீதானா என்னை அடித்தது?'' சுட்டு விரலை உயர்த்திக் காண்பித்துக் கொண்டே நம்ப முடியாதவன்போல் கேட்டான்.

''அனூ! வெறிபிடித்தவனைப் போல் நடந்து கொள் கிறாய். ஐயாம் சாரி.'' விஜய் அருகில் போகப் போனான்.

ஆனந்த் பின்னால் ஒரு அடி வைத்தான். அவன் கண்களில் விஜய் இதுவரை பார்த்திராத நம்பிக்கை யின்மை, வெறுப்பு தென்பட்டன. அதைப் பார்க்கும்போது விஜய்க்கு யாரோ கத்தியால் குத்தியதுபோல் வேதனை ஏற்பட்டது. விஜய் கண்களில் நீர் சுழன்றது. அவனுக்குப் புரிந்து விட்டது. அந்தப் பேப்பரில் வெளியாகியிருந்த போட்டோக்கள், கீழ் தரமான செய்திகளால் ஆனந்த் நிலைகுலைந்து விட்டான். அவனால் இந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.



''அனூ! உனக்கு சுய உணர்வு வருவதற்காகத்தான் உன்னை அடித்தேன். அதைவிட வேறு எதுவும் இல்லை.'' விஜய் நயமாக எடுத்துச் சொல்ல முயன்றான்.

''என் அருகில் வராதே விஜய். நீ என்னைவிட பலசாலி என்று எனக்குத் தெரியும். உனக்கு இப்போதே எச்சரிக் கிறேன். நீ... நீ... என்னைக் கையை நீட்டி அடிப்பாயா... நீ என்னுடைய நண்பன்தானா... இல்லவே இல்லை.''

''அனூ! ப்ளீஸ்.''

''நிறுத்து. அந்தப் பெயருடன் என்னை அழைக்காதே. அந்த அனூ செத்துப் போய்விட்டான்.'' ஆனந்த் கையில் மேஜை மீது இருந்த கண்ணாடி தம்ளர், சற்று முன் மருந்து சாப்பிடுவதற்காக எடுத்து வந்தது, தட்டுப்பட்டது. அவன் அதை எடுத்துக் கொண்டான்.

''இனிமேல் நான் உன்னுடைய நண்பன் இல்லை... இல்லை...''

''அனூ! அப்படிச் சொல்லாதே. உன்னைவிட வேறு யாரும் எனக்கு முக்கியம் இல்லை.''

''பொய்!'' ஆனந்த் கத்தினான். கையிலிருந்த கண்ணாடித் தம்ளரை வேகமாக மேஜையின் விளிம்பில் மோதினான். சிலிங் என்ற சத்தத்துடன் தம்ளர் உடைந்து, கீழே கண்ணாடி துண்டுகள் சிதறின.

ஆனந்தின் நடவடிக்கை விஜய்க்குக் கலவரத்தை ஏற்படுத்தியது. வேதனையும், கோபமும் அவனைச் சுழல் காற்றுபோல் சூழ்ந்திருந்தன. நல்லது கெட்டது யோசிக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. அது போன்ற நேரத்தில் அவன் எப்படி நடந்து கொள்வான் என்றுயாராலும் சொல்ல முடியாது.

விஜய் ஆனந்தின் அருகில் போக முயன்றான்.

''விஜய்! அருகில் வந்தால்... உன்னைக் கொன்று விடுவேன்.'' கையில் பா உடைந்த கண்ணாடித் தம்ளரைக் காண்பித்துக் கொண்டே சொன்னான்.

''அனூ! அதைக் கீழே போட்டு விடு. உனக்கு மூளை கலங்கி விட்டதா?'' விஜய் பற்களை அழுத்தி, வலுக் கட்டாயமாய் வரவழைத்துக் கொண்ட அமைதியுடன் கேட்டான்.

''ஆமாம். மூளை கலங்கி விட்டது. இன்று இல்லை. ஒரு மாதம் முன்பே. விஜய்! தாத்தாதான் என்னை ஏமாற்றி இருக்கிறார் என்று நினைத்தேன். நீ கூட என்னை ஏமாற்றி விட்டாய்.'' ஆனந்தின் இதழ்களில் விரக்தியான புன்முறுவல் ஒன்று நெளிந்தது.'' என் வாழ்க்கையில் முக்கியமானவர்கள், என்னைச் சேர்ந்தவர்கள் என்று உங்க இருவரையும் நம்பினேன்... நீங்க இருவரும் என்னை ஏமாற்றி விட்டீர்கள். என்னை முட்டாளாக்கினீர்கள். ச்சீ... ச்சீ... இந்த உலகில் நியாயமே இல்லை. எல்லோருமே சுயநலம் பிடித்தவர்கள்தான், எவ்வளவு மோசம்! விஜய்... நீ கூட சுயநலம் பிடித்தவன்தான். நம்பியவர்களை எதற்காக இப்படி ஏமாற்றுகிறீர்கள்? உங்களுக்கு மனச் சாட்சியே இல்லையா? மனதில் ஒன்று வைத்துக் கொண்டு வெளியில் ஒன்று பேசுபவர்களைக் கண்டால் எனக்கு வெறுப்பு. மனித உறவுகள் இவ்வளவு குழப்பமாய் இருப்பானேன்? நேர்மை, நல்லதனம் இவை இரண்டு இருந்தால் சக மனிதனுடன் எவ்வளவு சந்தோஷமாக வாழ்க்கை நடத்த முடியும்? மனித உறவுகள் இவ்வளவு பலவீனமாய் இருப்பதற்குக் காரணம் யாரு? எதிராளியை ஏமாற்றுவதால் உங்களுக்குக் கிடைக்கும் லாபம்தான் என்ன? முழுவதுமாக நம்பியவர்களை ஏமாற்றும்போது உங்களுக்கு எப்படி இருக்கும்? என்ன விஜய்? எப்படி இருக்குமென்று நீயாவது சொல்லேன்.'' ஆனந்த் புருவங்களை உயர்த்தி இரட்டிப்பதுபோல் கேட்டான். ''எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? பாவப்பட்ட இந்த உலகில் நான் எதற்காக வாழவேண்டும்? என்னை ஏமாற்றியவர்களுடன் எதற்காக இருக்க வேண்டும்? என்னால் பழைய ஆனந்தாக உங்களுடன் பழக முடியாது.''



ஆனந்த் திடீரென்று உடைந்த கண்ணாடி தம்ளரால் வயிற்றில் பலமாகக் குத்திக் கொண்டான். ஆபத்தை உணர்ந்து விஜய் அருகில் வந்து தடுப்பதற்குள் நாலைந்து முறை குத்திக் கொண்டுவிட்டான். விஜய் பலவந்தமாய் அவன் கையிலிருந்து உடைந்த கண்ணாடி தம்ளரைப் பிடுங்கி எறிந்தான். கண்ணாடித் துண்டு கீறியதில் விஜயின் கையிலிருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது.

ஆனந்தின் உடைகளை நனைத்துக் கொண்டே இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது.

''விஜய்! ஹேமா என்றால் உனக்குப் பிடிக்கும் என்று ஏன் என்னிடம் சொல்லவில்லை? என்னை எதற்காக ஏமாற்றினாய்? உனக்கு விருப்பமானதை நான் என்றாவது மறுத்திருக்கிறேனா? அதுதான் எனக்கும் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருக்கிறேனா?'' ஆனந்த் கேட்டான்.

விஜய் இதழ்களை இறுக்கித் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

''தாத்தா உன்னுடைய சொத்துக்குச் சம்பந்தப்பட்ட கேஸில் ஜெயித்து எல்லாம் என்னுடையதுதான் என்று சொல்லி என்னைப் பணக்காரனாக்கினார். ஹேமா என்னை நிற்க வைத்துச் கேள்வி கேட்டாள். என்னால் பதில் சொல்ல முடியவில்லை. நான் உன்னை ஏமாற்ற வில்லை. என்னை நம்பு விஜய்.''

''அனூ!'' விஜய் ஆனந்தைத் தூக்கி தோளில் சாய்த்துக் கொண்டான்.

ஆம்புலென்ஸை அனுப்பச் சொல்லி ஹேமாவுக்கு போன் செய்தான்.

## 26

முப்பத்தி ஆறு மணி நேரமாய் சாவுடன் போராடிக் கொண்டிருந்த ஆனந்தின் உயிரைக் காப்பாற்றுவதற்காக

ஹேமா தீவிரமாய் முயற்சி செய்து கொண்டிருந்தாள். அன்று விஜய் போன் செய்ததும் ஹேமா அம்புலென்ஸுடன் இன்னொரு டாக்டரையும் அழைத்துக் கொண்டு வந்தாள். உடனே முதலுதவியை அளித்துவிட்டு, நர்ஸிங் ஹோமில் சேர்த்தாள். முப்பத்தாறு மணி நேரமாய் ஹேமா கொஞ்சம்கூடத் தூங்காமல் ராப்பகலாய் ஆனந்தைக் கண்காணித்துக் கொண்டிருந்தாள். அனுபவம் மிகுந்த டாக்டர் வந்து சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார்கள். இருபத்து நான்கு மணி நேரம் தாண்டினால்தான் சொல்ல முடியும் என்று டாக்டர்கள் தெரிவித்தார்கள். ஒருநாள் முடிந்த பிறகும் ஆனந்தின் நிலைமையில் முன்னேற்றம் தெரியவில்லை, மேலும் மோசமாகிக் கொண்டு வந்தது.

அழுது கொண்டிருந்த தீட்சிதரை ராஜலக்ஷ்மி தேற்றிக் கொண்டிருந்தாள். வலுக்கட்டாயமாய் அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போனாள். விஜய் மட்டும் ஆனந்தின் கட்டிலைவிட்டு நகரவே இல்லை. செதுக்கி வைத்த சிலையைப்போல் அப்படியே உட்கார்ந்திருந்தான். ஹேமாவுக்கு அவன் முகத்தில் ஒரே ஒரு உணர்வுதான் தென்பட்டது. வேதனை!

ஆனந்தை ஆஸ்பத்திரியில் சேர்க்கும்போது அவனுக்கு லேசாக நினைவு இருந்தது. விஜயின் கையை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான். ''விஜய்! என்னை விட்டுப் போகாதே. போக மாட்டாய் இல்லையா?'' பலவீனமான குரலில் வேண்டுகோள் விடுப்பதுபோல் கேட்டான். அவன் கண்களில் வேதனை பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

மளுக்கென்று கண்களிலிருந்து வெளியேறப் போன கண்ணீரை விஜய் கட்டுப் படுத்திக் கொண்டான். சுற்றிலும் டாக்டர்கள், தீட்சிதர், ஹேமா, ராஜலக்ஷ்மி, ஹரிச்சந்திரா எல்லோரும் இருந்தார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே விஜய் குனிந்து ஆனந்தின் நெற்றி மீது முத்தம் பதித்தான். அமைதி அடைந்து விட்டதுபோல் ஆனந்தின் முகம் தெளிவாகி



விட்டது. விஜயின் கையைப் பற்றிக் கொண்டு கன்னத்தில் வைத்துக் கொண்டே சொன்னான். ''என் ஆருயிர் நண்பன் நீதான் விஜய். நான்... நான் இறந்து போனால் நீதான் எனக்குக் கொள்ளி வைக்க வேண்டும். தாத்தா வேண்டாம். இது என்னுடைய கடைசி விருப்பம்.''

விஜய் சட்டென்று ஆனந்தின் வாயைப் பொத்தினான். ''அனூ! அதிகமாகப் பேசாதே. ஓய்வு எடுத்துக் கொள். ரிலாக்ஸ்ட் ஆக இரு. நல்ல பையன் இல்லையா...சொன்ன பேச்சைக் கேள்.'' விஜயின் குரல் மந்திரஸ்தாயில், நயமாக ஒலித்தது.

ஆனந்த் விஜயின் கையை மேலும் பலமாகப் பற்றிக் கொண்டான். ''ஹாஸ்பிடலுக்கு வருவது இதுதான் கடைசி தடவை. இனி உனக்குக் கஷ்டத்தைத் தர மாட்டேன்.''

டாக்டர்கள் கொடுத்த இஞ்செக்ஷனால் ஆனந்துக்கு நினைவு தப்பி விட்டது. ஆனந்தை இன்டென்ஸிவ்கேர் யூனிட்டில் வைத்த பிறகு ஒவ்வொரு நிமிடமும் விஜயின் மனம் எரிமலையைப்போல் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

நள்ளிரவு தாண்டிவிட்டது.

ஆனந்த் நினைவு இல்லாமல் கட்டிலில் கிடந்தான். விஜய் பக்கத்து நாற்காலியில் அமர்ந்து கொண்டு, ஆனந்தின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தான். கடந்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் அவன் ஒரு நிமிடம்கூட அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. ஹேமா ஆனந்தைப் பரிசோதனை செய்ய வந்தாள். காயத்திற்குப் புதிதாகக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தாள். விஜய் தலையை உயர்த்தி ஹேமாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஹேமா வேலையை முடித்து விட்டு சட்டென்று அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டாள். பத்து நிமிடங்கள் கழித்து ஆனந்தை ஆபரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் சென்றார்கள்.

ஒரு மணி நேரம் கழித்து ஹேமா வெளியில் வந்தாள்.

விஜய் அதே இடத்தில் நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

''குட் நைட் ஹேமா'' ஆபரேஷன் செய்வதற்காக வந்திருந்த ஸ்பெஷலிஸ்ட் கிளம்பினார்.

''குட் நைட் திவாகர்.'' ஹேமா அவரை வாசல்வரை சென்று விடை கொடுத்து விட்டுத் திரும்பி வந்தாள்.

''விஜய்... இப்படி வா... ஒரு நிமிஷம்.'' தன்னுடைய அறைக்குள் நுழைந்தாள்.

விஜய் ஹேமாவைப் பின்பற்றி அவளுடைய அறைக்குள் சென்றான்.

''உட்கார்ந்து கொள்'' என்றாள்

விஜய் உட்காரவில்லை.

''உட்கார்ந்து கொள் விஜய்.''

விஜய் உட்கார்ந்து கொண்டான்.

ஹேமா அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். விஜய் ஹேமாவின் கண்களுக்குள் எதையோ தேடுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆனந்த் பிழைத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் ரொம்ப குறைவு. அவனுக்குப்பட்ட காயங்கள் ரொம்ப ஆழமானவை என்பதோடு அவன் ஏற்கனவே பயன்படுத்தி வந்த ட்ரக்ஸினால் நிறைய காம்ளிகேஷன்ஸ் வந்துவிட்டன. மருந்துகளுக்கு அவனுடைய உடல் சரியாக ரெஸ்பாண்ஸ் செய்யவில்லை. இன்று தாண்டுவது கஷ்டம் என்று டாக்டர் திவாகர் சொன்னார்.''

விஜய் நாற்காலியிலிருந்து எழுந்து ஜன்னல் அருகில் சென்று நின்று கொண்டான்.

''விஜய்!'' மென்மையான குரலில் அழைத்தாள்.

அவன் பேசவில்லை. பின்பக்கமாய் கட்டியிருந்த அவன் கைப்பிடிகள் இறுகின.

''விஜய்... இந்தச் சமயத்தில்தான் நீ தைரியமாக இருக்க வேண்டும்'' என்றாள்.



விஜய் அருகில் சென்று அவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டுமென்று ஹேமாவின் மனம் துடித்துக் கொண்டிருந்தது. அவனுடைய மனநிலையை, உணர்வுகளை ஹேமாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் விஜய் முகத்தில் தென்பட்ட கம்பீரம் அவனை யாரும் நெருங்க விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது. அந்தத் தனிமையை அவன் மட்டும்தான் அனுபவிக்க வேண்டும். யாரும் அவனுக்குத் துணையாக இருக்க முடியாது.

''விஜய்!'' அழைத்தாள்.

விஜய் இந்தப் பக்கம் திரும்பினான். அவன் கண்கள் வேதனையைத் தனிமையைப் பிரதிபலித்தன. ஹேமாவின் கண்களுக்குள் ஆழமாய் பார்த்துவிட்டுப் பிறகு தாழ்வான குரலில் கேட்டான்.

''ஹேமா! நான் உன்னை விரும்புகிறேன் என்று ஆனந்திடம் சொன்னது யாரு?''

ஹேமாவின் பார்வை தாழ்ந்து விட்டது.

அவன் பதிலுக்காக காத்திருந்தான்.

அந்த நிமிடம் ஹேமாவுக்கு ரொம்ப பயமாகஇருந்தது. விஜய் தனக்குக் கிடைப்பதும், கிடைக்காமல் போவதும் தான் அளிக்கப் போகும் பதிலில்தான் இருக்கிறது என்று புரிந்து விட்டது.

''சொல்லு ஹேமா!'' நாமிருவரும் ஒருவரை ஒருவர் நேசித்த விஷயம் நம் இருவரை தவிர வேறு யாருக்கும் தெரியாது.'' ஹேமாவைத் தலை முதல் கால்வரை பரிசீலித்துக் கொண்டே கேட்டான்.

''விஜய்!'' ஹேமா தலையை உயர்த்திப் பார்த்தாள். அவளுக்குத் தைரியம் வந்துவிட்டது. அவன் மீது அவளுக்கு இருந்த நேர்மையான காதல் பதில் சொல்லும் துணிச்சலை அவளுக்குத் தந்தது.

''ஆமாம் விஜய். நான்தான் சொன்னேன்.''

''இந்த பிரஸ்தாபனை வர வேண்டிய அவசியம் என்ன வந்தது?''

''சொல்கிறேன் விஜய். இதைவிட ஆனந்த் அதிர்ச்சி அடைந்த விஷயம் வேறு ஒன்று இருக்கிறது. லாயர் ஹரிச்சந்திரா சகோதரியின் மருமகள், கிழவி ஒருத்தியை க்ளயிண்டாக அழைத்து வந்தாள். தீட்சிதர் தனக்கு மாதா மாதம் அனுப்ப வேண்டிய பணத்தை ஐந்தாறு வருடங்களாய் அனுப்பவில்லை என்றும், அவர்மீது வழக்கு போட வேண்டுமென்றும் சொன்னாள். தீட்சிதரின் பெயரைக் கேட்டதும் ஹரிச்சந்திராவுக்கு அந்தக் கேஸில் ஆர்வம் வந்தது. தீட்சிதர் எதற்காக அவளுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று தூண்டி துருவி விசாரித்தார். உண்மை விஷயம் வெளியில் வந்தது. அந்த க்ளயிண்டின் பெயர் அனுசூயா. உன் தாத்தாவுக்குச் சகோதரி. உன் அப்பாவின் சொந்த அத்தை. உங்க தாத்தாவுக்கு உன் அப்பா ஒரே மகன். தாத்தாவை எதிர்த்து உன் அம்மாவைக் காதல் திருமணம் செய்து கொண்டார். அந்தக் கோபத்தில் அவர் மகனை வீட்டுக்குள் அனுமதிக்கவில்லை. மகனுடன் எந்த உறவும் வைத்துக் கொள்ளவும் இல்லை. நீ பிறந்த பிறகு உன்னுடைய அப்பாவும், அம்மாவும் உன்னைக் கொண்டு போய் தாத்தாவிடம் காட்டினார்களாம். அப்படியும் அவருடைய மனம் மாறவில்லை. ஆனால் போகப் போக அவர் மனம் இளகிவிட்டது. உங்கள் வீட்டுக்கு வரவில்லை என்றாலும் உனக்காகப் பொம்மைகளை, உடைகளை அனுப்பி வைத்தாராம். அனுசூயாம்மாதான் கொண்டு வந்து தருவார்களாம்.

உன்னுடைய அப்பா விபத்து ஒன்றில் இறந்து போய் விட்டார். மருமகளையும் பேரனையும் அழைத்துப் போக உன் தாத்தா வந்தபோது உன்னுடைய அம்மா ரோஷத்தினால் மறுத்து விட்டாள். பிறகு நோய்வாய்ப்பட்டு தாத்தா இறந்து போகும்முன், சொத்து முழுவதும் உனக்குச் சேர வேண்டுமென்றும், மாதம் இருநூறு ரூபாய் அனுசூயாவுக்கு அவள் உயிருடன் இருக்கும் வரை தரவேண்டுமென்று



உயிலை எழுதி இருந்தாராம். தாத்தாவுக்குத் தம்பி ஒருத்தர் இருந்திருக்கிறார். அவருடைய மகன்தான் அந்த சொத்துக்கு உண்மையான வாரிசு என்று கோர்டில் கேஸ் போட்டாராம். அதையா தீட்சிதருக்கு தூரத்து உறவு. உன் அம்மா இறந்து போன பிறகு அனசூயாவுடன் அந்த உறவினரின் வீட்டில்தான் தங்கியிருந்திருக்கிறாய். உனக்கும் நினைவு இருந்திருக்க வேண்டும். தீட்சிதர் ஏதோ வேலையாய் அந்த உறவினர் வீட்டுக்குப் போன போது அனுசூயா தனக்கு வந்த கஷ்டத்தை அவரிடம் சொல்லி அழுதாளாம். தாத்தாவின் உயிலை அவர் கையில் கொடுத்துவிட்டுக் கேஸ் விவரங்களையும் சொல்லியிருக்கிறாள். தீட்சிதர் அவளுக்கு மாதா மாதம் இருநூறு ரூபாய் அனுப்புவதாகச் சொல்லிவிட்டு உன்னைத் தன்னுடன் அழைத்துப் போனாராம். பிறகு நல்ல லாயரை அமர்த்தி உன் கேஸை ஜெயித்து விட்டார். சொத்து முழுவதும் உனக்கு வந்து விட்டது. பிறகு தீட்சிதர் ஊரில் இருந்த வீட்டை விற்றுவிட்டு, அந்தப் பணத்துடன் இங்கே பெரிய வீடாகக் கட்டிக் கொண்டார். தோட்டம், நிலம் எல்லாம் வாங்கினார். உன் தாயாரின் நகைகளை விற்றுவிட்டு அந்தப் பணத்தை ஆனந்த் பெயரில் வங்கியில் போட்டு வைத்தார். ரொம்ப நாள் வரை அனுசூயாவுக்கு மாதம் இருநூறு ரூபாயை அனுப்பி வந்தவர் பிறகு நிறுத்தி விட்டார். அனுசூயாவிடம் உன் பெற்றோரின் திருமண போட்டோவுடன், நீயும் உன் அம்மாவும் சேர்ந்து இருக்கும் போட்டோவும் இருக்கிறது.

முக்கியமான விஷயம் பேசவேண்டும், உடனே வரச் சொல்லி ஹரிச்சந்திரா அம்மாவுக்கு போன் செய்தார். அம்மாவை இறக்கிவிட நானும் போனேன். நானும் அம்மாவும் கிளம்பும்போது யதேச்சையாக ஆனந்த் வந்தான். மூவருமாய் ஹரிச்சந்திரா வீட்டுக்குப் போனோம். ஹரிச்சந்திரா மூன்று பேரையும் ஒன்றாக உட்காரவைத்து எல்லா விவரங்களையும் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளையும் காண்பித்தார். இந்தச் சொத்து

முழுவதும் உன்னுடையது. உன் சொத்தை விற்று அந்தப் பணத்திலேயே தோட்டம், நிலம் வாங்கி, உன் உழைப்பி னால் அதைப் பத்து மடங்காக்கி விட்டார் தீட்சிதர். ஆனந்தை ஒரு ராஜாவாக, உன்னை வேலைக்காரனுக்குச் சமமாய் வளர்த்தார். ஹரிச்சந்திரா ஆனந்திடம் எல்லா வற்றையும் சொல்லி விட்டார். அதுவே அவனுக்கு அதிர்ச்சி யாக இருந்தது. பிறகு நர்ஸிங்ஹோம் திறப்பு விழா அன்று நாமிருவரும் உன் அறையில் பேசிக் கொண்டதை ஆனந்த் கேட்டானாம். பிறகு அம்மாவை வங்கியில் இறக்கிவிட்டு வீட்டுக்கு வரும்போது ஆனந்த் என்னிடம் கேட்டான். ''ஹேமா! நீ படித்தவள். டாக்டராக இருக்கிறாய். சராசரி பெண்ணைப் போல் கோழையாய் பெரியவர்களின் விருப்பத் திற்கு எதற்காகத் தலைவணங்குகிறாய்?'' என்று நேராகக் கேட்டு விட்டான்.

''நான் பெரியவர்களுக்குத் தலைவணங்கவில்லை. விஜய் முன்னால் தலைவணங்கினேன். தான் திருமணம் செய்துகொண்டால் உன்னிடம் இப்பொ இருக்கும் சுதந்திரம் இருக்காதோ என்று விஜய் நினைக்கிறான். மனைவியாக வருபவள் புதிதாகப் பிரச்னைகளை உருவாக்கக் கூடும் என்று பயப்படுகிறான். விஜய்க்கு என்னை ரொம்ப பிடிக்கும். அப்படியிருந்தும் அவன் திருமணத்திற்குச் சம்மதிக்கவில்லை. நான் உனக்கு மனைவி யாக வேண்டும் என்று விரும்புகிறான். அதான் அவன் வாயைத் திறக்கவில்லை. என்னையும் திறக்க அனுமதிக்க வில்லை. அவனுக்கு மிகவும் விருப்பமான தோட்டத்தை விற்று நர்ஸிங் ஹோமாக மாற்றுவதற்குக்கூட சம்மதித்து விட்டான். எல்லாம் உனக்காகத்தான் ஆனந்த். என்னால் உன்னைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று அம்மாவிடம் நான் எத்தனையோ முறை சொல்லி விட்டேன். அம்மா என்னுடைய விருப்பத்தைப் பொருட் படுத்த மறுக்கிறாள். இந்த சமுதாயத்தில் முதலில் பணம், அந்தஸ்து இவற்றுக்குத்தான் மதிப்பு கொடுக்க வேண்டும்



என்றும், பிறகுதான் சுயவிருப்பு வெறுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அம்மா சொல் கிறாள். ஆனந்த்! விஜய்க்கு நடந்த அநியாயம் சாதாரண மானதா! உன் தாத்தா அவனுடைய சொத்தை அபகரித்து விட்டு நாதியற்றவனாக அவனை உங்கள் வீட்டில் வளர்த் தார்.' என்று சொன்னேன்.

ஆவேசமடைந்த நிலையில் நான் ஆனந்திடம் சற்று கோபமாகம் பேசியது உண்மைதான். அந்த நிமிடமே நேராக தீட்சிதரிடம் போய் அவரை உண்டு இல்லை யென்று கேட்டுவிட வேண்டுமென்றுகூடத் தோன்றியது. ஆனால் உன்னைப் பற்றிய நினைவு வந்ததும் பின்வாங்கி னேன். அது மட்டுமே இல்லை. ஆனந்தையும் மிரட்டி னேன். நீ இப்பொ போய் உன் தாத்தாவிடம் இதைப் பற்றிக் கேட்டு ரகளை செய்தாயோ... அதன் பாதிப்பு விஜய் மீது கட்டாயம் இருக்கும். நர்ஸிங் ஹோம் இல்லை என்றாகிவிடும். ஆனந்த்! விஜயை நான் திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. இந்த நர்ஸிங் ஹோம் மூலமாய் அவனுக்கு அருகில் இருக்கும் வாய்ப்பைக் கெடுத்து விடாதே. நீயும், உன் தாத்தாவும் இப்போதாவது விஜயை நிம்மதியாக வாழவிடுங்கள். அதுவே போதும்'' என்றேன்.

ஆனந்த் கற்சிலையாகி விட்டான்.

''என்னை மன்னித்து விடு ஆனந்த். இந்தப் பெரிய வர்கள் என் பேச்சை பொருட்படுத்த மறுக்கிறார்கள். விஜயும் வாயைத் திறந்து எதையும் சொல்ல மாட்டேன் என்கிறான். நம் இருவரின் திருமணம் நடைபெறக் கூடாது என்றால் இந்த விஷயங்களை உன்னிடம் சொல்லிவிடுவது ஒன்றுதான் வழி என்று தோன்றியது. என்ன செய் வாயோ... எப்படிச் செய்வாயோ உன் இஷ்டம். எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது.'' கைகளை ஜோடித்துக் கொண்டே சொன்னேன்.

ஆனந்த் என் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

நீர் நிறைந்த விழிகளுடன் ''ஹேமா... எனக்கு மிகவும் விருப்பமான நீங்க இருவரும் என் காரணமாகத் தனித் தனியாக இருக்கவிட மாட்டேன். அப்படி நடந்தால் எனக்கு நரகத்தில்கூட இடம் கிடைக்காது'' என்றான்.

''பைத்தியக்காரத்தனமாய் யோசிக்காதே ஆனந்த். உன்மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லை. நடந்த வற்றில் உன் பொறுப்பு கொஞ்சம்கூட இல்லை. தனி மனிதனாய் உன்மீது மதிப்பும் அபிமானமும் வைத்திருக் கிறேன். ஆனந்த்! என் பேச்சைக் கேள். நான் சொன்ன விதமாக நடந்து கொண்டால் உன் உடல் நலம் நன்றாக இருக்கும். நாமிருவரும் டாக்டர் பேஷண்ட் மட்டுமே இல்லை. நல்ல நண்பர்களும்கூட'' என்றேன்.

''தாங்க்ஸ் ஹேமா...'' என்றான்.

''சொத்து விஷயமாகத் தாத்தாவுடன் சண்டை போட மாட்டாயே?'' என்று கேட்டேன்.

''ஊஹூம். இப்பொ எதுவும் செய்ய மாட்டேன். முதலில் உங்க இருவரின் திருமணத்தை முடிக்க வேண்டும். பிறகு அவரை ஒரு கை பார்க்கிறேன்'' என்றான்.

எனக்கு வாக்கு கொடுத்தான். இதற்குள் பேப்பரில் இந்த மாதிரி கீழ்த்தரமான செய்திகள். இது நிச்சயமாக ஹரியின் வேலைதான் என்று அம்மா சொல்கிறாள். அம்மாவால் அலுவலகத்தில் தலை நிமிர்ந்து நடக்க முடிய வில்லை. நர்ஸிங் ஹோம் நிர்வாகம் முழுவதும் தன் கைக்கு வந்து விடுமென்று ஹரி ரொம்ப எதிர்பார்ப்புடன் இருந் தான். அது நடக்காமல் ஆனந்த் தடுத்து விட்டான் என்று இந்த விதமாய் பழியைத் தீர்த்துக் கொண்டான்.

''விஜய்!'' ஹேமா அழைத்தாள்.

விஜய் நாற்காலியில் அமர்ந்துகொண்டு மேஜை மீது முழங்கைகளை ஊன்றி முகத்தைக் கைகளில் புதைத் திருந்தான். அவன் தோள்கள் அதிர்ந்துகொண்டு இருந்தன.

''விஜய்!'' ஹேமா நாற்காலியிலிருந்து எழுந்து அவன்



அருகில் சென்றாள். விஜயின் தோள்கள் குலுங்குவதைப் பார்த்தபோது ஹேமாவுக்குப் பயமாக இருந்தது. விஜய் அழுதுக் கொண்டிருந்தான்.

உலகத்தின் எட்டாவது அதிசயத்தைக் காண்பதுபோல் பார்த்தாள் ஹேமா.

''விஜய்!'' பயந்துகொண்டே அழைத்தாள். விஜய் சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுத்தி துடைத்துக் கொண்டான். தன்னைத் தானே சமாளித்துக்கொண்டு தலைநிமிர்ந்து பார்க்க முயன்றான். சாத்தியப்படவில்லை.

''ஹரிச்சந்திரா என்னை அழைத்து நேரில் இந்த விஷயத்தை ஏன் சொல்லவில்லை? இது என்னுடைய சொந்த விஷயம் இல்லையா? நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஆனந்தைக் கொன்று விட்டீர்கள். ஆமாம். ஆனந்தைக் கொன்றது நீங்கள்தான். யாருக்கு வேண்டும் இந்தச் சொத்து? சொத்து யாருடைய பெயரில் இருந்தாலும் எங்க இருவருக்கும் ஒன்றுதான். எனக்கு ஏதோ நன்மை செய்வதாக எண்ணிக் கொண்டு பயங்கரமான தீங்கை இழைத்து விட்டிருக்கிறீர்கள். வாழ்க்கையில் எனக்கு கிடைத்த அபூர்வமான, விலை மதிப்பற்ற நட்பை பொசுக்கி விட்டீர்கள். தீட்சிதர், ஹரிச்சந்திரா, ஹரி, உன்னுடைய அம்மா எல்லோருமே இதற்கு உடந்தை. அவர்கள் மட்டுமே இல்லை. நீ... நீயும் ஆனந்தைக் கொலை செய்ய உன் பங்கிற்கு அஸ்திரத்தைப் பயன் படுத்தியிருக்கிறாய். நான் உன்னை விரும்புகிறேன் என்று ஆனந்திடம் எதற்காகச் சொன்னாய்? நீ என்னை நேசித்தது உண்மையாக இருந்தாலும் அது இன்னொரு வருக்கு வேதனையைத் தருவதாக இருக்கக் கூடாது. இந்த சின்ன விஷயம் உனக்குப் புரியவில்லையா ஹேமா.''

''விஜய்! இப்பொ எனக்குப் புரிகிறது. ஐயாம் சாரி, ரியல்லி சாரி.''

''உன்னுடைய மன்னிப்புகள், பச்சாத்தாபங்கள் ஆனந்தின் உயிரை எனக்கு மீட்டுத் தர முடியுமா? நோ.

தவறு உன்னுடையது இல்லை. என்னுடையது. ஒரு பெண்ணை நான் நேசித்தது என்னுடைய சுயநலம்தான். நான் செய்த தவறுக்கு மன்னிப்பே கிடையாது. ஆனந்தை என்னால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. ஐ ஹேட் மை செல்ஃப்.''

''விஜய்!'' ஹேமா முழங்காலில் சரிந்து உட்கார்ந்து கொண்டாள். அவன் கை மீது தன் கையைப் பதித்தாள்.

ஆனந்த் உடலுக்கு ஏற்பட்ட காயங்களைவிட விஜயின் மனதிற்கு ஏற்பட்ட காயம் தீவிரமாய் இருப்பதுபோல் தோன்றியது. எல்லோருமாகச் சேர்ந்து அவன் மனதைக் கொன்று விட்டதுபோல் இருந்தது. அதில் முதல் குற்றவாளி தான்தான். அன்று ஆனந்திடம் பேசும்போது, சொத்து முழுவதும் விஜய்க்குச் சொந்தம் என்று தெரிந்த பிறகு, அவன் வீட்டிலேயே அவன் தாழ்த்தப்பட்டு வளர்ந்த சூழ்நிலையை நினைத்து அவளுக்கு ஆவேசம் வந்துவிட்டது. எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம் என்று இப்பொ புரிகிறது. நாம் நேசிப்பவர்களின் மனதை காயப்படுத்துவதைவிட பெரிய தவறு வேறு என்ன இருக்க முடியும்? ஹேமாவால் துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. விஜயின் மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டே சொன்னாள்.

''விஜய்! என்னை மன்னித்து விடு. நீ சொன்னது நிஜம்தான். இந்த மன்னிப்புகளால் ஆனந்தின் எயிரை மீட்க முடியாது. ஆனால் இப்படி நடக்கும் என்று நான் நினைக்கவில்லை. நான் செய்தது தவறுதான். அதற்கு நீ எந்த தண்டனையைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள்.'' ஹேமா அழுதுகொண்டே கைகளைக் கூப்பினாள். விஜய் வியப்புடன் ஹேமாவையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கண்களிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த கண்ணீர் அவன் மனதை இளக வைத்துக் கொண்டிருந்தது.

ஹேமா சொன்னாள். என்னை ''நீ வெறுக்காதே.



அதை மட்டும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. அதைவிட இறந்து போவதே மேல் எனக்கு. சொல்லு விஜய். என்னை வெறுத்து ஒதுக்கமாட்டாய் இல்லையா? ஆனந்தைக் காப்பாற்றுவதற்காக என் உயிரையும் பயணமாக வைத்து முயற்சி செய்து வருகிறேன். அதில் உனக்குச் எந்தச் சந்தேகமும் இல்லையே.''

''ஹேமா!!'' விஜய் சட்டென்று ஹேமாவின் தலை மீது கையை வைத்தான். ''எதற்காக இப்படி பைத்தியம் போல் பேசுகிறாய்?'' கடிந்து கொண்டான்.

''உனக்குத் தெரியாது விஜய். எதிராளி மீது நம்பிக்கை போய் விட்டால் அது எந்த அளவுக்கு மனதை பாதிக்கும் என்று ஊகிக்க முடியாது.''

''ஹேமா! ஹேமா!'' விஜய் குனிந்து ஹேமாவின் தலையை மார்போடு அணைத்துக் கொண்டான்.

யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. விஜய் ஹேமாவை விடுவித்தான். ஹேமா கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து நின்று கொண்டாள்.

நர்ஸ் வாசற்படியில் நின்றுகொண்டு ''டாக்டர்... புது பேஷண்ட்... ஆக்ஸிடெண்ட் கேஸ்'' என்றாள்.

''இதோ வந்து விட்டேன்.''

ஹேமா நர்ஸுடன் விரைந்தாள்.

ஃ ஃ ஃ

நள்ளிரவு ஆகும்போது தீட்சிதர் வீட்டுக்கு வந்தார். ராஜலக்ஷ்மியின் டிரைவர் அவரை காரில் அழைத்து வந்து வீட்டில் இறக்கிவிட்டுச் சென்றான். ராஜலக்ஷ்மி அவரை ஆனந்த் இருந்த நர்ஸிங் ஹோமிலிருந்து தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். அங்கே ராஜலக்ஷ்மி போன பிறகு லாயர் ஹரிச்சந்திராவும், ராஜலக்ஷ்மியும் தீட்சிதரிடம் சொத்துக்குச் சொந்தக்காரன் விஜய் தான் என்று தங்களுக்குத் தெரிந்து விட்டது என்றும் இத்தனை நாள் எதற்காக விஜய்க்கு அநியாயம் செய்தீர்கள் என்றும் கேட்டார்கள். சொத்தை விஜயிடம்

ஒப்படைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று ஹரிச்சந்திரா கச்சிதமாகச் சொல்லி விட்டார்.

"நல்ல வேளை. நிச்சயதார்த்தம் நடக்கவில்லை. எங்களுடைய அதிர்ஷ்டம்தான்" என்றாள் ராஜலக்ஷ்மி.

சொத்து முழுவதையும் விஜயிடம் ஒப்படைத்து விடுவதாக தீட்சிதர் சொன்னார். வீட்டுக்குப் போவதாக அவர் சொன்னதும் ராஜலக்ஷ்மி அவரை அனுப்பி வைத்தாள்.

தீட்சிதர் பூட்டைத் திறந்துகொண்டு வீட்டினுள் நுழைந்தார். லக்ஷ்மிக்கு மூட்டுவலி அதிகமாக இருந்ததால் வைத்தியம் பார்த்துக்கொள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தாள். குப்பன் தெரிந்தவர்களின் திருமணத்திற்குப் போயிருந்தான். வீட்டில் யாரும் இருக்கவில்லை.

ஆனந்த் பிழைத்துக் கொள்வது கஷ்டம் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்.

ஆனந்துக்காக இத்தனை வருடங்களாகக் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்த சொத்து இது. நியாய அநியாயத்தை பற்றி அவர் என்றுமே யோசித்ததில்லை. இந்தச் சொத்து அவனுக்கு கிடைக்கப் போவதில்லை. அவனுடைய வாழ்க்கை பாதிலேயே முடிந்து விடப்போகிறது. சின்ன வயதிலிருந்து ஆனந்திடம் தனக்கு இவ்வளவு அன்பு ஏன்? இந்த உலகில் இருக்கும் சுகங்களை எல்லாம் தன் பேரன் அனுபவிக்க வேண்டும் என்ற தவிப்பு எதற்கு? எப்போதும் அவனைப் பற்றியே யோசித்துக் கொண்டு அவன் மகிழ்ச்சிக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் தன்னைக் கண்டால் அவனுக்குக் கொஞ்சம்கூட லட்சியம் இல்லை. அவன் மதிப்பு, அன்பு எல்லாமே விஜய்க்குதான் சொந்தம். சின்ன வயதிலிருந்தே ஆனந்த் தன்னை வெறுத்து ஒதுக்கி வந்தான். இது என்ன நியாயம்? தான் செய்த தவறுதான் என்ன? சொத்தை அன்றே விஜயிடம் ஒப்படைத்து இருந்தால் அவன் இந்த வீட்டில் இருந்திருப்பானா? அப்போதே வெளியில் போயிருப்பான். ஆனந்த் இதயம் அன்றே சுக்கு நூறாகியிருக்கும். தான் விஜயை ஏமாற்றிய



ஆனந்துக்காகத்தானே. ஆனந்தின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதற்காகத் தான் பாடுபட்டுக் கொண்டிருக்கும்போது அவன் தன்னைப் புழுவைவிட கேவலமாக மதிப்பானேன். ஆனந்திடம் வைத்திருந்த அளவு கடந்த அன்பால் செய்யக் கூடாத தவறை அவர் செய்துவிட்டது உண்மைதான். ஆனால் என்ன பிரயோஜனம்?

அவர் கண்முன்னாலேயே ஆனந்த் இறந்துவிடப் போகிறான். இந்த பயங்கரமான உண்மையை அவரால் தாங்க முடியவில்லை. அதைவிட கொடிய உண்மை என்னவென்றால் சொத்து முழுவதையும் விஜயிடம் ஒப்படைத்து விடவேண்டும். நாளையிலிருந்த விஜய் போடும் பிச்சையில்தான் அவர் வாழ்ந்தாக வேண்டும். ஆனந்தே இல்லை என்றாகி விட்ட பிறகு இந்தச் சொத்து மட்டும் ஏன் இருக்க வேண்டும்? விஜய்க்கு இந்தச் சொத்து போகக் கூடாது. இத்தனை நாள் ஒரு வேலையாளைபோல் அவனை நடத்தி வந்தார். நாதியற்றவன் என்றும், தான் போடும் பிச்சையில்தான் வாழ்கிறான் என்றும் அவனை எடுத்தெறிந்து பேசியிருக்கிறார். ஆனந்த் விஜயை எவ்வளவு விருப்பப்பட்டாலும் ஆனந்தும் அவனும் ஒன்றாகி விடமுடியாது என்று அடிக்கடி நினைவுப் படுத்தியும் வந்தார். வீட்டிலிருந்து வெளியேறச் சொல்லி மறைமுகமாகவும், நேரடியாகவும் ஆணையிட்டார். ஆனந்தை விஜயிடமிருந்து பிரிக்க வேண்டுமென்று நினைத்தார். கடவுள் ஆனந்தையே அவரிடமிருந்து சாசுவதமாகப் பறித்துக்கொள்ளப் போகிறான். அவரால் இந்த வேதனையைத் தாங்க முடியவில்லை. ஹேமாவுக்கும் ஆனந்துக்கும் திருமணம் நடக்கும் என்று அவர் கனவு கண்டார். நர்ஸிங் ஹோம் திறப்பு விழா நடந்த அன்று ஆனந்தின் எதிர்காலம் அவர் கண்களுக்கு அழகான மாளிகையைப் போல் தென்பட்டது. இன்று அது சீட்டு மாளிகையைப் போல் தரையில் சரிந்துவிட்டது.

தீட்சிதர் படியேறி ஆனந்தின் அறைக்கு வந்தார்.

பேரனின் கட்டில், நுணிமணிகள், மேஜை, டி. வி., டேப்ரிகார்டர் எல்லாவற்றையும் நீர் நிறைந்த விழிகளால் பார்த்தார். ஆனந்த் உடைந்த கண்ணாடி தம்ளரால் வயிற்றில் குத்திக்கொண்டபோது தரையில் சிந்தியிருந்த இரத்தம் காய்ந்து போய் கறையாய் இருந்தது. லக்ஷ்மி, குப்பன் இல்லாததால் அந்த இடம் சுத்தம் செய்யப் படாமல் இருந்தது. தீட்சிதர் குனிந்து அந்தக் கறையை விரலால் தொட்டுப் பார்த்தார். பொங்கி வந்த துக்கத்தை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஹோவென்று கதறிவிட்டார். ''உன்னைவிட முன்னால் போக வேண்டியவன். இன்னும் திடமாய் நடமாடிக் கொண்டு இருக்கிறேன். இன்னும் எத்தனை கொடுமைகளை அனுபவிக்க வேண்டுமென்று அந்த கடவுள் முடிவு செய்திருக்கிறானோ தெரியவில்லை?'' என்று புலம்பினார். நாட்டை இழந்து விட்ட ராஜாவின் சோகம் அவர் கண்களில் தென்பட்டது. வீடு முழுவதும் சுற்றிப் பார்த்தார். விஜயின் அறைக்கு வந்தார். அங்கே மேஜை மீது விஜய் தன் தாயுடன் சேர்ந்து இருந்த போட்டோ தென்பட்டது. அதை வெறுப்புடன் பார்த்தார். அவர் கண்கள் துவேஷத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன.

அந்த போட்டோவை எடுத்து ஜன்னல் வழியாய் வெளியில் வீசி எறிந்தார்.

''அன்று உன்னை என் வீட்டுக்கு அழைத்து வரும் போது என் விரலால் நானே என்னுடைய கண்ணை குத்திக் கொள்ளப் போகிறேன் என்று ஊகிக்கவில்லை.''

தீட்சிதர் பாரமாக மூச்சு விட்டுக் கொண்டே தடுமாறும் நடையுடன் கீழே இறங்கி வந்தார். நேராக ஸ்டோர் ரூமுக்கு போனார். கிராமம் முழுவதும் கிரோசினை சப்ளை செய்வது அவர்தான். விற்றது போக மீதி டின்கள் ஸ்டோர் ரூமில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு டின்னை எடுத்து வந்து மாடியில் விஜய் அறை முழுவதும் தெளித்தார். விஜயின் உடைகள், புத்தகங்கள் எல்லாவற்றின் மீது கிரோசினை ஊற்றினார். பிறகு தீக்குச்சியைக்



கொளுத்தி அதன் மீது போட்டார். நெருப்பு பற்றிக் கொண்டு திகுதிகுவென்று எரியத் தொடங்கியது. பெட்டியைத் திறந்து விஜயின் சர்டிஃபிகேட்களை ஒவ்வொன்றாகக் கிழித்து நெருப்பில் போட்டுக் கொண்டிருந்தார். அறையை விட்டு வெளியேறுவதற்காகத் திரும்பினார். அறை முழுவதும் நெருப்பு பரவியிருந்தது. ஆபத்தைப் புரிந்து கொண்டு நெருப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இங்கேயும், அங்கேயும் ஓடினார். ஆயிரம் கைகளை நீட்டி வரவேற்பதுபோல் நெருப்பு எல்லா பக்கங்களிலிருந்தும் அவரை நெருங்கிக் கொண்டிருந்தது. மூளை மரத்துப் போய் விட்டதுபோல் இருந்தது. ஆபத்து வந்தாலோ, பயமாக இருந்தாலோ விஜயை அழைப்பது அவருடைய வழக்கம். இப்போதும் தன்னை அறியாமல், குரலை உயர்த்தி ''விஜய்! விஜய்! எங்கே இருக்கிறாய்? சீக்கிரமாக வந்து என்னைக் காப்பாற்று'' என்று கத்தத் தொடங்கினார். கொஞ்சம் கொஞ்சமாய் அவர் குரல் தேய்ந்து கடைசியில் அடங்கி விட்டது. வீட்டின் மேல் பகுதியில் பிடித்துக் கொண்ட நெருப்பு தன்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்பதுபோல் எல்லா இடங்களிலும் பரவிக் கொண்டிருந்தது.

## 27

விடியற்காலை வேளை.

விஜய் அதே நாற்காலியில் அமர்ந்து மௌனமாய் காத்திருந்தான். அறையிலிருந்த சுவற்றுக் கடியாரத்தில் நகர்ந்து கொண்டிருந்த முட்கள் மரண தேவதையின் வருகையைப் பறைச் சாற்றுவதுபோல் தோன்றியது. ஹேமா ஆனந்தின் அருகிலேயே இருந்தாள். பெரிய பெரிய டாக்டர்கள் சிகிச்சையளித்துக் கொண்டிருந்தார்கள். நர்ஸ்கள் பரபரப்பாய் அங்கேயும் இங்கேயும் அலைந்து கொண்டிருந்தார்கள். நேரம் போய்க் கொண்டிருந்தது.

விஜய் மனதை இரும்புபோல் திடமாக்கிக் கொண்டு காத்திருந்தான். நன்றாக விடிந்து விட்டது. விஜய் எழுந்து ஜன்னல் அருகில் சென்று நின்றுகொண்டான். அதற்குள் ஹேமா வந்தாள். காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

ஹேமாவின் முகம் களைப்பினால் வாடிப் போயிருந்தது.

''விஜய்'' ஹேமா கையை நீட்டினாள். அவள் கண்களிலிருந்து வெளியேறிய கண்ணீர் கன்னத்தில் வழிந்து கொண்டிருந்தது.

விஜய் ஹேமாவின் அருகில் வந்தான். அவள் கண்களுக்குள் எதையோ தேடுவதுபோல் ஆழமாய் பார்த்தான். ஹேமாவின் இதழ்கள் உச்சரிக்கப் போகும் பயங்கரமான உண்மையைக் கேட்பதற்காக அவன் செவிகள் காத்திருந்தன.

''விஜய்! ஆனந்த் அபாய கட்டத்தைத் தாண்டி விட்டான். மருந்துகள் வேலை செய்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாகத் தேறி வருகிறான். இனி பயப்படத் தேவையில்லை என்று டாக்டர் சொல்லிவிட்டார்.''

விஜயின் கைகள் சட்டென்று ஹேமாவின் தோள்களை அழுத்தமாய் பற்றிக் கொண்டன.

''என்ன?'' என்றான்.

''ஆனந்த் பிழைத்துக்கொண்டு விட்டான். ஆபத்து நீங்கி விட்டது.''

''ஹேமா! நிஜமாகவா... நீ சொல்வது உண்மை தானா?'' விஜய் நம்ப முடியாதவனைப்போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான்... நான் மிகவும் அதிர்ஷ்டசாலி இல்லையா'' சொல்லும்போதே ஹேமாவுக்கு அழுகை பொங்கிக்கொண்டு வந்தது. ''ஆனந்த்துக்கு ஏதாவது ஆகியிருந்தால் இந்த ஜென்மத்தில் என் முகத்தை நீ பார்த்திருக்க மாட்டாய். எனக்குத் தெரியும்.''

''ஹேமா...'' விஜய் சட்டென்று ஹேமாவை



அணைத்துக் கொள்ளப் போனான். ஆனால் அதற்குள் ஹேமாவுக்கு நினைவு தப்பிவிட்டது. வாடிப்போன கீரைத் தண்டாய் அவன் கைகளில் சரிந்து விட்டாள்.

''ஹேமா... ஹேமா...'' கன்னத்தில் லேசாகத் தட்டிக் கொண்டே அழைத்தான். சட்டென்று பக்கத்தில் கூஜாவில் இருந்த தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்தான்.

ஹேமா கண்களைத் திறந்தாள்.

''என்ன நடந்தது?'' என்று கேட்டாள்.

விஜய் ஹேமாவை நாற்காலியில் உட்கார வைத்தான். வேகமாய் காண்டீனுக்குப் போய் சூடாகக் காபியை எடுத்து வந்தான்.

ஹேமா மேஜைமீது தலையைச் சாய்த்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

''ஹேமா!'' விஜய் ஹேமாவை வலுக்கட்டாயமாக எழுப்பி உட்கார வைத்துக் காபியைக் குடிக்கச் செய்தான்.

ஹேமாவுக்கு விழிப்பு வந்து விட்டது.

''ரொம்ப களைத்துப் போய்விட்டாய் ஹேமா. ரெஸ்ட் எடுத்துக் கொள்'' என்றான்.

பத்து நிமிடங்கள் கழித்து இருவரும் ஆனந்த் இருக்கும் இடத்திற்குச் சென்றார்கள்.

ஆழமான உறக்கத்தில் இருப்பதுபோல் ஆனந்தின் மூச்சு சீராக வந்து கொண்டிருந்தது.

''ஆனந்த்... ஆனந்த்...'' ஹேமா அழைத்தாள்.

''வேண்டாம். எழுப்பாதே...'' விஜய் தடுத்தான்.

''பரவாயில்லை, ஆனந்த்!'' ஹேமா குரலை உயர்த்தி அழைத்தாள்.

ஆனந்த் கண்களைத் திறந்து மூடினான்.

''யாரு வந்திருக்கிறார்களோ பாரு...'' ஹேமா விஜயை முன்னால் போகச் சொன்னாள்.

விஜய் அருகில் சென்று ''அனூ!'' என்று அழைத்தான்.

ஆனந்த் கண்களைத் திறந்து பார்த்தான். கையை மெதுவாக உயர்த்தினான். விஜய் கட்டுப் போட்டிருந்த தன்னுடைய வலது கையால் ஆனந்தின் கையைப் பிடித்துக் கொண்டான்.

ஆனந்தின் விழிகளில் நீர் சுழன்றது. ''எங்கேயும் போய் விடாதே.'' காய்ந்து போன உதடுகளுடன் சொன்னான் ஆனந்த்.

விஜய் ஆனந்தின் கண்ணீரைத் துடைத்தான். ஆனந்த் மறுபடியும் மயக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

அதற்குள் நர்ஸ் வந்து விஜய்க்கு போன் வந்திருப்ப தாகத் தெரிவித்தாள். ஹேமா போனில் பேசிவிட்டு வேகமாகத் திரும்பி வந்தாள். ''விஜய்... ஒரு நிமிடம் இப்படி வா'' என்று அழைத்தாள். விஜய் ஆனந்தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஹேமா விஜயின் கையைப் பற்றி வெளியே இழுத்து வந்தாள்.

''விஜய் ரொம்ப பேட் ந்யூஸ் உங்க வீட்டுக்கு நெருப்பு பிடித்துக் கொண்டு விட்டதாம்.''

விஜய் திடுக்கிட்டுப் பார்த்தான்.

ஃ ஃ ஃ

தீட்சிதரின் காரியங்கள் முடிந்து விட்டன. வீட்டு மாடி பகுதியில் திடீரென்று தீப்பிடித்துக் கொண்டு விட்ட தாகவும், அந்த சமயத்தில் தீட்சிதர் வீட்டிலேயே இருந்ததால் நெருப்பில் சிக்கிக் கொண்டு இறந்துபோய் விட்டதாகவும் எல்லோரும் நினைத்துக் கொண்டார்கள். அன்று காலையில் செய்தி தெரிந்ததும் விஜய் அந்த இடத்திற்கு விரைந்து சென்றான். ஏற்கனவே தீ அணைப்பு வண்டிகள் வந்து தீயை அணைக்க முயன்று கொண் டிருந்தன. வீட்டில் இருக்கும் பொருட்கள் எல்லாமே தீக்கு இரையாகி விட்டன. மாடியில் விஜயின் அறையில் தீட்சிதரின் உடல் கரிக்கட்டையைப்போல் தரையில் கிடந்தது. ஆனந்துக்கு இந்தச் செய்தியைத் தெரிவிக்க வில்லை. விஜய்தானே சுயமாய் தீட்சிதரின் தகன காரியங் களை நிறைவேற்றினான். எட்டாவது நாளன்று ஆனந்தின் நிலைமை கொஞ்சம் சீரடைந்து, தெம்பாக இருந்தான். தீட்சிதர் இறந்த செய்தியை விஜய் சொல்ல முடியாமல் எப்படியோ தெரிவித்தான்.



ஆனந்த் தன் கைகளைப் பார்த்துக்கொண்டே ''விஜய்! இந்தக் கைகளுக்குக் கொலை செய்த பாவம் வேண்டாமென்று கடவுள் நினைத்து விட்டார் போலும். அவர் உனக்குச் செய்த துரோகத்தைப் பற்றி ஹரிச்சந்திரா மூலமாய் தெரிந்த அன்றே என்னைப் பொறுத்தவரை அவர் இறந்து விட்டார்...'' என்றான்.

பத்து நாட்கள் கழித்து ஆனந்த் வீட்டுக்கு வந்தான். நர்ஸிங்ஹோம் அருகிலேயே விஜய் வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். ஆனந்தை வீல்சேரில் உட்கார வைத்து, திட்சிதரின் பத்தாவது நாள், பதிமூன்றாவது நாள் காரியங்களைத் தானே செய்தான். ஆனந்தை யாராலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் எடை மேலும் மேலும் அதிகரித்துக் கொண் டிருந்தது. கன்னங்கள் உப்பி, சதை தொங்கிக் கொண் டிருந்தது. கண்கள் உள்ளே போய் கோடுகள்போல் தென்பட்டன. நீர் கொண்டு விட்டதுபோல் உடம்பு முழுவதும் ஊதியிருந்தது.

விஜய் ஆனந்தின் அறையை அழகாக, நேர்த்தியாக எல்லா வசதிகளையும் பார்த்துப் பார்த்து ஏற்பாடு செய்தான். ஆனந்துக்கு நிலைக் கண்ணாடி என்றால் ரொம்ப பிடிக்கும். விலை உயர்ந்த டிரஸ்ஸிங் டேபிளை வரவழைத்திருந்தான். வீல் சேரில் அமர்ந்திருந்த ஆனந்த் நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டான். அவனால் நம்பவே முடியவில்லை. கண்ணாடியில் தெரியும் விகாரமான உருவம் தன் னுடையதுதானா? பானை வயிறும்... பலூன்போல் ஊதியிருக்கும் உடலும்... அவனால் அந்தக் கோரமான உருவத்தைக் காண சகிக்கவில்லை. கடவுள் தன்னை ஏமாற்றி விட்டார். வாழ்க்கையிடம் அலாதியான பிடிப்பை, அழகாக ஆராதிக்கும் மனதையும் கொடுத்து இன்று தன்னை இப்படி விகாரமாக மாற்றி விட்டார். தன்னால் நாற்காலியிலிருந்து எழுந்து கொள்ள முடியாது.

பக்கத்திலிருந்த ஃப்ளவர் பேஜை எடுத்துக் கண்ணாடியை நோக்கி வீசினான். சிரீத் என்ற சத்தத்துடன் கண்ணாடியில் விரிசல் ஏற்பட்டது. விரிசலடைந்த கண்ணாடியில் அவன் முகம் மேலும் பயங்கரமாக தென்பட்டது. இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு அழத் தொடங்கினான்.

ஆனந்தை டிஸ்சார்ஜ் செய்யும்போதே டாக்டர்கள் சொல்லியிருந்தார்கள். அவன் முழுவதுமாகக் குணமாக வில்லையென்றும், அவன் வாழப்போவது இரண்டு வாரமா இல்லை இரண்டு மாதமா என்று சொல்ல முடியாது என்று எச்சரித்து அனுப்பினார்கள். அவன் எழுந்து நடக்கக் கூடாது. ஆவேசப் படக்கூடாது. சத்தமாகச் சிரிக்கக் கூடாது என்று சொன்னார்கள்.

''சத்தமாகச் சிரிக்கக்கூடாதா! நடக்கக் கூடாதா! அப்படியென்றால் என்னுடைய பாதி உயிர் போய் விட்டது போல்தான்...'' என்றான் ஆனந்த்.

திட்சிதர் இறந்துபோன இருபத்தோராவது நாள் விஜய், ஹேமாவின் திருமணம் வீட்டிலேயே எளிமையான முறையில் ஆனந்தின் முன்னிலையில் நடந்தது. திருமணம் முடிந்ததும் தம்பதிகள் இருவரும் ஆனந்த் அருகில் வந்தார்கள். ஆனந்த் களைப்புடன் வீல்சேரில் அமர்ந் திருந்தான்.

''கங்கிராஜுலேஷன்ஸ்...'' ஆனந்த் மனப்பூர்வமாக வாழ்த்திக் கொண்டே சட்டைப் பையிலிருந்து வைர மோதிரத்தை எடுத்து விஜயிடம் கொடுத்தான்.

''இந்த மோதிரத்தைத் தாத்தா ஹேமாவுக்குப் பிறந்த நாளன்று கொடுத்தார். தாத்தா இறந்த பிறகு ராஜலக்ஷ்மி மேடம் இதை எனக்குத் திருப்பி அனுப்பி விட்டாள். விஜய்! ஹேமாவின் விரலில் இந்த மோதிரத்தை என்னுடைய பரிசாகப் போட்டுவிடு...'' என்றான்.

''அனூ! இது...''

''ஹேமாவின் விரலில் போட்டு விடு விஜய்.'' ஆனந்த் மற்றொரு முறை சொன்னான்.



மறுபேச்சு பேசாமல் விஜய் ஹேமாவின் விரலில் மோதிரத்தை அணிவித்தான்.

''தாங்க்யூ.'' ஹேமா ஆனந்தின் கையில் மென்மையாக முத்தம் பதித்தாள்.

ஆனந்த் விஜயை அருகில் வரச்சொன்னான். ''இதோ உன்னுடைய காகிதங்கள்'' என்றான்.

''இது என்ன?'' விஜய் கேட்டான்.

''தோட்டத்துச் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள். உண்மையில் தோட்டத்தை வாங்குவதற்காக வந்தவர் யாரோ இல்லை. என் பிரண்டின் சித்தப்பா. ஹேமா கிராமத்தில் அவள் பெயரில் இருந்த வீட்டை விற்றுப் பணத்தை ஏற்பாடு செய்தாள். என் பெயரில் தாத்தா வங்கியில் போட்டிருந்த பணத்தை ட்ரா செய்தேன். ஹேமாவும் நானும் உன்னைத் திடீரென்று ஆச்சரியப்பட வைக்க வேண்டும் என்று நினைத்திருந்தோம். விஜய்! நீ உயிருக்கும் மேலாக நேசிக்கும் தோட்டத்தை விற்பதற்கு நான் சம்மதிப்பேனா? விற்பதாகத் தாத்தா முடிவு செய்தாலும் நான் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பேன் என்று எப்படி நினைத்து விட்டாய்?''

''அனூ!'' விஜய் ஆனந்தின் கையைப் பற்றிக் கொண்டான். ''ஹேமாவோ, நானோ உன்னைப்பற்றி ஒரு நாளும் தவறாக நினைத்தது இல்லை...'' என்றான்.

''இது ஹேமாவின் யோசனைதான். தோட்டத்திற்காக நீ படும்பாட்டை நினைக்கும்போது உன்னை அதிலிருந்து மீட்க வேண்டுமென்று ரொம்ப நாளாகவே நினைத் திருந்தேன். அதான் இந்த திட்டத்தில் ஹேமாவுடன் ஒத்துழைத்தேன். விஜய்! ஹேமாவுக்கு, எனக்கும் உன்னை ரொம்ப பிடிக்கும். முதலில் ஹேமாதான் உன்னை விரும்பு வதாக சொன்னபோது ரொம்ப பொறாமையாக இருந்தது. என்னிடமிருந்து ஹேமா உன்னைக் கொள்ளையடித்து விட்டதுபோல் வேதனை ஏற்பட்டது. ஆனால் ஹேமாவை நீ விரும்புகிறாய் என்று தெரிந்தபோது

ஹேமாவிடம் எனக்கு அபிமானம் அதிகமாகி விட்டது. விஜய்! ஹேமாவுக்கு நன்றி சொல்லட்டுமா?'' ஆனந்த் கேட்டான்.

விஜய் ஹேமா பக்கம் திரும்பினான். அவன் கண்களில் லேசான ஈரம் பளபளத்தது. விஜயின் ஒரு கை ஹேமாவை, மற்றொரு கை ஆனந்தைப் பற்றியிருந்தது. பேச முடியாமல் குரல் அடைத்துக் கொண்டு விட்டது.

அதற்குள் ராஜலக்ஷ்மி விருந்தாளிகளுக்கு அறிமுகப் படுத்த வேண்டுமென்று ஹேமாவை, விஜயை அழைத்துச் சென்றாள்.

தொலைவில் கழுத்தில் மாலையுடன் ஜோடியாக தென்பட்டுக் கொண்டிருந்த விஜய், ஹேமாவைப் பார்க்கும்போது ஆனந்தின் கண்களுக்கு நிறைவாக, மனதிற்குத் திருப்தியாக இருந்தது.

அவன் மிகவும் களைத்துப் போயிருந்தான். வானத்துப் பறவையைப்போல் சுதந்திரமாக இருப்பதை விரும்பும் அவனுக்கு இந்த உடல் ஒரு சிறைச் சாலையைப் போல் தோன்றியது. மரணதேவதை தனக்காக வெகு அருகில் காத்திருப்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவன் பயப்படவில்லை. தைரியமாக இருந்தான். அவன் எப்போதும் யாருக்கும் தலை குனிந்ததில்லை. இன்று சாவுக்கும் பயப்படவில்லை. ''பிரியமான தேவதையே! தாமதம் உன்னுடையதான். நான் தயாராகத்தான் இருக்கிறேன்.'' கண்களை மூடிக்கொண்டே நினைத்துக் கொண்டான்.

ஹால் காலியாகி விட்டது. வந்த விருந்தாளிகள் எல்லோரும் போய் விட்டார்கள். ராஜலக்ஷ்மியும், ஹரிச்சந்திராவும்கூட கிளம்பினார்கள்.

ஹேமா விஜய் அவர்களை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தார்கள்.

''விஜய்?'' ஹேமா அழைத்தாள்.



''ஊம்.'' விஜய் ஹேமா பக்கம் பார்த்தான்.

''நான் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறேன். இது கனவா இல்லை நினைவா என்று சந்தேகம் வருகிறது. என்னால் நம்பவே முடியவில்லை'' என்றாள்.

விஜய் ஹேமாவையே பார்த்துக் கொண்டிருந்தான். மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சி முகத்திலும் பிரதிபலித்தது. ஹேமாவின் முகம் இதற்கு முன் எப்போதும் பார்த்திராத அழகுடன் மிளிர்ந்து கொண்டிருந்தது.

விஜய் ஹேமாவின் கழுத்தில் மஞ்சள் சரட்டில் கோர்த்திருந்த திருமாங்கல்யங்களை உள்ளங்கையில் ஏந்திக் கொண்டே சொன்னான் ''ஹேமா, என்னாலும் நம்ப முடியவில்லை. எந்த விதமான ஆர்வமும் இல்லாமல் கழிந்து கொண்டிருந்த என்னுடைய வாழ்க்கையில் உன் வருகை சந்தடி ஏற்படுத்தியது. புயலை உண்டாக்கியது. வெள்ளமாகப் பொங்கி வந்து என்னை மூழ்கடித்து விட்டது. கடைசியில் அழகான ஒரு கரைக்கு என் வாழ்க்கை படகைக் கொண்டு வந்து சேர்த்து விட்டது.''

ஹேமா பிரமிப்பு கலந்த வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். விஜய் தன் மனதில் இருப்பதை ஆனந்தைப் போல், மம்மியைப் போல் வெளிப்படையாகச் சொல்கிறான். அவன் இதழ்களில் மலர்ந்த புன்முறுவல் அவனுடைய அழகை இருமடங்காக எடுத்துக் காட்டியது. ஹேமா சுற்றிலும் பார்த்தாள். யாரும் இருக்கவில்லை. விஜயின் கழுத்தைச் சுற்றிக் கைகளை மாலையாகப் போட்டாள்.

''விஜய்! இப்பொ சொல்லு...'' என்றாள்.

''என்ன சொல்லணும்?''

''இத்தனை நாளாய் நான் உன் வாயால் எதை கேட்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தேனோ... அதை.''

விஜய் புன்முறுவலுடன் ஹேமாவை அருகில் இழுத்துக் கொண்டான்.

''தனியாகச் சொல்லத்தான் வேண்டுமா ஹேமா.'' அவன் இதழ்கள் ஹேமாவின் நெற்றிமீது பதிந்தன. ''கர்ஃப்யூ அன்று இரவே மனதளவில் உன்னுடையவனாகி விட்டேன் ஹேமா'' என்றான்.

தான் விரும்பியது நிறைவேறிவிட்ட திருப்தியில், மகிழ்ச்சியுடன் அவன் மார்பில் தலையைச் சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டாள்.

அதற்குள் தொலைவிலிருந்து ''டாக்டரம்மா... சீக்கிரமாய் வாங்க.'' லக்ஷ்மி உரத்த குரலில், பதட்டமாய் கத்தியது கேட்டது.

ஹேமா, விஜய் இருவரும் ஹாலுக்கு விரைந்தார்கள்.

''ஆனந்த் தம்பியைப் பாருங்கம்மா. எனக்குப் பயமாக இருக்கிறது.'' லக்ஷ்மி அழுதுகொண்டே சொன்னாள்.

ஆனந்தின் தலை ஒரு பக்கமாய் சாய்ந்திருந்தது. ஹேமா அவன் கையைப் பிடித்து நாடியைப் பரிசீலித்தாள்.

விஜய்க்குப் புரிந்து விட்டது.

அவன் இதழ்களை இறுக்கிக் கண்களிலிருந்து வெளியேற போன கண்ணீரைக் கட்டுப்படுத்தினான். ஆனந்த் அவனுக்குப் போட்ட நிபந்தனை அது!

வீல்சேரில் இருந்த ஆனந்தின் உடலை இருகரங்களிலும் தூக்கிக் கொண்டு அவனுடைய கட்டிலில் படுக்க வைத்தான். அருகிலேயே உட்கார்ந்து கொண்டு சில்லென்று இருந்த ஆனந்தின் கையைத் தன் இருகரங்களாலும் பற்றிக்கொண்டு அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

எத்தனை எத்தனை நினைவுகள்!

தாத்தாவை அழவைப்பதற்காக உயிர் போய் விட்டதுபோல் மூச்சை அடக்கி கட்டையாய் படுத்துக் கிடந்து நாடகமாடியிருக்கிறான்.



சின்ன வயதில் தோட்டத்திற்குப் போனால் ஆனந்த் திடீரென்று காணாமல் போய் விடுவான். வேண்டுமென்றே ஒளிந்து கொள்வான். தான் கவலைப்பட்டுக் கொண்டு ''ஆனந்த்! ஆனந்த்!'' என்று தொண்டை வரள கத்தும் போது எந்த செடி மறைவிலிருந்தோ கலகலவென்று நகைத்துக் கொண்டே வெளியில் வருவான். அந்த நேரத்தில்கூட தனக்கு ஆனந்த் மீது கோபம் வந்ததில்லை. ஆஸ்மா அட்டாக் வந்து மூச்சுத் திணறி தன்னை அழைக்க முடியாமல் திண்டாடவில்லை என்று நிம்மதிதான் அடைந்திருக்கிறான். ஆனந்த்! பெயருக்கு ஏற்றாற்போல் தன் மனதில் இருக்கும் மகிழ்ச்சியை எதிராளிக்கும் பகிர்ந்து கொடுத்துச் சந்தோஷப்படும் குணம்.

ஹேமா விஜய் அருகில் வந்தாள். ஆனந்தின் முடிவு தொலைவில் இல்லை என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரத்தில் திடீரென்று இப்படி முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கவில்லை.

ஆனந்தின் உடலையே பார்த்துக்கொண்டிருந்த விஜயின் தோள்மீது கையைப் பதித்தாள்.

விஜய் மனதில் ஏற்பட்ட வெறுமை ஹேமாவுக்கு நன்றாகவே புரிந்தது.

ஆனந்த்... விஜய்... இந்த இருவரின் நட்பு ரொம்ப அபூர்வமானது. எத்தனை பேருக்கு இந்த நட்பு பொறாமையை ஏற்படுத்தியிருக்கிறது! தங்களுக்குக் கிடைக்காத அதிர்ஷ்டம் ஏதோ அந்த இருவருக்கும் சொந்தம் என்ற உணர்வு. அவ்வளவு நேர்மையாய், அன்பும், மதிப்பும் கலந்த உணர்வுடன் ஒருத்தருக்கொருத்தராய் வாழ்வது என்பது மிகவும் அரிது.

அவ்விருவரின் நட்பில் விரிசலை ஏற்படுத்த வேண்டுமென்று நிறைய பேர் முயற்சி செய்தார்கள். தீட்சிதர் தன் வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்துகொண்டுதான் இருந்தார். கடைசியில் தோல்வியைத் தழுவினார்.

ஹேமா இரண்டு கைகளாலும் விஜயின் தலையை மார்பில் சாய்த்துக் கொண்டாள். ௨௮௮

''ஹேமா!'' விஜயின் குரலில் துக்கம் வெளிபட்டது. அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவன் செய்யும் முயற்சிகள் வியர்த்தமாகிக் கொண்டிருந்தன.

விஜயின் தலையை ஹேமா வருடிக் கொண்டே ''விஜய்! வாழ்க்கை ரொம்ப விசித்திரமானது. இது நமக்கு எப்பொ எந்தப் பரிசு தரப்போகிறதோ யாருக்கும் தெரியாது. மறுபடியும் எப்பொ திடீரென்று நமக்குப் பிரியமானதைப் பறித்துக்கொண்டு போகப் போகிறதோ, அதுவும் நமக்குத் தெரியாது. கண்ணுக்குத் தெரியாத அந்த சக்தியின் முன்னால் தலைகுனிந்து நிற்பதுதான் நம் கடமை!'' என்றாள்.

''ஹேமா!'' விஜய் மனைவியின் இடுப்பைச் சுற்றிலும் கைகளை இணைத்தான். ஹேமாவின் ஸ்பரிசம் அவனுக்குத் தைரியத்தை அளித்துக் கொண்டிருந்தது.

ஆனந்தின் இழப்பை, அது ஏற்படுத்திய வெறுமையைத் தீர்க்கக் கூடியது ஹேமாவின் அருகாமை ஒன்றுதான் என்று புரிந்தது. ஹேமாவின் இடுப்பைச் சுற்றியிருந்த அவன் கரங்கள் மேலும் இறுகின. கண்களை மூடிக் கொண்டு அவள் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டான். ஹேமாவின் கண்களிலிருந்தும் கண்ணீர் வெள்ளமாய் பெருகிக் கொண்டிருந்தது.

32295
4/9/31394